TAMIL

DICTIONARY.

வீரமாமுனிவர்

செய்த

சதுரகராதி.

இஃது

தமிழ் கற்கிற மாணாக்கர் முதலானவர்களுக்கு உபயோகமாகத்
துரைத்தன வித்தியாவிசாரணைத்தலைவர் உத்தரவின்படிப்
பரிசோதிப்பித்து அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

MADRAS:
PUBLIC INSTRUCTION PRESS.
1860.

அச்சிற்பதிப்பித்தலின் வரலாறு.

மணிநெடுங்கடல்சூழ் அணிநிலந்தனி............மேல
ஆதிநாளிறையு நீதிநான்முறையு.................. ங
நாங்காமைகல்வி ஞாணிவுடைமையின்மூன்...... ரு
நீங்காதுதழீஇ யோங்கருள்கெழீஇ............... ந்
தோற்றுமாயிரத் தெழுநாற்றறுபதுமூ.......... த
வேண்டறுபாறே றாண்டளவாக.................... ப
பன்மூடியிணங்கமூப் பொன்மூடிபுனைந்......... து
இக்களைத்துந்தனிச் சக்கரநடாத்து.............. ம

தேர்ச்சிசேர்மூன்றும் ஜார்ஜ் வாழ்நான்றிற் கலியோட்டிய நிதியெலியாட்ட இபதி சாந்தளிர்த் ததிகாரஞ்செலுத்தும் கிறிஸ்து ௧௮௧௯-ம் வருடத்துக்குச் செல்லாநின்ற சாலிவாகன சகவருடம் - ௧௭௪௧-ல் நிகழும் பிரமாதி வருடத்திற் சென்னபட்டணங் கல்விச்சங்கத்துத் தலைவராகிய - ம - ௱ - ௱ - ஸ்ரீ பிராஞ்சிஸ்-உவைத்து-எல்லிஸ் துரையவர்களனுமதிப்படி. முன்னிருந்த தமிழ்ச் சங்கத்தலைமைப்புலமைத் திருச்சிற்றம்பலையரால் இத்தேயத்துப் பலவகை மொழிகளினுந் தமிழ் நன்குணர்ந்த வீரமாமுனிவரென்பவர் இத்தமிழ்நாட்டிற் றொன்றுதொட்டு வழங்கும் பன்னிரு தொகுதித்தாய சேந்தன்றிவாகரமுதலிய நிகண்டுகளுட் பத்துத் தொகுதியுட் கூறியபொருள்களைப் பொருளகராதியாகவும் பதினொன்றாந் தொகுதியிலெதுகைத் தொடையாகக் கூறிய பெயர்களைத் தொடையகராதியாகவும் பெயரகராதியாகவும் பன்னிரண்டாந் தொகுதியிற்கூறிய தொகைப்பொருள்களைத் தொகையகராதியாகவும் வகுத்து இரேவஞ்ஞாரத்தியவொரு பொருட்பெய ரிருபொருட்பெயர் முதலாக முறைதெரிந்திங்ஙனே நாற்பாலாற்செய்த பெயரகராதிபோலாதி யாவர்க்கும் விளங்கச் சொற்சொல்லாகத் தமிழ்ப்பெருங்கடற்கோர் மரக்கலமாகத்தந்த சதுரகராதியிற் பொருளகராதி பரிசோதிக்கப்பட்டுக் கல்விச் சங்கத்துத் துரைகளான் முன்னர் அச்சிற் பதிப்பிக்கப்பட்டது. பின்னர், தோலாவிறலுள கோலானாகசெய் மேலாணிசைதிகழ் நாலாம் ஜார்ஜ்—நாளில் நன்றுமனுமுறை குன்றுவகையிலன் மன்னேறு வதிபதி நின்றுமுதகையினில் கிறிஸ்து ௧௮௨௪-ம் வருடத்துக்குச் செல்லாநின்ற

*

சக-௵ ௧௭௪௬-ல் நிகழாநின்ற தாரண வருடத்தில் மேற்சொல்லிய சங்கத்துத் தலைவராகிய ம-ா-ா-ஸ்ரீ. ரிச்சார்டு கிளார்க்குத் துரையவர்களனுமதிப்படி தமிழ்ச்சங்கத் தலைமைப்புலமை நடாத்துந் தமிழ்ப்பண்டிதர்களாகிய தாண்டவராய முதலியார், இராமசந்திரகவிராயர் இவர்களால் சதுரகராதியில் மற்றைப்பெயர் - தொகை - தொடை - என்னுமிம்மூன்றகராதிகளும் பரிசோதிக்கப்பட்டுக் கல்விச்சங்கத்துத் துரைகளான்மேற்சொல்லிய சென்னைச்சங்கத்திலச்சிற் பதிப்பிக்கப்பட்டன.

பின்பு கிரிஸ்து ௧௮௬௦-ம் ௵த்தில்.

கொடையளிசெங்கோல் குடியொம்பனான்கு... ம்
உடையளாய்வேந்தர்க் கொளியெனத்திகழு..... ம்
விக்தோரியாவெனும் விறல்கெழுமரசியி.. ன்
மிக்குயரோவலின் மேவுதிரிவெலிய.... ...... ன்
எந்நாட்டவர்களு மிவன்முறைநன்றெ.......... ன
இந்நாட்டினையே யியல்புறவாளு................ ம்
நன்னாளதனி னாவலர்யார்க்... .... கு
முன்னோனென்னு முழுதுணர்வுடையோ...... ன்
கொடையதுதன்னிற் கொண்மூவொப்போ..... ன்
நடையினுயர்ந்தோ னிலந்தன்னி............ ற்
கற்போரெவர்க்குங் கலையுணர்விக்கு............ ம்
பொற்பமைதொழிலைப் பொதுவாநடாத்து......ம்
ஆர்பத்நட்டுதா னச்சியற்றுகவென......... ச்
சார்புறுகல்வி சால்பொழுக்கங்களா............ ன்
ஆன்றோனெனவே சான்றோர்மதிக்கு........... ம்
பெர்சிவலையனும் பெரியோன்றன்னா...... ல்

மேற்சொல்லப்பட்ட சதுரகராதி சென்னை இராஜதானி வித்தியாசாலைத் தமிழ்த்தலைமைப் புலவராகிய திருத்தணிகை - விசாகப்பெருமாளையரையும், மேற்படி வித்தியாசாலைத் தமிழ்ப் புலவராகிய புரசைப்பாக்கம் - பொன்னம்பலமுதலியாரையும், கொண்டு தள்ளப்படுவனவற்றைத் தள்ளிச் சேர்க்கப்படுவனவற்றைச் சேர்த்துத் திருத்தமுறவாராய்ச்சி செய்வித்து அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

சிறப்புப்பாயிரம்.

மூவுலகனைத்து முயன்றடியேத் - - - - - - - து
யாவுலகனைத்து மேந்தியாள்கடவுளை - - - - - - ப்
பணிந்துநான்சூடிய பதமலருலகெ - - - - - - - லா
மணிந்துவாழ்த்த வருந்தமிழைம்பொரு - - - - ண்
முன்னூறெளிந்து முன்னர்த்தந் - - - - - - - - த
தொன்னூல்விளக்கந் துதித்துக்கொண்டன - - - - ர்
நூற்பதக்கருவியா நூங்கெனவேண் - - - - - - டு
நாற்பதவிளக்கமு நவில்கெனவேண் - - - - - - ட்
யாப்புறமறைவுறு மென்றுணர்ந்தொளிபெற - - - ப்
பாப்புறத்தவைதனிப் பகர்ந்தகராதி - - - - - - யா
வவ்வவ்பெயர்ப்பொரு ளவ்வவ்பொருட்பெய - - - ர்
காட்டியபின்னர் மீட்டியைவழக்கொ - - - - - - டு
தொகைவரும்பலபொருள் வகைவரவிளக்கி - - - யு
முதல்வருமெழுத்தொழி முழுதெலாமொன் - - - - றி
நுதல்வரும்பதமொரு நூண்டொடையாக்கியு - - - ம்
பெயர்பொருடொகைதொடை பிரித்தநான்முக - - - த்
துயர்பொருடொடர்பத முறைத்துநூல்வழங் - - - க
மதுரவஞதி வளர்ந்தர - - - - - - - - - - ச்
சதுரகராதி சாற்றுதுமன் - - - - - - - - - - றே

பெயரகராதி தொடையகராதிகளில் ஏவல், வினைமுற்று, வினையெச்சம், வியங்கோண்முற்றெனக் காட்டியிருக்குஞ் சிலவற்றை வழியாகக்கொண்டு இலக்கணநூல்களில் வினைச்சொற்குக்கூறிய விறுதிநிலையுடைய வேனையசொற்களையுமவ்வவ்சொல்லெனக் கண்டுணர்க.

முதலாவது

பெயரகராதி.

நம்முத லவனடி யிறைஞ்சி நாவல........ர்
நம்முதன் மொழிப்பயன் றரப்ப தார்த்தமீ........ங்
கம்முத லெழுத்தணி யணைவித் தத்தி........டு
யிம்முதற் பெயரக ராதி யென்ப........வே

அ. (முதலெழுத்து) அஃறிணைப் பன்மைவிகுதி, உதாரணம். வாழ்ந்தன, ஆறுவதன் பன்மையுருபு, உ-ம். நினதாள்கள், சாரியை, உ-ம். கு. தினக்கு, சுட்டு, உ-ம். அவன்.

அகக்காழ்—உள்வயிரம்.

அகங்காழ்—உள்வயிரம்.

அகங்கை—உள்ளங்கை.

அகடு—உள், நடு, பொல்லாங்கு, வயிறு.

அகணி—உள், மருதநிலம், வயல்.

அகணிதம்—எண்ணிக்கையின்மை.

அகண்டம்—எல்லாம்.

அகண்டாகண்டன்—கடவுள்.

அகண்டு—ஓர் வாத்தியம்.

அகத்தி—ஓர் மரம்.

அகநிலை—கடவுள்.

அகப்பா—அகழி, மதிலுண்மேடை, மதில்.

அகப்பு—தாழ்வு.

அகமம்—மரப்பொது.

அகமலர்ச்சி—ஆனந்தம்.

அகம்—இடம், உள், ஏழனுருபு, உ-ம். பல்லாரகத்து, பள்ளம், பாவம், பூமி, மரப்பொது, மனம், மனை.

அகம்மியம்—ஒளொன்.

அகரம்—பார்ப்பனச்சேரி, மருதநிலத்தூர், முதலெழுத்து.

அகரு—அகில்.

அகலம்—மார்பு, விரிவு.

அகலர்—சண்டாளர்.

அகலல்—நீங்கல், பிரிதல்.

அகலவுரை—இலக்கணமுமிலக்கியமு மெடுத்துக்காட்டிப் பொருள் விரித்தல்.

அகலிடம்—பூமி.

அகலியம்—மரப்பொது.

அகலுள்—அகலம், ஊர், நாடு, பெருமை.

அகல்—அல்குல், தகழி, நீங்கென்னுமேவல்.

அகவல்—அழைத்தல், ஆசிரியப்பா, ஆடல், மயிற்குரல், வியங்கோண்முற்று.
அகழி—அகழ்.
அகழ் — அகழி, தோண்டென்னுமேவல்.
அகழ்தல்—தோண்டல்.
அகளங்கன்—புத்தன், மாசிலான்.
அகளம்—தாழி, மிடா.
அகளி—தாழி.
அகறல்—அகலம், கடத்தல்.
அகற்றல்—நீக்கல், விரித்தல்.
அகனம்—கனமில்லாதது.
அகன்றில்—ஆணன்றில்.
அகாதம்—நீந்துபுனல், வஞ்சகம்.
அகாதன்—வஞ்சகன்.
அகாரம்—முதலெழுத்து, வீடு.
அகாரி—கடவுள்.
அகி—இரும்பு, பாம்பு.
அகிதம்—இதமின்மை.
அகிதர்—பகைவர்.
அகிலம்—எல்லாம், பூமி.
அகில்—ஓர்மரம்.
அகைத்தல்—அடித்தல், அறுத்தல், எழுச்சி, ஒடித்தல், செலுத்தல், முறித்தல், வருந்துதல்.
அகோசரம்—அறியொணுமை.
அகோரம்—கொடுமை, சிவனைம்முகத்தொன்று.
அக்கசாலையர்—கம்மாளர், தட்டார்.
அக்கம்—கண், கயிறு.
அக்கரம்—எழுத்து, ஓர்நோய்.
அக்கன்—நாய்.
அக்காரம்—சருக்கரை.
அக்கி—கண்.

அக்கிரமம் - கொடுமை.
அக்கினி—தீ.
அக்கு—எருத்திறத்திமில், எலும்பு, சங்குமணி.
அக்குரன் — இடையெழுவள்ளலிலொருவன்.
அக்குரோணி—படையினேர்தொகை.
அக்கை—முன்பிறந்தாள்.
அக்கோ — அதிசயச்சொல், இரக்கச்சொல்.
அஃகல் — குறைதல், வியங்கோண்முற்று.
அஃகுல்லி—உக்காரி, சிற்றுண்டி.
அஃபோதம்—நிலாமுகிப்புள்.
அங்கசன்—மன்மதன்.
அங்கணம்—சலதாரை, சேறு, முற்றம்.
அங்கதம் — தோளணி, பழிச்சொல், பாம்பு, பொய், யானையுணவு.
அங்கம்—அடையாளம், அவயவம், உடல், எலும்பு, ஓர்தேசம், ஓர்பாடை, கட்டில், பாவனை, வேதாங்கம்.
அங்கராகம்—பூசும்பரிமளம்.
அங்கர்—அங்கதேசத்தார்.
அங்கர்கோமான்—கன்னன்.
அங்கனை—பெண்.
அங்காடி—கடைவீதி.
அங்காத்தல்—வாய்திறத்தல்.
அங்காரகன்—செவ்வாய், நெருப்பு.
அங்கி—கார்த்திகைநாள், சட்டை, நெருப்பு.
அங்கிதம்—உடற்றழும்பு.
அங்கிநாள்—அத்தநாள்.
அங்கிரி—கால்.
அங்கு—அவ்விடம்.

அங்குசபாசமேந்தி—விநாயகன்.
அங்குசம்—யானைத்தோட்டி.
அங்குட்டம்—பெருவிரல்.
அங்குரம்—முளை.
அங்குலம்—ஓரளவு.
அங்குலி—விரல்.
அங்குலியம்—மோதிரம்.
அங்கை—உள்ளங்கை.
அங்கோலம்—அழிஞ்சில்.
அங்ஙனம்—அத்தன்மை, அவ்விடம்.
அசங்கதம்—ஒழுங்கின்மை, பொய்.
அசடர்—கீழ்மக்கள்.
அசதி—சிரித்துப்பேசல், வசவி.
அசமானம்—உவமையின்மை.
அசம்—ஆடு, மூவருடநெல்.
அசரம்—நடையில்லது.
அசலம்—அசையாநிலை, பூமி, மலை.
அசலனம்—அசைவின்மை.
அசலன்—கடவுள்.
அசலை—பூமி.
அசவல்—கொசுகு.
அசறு—சேறு.
அசனம்—உணவு,சோறு, வேங்கைமரம்.
அசனி—இடி, வச்சிராயுதம்.
அசன்—பிரமன்.
அசாவேரி—ஓரிராகம்.
அசி—அவமதிச்சிரிப்பு, ஆயுதப்பொது, வாள்.
அசிந்தியம்—ஓரெண்.
அசுசி—அசுத்தம்.
அசுணமா—கேகயப்புள்.
அசும்பு—கிணறு, பொல்லாநிலம்,வழுக்குநிலம்.
அசுரநாள்—மூலநாள்.
அசுரமந்திரி—சுக்கிரன்.
அசுரர்—அவுணர்.
அசுவம்—குதிரை.
அசுழும்—நாய்.
அசேதனம்—அறிவின்மை.
அசை—அசைநிலை, அசையென்னுமேவல், செய்யுளுறுப்பிலொன்று.
அசைதல்—ஆடல், உலாவல், சோம்பல், தங்கல், துவளல்.
அசைத்தல்—ஆட்டல், கட்டல்.
அசைப்பு—சொல்லுதல், சொல்.
அசோகம்—ஓர்மரம், மன்மதன்கணை.
அசோகன்—அருகன்.
அச்சம்—அகத்தி, இலேசு, பயம்.
அச்சயன்—கடவுள்.
அச்சி—ஓர்தேயம்.
அச்சு — அடையாளம், உயிர், பண்டியச்சு.
அச்சுதம்—அறுகு வெள்ளரிசி கூட்டியணிவது, கெடுதலின்மை.
அச்சுதன்—கடவுள், விட்டுணு.
அச்சுதன்முன்வந்தோன்— பலபத்திரன்.
அச்சுவத்தம்—அரசமரம்.
அச்சுவம்—குதிரை.
அச்சோ — அதிசயச்சொல், இரக்கச்சொல்.
அஞர்—அறிவில்லார், துன்பம்.
அஞலம்—கொசுகு.
அஞல்—கொசுகு.
அஞ்சம்—அன்னப்புள்.
அஞ்சலி—கும்பிடல்.
அஞ்சலிகை—வெளவால்.

அஞ்சல்—தோல்வி, பயப்படல், வியங்கோண்முற்று.

அஞ்சனம்—கறுப்பு,மேற்றிசையானை, மை.

அஞ்சனவண்ணன்—திருமால்.

அஞ்சனாவதி—வடகீழ்த்திசை யானைக்குப் பெண்யானை.

அஞ்சனி—காயா.

அஞ்சனை — அனுமன்றாய், வடதிசை யானைக்குப் பெண்யானை.

அஞ்சிதமுகம் — தலையாட்டியிருதோண்மேற் சாய்த்தல்.

அஞ்சிதம்—உண்டாதல், பொருந்தல்.

அஞ்ஞை—அறிவில்லான்.

அட்கு—இலக்கறி, கடன்கோடற்கிடுவைத்தல்.

அடக்கம்—ஒடுக்கம்.

அடங்கல்—அடக்கம், எல்லாம், சுருங்கல், வியங்கோண்முற்று.

அடம்—ஈனம், சஞ்சாரம்.

அடர்—தகடு, நெருங்கு, பொருதென்னுமேவல்.

அடர்தல்—நெருங்கல்.

அடர்த்தல்—பொருதல்.

அடர்பு—நெருக்கம், வினையெச்சம்.

அடலை—சாம்பல்.

அடல்—கொல்லுதல், சமைத்தல், பொருதல், வலி, வியங்கோண்முற்று, வெற்றி.

அடவி—காடு, சோலை.

அடாணா—ஓரிராகம்.

அடி—அடியென்னுமேவல், ஆதி, கால், செய்யுளுறுப்பிலொன்று.

அடிகள்—கடவுள், குரு, தலைவி, முனிவர், மூத்தோன்.

அடிக்குடில்—அடிச்சேரி.

அடிசில்—சோறு.

அடித்தல்—அடிக்குதல்.

அடுகளம்—போர்க்களம்.

அடுக்கல் — ஒன்றன்மேலொன்றேற்றல், மலை, வியங்கோண்முற்று.

அடுக்களை—மடைப்பள்ளி.

அடுதல் — கொல்லல், நெயிற்பாகமாக்குதல்.

அடுத்தல்—கிட்டல்.

அடுப்பு—அச்சம், அடுப்பு, பரணிநாள்.

அடை—அடுத்தல், அப்பவர்க்கம், இலை, கனம், காப்புச்செய், சேர், என்பவற்றேவல், தோசை, வினைமுற்று.

அடைகல்—பட்டடை.

அடைகுறடு—பட்டடை.

அடைக்கலம்—கையடை.

அடைச்சுதல்—மலர்சூட்டல்.

அடைதல்—சேர்தல்.

அடைத்தல்—காப்புச்செய்தல், சேர்த்தல்.

அடைந்தோர்—உறவோர்.

அடையலர்—பகைவர்.

அடையல்—எல்லாம், சேர்தல், வியங்கோண்முற்று.

அடையாளம்—இலாஞ்சனம்.

அடைவு—எல்லாம், வழி.

அட்சதை—சிதைவுறாமங்கலவரிசி.

அட்சி—கண்.

அட்டகம்—எட்டின்கூட்டம், வடமொழியிலோர்பிரபந்தம்.

அட்டம்—எட்டு, வினைமுற்று.

அட்டி—அதிமதுரம், செஞ்சந்தனம்.

அட்டிகை—ஓராபரணம்.

அட்டில்—மடைப்பள்ளி.

அட்டு—பருட்டு, வினையெச்சம்.

அட்டை—அட்டை, வினைமுற்று.

அணங்கு — அச்சம், அணங்கென்னேவல், அழகு, ஆசை, கொலை, தெய்வப்பெண், தெய்வம், தேவர்க்காடுங்கூத்து, நோய், பெண்மகள், வருத்தம்.

அணம்—மேல்வாய்.

அணரி—மேல்வாய்.

அணல்—கீழ்வாய், மிடறு.

அணவல்—கிட்டல்.

அணவு—சாரென்னுமேவல், நடு.

அணவுதல்—சார்தல், புணர்ச்சி.

அணி — அணியென்னுமேவல், அலங்காரம், அழகு, ஆபரணம், ஒழுங்கு, நன்மை, படைவகுப்பு, பெருமை, மாலை.

அணிகம்—சிவிகை.

அணிகலன்—ஆபரணம்.

அணிதல்—அலங்கரித்தல், பூணல்.

அணித்துறை—பாயிரம்.

அணிமா—அட்டசித்தியிலொன்று.

அணியல்—மாலை, வியங்கோண்முற்று.

அணில்—அணிற்பிள்ளை.

அணு—உயிர், சிறுமை, நுண்மை.

அணுகல் – கிட்டல், வியங்கோண்முற்று

அணை—கரைப்பொரு, செய்கரை, புணையென்னுமேவல், மெத்தை, வரம்பு.

அணைதல்—புணர்தல்.

அணோக்கம்—மரப்பொது.

அண்டகை—அப்பவர்க்கம்.

அண்டசம்—முட்டையிற்பிறப்பன, அவையாவன, அரணை, ஆமை, இப்பி, உடும்பு, ஓந்தி, கவுளி, நண்டு, பல்லி, பறவை, பாம்பு, மீன், முதலை, பிறவும்.

அண்டம்—ஆகாயம், பீசம், முட்டை.

அண்டயோனி—சூரியன்.

அண்டர் — இடையர், பகைவர், வானோர்.

அண்டல்—கிட்டல்.

அண்டிகம்—செந்நாய்.

அண்டை—அருகிடம், வினைமுற்று.

அண்ணம்—உண்ணு, மேல்வாய்.

அண்ணல்—அருகன், இராசா, சார்தல், தலைமையன், புத்தன், பெருமையிற்சிறந்தோன், முல்லைநிலத்தலைவன், வியங்கோண்முற்று.

அண்ணன்—தமையன்.

அண்ணாத்தல்—அங்காத்தல், மேனோக்கல்.

அண்ணுதல்—சார்தல்.

அண்மை—அணிமை.

அதகம்—மருந்து.

அதட்டம்—அரவுயிர்ப்பு, பாம்பினச்சுப்பல்.

அதம்—அத்திமரம், சங்கரித்தல், தாழ்வு, பள்ளம்.

அதரம்—கீழுதடு.

அதரிசனன்—குருடன்.

அதரித்திரன்—கன்னன், தரித்திரமில்லான்.

அதர்—ஆட்டதர், நுண்மணல், புழுதி, வழி.

அதர்கொளல்—வழிப்பறித்தல்.

அதர்வணம்—நாலாம்வேதம்.

அதவு—அத்திமரம்.

அதழ்—பூவிதழ்.

அதள்—தோல்.

அதி — மிகுதிப்பொருளைத் தருமடை சொல்

அதிகம்—இலாபம், குருக்கத்தி, படை, பொலிவு, மிகுதி.

அதிகாரம்—அதிகரித்தல், பண்பு.

அதிகுணன்—கடவுள்.

அதிங்கம்—அதிமதுரம்.

அதிசயன்—அருகன்.

அதிதி—காசிபப்பிரமாவின் மனைவிக ளிற்றேவதைகட்குத் தாய், புதியவன்.

அதிதிநாள்—புநர்பூசநாள்.

அதிதியர்—புதியோர்.

அதிபதி—இராசா.

அதிபன் — இராசா, எப்பொருட்குமி றையோன்.

அதிபாரம்—மிகுபாரம்.

அதிரல்—அதிர்தல், விரிதூறு.

அதிராயம்—அதிசயம்.

அதிரிசம்—காணப்படாதது.

அதிரிசன்—குருடன்.

அதிரேகம்—அதிசயம்.

அதிர்—அதிரொன்னேவல், ஒலி.

அதிர்ச்சி—ஆரவாரம்.

அதிர்தல்—நடுங்கல்.

அதிர்த்தல்—அதட்டல், சொல்லுதல்.

அதிர்ப்பு—அச்சம், அதிரல், ஆரவா ரம், நடுக்கம்.

அதீதர்—வானோர்.

அது—அஃது, வேற்றுமையுருபு, சுட்டு ச்சொல்.

அதுக்கல்—அடித்தல்.

அதுலம்—உவமையின்மை, ஒரொண்.

அதுலன்—கடவுள்.

அதுலிதம்—அசைவின்மை.

அதோகதி—நரகம்.

அதோமுகம் — ஆற்றுநீர்க்கழிமுகம், கீழ்நோக்கியமுகம்.

அத்தம்—அருநெறி, ஓர் நாள், கண்ணு டி, காடு, கை, சொற்பொருள், பாதி, பொன், வழி.

அத்தவாளம்—உல்லாசம், காடு, போ ர்வை.

அத்தன்—அருகன், கடவுள், குரு, சிவன் தகப்பன், மூத்தோன்.

அத்தாணி—அரசிருக்கை.

அத்தி—எலும்பு, ஓர் மரம், கடல், கொலை, பாதிசெய்யென்னேவல், யானை.

அத்தியந்தம்—ஓரொண்.

அத்தியயனம்—வேதமோதல்.

அத்தியாபகன்—வேதமுரைப்போன்.

அத்தியாயம் — முனிவருரைத்தவிலக் கியச்செய்யுட் கூறுபாடு, வேதநூலை விரித்த விலக்கியத்தின் கூறுபாடு, வேதம்.

அத்திரம்—அம்பு, கழுதை, குதிரை, கை விடுமாயுதப்பொது, மலை, முன்விடு மம்பு.

அத்திரி—உலைத்துருத்தி, ஒட்டகம், ஓரி ருடி, கணை, கழுதை, குதிரை, மலை, விண்.

அத்தினி—நால்வகைப் பெண்ணினொ ருத்தி, பெண்யானை.

அத்து — அசைச்சொல், அரைப்பட்டி கை, இசைப்பு, சாரியை (உ-ம். மாடத் துக்கு) சிவப்பு, செம்மை, தைத்தல்.

அத்துவம்—சிவப்பு.

அத்துவிதம்—இரண்டின்மை.

அத்தை — தலைவி, முன்னிலையசைச் சொல், உ-ம். சொல்லியாத்தைதின் வெகுளி.

அத்தோ—அதிசயவிரக்கச்சொல், இரக்கச்சொல்.

அநகம்—பாவமின்மை, மாசின்மை.

அநகன்—அருகன், கடவுள்.

அநங்கம்—இருவாட்சி, உடலின்மை, மல்லிகை.

அநங்கன்—உடலிலான், கடவுள், மன்மதன்.

அநந்தசயனன்—விட்டுணு.

அநந்தஞானி—கடவுள்.

அநந்தம்—அளவின்மை, ஆகாயம், ஓரெண், பொன்.

அநந்தரம்—மேல்.

அநந்தலோசனன்—கடவுள், புத்தன்.

அநந்தன்—அருகன், கடவுள், சிவன், சேடன், திருமால், பலபத்திரன்.

அநந்தை—பார்வதி, பூமி.

அநர்த்தம்—பயனிலாச்சொல்.

அநவரதம்—எப்பொழுதும்.

அநாதி—கடவுள், சிவன்.

அநாமிகை—ஆழிவிரல்.

அநாரதம்—எப்பொழுதும்.

அநாவிலன்—சுக்கிரன்.

அநித்தம்—அநித்தியம்.

அநித்தியம்—நிலையின்மை, பொய்.

அநிமாலினம்—சாவு.

அநியாயம்—நியாயமின்மை.

அநிருத்தன்—மன்மதன்மகன்.

அநிலநாள்—சோதிநாள், விசாகநாள்.

அநிலம்—காற்று, பிறப்பு.

அநிலன்—ஓரவுணன், வாயு.

அநீகம்—ஓர்படையின்றொகை.

அநீதம்—நீதியின்மை.

அநீதர்—கீழ்மக்கள்.

அநீதன்—நீதியில்லான்.

அநு—கதுப்பு, தொடர்ச்சி.

அநுகம்—செஞ்சந்தனம்.

அநுகரணவோசை—ஒலிக்குறிப்பு.

அநுக்கம்—சந்தனம், சோம்பு, பயம், பாம்பு, வருத்தம்.

அநுசன்—தம்பி.

அநுசிதம்—தகுதியின்மை, பொய்.

அநுத்தம்—பொய்.

அநுபமை—உவமையின்மை, தென்மேற்றிசையானைக்குப் பெண்யானை.

அநுமதி—சம்மதி, பௌரணை.

அநுமானம்—ஓர்பிரமாணம், சந்தேகம்.

அநுராகம்—ஆசை.

அநுலோமன்—உயர்குலத் தந்தைக்கு மிழிகுலத்தாய்க்கும் பிறந்தபிள்ளை.

அநுவழி—புதன்.

அநூரு—சூரியன்றேர்ப்பாகன், புதன், முடவன்.

அந்தகசயன்—சிவன்.

அந்தகன்—அழித்தோன், குருடன், சனி, நமன்.

அந்தகாரம்—இருள், நரகம்.

அந்தகாரி—சிவன்.

அந்தணர்—பார்ப்பார், முனிவர்.

அந்தணர்வாக்கு—வேதம்.

அந்தணன்—அருகன், சனி, சிவன், பிரமன், வியாழம்.

அந்தப்புரம்—அரசன்றேவியிருக்கை.

அந்தம்—அழகு, கடை, கத்தூரி, சாவு.

அந்தரங்கம்—ஏகாந்தம், மனம்.

அந்தரம்—அளவு, ஆகாயம், இடை, இருள், கூட்டம், தனிமை, தீமை, தேவர்கோயில், பேதம், முடிவு.

அந்தராயம்—தீமை.
அந்தராளம்—நடு.
அந்தராளன்—அநுலோமத் தந்தைக்கும்,பிரதிலோமத் தாய்க்கும் பிறந்த பிள்ளை.
அந்தரி—துர்க்கை, பார்வதி.
அந்தளம்—கவசம்.
அந்தன்—குருடன், சனி.
அந்தாதி—ஓர்தொடை, ஓர்பிரபந்தம், கடவுள்.
அந்தாளிபாடை—ஓர்பண்.
அந்தி—பொருந்தெனேவல், மாலைக்காலம், முச்தெருக்கூடுமிடம்.
அந்தித்தல்—பொருந்தல்.
அந்திமான்—இடையெழுவள்ளலிலொருவன்.
அந்தில்—அசைச்சொல் (உ-ம். அந்திற்கச்சினன் கழலினன்) அவ்விடம், உ-ம் சேயிழையந்திற் கொழுநற்காணிய.
அந்திவண்ணன்—சிவன்.
அந்து—நெல்லந்து.
அந்துகம்—சங்கிலி, யானைச்சங்கிலி.
அந்தோ—அதிசயவிரக்கச்சொல், இரக்கச்சொல்.
அந்நியபுட்டம்—குயில்.
அந்நியம்—அயல், குயில்.
அந்நியர்—பிறர்.
அபசவ்வியம்—இடதுபக்கம்.
அபத்தம்—பொய்.
அபயம்—அச்சமின்மை, அடைக்கலம், தஞ்சம்.
அபயர்—படைவீரர்.
அபயன்—கடவுள், சூரன், சோழன்.
அபரசன்—தம்பி.
அபரம்—கவசம், நரகம், பின்கூறு, பின்பக்கம், முதுகு, யானைப்பின்கால்.
அபராணம்—அந்திப்பொழுது.
அபராதம்—தண்டித்தல்.
அபரிமிதம்—அளவின்மை, பெருமை.
அபலம்—பயனின்மை.
அபவருக்கம்—முத்தி.
அபவாதம்—பழிச்சொல்.
அபவாரணம்—மறைவு.
அபாங்கம்—கடைக்கண்பார்வை.
அபாநன்—தசவாயுவிலொன்று.
அபாரணை—உண்ணுமை.
அபாரம்—அளவின்மை,பாரமபொருள்.
அபிதானம்—பெயர்.
அபிநவம்—புதுமை.
அபிமானம்—களிப்பு.
அபிராமம்—அழகு.
அபிராமி—சரச்சுவதி.
அபூபம்—அப்பவர்க்கம்.
அப்பம்—அடை, சிற்றுண்டி.
அப்பர்—திருநாவுக்கரையர்.
அப்பல்—சாந்துமுதலியவணிதல், மோதல், வியங்கோள்முற்று.
அப்பன்—தகப்பன்.
அப்பிரமேயம்—ஓரெண்.
அப்பிரமை — கிழ்த்திசையானைக்குப் பெண்யானை.
அப்பிரம்—மேகம்.
அப்பு—அப்பென்னுமேவல், கடல், நீர்.
அப்புது—யானையைப் பாகனதட்டுமோசை.
அமங்கலி—கைம்பெண்.
அமங்கலை—கைம்பெண்.
அமச்சன்—மந்திரி, வியாழம்.

அமணர்—சமணர்.

அமண்—சமண்மதம்.

அமரமாதர்—தெய்வமாதர்.

அமரம்—ஓர்நோய், வடமொழியினோர் நிகண்டு.

அமரர்—பகைவர், வானோர்.

அமரார்—பகைவர்.

அமராவதி—தேவேந்திரனகரம்.

அமராவதியோன்—தேவேந்திரன்.

அமரி—அமிழ்து, துர்க்கை, விடம்.

அமர்—அமவென்னேவல்,போர்,மதில்.

அமர்க்களம்—போர்க்களம்.

அமர்தல்—பெருமை,பொருந்தல்,பொலிவு, மிகுதி.

அமர்த்தல்—அமர்த்துதல், பொருதல்.

அமலம்—அழகு, அழுக்கின்மை.

அமலன்—அருகன், கடவுள், சிவன்.

அமலை—ஒலி, சோறு, பார்வதி, மிகுதி.

அமளி—மக்கட்படுக்கை, மெத்தை.

அமாத்தியர்—தந்திரிகள், மந்திரிகள்.

அமானம்—அளவின்மை.

அமிதம்—அளவின்மை.

அமித்திரர்—பகைவர்.

அமிர்தம் — அமுதம், மூர்ச்சைதீர்த்துயிர் தருமருந்து.

அமிழ்தம்—அமுதம்.

அமிழ்தல்—ஆழ்தல்.

அமிழ்து—இனிமை.

அமுங்கல்—அழுந்தல்.

அமுதகிரணன்—சந்திரன்.

அமுதம்—இனிமை, தேவருணவு, நீர், பால், பெருமை, மூத்தி, வேண்டல்.

அமுதர்—இடையர், வானோர்.

அமுதவல்லி—சீந்திற்கொடி.

அமுது—அமுதம், சுவை, சோறு, நீர் பால்.

அமுதுசெய்தல்—புசித்தல்.

அமை — அமையென்னுமேவல், மூங்கில்.

அமைச்சர்—மந்திரிகள்.

அமைதல்—சம்மதித்தல், பொருந்தல்.

அமைதி—சமயம், மாட்சிமை.

அமைத்தல்—சமைத்தல், செய்தல்.

அமையம்—காலம்.

அமைவன்—அருகன்.

அம்—அழகு, இடைச்சொல், சாரியை, நீர், மேகம்.

அம்பகம்—எழுச்சி, கண்.

அம்பணத்தி—துர்க்கை.

அம்பணம்—ஆமை, துலாக்கோல், நீர், மரக்கால், வாழை.

அம்பணவர்—ஓர்சாதி.

அம்பரம்—ஆகாயம், கடல், சீலை, திசை.

அம்பர்—அவ்விடம்.

அம்பலம்—சவை, சித்திரகூடம்.

அம்பல்—சிலரறிந்து தம்முட்புறங்கூறல், பழிமொழி.

அம்பாலிகை—தருமதேவதை.

அம்பால்—தோட்டம்.

அம்பாவணம்—சாபம்.

அம்பி—இறைகூடை, ஓடம், சலசூத்திரம், தாம்பணி, தெப்பம், மரக்கலம், மிடா.

அம்பிகை—காளி, தருமதேவதை, பார்வதி.

அம்பிகைதநயன்—விநாயகன்.

அம்பிகைபாகன்—சிவன்.

அம்பு—எலுமிச்சை, கணை, தளிர், நீர், மூங்கில், மேகம்.

அம்புதம்—நீர், மேகம்.

அம்புயம்—தாமரை, புட்டில்.

அம்புராசி—கடல்.

அம்புலி—சந்திரன்.

அம்போதி—கடல், காற்று, பாட்டினருத்தம்.

அம்போருகம்—தாமரை.

அம்ம—உரையசைச்சொல் (உ-ம். பயனின் றுமன நம்மகாமம்) கேளென்னல் (உ-ம். அம்மவாழிதோழி.)

அம்மம்—முலை.

அம்மனை—அம்மானை, தாய்.

அம்மான்—தகப்பன், மாமன்.

அம்மி—அம்மிக்கல்.

அம்மியம்—கள், காளம், சிறுசின்னம்.

அம்மெனல்—ஒலிக்குறிப்பு.

அம்மை—அழகு, தருமதேவதை, தவப்பெண், தாய், பார்வதி, வருபிறப்பு.

அயசு—பொல்லாநிலம்.

அயநம்—பிறப்பு, வருடப்பாதி, வழி.

அயமரம்—அலரி.

அயம்—ஆடு, இரும்பு, குதிரை, குளம், சேறு, நல்வினை, நிலம், நீர், விழா.

அயர்தல்—செய்தல், தளர்தல்.

அயர்ப்பு—மறதி.

அயர்வு—அகலம், உந்மத்தம், சோம்பு, தளர்வு, வருத்தம், வெறுப்பு.

அயர்வுயிர்த்தல்—வருத்தந்தீர்தல்.

அயல்—அருகிடம், இடம்.

அயவாகனன்—நெருப்பு.

அயனுள்—உரோகணிநாள்.

அயனூருவிலுதித்தோர்—வைசியர்.

அயன்—அருகன், பிரமன்.

அயன்பதத்துதித்தோர்—சூத்திரர்.

அயன்மனைவி—சரச்சுவதி.

அயன்முகத்துதித்தோர்—பார்ப்பார்

அயன்றோளுதித்தோர்—அரசர்.

அயிணம்—மான்றோல்.

அயிரம்—கண்டசருக்கரை.

அயிராணி—இந்திராணி, பார்வதி.

அயிராவதப்பாகன்—தேவேந்திரன்.

அயிராவதம் — கிழக்குத்திசையானை, தேவேந்திரன்யானை.

அயிரி—மீன்முள்ளரிந்திடுகத்தி.

அயிரை—ஓர்வகைமீன்.

அயிர்—சருக்கரை, நுண்மணல், நுண்மை.

அயிர்ப்பு—சந்தேகம்.

அயிலான்—குமாரன்.

அயில் — அழகு, இரும்பு, உண்வெள்ளன்னவேல், கூர்மை, கைவேல், கோரை, நாஞ்சில்

அயிறல்—உண்டல்.

அயினி—சோறு.

அயின்றல்—உண்டல்.

அயுதம்—பதினாயிரம்.

அரக்கர்—இராக்கதர்.

அரக்கல்—தேய்த்தல், வியங்கொள்ளுற்று.

அரக்காம்பல்—செவ்வாம்பல்.

அரக்கு—அரக்கு, அரக்கென்னேவல், சிவப்பு.

அரக்குதல்—அழித்தல், தேய்த்தல்.

அரங்கம்—ஆற்றிடைக்குறை, சத்திரம், சாலை, சிலம்பக்கூடம், நாடகசாலை, போர்க்களம்.

அரங்கல்—அழுந்தல்.
அரங்கு—இடம், ஓரில், சூதாடற்குவகு த்தவறை.
அரசன்—இராசா, எப்பொருட்குமிறை வன், வியாழம்.
அரசி—தலைவி.
அரசு—இராசா, இராசாங்கம், ஓர்மரம், நாடு, வியாழம்.
அரட்டர்—குறுநிலமன்னர்.
அரணம்—கதவு, கவசம், காவற்காடு, கோட்டை, தொடுதோல், மஞ்சம், ம தில், வேலி, வேல்.
அரணி—கவசம், தீக்கடைகோல், மதில்.
அரணியம்—காடு.
அரண்—அழகு, காவல், காவற்காடு, கோட்டை, மதில்.
அரதனம்—அகன்மணி, சிலம்பணி.
அரதி—வேண்டாமை.
அரத்தம்—அரக்கு, இரத்தம், கடம்பு, சிவப்பு, செங்குவளை, செம்பஞ்சு, செ ம்பரத்தம், செம்மை, பவளம், பொன்.
அரத்தன்—செவ்வாய்.
அரத்தை—ஓர் மருந்து.
அரத்தோற்பலம்—செங்குவளை.
அரந்தை—துன்பம்.
அரமகளிர்—தெய்வமகளிர்.
அரமனை—இராசமனை.
அரமியம்—வீட்டின்மேனிலாமுற்றம்வெளி.
அரம்—ஓர் கருவி.
அரம்பிலம்—பாதாளம்.
அரம்பை—தெய்வப்பெண், வாழை.
அரம்பையர்—தேவமாதர்.
அரரம்—கதவு.
அரலை—கடல், கழலைக்கட்டி, கொட் டை, மரல்.
அரவக்கொடியோன்-துரியோதனன்.
அரவணிந்தோன்—சிவன்.
அரவணைச்செல்வன்—விட்டுணு.
அரவம்—ஆயிலியம், ஒலி, சிலம்பு, பா ம்பு, பேரொலி.
அரவிந்தம்—தாமரை, மன்மதன்கணை.
அரவு—பாம்பு.
அரவுநாள்—ஆயிலியநாள்.
அரவுயர்த்தோன்—துரியோதனன்.
அரற்றல்—அழுதல், ஒலித்தல்.
அரனிடத்தவள்—பார்வதி.
அரன்-சிவன், எப்பொருட்குமிறைவன்.
அரன்மகன்—குமரன்.
அரன்றோழன்—குபேரன்.
அரா—அராவென்னேவல், பாம்பு.
அராகம்—அடங்காமை, ஓர்பண், பா லையாழ்த்திறம், பொன், முடுகியல்.
அராமம்—சோலை, பைங்கூழ்.
அரி—அடர்பு, அரிசி, அரித்தல், அரியெ ன்னுமேவல், ஆயுதப்பொது, ஈர்வா ள், உட்டுளைப்பொருள், ஐமைவடிவு, ஒளி, கடல், கட்டில், கண்வரி, கள், காற்று, கிண்ணி, குதிரை, குரங்கு, குற் றம், கூர்மை, சக்கரம், சந்திரன், சிங் கம், சிங்கவிராசி, சிலம்பின்பருக்கை க்கல், சிலம்பு, சூரியன், செம்மறியா ட்டுக்கடா, சோலை, தவளை, தீ, தேர், தேவேந்திரன், நமன், நிறம், நெருக் கம், நெற்கதிர், பகை, பச்சை, படு க்கை, பறை, பன்றி, பாம்பு, புகை, பொன், மரகதம், மரவயிரம், மலை, மழைத்தூவல், மாலை, மூங்கில், வண் டு, வரி, வலி, விசி, விட்டுணு.
அரிகரபுத்திரன்—ஐயனார்.
அரிகள்—பகைவர்.
அரிகூடம்—கோபுரவாயில்.

அரிசனம்—மஞ்சள்.

அரிசி—தண்டுலம்.

அரிச்சந்தனம்—ஐந்தருவிலொன்று.

அரிச்சந்திரன் — இடையெழுவள்ளலி லொருவன், சக்கரவர்த்தியிலொரு வன்.

அரிச்சிகன்—சந்திரன்.

அரிட்டம்—கள், காக்கை. கேடு, வெள்வெண்காயம், முட்டை, மோர்.

அரிட்டித்தல்—கொல்லல்.

அரிணம்—சிவப்பு, பொன், மான், யானை, வெள்ளை.

அரிணை—கள்.

அரிதகி—கடுக்காய்மரம்.

அரிதம்—திசை, பசும்புன்னிலம், பச்சை, பொன்னிறம்.

அரிதல்—அறுத்தல்.

அரிது—அரியது, பச்சை.

அரித்தல்—அரிப்பு.

அரித்திராபம்—பொன்னிறம்.

அரித்து—அரித்தலைச்செய்தென்னெச்சம், பச்சை.

அரித்தை—கிலேசம், துன்பம், வினைமுற்று.

அரிந்தமன்—விட்டுணு.

அரிப்பிரியை—இலக்குமி.

அரிப்பு—அரித்தல், குற்றம்.

அரிமருகன்—விநாயகன், முருகன்.

அரிமா—சிங்கம், சிங்கவிராசி.

அரியணை—சிங்காசனம்.

அரியணைச்செல்வன்—அருகன்.

அரியமா—சூரியன்.

அரியம்—வாச்சியம்.

அரியல்—அரிதல், கள், வியங்கோண் முற்று.

அரியேறி—துர்க்கை.

அரில்—குற்றம், சிறுதூறு, பகை, பிணக்கு.

அரிவாள்—கொடுவாள்.

அரிவை — இருபத்தைந்துவயதுப்பெண், தெய்வப்பெண், பெண்பொது.

அரு—அணு, அறிவு, கடவுள்.

அருகம்—சமண்மதம்.

அருகர்—சமணர்.

அருகல்—அணைத்தல், கிட்டல், குறைதல், சாதல், வியங்கோண்முற்று.

அருகனைமுடிதரித்தாள்—தருமதேவதை.

அருகன்—சங்காத்தி, சினேந்திரன்.

அருகி—கள், வினையெச்சம்.

அருகு—அருகென்னேவல், சமீபம்.

அருகுறல்—கிட்டல்.

அருக்கம்—எருக்கு.

அருக்கல்—அச்சம்.

அருக்கன்—சூரியன்.

அருக்கு—அருக்கென்னேவல், அருமை.

அருங்கலைநாயகன்—புத்தன்.

அருச்சனை—ஆராதனை.

அருச்சித்தல் — மலர்முதலியவற்றாலருச்சித்தல்.

அருச்சுனம்—எருக்கமரம், பொன், மருதமரம், வெண்மை.

அருஞ்சிறை—நரகம்.

அருட்குடையோன்—கடவுள்.

அருட்கொடிவேந்தன்—அருகன்.

அருட்டி—அச்சம்.

அருணம்—ஆடு, எலுமிச்சை, ஓர்தேசம், பதினெண்பாடையிலொன்று, மான், மிகுசிவப்பு.

அருணவம்—கடல்.

அருணன்—சூரியன், சூரியன்றேர்ப்பாகன், புதன்.

அருணெறிசுரக்குஞ்செல்வன்—புத்தன்.

அருத்தநாள்—பாதிநாள்.

அருத்தபாகை—வேதநூற்பொருள்.

அருத்தம்—கருத்து, சொற்பயன், பாதி, பொருள்.

அருத்தி—ஆசை, உண்பித்தென்னுமெச்சம், கூத்து, பாதம், பாதிசெய்யெனேவல்.

அருநெறி—அருகியவழி, வாயில்.

அருந்ததி—வசிட்டன்மனைவி.

அருந்தல்—அருமை, உண்டல், வியங்கோண்முற்று.

அருந்தவர்—முனிவர்.

அருந்துதன்—வேதனைசெய்வோன்.

அருப்பம்—ஊர், கள், காடு, கொலை, கோட்டை, துக்கம், நோய், பிட்டு, மருதநிலத்தூர், மா, மோர், வழுக்குநிலம்.

அருடாலம்—அணிச்சமரம்.

அருமலதி—ஓர்பண்.

அருமை—அரியதன்மை, பெருமை.

அரும்பல்—முகிழ்த்தல், வியங்கோண்முற்று.

அரும்பாலை—ஓரிராகம், அதையெழுபாலையிற்காணக.

அரும்பு—அரும்பெனேவல், முகை.

அரும்புதல்—பொடித்தல், முகைத்தல்.

அருவம்—உருவின்மை.

அருவருப்பு—அசுத்தம்.

அருவி—கரிமுகம், தினைத்தாள், மலையின்வீழாறு.

அருளல்—ஈதல், வியங்கோண்முற்று.

அருளாழிவேந்தன்—அருகன், கடவுள்.

அருள்—ஈயென்னுமேவல், கிருபை, கொடை, சிவசத்தி.

அரூபம்—அருவம்.

அரூபி—கடவுள், சிவன்.

அரை—அரையென்னுமேவல், இடை, பாதி.

அரைசிலை—அம்மி.

அரைத்தல்—அழித்தல், தேய்த்தல்.

அரைநாள்—பாதிநாள்.

அரைநூல்—அரைச்சதங்கை, அரைஞாண்.

அரைப்பட்டிகை—மாதரிடையணியிலொன்று.

அரையன்—அரசன்.

அரோ—அசைச்சொல், (உ-ம். கன்றரோ.)

அர்க்கம்—எருக்கு, நீர்க்காக்கை.

அர்ச்சனை—ஆராதனை.

அர்த்தநாள்—பாதிநாள்.

அலகரி—பெருக்கு.

அலகு—ஆயுதப்பொது, எண், துடைப்பம், துளம்பு, நெல்லின்மணி, பயிர்க்கதிர், பலகறை, பறவைமூக்கு, மகிழம்விதை.

அலகுஞ்சம்—துளம்பு.

அலகை—பிசாசம்.

அலகைக்கொடியாள்—காளி.

அலகைமுலையுண்டோன்—கண்ணன்.

அலக்கண்—துன்பம்.

அலங்கல்—அசைதல், இரக்கம், ஒளிசெய்தல், கலுழ்தல், தளிர், பூமாலை.

அலங்காரம்—அழகு, ஓரிலக்கணம், பேரழகு.

அலசல்—சோம்பல்.

அலசுதல்—சோம்பல்.

அலத்தகம்—செம்பஞ்சு.

அலத்தம்—செம்பஞ்சு.

அலத்தல்—துன்பம்.

அலத்தி—நுளம்பு.

அலந்தலை—துன்பம்.

அலந்தை—குளம், துன்பம், வினைமுற்று.

அலமரல்—அச்சம், சுழலல், துன்பம், வருந்தல்.

அலம்—அமையுமென்றல், அலமரல், கலப்பை, சஞ்சலம், தேள், விருச்சிகவிராசி.

அலம்பல்—ஒலித்தல், கழுவல், ததும்பல்.

அலரி—அழகு, ஓர்மரம், கண்வரி, சூரியன், தேனீ, நீராவி, பூட்பொது.

அலர்—நீர், பலரறிந்துபழிதூற்றல், பழிச்சொல், பூமாலை,மலர்தலைச்செய்-விரிதலைச்செய்யென்னுமேவல், மலர்ந்தபூ.

அலர்தல்—பூமலர்தல், விரிதல்.

அலர்மகள்—இலக்குமி.

அலவன்—ஆணண்டு, கற்கடகவிராசி, சந்திரன், நண்டு, பூனை.

அலறல்—ஒலித்தல், கூப்பிடல், வியங்கோண்முற்று.

அலன்றல்—சாதல்.

அலாபம்—தீமை.

அலாபு—சுரை.

அலாயுதன்—பலபத்திரன்.

அலி—எமன், நறுவிலிமரம், நெருப்பு, பேடி, வயிரமில்லாமரம்.

அலிகம்—நெற்றி.

அலை—அலையென்னேவல், கடல், கடற்றிரை, கருமணல், புனற்றிரை.

அலைசுதல்—அலையல், சோம்பல்.

அலைதல்—அலையல், சோம்பல், துன்பம், வருந்துதல்.

அலைத்தல்—அலைப்பு.

அலைத்துவம்—மிகுதி.

அலைப்பு — அலைத்தல், கூத்தின்விகற்பம்.

அலைவு—அலைதல்.

அல் — அல்லென்னேவல், சாரியையிடைச்சொல், (உ-ம். தொடையல்,) இராத்திரி, இருள், மதில்.

அல்கல்—இரா, குறைதல், தங்கல், தரித்திரம், நாள், வறுமை, வியங்கோண்முற்று.

அல்குல்—பெண்குறியின்மேற்பக்கம்.

அல்லகண்டம்—துன்பம்.

அல்லம்—இஞ்சி.

அல்லல்—துன்பம், முடைதல், வியங்கோண்முற்று.

அல்லவை-பயனிலாப்பொருள்,தீமை, பாவம்.

அல்லி—அகவிதழ், ஆம்பல், இரா, காயா, பூந்தாது.

அல்லியம்—விட்டுணுக்கூத்து.

அல்லோன்—சந்திரன்.

அவகாசம்—சமயம்.

அவகேசி—காயாதமரம்.

அவசம்—பரவசம்.

அவணன்—திண்ணியன்.

அவணி—நன்மை.

அவண்—அவ்விடம்.

அவதாதம்—வெண்மை.

அவதானம்—கிரிகித்தல்.

அவதாரணம்—மண்வெட்டி.

அவதி—அளவு, எல்லை.

அவத்தம்—பொய்.

அவந்தி—ஓர் நகர், ஓர் நாடு.

அவந்திகை—கிள்ளை.

அவப்பிரஞ்சம்—இழிசனர்மொழி.

அவமானம்—இழிவு.

அவம்—பயனின்மை.

அவயவம்—உடல், உறுப்பு.

அவயவி—உடல்.

அவரசன்—தம்பி.

அவரை—கொள்ளு, துவரை, மூதிரை முதலாயின.

அவரோகணம்—இறங்குதல்.

அவலம்—நோய், வருத்தம்.

அவலித்தல்—வருந்தல்.

அவல்—அவல், குளம், பள்ளம்.

அவளிகை—இடுதிரை.

அவனி—பூமி.

அவனிபாரகன்—இராசா.

அவன்—சுட்டுச்சொல்.

அவா—அவாவென்னேவல், ஆசை, ஆசைப்பெருக்கம், இறங்குதல்.

அவாசி—தெற்கு.

அவாவின்மை—வெறுப்பு.

அவாவுதல்—இச்சித்தல், இறங்குதல்.

அவி—கெடுஎன்னுமேவல், சோறு, தேவருணவு, நெய்.

அவிடி—திரைச்சீலை.

அவிதல்—கெடுதல், வருந்துதல்.

அவித்தல்—கெடுத்தல்.

அவித்தை—அஞ்ஞானம்.

அவிநயசாலை—நாடகசாலை.

அவிநயம்—ஓர் நூல், நாடகாங்கம்.

அவிநயர்—ஓர்நூலாசிரியர், நாடகர்.

அவிர்தல்—ஒளிசெய்தல், மீறல்.

அவிழ்தல்—விரிதல்.

அவிழ்த்தல்—விரித்தல்.

அவுணர்—அசுரர்.

அவுணன்—மாவலி.

அவை—அவையென்னேவல், அவ், கூட்டம், சவை, சுட்டுச்சொல், புலவர்.

அவைத்தல்—நெரித்தல், நென்முதலியகுத்தல்.

அவையல்—திரட்சி.

அவ்—அவை, சுட்டுச்சொல்.

அவ்வியத்தம்—ஒரொண், விளங்கக்காணப்படாதது.

அழகு—அழகு, சருக்கரை.

அழலல்—கனலுதல், வியங்கோண்முற்று.

அழலவன்—சூரியன், செவ்வாய்.

அழலாடி—சிவன்.

அழலுதல்—வெம்மையுறல்.

அழலேந்தி—சிவன்.

அழலோன்—செவ்வாய்.

அழல்—கேட்டைநாள், செவ்வாய், தீ, நரகம், வெப்பம், வெப்புறு என்னுமேவல்.

அழற்கண்வந்தோன்—வீரபத்திரன்.

அழற்றல் — சுடுதல், வியங்கோண்முற்று.

அழன்—பிணம்.

அழிகை—கெடுகை.

அழிதல்—கெடுதல்.

அழித்தல்—கெடுத்தல்.

அழிவி—கழிமுகம்.

அழிவு—குற்றம், கேடு.

அழுகல்—கெடுதல், வியங்கோண்முற்று.

அழுகை—அழுதல்.

அழுக்காறு—பொய், பொறாமை.

அழுக்கு—ஆமை, மாசு.

அழுங்கல்—அச்சம், அலையல், அழுதல், அழுந்தல், இரங்கல், ஒலித்தல், ஒளிமழுங்கல், கெடுதல், சோம்பல், துன்பம், நோய், வருத்தம், வியங்கோண்முற்று.

அழுங்கு — அழுங்குதலைச்செய்யென்னேவல், ஆமை.

அழுங்குதல்—அலையல், ஒளிமழுங்குதல்.

அழுதல்—இரங்கல்.

அழுத்தல்—அழுந்தச்செய்தல், வியங்கோண்முற்று.

அழுந்தல்—அழுந்துதல்.

அழுந்து—அழுந்தென்னேவல், நீராழம்.

அழுப்பு—சோறு.

அழுப்புகம்—தேவலோகம்.

அழுவம்—அப்பவர்க்கம், அழுக்குநிலம், கடல், துருக்கம், நடுக்கம், நாடு, பரத்தல், பெருமை, முரசு, வழுக்குநிலம், வினைமுற்று.

அழைக்கை—கூவுகை, வினைமுற்று.

அழைத்தல்—வாவெனல்.

அளகம்—நீர், பன்றிமுள், பெண்மயிர். மயிற்குழற்சி.

அளகு — கார்த்திகைநாள், கூகையுங்கோழியுமல்லனவாகிய புள்ளின்பெண்பொது.

அளகை—குபேரனகர்.

அளகையாளி—குபேரன்.

அளக்கர்— உப்பளம், கடல், கார்த்திகைநாள், குழைசேறு, நீள்வழி, பூமி.

அளத்தியர் — உப்பமைப்போர் பெண்கள்.

அளம்—உப்பளம், கூர்மை, நெருக்கம்.

அளவர்—அளப்பவர், உப்பமைப்போர்.

அளவு—வரையறை.

அளவை—அளவு, எல்லை, நாள்.

அளறு—குழைசேறு, நரகம்.

அளாவல்—ஓங்கியிருத்தல், கலத்தல், வியங்கோண்முற்று.

அளி — அளித்தலைச்செய்யெனேவல், அன்பு, கள், காய், குளிர்ச்சி, கொடை, மது, வண்டு.

அளிகம்—கட்டழகு, நெற்றி.

அளித்தல்—ஈதல், காத்தல், நெருங்கல், பாதீடு.

அளிந்தம்—கோபுரவாயிற்றிண்ணை.

அளுக்கல்—அச்சக்குறிப்பு.

அளை—குழையெனேவல், தயிர், புற்று, மலைக்குகை, மோர், வளை.

அளைதல்—கலத்தல், குழைவு.

அளைவு—குழைவு.

அள்—அள்ளெனேவல், கன்னம், காது, கூர்மை, நெருக்கம்.

அள்ளல்—அள்ளுதல், குழைசேறு, நரகம், வியங்கோண்முற்று.

அள்ளு—அள்ளென்னுமேவல், கூர்மை, பற்றிரும்பு.

அள்ளுதல்—அள்ளல், நெருங்கல்.

அள்ளை—பிசாசம், வினைமுற்று.

அறக்காடு—சுடுகாடு.

அறக்கொடியோன்—கடவுள்.

அறச்செல்வி—பார்வதி.

அறத்தின்மூர்த்தி—தருமதேவதை.

அழிவு—குற்றம், கேடு.

அழுகல்—கெடுதல், வியங்கோண்முற்று.

அழுகை—அழுதல்.

அழுக்காறு—பொய், பொருமை.

அழுக்கு—ஆமை, மாசு.

அழுங்கல்—அச்சம், அலையல், அழுதல், அழுந்தல், இரங்கல், ஒலித்தல், ஒளிமழுங்கல், கெடுதல், சோம்பல், துன்பம், நோய், வருத்தம், வியங்கோண்முற்று.

அழுங்கு — அழுங்குதலைச்செய்யென்னேவல், ஆமை.

அழுங்குதல்—அலையல், ஒளிமழுங்குதல்.

அழுதல்—இரங்கல்.

அழுத்தல்—அழுந்தச்செய்தல், வியங்கோண்முற்று.

அழுந்தல்—அழுந்துதல்.

அழுந்து—அழுந்தென்னேவல், நீராழம்.

அழுப்பு—சோறு.

அழுப்புகம்—தேவலோகம்.

அழுவம்—அப்பவர்க்கம், அழுக்குநிலம், கடல், துருக்கம், நடுக்கம், நாடு, பரத்தல், பெருமை, முரசு, வழுக்குநிலம், வினைமுற்று.

அழைக்கை—கூவுகை, வினைமுற்று.

அழைத்தல்—வாவெனல்.

அளகம்—நீர், பன்றிமுள், பெண்மயிர். மயிர்க்குழற்சி.

அளகு — கார்த்திகைநாள், கூகையுங் கோழியுமல்லனவாகிய புள்ளின்பெண்பொது.

அளகை—குபேரனகர்.

அளகையாளி—குபேரன்.

அளக்கர்— உப்பளம், கடல், கார்த்திகைநாள், குழைசேறு, நீள்வழி, பூமி.

அளத்தியர் — உப்பமைப்போர் பெண்கள்.

அளம்—உப்பளம், கூர்மை, நெருக்கம்.

அளவர்—அளப்பவர், உப்பமைப்போர்.

அளவு—வரையறை.

அளவை—அளவு, எல்லை, நாள்.

அளறு—குழைசேறு, நரகம்.

அளாவல்—ஓங்கியிருத்தல், கலத்தல், வியங்கோண்முற்று.

அளி — அளித்தலைச்செய்யெனேவல், அன்பு, கள், காய், குளிர்ச்சி, கொடை, மது, வண்டு.

அளிகம்—கட்டமரு, நெற்றி.

அளித்தல்—ஈதல், காத்தல், நெருங்கல், பாதுகா.

அளிந்தம்—கோபுரவாயிற்றிண்ணை.

அளுக்கல்—அச்சக்குறிப்பு.

அளை—குழையென்னேவல், அமிர், புற்று, மலைக்குகை, மோர், வளை.

அளைதல்—கலத்தல், குழைவு.

அளைவு—குழைவு.

அள்—அள்ளென்னேவல், கன்னம், காது, கூர்மை, நெருக்கம்.

அள்ளல்—அள்ளுதல், குழைசேறு, நரகம், வியங்கோண்முற்று.

அள்ளு—அள்ளென்னுமேவல், கூர்மை, பற்றிரும்பு.

அள்ளுதல்—அள்ளல், நெருங்கல்.

அள்ளை—பிசாசம், வினைமுற்று.

அறக்காடு—சுடுகாடு.

அறக்கொடியோன்—கடவுள்.

அறச்செல்வி—பார்வதி.

அறத்தின்மூர்த்தி—தருமதேவதை.

அறத்தின்மைந்தன்—தருமராசன்.

அறத்தைக்காப்போன்—ஐயனார்.

அறப்புறம்—அறச்சாலை.

அறம்—தருமம்.

அறல்—அறுதல், கருமணல், சிறுதூறு, நீர், புனற்றிரை, வியங்கோண்முற்று.

அறவர்—பெரியோர், முனிவர்.

அறவன்—புத்தன்.

அறவாழியந்தணன்—அரன், அரி, அருகன்.

அறவாழிவேந்தன்—கடவுள்.

அறவோர்—துறவோர், பார்ப்பார், முனிவர்.

அறவோன்—அருகன்.

அறன்கடை—பாவம்.

அறிகுறி—அடையாளம்.

அறிகை—அறிதல்.

அறிக்கை—அறிவித்தல், அறிவு.

அறிஞர்—அறிவுடையோர், புலவர், முனிவர்.

அறிஞன்—[illegible], புதன்.

அறிதுயிலமர்ந்தமூர்த்தி—விட்டுணு.

அறிமடம்—அறிந்து மறியாமைபோறல்.

அறியாமை—அறிவின்மை.

அறிவர்—அறிஞர், கம்மாளர்.

அறிவழி—கள், பிசாசம்.

அறிவறன்—உத்திரட்டாதி.

அறிவன்—அருகன், அறிவுடையோன், உத்திரட்டாதி, செவ்வாய், புதன்.

அறிவு—அறிதல், கல்வி, உணர்வு.

அறுகு—அறுகம்புல், ஓர்புல், சிங்கம், யாளி, யானை.

அறுகுறை—[illegible].

அறுசரம்—ஓசையாழ்.

அறுதி—சாவு, முடிவு, வினைமுற்று.

அறுதொழிலோர்—பார்ப்பார்.

அறுத்தல்—அறுத்தல்.

அறுபதம்—கையாந்தகரை, வண்டு.

அறுப்பு—அறுத்தல்.

அறுமீன்—கார்த்திகைநாள்.

அறுமீன்காதலன்—குமரன்.

அறுமுகன்—குமரன்.

அறுவாய்—கார்த்திகைநாள்.

அறுவை—சித்திரைநாள், சீலை, வினைமுற்று.

அறை—அடி, சொல், பறையடி, யென்றேவல், எழுத்திரேகைச்சொல், சிற்றில், சொல், திரை, தூக்கங்கள், பறையடித்தல், பாறை, மலையுச்சி, முறைந்து.

அறைகூவல்—பொரவழைத்தல்.

அறைதல்—அடித்தல், சொல்லல், பறையடித்தல்.

அறைபோதல்—கீழறுத்தல்.

அற்கல்—அறிவுடைமை, நிலைபெறுதல்.

அற்காமை—அறிவின்மை, நிலையாமை.

அற்பம்—சிறுமை, நாய்.

அற்பாம்—மக்கட்படுக்கை.

அற்பர்—கீழ்மக்கள்.

அற்புதம்—அதிசயம், அழகு, ஒலி.

அற்புதர்—கம்மாளர்.

அற்புதன்—சிவன்.

அற்றம்—அச்சம், சமயம், சோர்வு, மறைவு, மெலிவு.

அற்றான்—தரித்திரன்.

அற்றார்—தரித்திரர்.

அற்று — அத்தன்மைத்து, சாரியை, (உ-ம். பலவற்றுக்கோடு.)

அற்றை—அன்று, வினைமுற்று.

அனந்தர்—நித்திரை, பித்து, மயக்கம், மயிற்குட்டி.

அனந்தல்—நித்திரை.

அனலம்—உட்டணம்.

அனலி—சூரியன்.

அனலேறு—இடி.

அனல்—அனலென்னேவல், தீ.

அனற்பிரள்—நித்திரன்.

அனிச்சம்—ஓர்செடி.

அனுங்கல்—வருந்தல், வாடல்.

அனுபோகம்—அனுபவம்.

அனுமக்கொடியோன்—அருச்சுனன்.

அனே—ஓர்வகைமீன்.

அனைத்து—அவ்வளவு, எல்லாம்.

அனைய—உவமையுருபு, (உ-ம். பவளமனையவாய்.)

அன்—சாரியை, (உ-ம். அதன்கை.)

அன்பன்—புருடன்.

அன்பு—ஆசை, தயை.

அன்மை—அல்லாமை.

அன்றில்—ஓர்புள், மூலநாள்.

அன்று — அசைச்சொல். (உ-ம். உயிரெனவுலாயதன்றே) அந்நாள், வினைக்குறிப்புமுற்று.

அன்ன—அத்தன்மைய, உவமையுருபு. (உ-ம். மதியன்னமுகம்.)

அன்னம்—ஓர்புள், கவரிமா, சோறு.

அன்னவூர்தி—பிரமன்.

அன்னை—அக்காள், தாய், தோழி.

அன்றே—அதிசயவிரக்கச்சொல், இரக்கச்சொல்.

ஆ

ஆ, ஆச்சாமரம் — ஆதலைச்செய்யெனேவல், இச்சை, இரக்கம், ஓரெழுத்து, சொல்லிசை, பசுப்பொது, பெண்ணெருமை, பெண்பசு, பெண்மரை, வியப்பு, விலங்கின்பெண்பொது, வினாவிடைச்சொல்.

ஆஅ—அதிசயவிரக்கச்சொல், இரக்கச்சொல்.

ஆகண்டலன்—தேவேந்திரன்.

ஆகமம்—கல்வி, மரப்பொது, முதல்வன்வாக்கு.

ஆகம்—உடல், மார்பு.

ஆகம்பிதமுகம்—சினத்தானுஞ்சம்மதியானு மேற்கீழ் தலையாட்டடல்.

ஆகரம்—உறைவிடம்.

ஆகரி—ஓரிராகம்.

ஆகருடணை—அழைத்தல்.

ஆகவபூமி—போர்க்களம்.

ஆகவம்—சிலை, போர்.

ஆகாயம்—வான்.

ஆகாரம்—உணவு, நெய், மனைப்பொது, வடிவு.

ஆகு—எலி, கொப்புள், சாமரை, பெருச்சாளி.

ஆகுபுகு—பூனை.

ஆகுலம்—ஆரவாரம், ஒலி, வருத்தம்.

ஆகுலித்தல்—வருந்துதல்.

ஆகுவாகனன்—விநாயகன்.

ஆகுளி—சிறுபறை.

ஆகேடகம்—வேட்டை.

ஆக்கம்—இலக்குமி, இலாபம், எழுச்சி, கொடிப்படை, செல்வம், படைவகுப்பு, பொன்.

ஆக்கல்--செய்தல், வியங்கோண்முற்று.
ஆக்கிநேயம்—அட்டாதசபுராணத்தொன்று.
ஆக்கியம்—நாமம்.
ஆக்கிரந்திதம்—குதிரை விரைவுநடை.
ஆக்கிராணம்—மூக்கு.
ஆக்குவயம்—நாமம்.
ஆங்கிரசன் — சத்தவிருடிகளிலொருவன்.
ஆங்கு—அசைச்சொல், (உ-ம். விருந்தொக்கருமெனன்றுங்கு.) அவ்விடம். உவமைச்சொல், (உ-ம். மகறகண்டதாய்மறந்தாங்கு.)
ஆசங்கை—ஐயம்.
ஆசந்தி—பாடை.
ஆசம்—சிரிப்பு.
ஆசவம்—கள்.
ஆசனம்—இருப்பு, பீடம்.
ஆசனன்—சுக்கிரன்.
ஆசாரம்—அரசிருக்கை, ஒழுக்கம், சீலை, பெருமழை.
ஆசாரியன்—உபாத்தியாயன், குரு.
ஆசாள்—தலைவி.
ஆசான்—அருகன், உபாத்தியாயன், குமரன், குரு, சுக்கிரன், பாலையாழ்த்திறம், மூத்தோன், வியாழம்.
ஆசி—வாழ்த்து.
ஆசிடை—கூட்டம், சீலை, வாழ்த்து.
ஆசிதையன்—நாவிதன்.
ஆசியம்—அவமதிச்சிரிப்பு, முகம்.
ஆசிரியன்—உபாத்தியாயன், குரு.
ஆசினி—ஆகாயம், ஈரப்பலா, மரவுரி ரம், மரவுரி.
ஆசீவகர்—சமணமுனிவர்.
ஆசு—அற்பம், ஓர்பாட்டு, கவசம், குற்றம், கைக்கவசம், சீக்கிரம்.
ஆசுகம்—அம்பு, காற்று, பறவை.
ஆசுகன்—காற்று.
ஆசுரம்—எண்வகைமணத்திலொன்று.
ஆசுவினம்—ஐப்பசிமாதம்.
ஆசுவீசம்—ஐப்பசிமாதம்.
ஆசூசம்—சூதகம்.
ஆசை—திசை, பொன், விருப்பம்.
ஆச்சா—ஓர்மரம்.
ஆச்சியம்—நெய்.
ஆஞ்சி—அலையல், ஏலம், கூத்து, சோம்பல்.
ஆடகம்—துவரை, பொன்.
ஆடகி—துவரை.
ஆடல்—அசைதல், குளித்தல், கூத்தாடல், செய்தல், சொல்லுதல், நயச்சொல், புணர்தல், பொருதல், விளையாடல்.
ஆடவர்—ஆண்மக்கள், இளையோர், புருடர்.
ஆடவள்—பெண்.
ஆடவை—மிதுனவிராசி.
ஆடி—உத்திராடநாள், ஓர்மாதம், கண்ணாடி, வினையெச்சம்.
ஆடு — ஆடலைச்செய்யெனேவல், ஆடு, மேடவிராசி, வெற்றி.
ஆடூ—ஆண்மகன்.
ஆடை—சித்திரைநாள், சீலை, வினைமுற்று.
ஆட்சி—ஆண்மை, உரிமை.
ஆட்டம்—அசைவு, தன்மை.
ஆட்டல் — அசைத்தல், வியங்கோண்முற்று.

ஆட்டி—தலைவி, பெண், வினையெச்சம்.

ஆணம்—அன்பு, குழம்பு, கொள்கலம்.

ஆணர்—நன்மை, பாணர், வளமை.

ஆணி—ஆணி, எழுத்தாணி.

ஆணை—அடையாளம், ஏவல், சத்தியம், தமித்தல், மெய், வெற்றி.

ஆண்—ஆண்மகன், ஆண்விலங்கு, தலைமை.

ஆண்டகை—இராசா, சிறந்தோர்.

ஆண்டலை—கோழி.

ஆண்டலைக்கொடியோன்—குமரன்.

ஆண்டளப்போன்—வியாழம்.

ஆண்டு—அவ்விடம், வருடம்.

ஆண்டையர்—மனிதர்.

ஆண்டொழின்மைந்தன்—அருச்சுனன்.

ஆண்மரம்—அகவயிரமுள்ளமரம், சேமரம்.

ஆண்மை—மனவூக்கம், மெய், வலி.

ஆதண்—நோய், வருத்தம்.

ஆதபத்திரம்—வெண்குடை.

ஆதபம்—ஒளி, குடை, வெய்யில்.

ஆதம்—ஆதரவு.

ஆதரம்—ஆசை, ஊர், சிலம்பு.

ஆதரிசனம்—கண்ணாடி.

ஆதர்—குருடர்.

ஆதல்—ஆகுதல், கல்விநூல், கூத்து, தெரிதல், நுணுக்கம்.

ஆதவம்—ஒளி.

ஆதவன்—சூரியன், பார்ப்பான்.

ஆதனம்—ஆசனம், சீலை.

ஆதன்—அருகன், அறிவிலான், உயிர், குரு.

ஆதாரம்—உடல், நிலை, மழை.

ஆதி—அயன், அரன், அரி, அருகன், ஆவாயென்னுமுற்று, இறைவன், எப்பொருட்குமிறைவன், கடவுள், சூரியன், நேரோடல், பழைமை, புத்தன், மண்டிலமாயோடல், முதல்.

ஆதிச்சனி—மகநாள்.

ஆதித்தர்—வானோர்.

ஆதித்தன்—சூரியன்.

ஆதிநூல்—வேதம்.

ஆதிபன்—இராசா, எப்பொருட்குமிறைவன்.

ஆதிபுங்கவன்—அருகன், கடவுள்.

ஆதியங்கடவுள்—அருகன், கடவுள்.

ஆதிரன்—பெரியோன்.

ஆதிரை—திருவாதிரை.

ஆதிவருணர்—பார்ப்பார்.

ஆது—ஆறனுருபு, யானையைப் பாகனதட்டுமோசை.

ஆதுரன்—ஆசையுற்றோன், நோயுற்றோன்.

ஆதுலன்—தரித்திரன்.

ஆதுவம்—கள்.

ஆதேயம்—சுமக்கப்பட்டது.

ஆதோரணர்—யானைப்பாகர்.

ஆத்தன்—அருகன், சங்காத்தி.

ஆத்தானம்—கோபுரவாயில், தருமசவை.

ஆத்தி—ஓர்மரம்.

ஆத்திரகம்—இஞ்சி.

ஆநகம்—தம்பட்டம், துந்துமி, தேவதாரு, மேளம்.

ஆநநம்—முகம்

ஆநந்தபைரவி—ஓரிராகம்.

ஆநந்தம்—பேரின்பம்.

ஆநந்தன்—அருகன், கடவுள், சிவன்.

ஆநி—உத்திராடநாள், ஓர்மாதம், கேடு, கேட்டைநாள், பொருந்தந்தி, மூலநாள், வெட்டுக்குருந்து.

ஆநியம்—நாள், பருவம், பொழுது, மூலநாள்.

ஆந்திரம்—ஓர்தேசம், ஓர்பாடை.

ஆந்தை—ஓர்புள்.

ஆபணம்—கடை.

ஆபணியம்—கடைவீதி.

ஆபதம்—ஆபத்து.

ஆபதோத்தாரணன்—வைரவன்.

ஆபரணம்—அணிகலன், சீலை.

ஆபீனம்—சிற்பர்வீதி, பசுவின்மடி.

ஆமயம்—நோய்.

ஆமரி—வசனம்.

ஆமலகம்—நெல்லிமரம், பளிங்கு.

ஆமா—காட்டுமாடு.

ஆமாத்தியர்—மந்திரிகள், வைத்தியர்.

ஆமிரம்—மாமரம்.

ஆமிலம்—புளிப்பு, புளியமரம்.

ஆமை—கூர்மம்.

ஆமையாழ்—செவ்வழியாழ்த்திறம்.

ஆமோதம்—மகிழ்ச்சி, மிருவாசனை.

ஆம்—அசைச்சொல், ஆமெனல், இடைச்சொல், ஈரம், நீர்.

ஆம்பல்—அடைவு, அல்லி, இசைக்குழல், ஊதுகொம்பு, ஓரெண், கள், சந்திரன், பண், மூங்கில், யானை.

ஆம்பி—ஒலி, காளான்.

ஆம்பிரம்--புளிப்பு,புளிமா, மாமரம்.

ஆம்பிலம்—கள், புளிப்பு, புளியமரம்.

ஆயதம்—நீளம்.

ஆயத்தம்—எத்தனம்.

ஆயமுற்காவலன்—குபேரன்.

ஆயம்—ஆதாயம், சுங்கம், சூதாடுங்கருவி, தாய், தோழி, நாணி, நீளம், மகளிர்கூட்டம், மல்லரி.

ஆயர்—இடையர்.

ஆயனம்—வருடம்.

ஆயி—தாய்.

ஆயிரங்கண்ணன்—தேவேந்திரன்.

ஆயிரஞ்சோதி—சூரியன்.

ஆயிரம்—ஓரெண்,

ஆயில்—ஆயிலியநாள்.

ஆயு—வாழ்நாள்.

ஆயுகம்—வாழ்நாள்.

ஆயுதம்—கூத்தரப்பயிலிடம், படை.

ஆயுள்—நோய்நீர்ப்போன், வாழ்நாள்.

ஆயுள்வேதியர்—வைத்தியர்.

ஆயோதனம்—போர்.

ஆய்—ஆய்தல், ஆராயென்னேவல், தாய், வருத்தம்.

ஆய்ச்சியர்—இடைச்சியர்.

ஆய்தம்—ஆய்தவெழுத்து.

ஆய்தல்—ஆராய்தல், தேர்தல், நுண்மை.

ஆய்ந்தோர்—அறிவுடையோர், பார்ப்பார், புலவர்.

ஆய்ப்பாடி—இடையரூர்.

ஆய்மலர்—தாமரை.

ஆய்வு—அகலம், ஆராய்தல், நுட்பம், வருத்தம்.

ஆரகம்—இரத்தம்.

ஆரகூடம்—பித்தளை.

ஆரகூலம்—பித்தளை.

ஆரக்கண்ணியன்—சோழன்.

ஆரக்குவதம்—கொன்றைமரம்.
ஆரனூர்—துக்கம்.
ஆரணம் — வேதத்தின் ஞானபாகை, வேதம்.
ஆரணன்—பிரமன்.
ஆரணி—காளி.
ஆரணியம்—காடு.
ஆரமாலையன்—சோழன்.
ஆரம்—ஆத்திமரம், ஆபரணம், ஓர்பாணம், கடம்பு, சந்தனமரம், நந்தனவனம், பதக்கம், பித்தளை, பூமாலை, மாதரணிவடம், முத்து, முத்துமாலை.
ஆரம்பம்—தொடக்கம், பேரொலி.
ஆரலம்—பகை.
ஆரல்—ஆரான்மீன், கார்த்திகைநாள், செவ்வாய், நெருப்பு, மதில்.
ஆரவாரம்—ஒலி, பேரொலி.
ஆராதனை—பூசனை.
ஆராமம்—சோலை, பூந்தோட்டம்.
ஆராய்தல்—தேடல்.
ஆரி—சோழன், மேன்மை.
ஆரிடம்—ஆகமம், ஓர்மணம், நூல், பூசை, வழுக்குநிலம்.
ஆரியம்—அழகு, இமயமலைக்கும்விந்தியமலைக்குநடுத்தேசம், பண்டம், வடமொழி.
ஆரியர்—ஆசிரியர், புலவர், வைத்தியர்.
ஆரியவராடி—வராடித்திறத்தினொன்று.
ஆரியவேளாகொல்லி-- கொல்லித்திறத்தினொன்று.
ஆரியன்—அறிவுடையன், ஐயனார், குரு, சூரியன், புலவன், மிலேச்சன், வைத்தியன்.
ஆரியை—காளி, துர்க்கை, பார்வதி.
ஆரியைதநயன்—வயிரவன்.
ஆருகதம்—நாவன்மரம்.
ஆருபதம்—பித்தளை.
ஆருவம்—நீர்.
ஆரூடம்—ஏறுவது.
ஆரூபம்—அமையாமை, நீங்காமை.
ஆரை—நீருளாரை, புற்பாய், மதில்.
ஆரோகணம்—ஏறுதல், கற்படி, தாழ்வாரம்.
ஆர்— ஆத்தி, ஆர்தலைச்செய்யென்னுமேவல், ஐந்துருவாணி, கூர்மை, சோதி, தேர்வண்டியகவாய், நிறைவு, பலர்பால்விகுதி, (உ-ம். திணிநோளார்,) பாகு, பூமி, யாரொன்வினு.
ஆர்கதி—திப்பிலி.
ஆர்கலி—கடல், மழை.
ஆர்க்கம்—இரத்தம்.
ஆர்தல்—குடித்தல், தங்கல், நிறைதல், புசித்தல்.
ஆர்த்தர்—துயருறுவோர்.
ஆர்த்தல்—அணிதல், ஒலித்தல், கட்டல், பொருதல், பொருத்தல்.
ஆர்த்தார்க்கோன்—சோழன்.
ஆர்த்துதல்—நிறைத்தல.
ஆர்பதம்—நீழல், வண்டு.
ஆர்ப்பு-கட்டு, சிரிப்பு, பேரொலி, போர்.
ஆர்மதி—கடகவிராசி, நண்டு.
ஆர்மை—கூர்மை, மதில்.
ஆர்வம்—அன்பு, ஆசை, ஒலி, சிலை, நரகம்
ஆர்வலன்—அன்புடையான், புருடன், மித்திரன்.
ஆர்வு—ஆராய்தல்.
ஆலகண்டன்—சிவன்.
ஆலகாலம்—நஞ்சு, விடம்.

ஆலசியம்—சோம்பல்.

ஆலமர்கடவுள்—சிவன்.

ஆலம்—அம்புக்கூடு, ஆலமரம், நீர், பாம்பினஞ்சு, மலர்ந்தபூ, மழை.

ஆலம்பம்—பற்றுக்கோடு.

ஆலயம்—தேவர்கோயில், யானைக்கூடம், வீடு.

ஆலலம்—கூறை.

ஆலல்—ஆடல், ஒலித்தல், மயிற்குரல், வியங்கோண்முற்று.

ஆல்வட்டம்—ஆலவட்டம்.

ஆலவாலம்—வயல்.

ஆலாங்கட்டி—மழைக்கட்டி.

ஆலாலம்—விடம், வெளவால்.

ஆலி—அமுதம், ஆலாங்கட்டி, களியென்னேவல், கள், காற்று, மழை, மழைத்துளி.

ஆலிங்கனம்—தழுவல்.

ஆலித்தல்—களித்தல்.

ஆலை—கரும்பாலை, கள், வினைமுற்று.

ஆலோலம்—நீரொலி, புள்ளோச்சல்.

ஆலோலிதமுகம்—ஆசையான் மலர்ந்தமுகமாயொருவனையழைக்கவிடுதல்.

ஆலோன்—சந்திரன்.

ஆல்—அசைச்சொல், (உ-ம். நாடாமாஅராமால்) ஆலெனவல், ஆலமரம், வியங்கோள்விகுதி, (உ-ம். மரிஇயதொரால்,) ஆலென்னேவல், வேற்றுமையுருபு, (உ-ம். வாளால்வெட்டினன்.)

ஆவணம்— அடையாளம், உரிமை. கடை, தெரு, தேர்மொட்டுப்பொருந்தியபீடம், புநர்பூசம், முறிச்சீட்டு.

ஆவணி—அவிட்டநாள், ஓர்மாதம்.

ஆவணியம்—கடைவீதி.

ஆவநாழி—அம்புக்கூடு.

ஆவம்—அம்புக்கூடு, நாணி.

ஆவரணம்—கோட்டை, சீலை.

ஆவரி—அம்பு.

ஆவலங்கொட்டல் — வாயாலார்த்தாடல்.

ஆவலம்—கொல்லை.

ஆவலர்—காதலர், கொண்கர்.

ஆவலித்தல்—கொட்டாவிவிடுதல்.

ஆவல்—ஆசை, வளைவு.

ஆவளி—ஒழுங்கு.

ஆவாலம்—வெளவால்.

ஆவி—உயிர், உயிர்ப்பு, குளம், கொட்டாவிவிடுவென்னேவல், பிட்டு, புகை, வாசனை.

ஆவித்தல்—கொட்டாவிவிடுதல்.

ஆவியர்—வேடர், வேளாளர்.

ஆவிரம்—இடையரூர்.

ஆவிலம்—கலங்கனீர்.

ஆவேசனம்—சித்திரக்காரர்வீதி.

ஆவேலி—தொழுவம்.

ஆவோ—அதிசயவிரக்கச்சொல்.

ஆழல் — ஆழ்தல், கறையான், வியங்கோண்முற்று.

ஆழி—கடல், கணைப்பொது, சக்கரம், தேருருளை, மோதிரம், யானைக்கைநுனி ,வட்டம்.

ஆழித்தல்—ஆழமாகநாட்டல்.

ஆழிவெம்முரசோன்—மன்மதன்.

ஆழுதல்—அழுந்தல், தாழுதல்.

ஆழ்தல்—அழுந்தல், தாழ்தல்.

ஆழ்த்தல்—கட்டல், தாழ்த்தல், வியங்கோண்முற்று.

ஆளல் — ஆளுதல், வியங்கோண்முற்று.

ஆளானம்—கட்டுத்தறி, கலப்பை, யானைகட்டுந்தறி.

ஆளி—ஆளுவோன், ஒழுங்கு, சுவைப்பொது, சிங்கம், சிங்கவிராசி, செய்கை, யாளி.

ஆளியூர்தி—காளி, துர்க்கை.

ஆள்—அடிமை, ஆடவர், ஆளுதலைச்செய்யெனேவல்.

ஆள்வினை—உற்சாகம், முயற்சி.

ஆறலைத்தல்—வழிப்பறித்தல்.

ஆறல்—ஆறுதல், வியங்கோண்முற்று.

ஆறு—ஆறுதலைச்செய்யெனேவல், ஒழுக்கம், ஓரெண், நதி, வழி.

ஆறுதல்—ஆறல்.

ஆறை—ஆற்றூர், வினைமுற்று.

ஆற்றல்—அதிகம், செய்தல், ஞானம், நிலையுடைமை, பரித்தல், பொறை, மிகுதி, முயற்சி, வலி, வியங்கோண்முற்று.

ஆற்றறுத்தல்—வலியழித்தல்.

ஆற்ருர்—தரித்திரர், வருந்தினர்.

ஆற்று—ஆற்றென்னுமேவல், தலைக்கடை.

ஆற்றுக்காலாட்டியர்—மருதநிலப்பெண்கள்.

ஆற்றுணா—கட்டுச்சோறு.

ஆற்றுப்படை—ஓர்செய்யுள், வழிப்படுத்தல்.

ஆற்றுவித்தல்—உறுதிசெய்தல், வலிதருதல்.

ஆனமை—நீங்காமை, உத்திராடம்.

ஆனிலை—பசுக்கோட்டம்.

ஆனு—இனிமை, நன்மை.

ஆனுலகு—தேவலோகம்.

ஆனை—யானை.

ஆன்—ஆண்பால்விகுதி, (உ-ம். வேளான்) சாரியை, (உ-ம். ஒருபான்,) பசுப்பொது, பெண்பசு, வேற்றுமையுருபு, (உ-ம். உரனென்னுந்தோட்டியா னோரைந்துங்காப்பான்.)

ஆன்மா—உயிர்.

ஆன்வல்லோர்—இடையர்.

ஆன்றல்—அகலம், மாட்சிமை, மிகுதி.

ஆன்றவர்—அறிவுடையோர், புலவர்.

ஆன்றிரள்—பசுக்கூட்டம்.

ஆன்றோர்—அறிவுடையோர், புலவர்.

இ

இ—ஓரெழுத்து. சுட்டு. (உ-ம். இக்கொற்றன், இது.

இக—இகவென்னேவல், முன்னிலையசைச்சொல், உ-ம். தண்டுறையூரகாணிக.

இகத்தல்—கடத்தல், போகல்.

இகம்—இப்பிறப்பு.

இகரம்—ஓரெழுத்து, சந்தம்.

இகல்—உவமைச்சொல், (உ-ம். வரையிகல்வளர்தோள்.)

இகலல்—பொருதல், வியங்கோண்முற்று.

இகலன்—ஓரி, நரி.

இகலார்—பகைவர்.

இகலோர்—பகைவர்.

இகல்—பகை, பொருதென்னேவல், போர், வலி.

இகழ்ச்சி—ஈனம், நிந்தை, மறதி.

இகழ்தல்—நிந்தித்தல்.

இகழ்வு—நிந்தை.

இகளி—இடி.

இகுத்தல்—அழைத்தல், இரித்தல், ஈதல், எறிதல், குழைத்தல், கொல்லல், தாண்டல், தாழ்த்தல், துடைத்தல், மறித்தல், வருந்துவித்தல், வீழ்த்தல்.

இகும—அசைச்சொல், உ-ம். கண்டிகுமல்லமோகொண்கநினகேளே.

இகுளை—சுற்றம், தோழி, நட்பு.

இகைத்தல்—கொடுத்தல், நடத்தல்.

இக்கு—கரும்பு, கள்.

இக்கோ—அதிசயவிரக்கச்சொல்.

இங்கிதம்—குறிப்பு.

இங்கு—இவ்விடம், பெருங்காயம்.

இங்குலிகம்—சாதிலிங்கம், சிவப்பு.

இசி—இசியென்னேவல், இணங்குதல் சிரித்தல்.

இசை — இசைப்பாட்டு, இசைப்பு, இசையென்னுமேவல், ஒலி, கூடிநிற்றல், சொல், புகழ்.

இசைதல்—உடன்படல்.

இசைத்தல்—ஈதல், ஒலித்தல், கட்டல், பேசல்.

இசைநாள்—உத்திரட்டாதிநாள், பூரட்டாதிநாள்.

இசைப்பு—கூடிநிற்றல், சொல்லல்.

இசைமடந்தை—சரச்சுவதி.

இசையுந்தொழிலர்—சூத்திரர்.

இச்சை—அஞ்ஞானம், ஆசை, இடித்த தல், பொய்.

இஞ்சி—இஞ்சி, கேடகம், மதில், வாவி.

இடக்கரடக்கல்—மறைத்தசொல்.

இடக்கர்—குடம், தூர்த்தர், நெருங்கல், மறைத்தசொல்.

இடக்கியம்—தேர்க்கொடி.

இடக்கு—இழிசொல்.

இடக்கை—ஓர்வாச்சியம்.

இடங்கணி—சங்கிலி.

இடங்கம்—உளி.

இடங்கர்—குடம், நீர்ச்சால், முதலை.

இடங்கழிமை—நெருங்கல்.

இடங்கழியர்—காமுகர், தூர்த்தர்.

இடத்தல்—தோண்டல்.

இடத்திடல்—சொலித்தல்.

இடபம்—எருது, சிவனூர்தி, சிவன் கொடி, மேற்றிசைப்பாலன்குறி.

இடம்—அகலம், ஆகாயம், இடதுபக்கம், இடம், செல்வம், பெருமை, விசாலம், வீடு.

இடம்பாடு—விரிவு.

இடம்புரி—சங்கு.

இடர்—துன்பம்.

இடல் — எறிதல், கொடுத்தல். வியங்கோண்முற்று.

இடவகை—வீடு.

இடவை—வழி.

இடாகினி—காளியேவல்செய்வாள்.

இடாகு—புள்ளி.

இடார்—இறைகூடை.

இடி—இடி, இடியென்னேவல், இந்திரன்கொடி, உறுதிச்சொல், ஒலி, சிற்றுண்டி, சுண்ணம், தகரம், தினைமா, நென்மா.

இடிஞ்சில்—அகல்.

இடிதல்—ஒடிதல்.

இடித்தல்—இடிக்குதல், உறுதிச்சொல், ஒலித்தல்.

இடிம்பு—அவமதித்தல்.

இடியேறு—இடி.

இடுகாடு—சுடுகாடு.

இடுகை—ஈகை.

இடுக்கண்—துன்பம்.

இடிதல்—ஈதல், எறிதல், சொரிதல்.

இடிப்பு—இடை.

இடும்பர்—இராக்கதர்.

இடும்பி—ஓரிராக்கதி.

இடும்பிகொழுநன்—வீமன்.

இடும்பு—இடிம்பு.

இடும்பை—அச்சம், துன்பம்.

இடுவி—பெண்ணுமை.

இடை—இடம், இடை, இடையென்னேவல், ஏழனுருபு, (உ-ம். நல்லாரிடைப்புக்கு,) நடு, நிறை, நுசுப்பு, பக்கம், பௌரணை, யானை, வினைமுற்று.

இடைசுருங்குபறை—உடுக்கை.

இடைச்சனி—பூரநாள்.

இடைச்சேரி—இடையரூர்.

இடைதல்—இடையல், சீலை.

இடையர்—இடையர்.

இடையல்—இடைதல், நல்லாடை.

இடையெழுஞ்சனி—பூரநாள்.

இட்டம்—அன்பு, வினைமுற்று.

இட்டளம்—தளர்வு, துன்பம்.

இட்டி—ஈட்டி, யாகம்.

இட்டிகை—இடுக்குவழி, செங்கல்.

இட்டிடை—சிறுமை.

இட்டு—அசைச்சொல், (உ-ம். நெஞ்சம்பிளந்திட்டு,) வினையெச்சம்.

இணங்கல்—உடன்படல், வியங்கோண்முற்று.

இணங்கி—உடன்பட்டென்னுமெச்சம், தோழி.

இணங்கு — உடன்படுவென்னேவல், பிசாசம்.

இணர்—பூங்கொத்து,பூந்தாது,பூமலர்.

இணை — இச்சை, இணையென்னேவல், உவமை, கண்ணிணை, கூந்தல், துணை.

இணைகயல்— அட்டமங்கலத்தொன்று.

இணைத்தல்—சேர்த்தல்.

இணைவு—கலத்தல்.

இண்டர்—இடையர்.

இண்டு—ஈகைக்கொடி.

இண்டை—இண்டு, தாமரை, ஓர்வகை மாலை.

இதணம்—பரண்.

இதம்—உரிமை, சொல்.

இதயம்—மனம்.

இதரம்—அன்னியம், ஈனம்.

இதரர்—அன்னியர், கீழ்மக்கள்.

இதலை—கொப்பூழ்.

இதல்—கவுதாரி, சிவல்.

இதவு—இதம்.

இதழி—கொன்றைமரம்.

இதழ்—இலை, உதடு, கண்ணிமை, பனையேடு, பூவிதழ்.

இதி—உறுதி, பிசாசம்.

இதிகாசம்—பூர்வகதை.

இது—இஃது.

இதை—கலப்பை, காராமணி, புதுக்கொல்லை, மரக்கலப்பாய்.

இதைப்புனம்—புதுக்கொல்லை.

இத்தி—இறலிமரம்.

இத்தை-முன்னிலையசைச்சொல், (உ-ம் நீயொன்றுபாடித்தை.)

இந்தளம்—ஓர்பண், தூபக்கால்.

இந்தனம்—சுவாலை, நறும்புகை, மேல், விறகு.

இந்தி—பூனை.

இந்திரகோபம்—தம்பலப்பூச்சி.

இந்திரசாலம் — அற்புதங்களைகாட்டும் வித்தை.

இந்திரதனு—வானவில்.

இந்திரவிகூடல்—அமாவாசியை.

இந்திரநாள்—கேட்டைநாள்.

இந்திரன்—தேவேந்திரன், மிருகசீரிடநாள்.

இந்திரன்மனைவி—இந்திராணி.

இந்திரன்மைந்தன்—அருச்சுனன், சயந்தன்.

இந்திராணி—இந்திரன்மனைவி.

இந்திராவரசன்—விட்டுணு.

இந்திரி—கிழக்கு.

இந்திரை—இலக்குமி.

இந்திரைக்குமூத்தாள்—மூதேவி.

இந்திவரம்—கருங்குவளை, கருநெய்தல்.

இந்து—கரடி, கரி, சந்திரன்.

இந்துளம்—கடப்பமரம்.

இந்துளி—பெருங்காயம்.

இந்தோளம்—ஓரிராகம்.

இபங்கம்—புளிமா.

இபம்—மரக்கொம்பு, யானை.

இப்பர்—இடையர், உழவர், செட்டிகள், வைசியர்பொது.

இப்பவம்—இப்பிறப்பு.

இப்பி—சங்கு.

இமகரன்—சந்திரன்.

இமம்—பனி, பொன்.

இமயம்—பார்வதிபிறந்தமலை, பொன்மலை.

இமயவல்லி—பார்வதி.

இமாசலம்—ஓர்மலை.

இமிர்தல்—ஒலித்தல்.

இமில்—எருத்தூத்திமில்.

இமிழ்—இனிதாகென்னுமேவல், இனிமை, ஒலி.

இமிழ்தல்—இனிதாதல்.

இமிழ்த்தல்—ஒலித்தல், கட்டல், சொப்பளித்தல்.

இமை — அற்பம், இமையென்னுமேவல், கண்ணிமை, கரடி, மயில்.

இமைத்தல் — ஒளிசெய்தல், கண்ணிமைத்தல்.

இமையவர்—வானோர்.

இமையவர்வேந்தன்—இந்திரன்.

இம்பர்—இவ்விடம்.

இம்மடி—யானை

இம்மி — ஓரிலக்கம், நுண்மை, புலம், பொன்மை.

இம்மெனல்—அநுகரணவோசை.

இம்மை—இப்பிறப்பு.

இயக்கம்—இயங்கல், பெருமை.

இயக்கர்—கந்தருவர்.

இயக்கர்கோமான்—குபேரன்.

இயக்கன்—இயக்கசாதியோன், குபேரன், நாய்.

இயக்கி — செலுத்தியென்னெச்சம், தருமதேவதை.

இயக்குதல்—செலுத்தல்.

இயங்கல்—உலாவல், ஒளிசெய்தல், தங்கல், நடத்தல், வியங்கோண்முற்று.

இயசுரு—இரண்டாம்வேதம்.

இயந்திரம்—ஆலை, சூத்திரம், தேர், மதிலுறுப்பு.

இயந்தை—மருதயாழ்த்திறம்.

இயமம்—அட்டாங்கயோகத்தொன்று.

இயமன்—நமன்.

இயமாநன்—உயிர்.

இயம்—ஈ, ஒலி, சொல், வாச்சியம்.

இயம்பல்—எவ்வகைவாச்சியமுமுழக்குதல், ஒலித்தல், சொல்லல், பழமொழி, வியங்கோண்முற்று,

இயலல்—பொருந்தல், வியங்கோண்முற்று.

இயல்—இசை, இயற்றமிழ்,ஓத்து, குணம், சாயல், நடை, பொருந்தென்னேவல்.

இயல்பு—ஒழுக்கம், குணம்.

இயவர்—கீழ்மக்கள், சண்டாளர், தோற்கருவியாளர்.

இயவனர்—கம்மாளர், சித்திரக்காரர், சோனகர்.

இயவு—ஊர்,காடு, வழி.

இயவுள்—புகழாளன்.

இயவை—துவரை, தோரைநெல், வழி.

இயறல்—போதல், முத்தி.

இயற்றமிழ்—செந்தமிழ்.

இயற்றி—முயற்சி, வினையெச்சம்.

இயாதம்—யானைத்தோட்டியின்பிடர்.

இயை—இசைப்பு, இசையென்னேவல்.

இயைபு—இசைப்பு, செய்யுளிறுேருறுப்பு, பொருத்தம், வினையெச்சம்.

இயைபுளன்—புகழாளன்.

இயைய—உவமைச்சொல், (உ-ம், என்ருயிலையவெடுத்தளித்தான்,) பொருந்தவென்னுமெச்சம்.

இரக்கம்—ஒலி, கிருபை, துன்பம்.

இரங்கல்—அழுதல், ஒலித்தல், வியங்கோண்முற்று.

இரசனம்—ஓர்பொறி, பல்.

இரசனி—இராத்திரி.

இரசிதம்—வெள்ளி.

இரச்சு—கயிறு.

இரட்டல்—அசைத்தல், இரட்டித்தல், ஒலித்தல், வியங்கோண்முற்று.

இரட்டியர்—வைசியர்.

இரட்டு—இரட்டென்னேவல், ஒலி, ஓர்சாதி.

இரட்டை—பாடுவிச்சி, மிதுனராசி,வினைமுற்று.

இரணம்—உப்பளம்,புண், போர்

இரணியகருப்பன்—பிரமன்.

இரணியம்—பொன்.

இரதபதம்—புறவு.

இரதம்—அரைஞாண், இனிமை, சுவை, சூதம், தேர், புணர்ச்சி, மாமரம்.

இரதனம் — அரைஞாண், கிண்கிணி, பல்.

இரதன்—கண், கிளி.

இரதி—ஆசைப்பெருக்கம், இரதிதேவி, இலந்தைமரம், காந்தள், பித்தளை, பெண்யானை, வேண்டல்.

இரதிகாதலன்— மன்மதன்.

இரத்தம்—உதிரம், சிவப்பு, பவளம்.

இரத்தல்—பிச்சை.

இரத்தி— இத்திமரம், இலந்தைமரம், முன்னிலைவினைமுற்று.

இரத்திரி—இத்திமரம்.

இரத்தினம்—மாமணிப்பொது.

இரத்துதல்—பேசலாலெழுமொலி.

இரப்பு—தரித்திரம், பிச்சை.

இரம்பம்—ஈர்வாள், கத்தூரிமிருகம்.

இரலை—அச்சுவினிநாள், ஊதிடுகொம்பு, கலைமான், புல்வாய்.

இரவணம்—ஒட்டகம்.

இரவலர்—இரப்போர்.

இரவி—சூரியன். மலை.

இரவிநாள்—இரேவதிநாள்.

இரவு—இரத்தல், இராத்திரி.

இரவோர்—இரப்போர்.

இரா—இரவு, இருத்தலைச்செய்யாவென்னு மஃறிணைப்பன்மை வினைமுற்று, வினையெச்சம்.

இராகம்—ஆசை, இன்னிசை, சிவப்பு, நிறம்.

இராகவன்—இராமன்.

இராகு—கரும்பாம்பு.

இராக்கதிர்—சந்திரன்.

இராசமாநாகம்—கருவழலை.

இராசவிராசன்—குபேரன்.

இராசி—ஒழுங்கு, குவிதல், கூட்டம், மத்தியானம், மேடமுதலியவிராசி.

இராசியம்—பெண்குறி மறைவு.

இராசிலம் — சாரைப்பாம்பு, நீர்ப்பாம்பு.

இராசீவம்—நாமரைப்பூ.

இராச்சியம்—உலகு, நாடு

இராடம்—ஓர்தேசம், கழுதை.

இராதம்—கடைக்கொள்ளி.

இராத்திரி—இரவு.

இராமகலி—ஓரிராகம்.

இராமக்கிரியம்—ஓரிராகம்.

இராமம்—அழகு.

இராவணம்—விளக்கு.

இரிஞர்—பகைவர்.

இரிதல்—அச்சம், ஓடல், கெடுதல், சாய்தல்.

இரிபு—பகை, வினையெச்சம்.

இரியல் — இரிதல், நல்லாடை, வியங்கோண்முற்று.

இரீதி—பித்தளை.

இரீதிகவுளம்—ஓரிராகம்.

இருக்கு—முதல்வேதம், வேதம்.

இருக்கை—இருத்தல், ஊர்ப்பொது, வினைமுற்று.

இருசு—செவ்வை, வண்டியுளிரும்பு.

இருடி—ஆந்தை, முனிவன்.

இருடிகள்—முனிவர்.

இருட்டு—இருட்டென்னேவல், இருள்.

இருணம்—உவர்த்தரை, கடன்.

இருணிலம்—நரகம்.

இருது—பருவம், மகளிர்சூதகம்.

இருத்தல்—தங்கல், வியங்கோண்முற்று.

இருத்தி—இருத்துதலைச் செய்தென் வினையெச்சம், இருப்பாயென்னுமுற்று, சித்தி.

இருத்தை—சந்திரனுண்காம்பக்கம், நாழிகை, நாழிகைவட்டில், வினைமுற்று.

இருநிதிக்கிழவன்—குபேரன்.

இருந்து—அசைச்சொல், (உ-ம். நனவென்றெழுந்திருந்தேன்,) வினையெச்சம்.

இருந்தை—கரி, முன்னிலைவினைமுற்று.

இருபிறப்பாளர்—பார்ப்பார்.

இருபிறப்பு — சந்திரன், சிறகு, பல், பார்ப்பார், முட்டையிற்பிறப்பன.

இருப்பு—இருக்கை.

இருப்பை—இருப்பாயென்னுமுற்று, ஓர்மரம்.

இருமல்—இருமுதல், வியங்கோண்முற்று.

இருமை—இம்மை, இருதன்மை, துக்கம், பெருமை, மறுமை.

இரும்பன்—காரெலி.

சஞ்சலம்—அசைவு, மனக்கவலை, மின்னல்.

சஞ்சலை—மின்னல்.

சஞ்சாளிகம்—வண்டு.

சஞ்சிதம்—ஈட்டியது.

சஞ்சீவகரணி—புளியமரம், மூர்ச்சைதீர்த்துயிர்தருமருந்து.

சஞ்சீவி—சஞ்சீவினி.

சஞ்சீவினி—மூர்ச்சைதீர்ந்துயிர்தருமருந்து.
சஞ்சு—பறவைமூக்கு.
சடகம்—ஊர்க்குருவி.
சடங்கம்—ஆறுசாத்திரம்.
சடங்கு—செய்முறை.
சடசடெனல்—ஈரடுக்கொலிக்குறிப்பு.
சடம்—உடல், கொடுமை, பொய்.
சடரம்—வயிறு.
சடாதரி—பார்வதி.
சடாமகுடன்—சிவன்.
சடாரி—கவசம்.
சடிதி—சீக்கிரம்.
சடிலம்—குதிரை, சடை, நெருக்கம்.
சடு—ஆறு.
சடை—ஓர்பூடு, சடை, வேர்.
சடைச்சி—நெட்டி, பாசி.
சடையோன்—சிவன், வீரபத்திரன்.
சட்டகம் — உடல், மனுடர்படுக்கைப்பொது, வடிவு.
சட்டம் — கதவிற்பலகைபோல்வன, திட்டம்.
சட்டி — ஓர்திதி, ஓர்பாத்திரம், சட்டியென்னேவல்.
சட்டித்தல்—அழித்தல், கொல்லல்.
சட்டை—அங்கி.
சட்பம்—அறுகு, மயிர்.
சண்டமாருதம்—பெருங்காற்று.
சண்டம்—கொடுமை, சீக்கிரம், பேடு.
சண்டன் — காலன், சிவன், சூரியன், நமன், பேடி.
சண்டிகை—காளி, துர்க்கை.
சண்டை—போர்.
சண்பகம்—செண்பகம்.
சண்பனி—யோகினி.
சண்முகன்—குமரன்.
சதகம்—ஓர்பிரபந்தம்.
சதகோடி—ஓரெண், வச்சிராயுதம்.
சதக்கிருதன்—இந்திரன்.
சததம்—எப்போழ்தும்.
சதபத்திரி—தாமரை.
சதமகத்தான்—இந்திரன்.
சதமுனை—வச்சிராயுதம்.
சதம்—அறுபடுபயிர், இலை, இறகு, நிலைமை, நூறு.
சதயம்—ஓர்நாள்.
சதனம்—இலை, இறகு, வீடு.
சதா—எப்போழ்தும், மரக்கலம்.
சதாகதி—காற்று, மாறுநடப்பு.
சதாசிவம்—முடியாதன்மை.
சதாசிவன்—சிவன்.
சதாநந்தன்—கடவுள், பிரமன்.
சதாபதி—மரவட்டை.
சதாபலம்—எலுமிச்சை.
சதாபுசம்—வண்டு.
சதி—உரோகணி, கற்புடையாள், சோறு, தாளவொத்து, பார்வதி, வஞ்சனை, வட்டம்.
சதிபதி—சிவன்.
சதிரிசம்—உவமை.
சது—நான்கு.
சதுக்கம்—நாற்றெருக்கூடுமிடம்.
சதுமுகன்—அருகன், பிரமன்.
சதுரங்கசேனை—காலாள், தேர், பரி, யானை.
சதுரங்கம்—ஓர்வகைச்சூதாடுகருவி.
சதுரர்—நகரப்பதியோர்.
சதுரன்—நகரப்பதியோன்.

சதுரை—சதுரங்கபட்டணம்.

சதுர்த்தர்—சூத்திரர்.

சதுர்த்தல்—அப்புதல்.

சதுர்ப்புயன்—திருமால்.

சத்தம்—ஏழு, ஒலி.

சத்தி—கக்கல், குடை, கைவேல், சத்தியென்னேவல், சூலம், தேரிடக்கியம், பார்வதி, வலி, விருதுக்கொடி, வெண்குடை.

சத்திகம்—குதிரை.

சத்தியம்—சபதம், மெய்.

சத்தியோசாதம்—சிவனைம்முகத்தொன்று.

சத்திரம்—அன்னசத்திரம், கைவிடாப்படை, கைவேல், பாணம், யாகம், வெண்குடை.

சத்து—உண்மை.

சத்துவம்—வலி.

சத்தை—இருக்கை.

சநகன்—சீதையின்றகப்பன்.தகப்பன்.

சநநம்—பிறப்பு.

சநநி—தாய்.

சநபதம்—நாடு.

சநலோகம்—மேலேழுலகிலொன்று.

சநற்குமாரம் — அட்டாதசவுபபுராணத்தொன்று.

சநார்த்தனன்—திருமால்.

சநி—ஓர்கிரகம், சநியென்னேவல்.

சநிப்பு—பிறப்பு.

சந்தணி—சந்தனம்.

சந்ததம்—எப்போழ்தும்.

சந்ததி—சந்தானம்.

சந்தநுமுன்மகன்—வீட்டுமாசாரி.

சந்தப்பா — இருபத்தாறெழுத்துநான்கடியாகவரும்பா.

சந்தம்—அழகு, கவியின்வண்ணம், சந்தனம், நிறம், வடிவு.

சந்தனம்—சந்தனமரம்.

சந்தாபம்—வெப்பம்.

சந்தானகரணி—முறிந்தவுறுப்புக்களையிணைக்குமருந்து.

சந்தானம்—ஐந்தருவிலொன்று, சந்ததி.

சந்தி — இசைப்பு, சந்தியென்னேவல், பலதெருக்கூடுமிடம், மாலைநேரம், மூங்கில்.

சந்திமான்—இடையெழுவள்ளலிலொருவன்.

சந்திரகம் — பொன்வண்டு, மயிற்றோகைக்கண்.

சந்திரகாந்தம்—சந்திரமுகத்துருகுங்கல்.

சந்திரசேகரன்—சிவன்.

சந்திரதிலகம்—சந்தனம்.

சந்திரம்—கர்ப்பூரம், பொன்.

சந்திரன்—நிலவு.

சந்திரிகை—சந்திரவொளி.

சந்தில்—சனி.

சந்து—சந்தனம், பலதெருக்கூடுமிடம், மூட்டு.

சந்தை — பலவூர்மனிதர்களுமோரிடத்தினத்திற்கொள்ளல்விற்றல்செய்யநாட்டுக்கூடுங்கூட்டம்.

சந்நத்தன்—போருக்காயத்தமானவன்.

சந்நிபம்—உவமை.

சந்நியம்—போர்.

சந்மம்—பிறப்பு.

சந்மானம்—உபசாரம்.

சந்மினி—காளியேவல்செய்வோள்.

சபதம்—ஆணை.

சபதி—விரைவு.

சபம்—ஆலம்வீழ்முதலிய, மூங்கில்.
சபாம்—கெண்டைமீன்.
சபலம்—இரதம், இலாபம், நிறைவேறல், மின்னல்.
சபலை—மின்னல்.
சமங்கை—வறட்சுண்டி.
சமணர்—அமணர்.
சமண்—சமணமதம்.
சமதன்—சங்காத்தி.
சமத்தம்—எல்லாம்.
சமப்பால்-நெய்தனிலம், முல்லைநிலம்.
சமமுகம்— தியானத்தாற்போற்றலையசைவின்மை.
சமம்—உவமை, நடு, போர்.
சமயம்—காலம், சைவமுதலியசமயம்.
சமரசம்—சமாதானம்.
சமரம்—போர்.
சமரி—துர்க்கை, பாம்பு.
சமர்—போர், முட்பன்றி.
சமர்த்தன்—திண்ணியன்.
சமவாயம்—கூட்டம், தற்கிழமை.
சமழ்த்தல்—நாணுதல், வருத்தம்.
சமழ்ப்பு—நாணம்.
சமன்—காலன், நடு, நமன்.
சமாசம்—தொகைப்படுவது.
சமாதி—அட்டயோகத்தொன்று, சாவு.
சமாலம்—பீலிக்குஞ்சம்.
சமானகரணி— இரணந்தழும்புதீர்க்கு மருந்து.
சமானம்—உவமை.
சமானன்—நாபியினின்றுமெழும்வாயு.
சமி—அருகன், சமியென்னேவல், வன்னிமரம்.
சமிதி—போர்.
சமிதை—ஓமவிறகு.
சமித்தம்—ஓமமண்டபம்.
சமித்தல்—பொறுத்தல்.
சமியன்—அருகன்.
சமீரணன்—காற்று.
சமீரம்—போர்.
சமீரன்—காற்று.
சமூ—படையிலோர்தொகை.
சமூதாயம்—கூட்டம்.
சமூத்திரம்—கடல், படையிலோர்தொகை, பத்திலட்சங்கோடி.
சமூகம்—கூட்டம், சவை.
சமை—சமையென்னேவல், வருடம்.
சமைத்தல்—அமைத்தல், செய்தல்.
சம்—அன்பு.
சம்பகம்—செண்பகம்.
சம்பட்டம்—சீலை, சோம்பல்.
சம்பம்—மரவயிரம், வச்சிராயுதம்.
சம்பரம்—எண்காற்புள், சீலை, நீர்.
சம்பரன்—ஓரிராக்கதன்.
சம்பராரி—இந்திரன், மன்மதன்.
சம்பவம்—பிறப்பு.
சம்பளம் — கனை, பண்டாரம், பொருமை, வழிச்சேறற்கு வேண்டும்பொருள், வழியுணவு.
சம்பாகம்—தர்க்கம்.
சம்பீரம்—எலுமிச்சை.
சம்பு — அயன், அரன், அரி, அருகன் இரவி, எலுமிச்சை, ஓர்புல், நரி, நாவல்.
சம்பூதம்—பிறப்பு.
சம்பை—ஓர்தாளம், மின்னல்.
சம்போகம்—புணர்ச்சி.

சம்மதம்—கோட்பாடு.

சம்யோகம்—புணர்ச்சி.

சம்வற்சரம்—வருடம்.

சம்வாகம்—மலைமேலேற்றியவூர்.

சயகண்டை—பரந்தவட்டிகை.

சயகம்—பூவரும்பு.

சயந்தனம்—தேர்.

சயந்தன்—இந்திரன்மகன்.

சயமகள்—துர்க்கை, மிதுனவிராசி.

சயம்—ஆம்பல், இரவி, கூட்டம், கை, சருக்கரை, மாலை, வெற்றி.

சயம்பு—அருகன், கடவுள், தானாகவாதல்.

சயனம்—நித்திரை, நித்திரைசெய்யுமிடம்.

சயிரோகம் — மேகவண்ணப்பூவுளமருதோன்றிமரம்.

சயை—சந்திரன்மூன்றும்பக்கம்.

சய்யோகம்—புணர்ச்சி.

சரகம்—தேனீ.

சரசம்—இனியகுணம்.

சரசி—இனியகுணி.

சரசு—குளம்.

சரடம்—ஓணான்.

சரடு—நூலிழைமுதலிய.

சரணம் — அடைக்கலம், கால், மயிற்றோகை, மருதநிலத்தூர், வீடு.

சரணாயுதம்—கோழி.

சரண்—அடைக்கலம், கால்.

சரண்புகல்—அடைக்கலம்புகல்.

சரதம்—மெய்.

சரபம் — எண்காற்புள், குறும்பாடு, வரையாடு.

சரமணி—அரைப்பட்டிகை.

சரமம்—முடிவு.

சரம் — அம்பு, கொறுக்கை, நடையுள பொருள், நாணல், மணிவடம், மாலை.

சரவணபவன்—குமாரன்.

சரவணம்—கொறுக்கை, நாணல்.

சரளை—மாலை.

சரளம்—ஒழுங்கு, சுருதி.

சரளி — சத்தசுரங்களையுமாரோகணமவரோகணமாகப்பாடுதல்.

சரற்காலம்—மாரிகாலம்.

சராகம்—வண்டு.

சராகை—வட்டில்.

சராசரம்—நடையுள்ளதுமில்லதும்.

சராசனம்—வில்.

சராவம்—அகல், சலாகை.

சரி—ஒப்பு, கூட்டம், கைவளை, சரிபொன்னேவல், மலைச்சாரல், வழி.

சரியை—சரிதல், பொன்முதலியவற்றின் சரிகை.

சரிதம்—சரித்திரம்.

சரிதல்—சாய்தல்.

சரிதை — ஒழுக்கம், சரித்திரம், சிவபூசையியல்பிலொன்று.

சரித்தல்—சரியச்செய்தல்.

சரித்திரம்—ஒழுக்கம்.

சரியை-ஒழுக்கம், பிச்சை, வினைமுற்று.

சரிவு—சாய்வு.

சரீரம்—உடல்.

சரு—சோறு, தேவருணவு.

சருகு—உலர்ந்தவிலை.

சருக்கம் — இலக்கியச்செய்யுட்கூறுபாடு.

சருக்கி — தேரிடக்கியம், விருதுக்கொடி.

சருமம்—தோல், தோற்பாய்.
சருமர்—சக்கிலியர்.
சருவம்—எல்லாம், பானை.
சருவரி—இருள்.
சருவல்—சமினைசெய்தல், வியங்கோண்முற்று.
சருவாணி—பார்வதி.
சருவேச்சுரன்—கடவுள்.
சரோங்கிரன்—வில்லின்வல்லவன்.
சரேலெனல்—ஒலிக்குறிப்பு.
சரை—நரை.
சரோசம்—தாமரை.
சரோருகம்—தாமரை.
சர்க்கம்—சருக்கம்.
சர்ப்பம்—பாம்பு.
சர்வதா—எப்பொழுதும்.
சலகம்—நீராடல்.
சலசம்—தாமரை.
சலசரம்—மீனவிராசி, மீன்.
சலசலோசனன்—திருமால்.
சலசை—இலக்குமி.
சலஞ்சலம்—வலம்புரிச்சங்கு.
சலதரம்—குளம், மேகம்.
சலதி—கடல்.
சலநிதி—கடல்.
சலபம்—விட்டிற்பறவை.
சலம்—அசைவு, சலஞ்சாதித்தல், தணியாக்கோபம், நீர், பொய், முட்பன்றிமுள்.
சலராசி—கடல்.
சலலம்—முட்பன்றிமுள்.
சலலி—முட்பன்றிமுள்.
சலவர்—நெய்தனிலமாக்கள்.
சலனம்—அசைவு, காற்று.
சலனன்—காற்று.
சலன்—கால்.
சலாகை — அகன்மணி, ஈட்டி, ஊசிக்காந்தம், சலாகு.
சலாங்கு—பொய்யாப்புள்.
சலாம்—வணங்கல்.
சலித்தல்—இளைத்தோய்தல், ஒலித்தல், சலனமுறல்.
சலியாமை—அசைவின்மை.
சலிலம்—நீர்.
சல்லகி—ஆத்திமரம்.
சல்லடை—தானியமுதலியவற்றைச்சல்லுங்கருவி.
சல்லபம்—முட்பன்றி.
சல்லரி—பம்பைமேளம்.
சல்லாபம் — வினாவும்விடையுங்கூடிய சொல்.
சல்லி—தூக்கங்கள்.
சல்லியகரணி—ஆயுதத்தாற்பட்டகாயமாற்றுமருந்து.
சல்லியம் — ஆயுதநுனிமுள், எலும்பு, செஞ்சந்தனம், பாணம், முட்பன்றி.
சல்லியன்—சுக்கிரன், நகுலசகாதேவர்மாமன்.
சவட்டல்—அழித்தல், துவட்டல், மெல்லல், வியங்கோண்முற்று.
சவம்—சீக்கிரம், பிசாசம், பிணம்.
சவரம்—சாமரம்.
சவரர்—வேடர்.
சவரி—சாமரம்.
சவலம்—பயன்.
சவளம்—ஈட்டி.
சவி—அழகு, ஒளி, சரமணிக்கோவை, செவ்வை.

சவிதா—சூரியன்.

சவை—அம்பலம், கூட்டம், புலவர்.

சவ்வியசாசி—அருச்சுனன்.

சவ்வியம்—வலப்பக்கம்.

சவ்வீரம்—ஓர்தேசம், ஓர் மருந்து.

சழக்கு—குற்றம்.

சளசளெனல்—ஈரடுக்கொலிக்குறிப்பு.

சளுக்குவேந்தர்—சாளுவர்.

சளுகம்—அட்டை.

சறுக்கல் — வழுக்கல், வியங்கோண்முற்று.

சற்சலம்—தெளிநீர்.

சற்று—அற்பம்.

சனம்—இனம், மனிதர், கூட்டம்.

சனித்தல்—பிறத்தல்.

சன்மானம்—உபசாரம்.

சன்னி—சீதநோய்.

சா

சா—ஓரெழுத்து, சாவென்னேவல்.

சாகசம்—மெய்ம்மை, யானை, வீரம்.

சாகம்—ஆடு, கீரை, சிறுகீரை, தேக்கமரம், வெள்ளாட்டுக்கடா.

சாகரம் — கடல், துயிலொழிதல், பதினாயிரங்கோடிகோடாகோடி.

சாகரி—ஓரிராகம்.

சாகாடு—உரோகணி, பண்டி.

சாகாதுண்டம்—அகில்.

சாகாமிருகம்—குரங்கு.

சாகி—மரப்பொது.

சாகினி—சிறுகீரை, சேம்பு.

சாகேதம்—அயோத்தி.

சாகை — இலை, சாதல், மரக்கொம்பு, வட்டில், வினைமுற்று, வேதம்.

சாக்கியம்—புத்தமதம்.

சாக்கியர்—புத்தர்.

சாக்கை—கருமத்தலைவன், புரோகிதன்.

சாசனம்—அரசராணை, ஆணை, இறையிலி [illegible], [illegible], தாம்பிரபத்திரிகை, [illegible].

சாஸியம்—தலைமை.

சாசுவதம்—அசையாநிலை, நித்தியம்.

சாடி—ஆண்மயிர், கும்பவிராசி, மிடா, தாழி, வினையெச்சம்.

சாடினி—[illegible].

சாடு — சாடென்னேவல், [illegible], பண்டி.

சாட்டியம்—வஞ்சம், வருத்தம்.

சாட்டுவலம்—பசும்புற்றரை.

சாணம்—ஆப்பி, சாணைக்கல்.

சாணை—சாணைக்கல்.

சாண்—பன்னிரங்குலவளவு.

சாதகம்—[illegible], [illegible], பூதகணம், வானம்பாடி.

சாதகும்பம்—பொன்.

சாதம் — உண்மை, சோறு, பிறப்பு, பூதம்.

சாதரூபம்—பொன்.

சாதரூபி—அருகன்.

சாதல்—இறத்தல்.

சாதவாகனன்—ஐயனார்.

சாதவேதா—நெருப்பு.

சாதனம்—அடையாளம், இடம், ஊர்.

சாதனை—[illegible] சாதித்தல், பொய்.

சாதாரணம்—பொது.

சாதாரி — ஓர்பண், முல்லைநிலத்திராகம்.

சாதி—கள், குலம், சாதியென்னேவல்.

சிறுசம்பகம், தேக்கமரம். பிரம்பு, மரப்பொது, வினைமுற்று.
சாதிக்காய்—பஞ்சவாசத்தொன்று.
சாதிப்பாய் — பிரப்பம்பாய், வினைமுற்று.
சாது—அருகன், சற்குணத்தோன்.
சாதுர்ப்பாகம்—நாவிலொன்று.
சாதேவம்—குழிநாவல்.
சாதேவன் — பஞ்சபாண்டவரிலொருவன்.
சாந்தல் — அப்புதல், வியங்கோண்முற்று.
சாத்தன்—அருகன், ஐயனார், தண்டிப்போன், வயிரவன்.
சாத்தியம்—சாதிக்கத்தக்கது.
சாத்தியவதேயர்—வியாசர்.
சாத்திரம்—நூல்.
சாந்தம்—குளிர்ச்சி, சந்தனம், சாணி, பொறுமை.
சாந்தன்—அருகன், புத்தன்.
சாந்தாற்றி—கால்செய்வட்டம், சிற்றாலவட்டம், வீவிக்குஞ்சம்.
சாந்தி—கழிப்பு.
சாந்திரம்—நெருக்கம்.
சாந்து—சந்தனம், சாந்தம், பராகம்.
சாந்தை—கங்கை, பூமி.
சாபம்—சபித்தல், தனுவிராசி, வில்.
சாபலன்—ஆட்டுவாணிபன்.
சாபறை—நெய்தனிலப்பறை.
சாப்பை—புற்பாய்.
சாமந்தம்—ஓரிராகம்.
சாமந்தர்—அமைச்சர்.
சாமம் — ஒருபாயம், கருமை, பச்சை, மூன்றாம்வேதம், யாமம்.
சாமரம்—கவரி.
சாமளம்—பச்சை,
சாமன்—காமன்றம்பி, புதன்.
சாமானியம்—பொது.
சாமி—அருகன், கடவுள், குரத்தி, குரு, தலைவன், பொன், முருகன், மூத்தோன்.
சாமீகரம்—பொன்.
சாமுண்டி—காளி.
சாமை—ஓர்பயிர்.
சாம்பர்—சாம்பல்.
சாம்பல்—ஒடுங்கல், சாம்பல், பழம்பூ, வியங்கோண்முற்று.
சாம்பவம் — அட்டாதசவுபபுராணத்தொன்று.
சாம்பவன்—அரன், இராமன்படைத்தலைவரிலொருவன்.
சாம்பவி—பார்வதி.
சாம்பு—சாம்பென்னேவல், பறை.
சாம்புதல்—ஒடுங்குதல், கூம்புதல்.
சாம்பூநதம்—பொன்.
சாயகம்—அம்பு, வாள்.
சாயங்காலம்—அந்திப்பொழுது.
சாயம்—அந்திநேரம், நிறம்.
சாயரி—ஓர்பண்.
சாயல்—அழகு, ஒப்பு, சாயல், நிறம், நுண்மை, மனிதர்படுக்கை, மேன்மை, வியங்கோண்முற்று.
சாயவேளாகொல்லி— கொல்லித்திறத்தினொன்று.
சாயனம்—கள்.
சாயாகவுளம்—ஓரிசை.
சாயாக்கிரகம்—கேது.
சாயாபதி—சூரியன்.

சாயாபுத்திரன்—சனி.
சாயானதம்—ஓந்தி.
சாயை—சூரியன்றேவி, நிழல், நிறம், வினைமுற்று.
சாய்—ஓர்வகைக்கோரை, சாயென்னேவல்.
சாய்தல்—இரிதல், நுண்மை.
சாய்த்தல்—சாயத்தள்ளல்.
சாய்ப்பு—தாழ்வு.
சாய்வு—சாய்தல், தாழ்வு.
சாரங்கம்—ஓரிசை, சாதகப்புள், மான், மேகம், யானை, வண்டு.
சாரங்கி—ஓர்யாழ்.
சாரசம்—குருகு, தாமரை, வெண்ணை.
சாரணர்—சமணமுனிவர், வேவுகாரர்.
சாரதி—தேர்ப்பாகன், புலவன்.
சாரமேயன்—நாய்.
சாரம்—இனிமை, ஓர்மருந்து, கிரகசாரம், நடை, நிலாமுகிப்புள், மரவயிரம், மேடு.
சாரர்—வேவுகாரர்.
சாரல்—கிட்டல், மருதயாழிசை, மலைப்பக்கம், வியங்கோண்முற்று.
சாரி—உலாப்போதல், சூதாடுகருவி, சூறைக்காற்று.
சாரிகை—கவசம், சுங்கம், சுழல்காற்று, சூதாடுகருவி, நாகணவாய்ப்புள், வட்டமாயோடல்.
சாரித்திரம்—ஒழுக்கம்.
சாரியை—சாரியை.
சாரு—கிள்ளை.
சாருகன்—கொலைசெய்வோன்.
சாரூபம்—ஓர்பதவி.
சாரை—ஓர்சாதிப்பாம்பு, வினைமுற்று.

சார்—அழகு, இடம், [illegible].
சார்ங்கபாணி—திருமால்.
சார்ங்கம்—திருமால்வில்.
சார்ச்சி—சார்தல்.
சார்தல்—கலத்தல், கிட்டல்.
சார்த்தூலம்—புலி.
சார்ந்தார்—உறவோர்
சார்ந்தோர்—உறவோர்.
சார்பறுத்தல்—துறவு.
சார்பிலார்—பகைவர், முனிவர்.
சார்பு—சார்வு, வினையெச்சம்.
சார்வபூமம்—வடதிசையானை.
சார்வபூமன்—ஒருவனைப்பணியாதுலகாள்வோன்.
சார்வாரம்—கச்சின்கடைக்கயிறு, முன்றானை.
சார்வு—ஆசைப்பெருக்கம், இடம், சார்வு, பற்று.
சால—மிகுதி, வினையெச்சம்.
சாலகடங்கடர்—இராக்கதர்.
சாலகம்—அதலலோகம், இளம்பூவரும்பு, சலதாரை, சிலந்திப்பூச்சி, பலகணி, பறவைக்கூடு, வலை.
சாலம்—ஆரன், ஆச்சாமரம், இளம்பூவரும்பு, கூட்டம், சபை, செடி, பலகணி, மாப்பொது, மாயவித்தை, வலை, விலங்கின்கூட்டம்.
சாலர்—நெய்தனிலமாக்கள்.
சாலி—அருந்ததி, கவசம், கள், நெல்.
சாலிகை—கவசம்.
சாலினி—கள்வாணிச்சி, தேவர்க்காடுபவள்.
சாலிவாகனன்—சலிசகாத்தன்.
சாலுகம்—சாதிக்காய்.

சாலுாரம்—நவளை, மேன்மை.
சாலேகம்—சந்தனம், சிந்தூரம், பலகணி, பூவரும்பு.
சாலேயம்—நெல்விளையுநிலம்.
சாலை — அரசன்மனை, அறத்தின்சாலை, குதிரைப்பந்தி, சாலை, வினைமுற்று.
சால் — சாலென்னேவல், நீர்ச்சால், படைச்சால், மிகுதி.
சால்பு—ஊக்கம், கல்வி, குணம், மாட்சிமை, மேன்மை, நிறைவு.
சால்வம்—ஓர்தேசம்.
சாவகம் — பதினெண்பாடையிலொன்று.
சாவகர்—சமணர்.
சாவகன்—சனி.
சாவகன்குறிஞ்சி — குறிஞ்சித்திறத்தினொன்று.
சாவித்திரி—சரச்சுவதி.
சாவு—சாவு, பிசாசம்.
சாவேரி—ஓரிராகம்.
சாழல்—ஓர்விளையாட்டு, கரடி.
சாளரம்—பலகணி.
சாளிகை—வண்டு.
சாறு—கள், குலை, கொத்து, திருவிழா.
சாற்றல்—சொல்லுதல், வியங்கோண்முற்று.
சாற்றுதல்—சொல்லுதல்.
சானகம்—வில்.
சானகி—ஓரரக்கன், சீதை, மூங்கில்.
சானவி—கங்கை.
சானு—மலைச்சாரல், முழங்கால்.
சானுக்கிரகம்—தேவர்மொழி.
சான்மலி—இலவமரம், ஓர்தீவு.
சான்றவர்—அறிஞர்.
சான்றாண்மை—ஊக்கம்.
சான்றோர்—அறிஞர்.
சான்றோன்—சூரியன்.

சி

சிகண்டம்—மயிற்றோகை.
சிகண்டி — ஆமணக்கு, ஓர்பண், பேடு, மயில்.
சிகண்டிசன்—வியாழம்.
சிகரம் — உயர்ச்சி, ஓரெழுத்து, தலை, திரை, மலை, மலையுச்சி, வட்டில், வீடு.
சிகரி—எலி, கருநாரை, கோபுரம், மலை.
சிகல்—குறைதல், கெடுதல்.
சிகழிகை—தொடுத்தமாலை, மயிர்முடி, மாலை, வாசிகை.
சிகாவலம்—பாசி.
சிகாவளம்—மயில்.
சிகி—கேது, தீ, மயில்.
சிகுரம்—மயிர்ப்பொது.
சிகை—குடுமி.
சிக்கடி—அவரை.
சிக்கம்—உறி, குடுமி, சிறைச்சாலை, சீப்பு, மெலிவு, வண்டு.
சிக்கர்—கள்.
சிக்கல்—இளைத்தல், கிடைத்தல், வியங்கோண்முற்று.
சிக்குரு—முருங்கை.
சிக்குவை—நா.
சிங்கத்தோலுடையோன்—வீரபத்திரன்.
சிங்கம்—ஓரிராசி, சிங்கம்.
சிங்கல்—இளைத்தல், குறைதல், வியங்கோண்முற்று.
சிங்கவாகனி—பார்வதி.

சிங்களம்—ஓர்கூத்து, ஓர்தேசம், பதி னெண்பாடையிலொன்று.
சிங்காரம்—அலங்காரம்.
சிங்கி—நஞ்சு, வினையெச்சம்.
சிங்நுவை—நா.
சிசு—குழந்தை.
சிசுபாலன்—இடையெழு வள்ளலிலொ ருவன்.
சிச்சிலி—சிரற்புள்.
சிச்சீ—இகழ்ச்சிக்குறிப்பு.
சிஞ்சம்—புளிமா.
சிஞ்சிதம் — அசையுமாபரணங்களா லெழுமொலி.
சிஞ்சினி—நாணி.
சிஞ்சுகம்—கேகயப்புள்.
சிஞ்சுமாரம்—முதலை.
சிட்டர்—பெரியோர்.
சிட்டித்தல்—உண்டாக்கல்.
சிதகன்—சுக்கிரன், தூக்கணங்குருவி.
சிதடன்—அறிவில்லான், குருடன்.
சிதடி—அறிவிலி, சிள்வண்டு.
சிதடு—பேதைமை.
சிதம்—சயமுறப்படல், ஞானம், விண் மீன், வெண்மை.
சிதம்பு—பதனழிவு.
சிதரம்—உறி.
சிதர்—உறி, சிதறென்னேவல், சீலைத்து ணி, பராகம், பூந்தாது, மழைத்துளி, மழைத்தூவல்.
சிதர்தல்—சிந்தல்.
சிதர்த்தல்—சிந்துதல்.
சிதலம்—பதனழிவு.
சிதலை—கறையான்,சீலைத்துணி,நோய்.
சிதவல்—சீரை, தேரிடக்கியம்.
சிதறல்—சிந்தல், விரவிக்கப்படுதல்.
சிதறி—மழை, வினையெச்சம்.
சிதன்—அச்சமுள்ளோன், சுக்கிரன்.
சிதாரம்—தேரிடக்கியம்.
சிதார்—சீரை.
சிதிலம்—சிதலம்.
சிதை—சிறுமை, சிதைவென்னேவல்.
சிதைத்தல்—அழித்தல், குலைத்தல், கெ டுத்தல்.
சிதையார்—சிறுமாக்கர்.
சிதைவு—கேடு.
சித்தகம்—[illegible].
சித்தசன்—மன்மதன்.
சித்தம்—உள்ளம்.
சித்தல்—சிலை.
சித்தன்—அருகன், சிவன், வயிரவன்.
சித்தாந்தன்—சிவன்.
சித்தார்த்தம்—கடுகு.
சித்தி — ஓர்யோகம், சித்தித்தல், முத்தி யென்னேவல், மோக்கம்.
சித்திரகடகம்—[illegible].
சித்திரகாயம்—புலி.
சித்திரகுத்தன்—எமன்கணக்கன்.
சித்திரபடம்—எழுதுசீலை.
சித்திரபானு—ஓர்வருடம், சூரியன், தீ.
சித்திரம்—அதிசயம், ஆமணக்கு, [illegible] ணி, சித்திரித்தல், சிறப்பு, [illegible], மெய்போற்பொய்க்கூறல்.
சித்திரர்—சித்திரகாரர், தச்சர்.
சித்திர[illegible] — [illegible] திறத்திலொன்று.
சித்திலிகை—[illegible].
சித்தினி — நால்வகைப்பெண்களிலொ ருத்தி.

சித்து—அறிவு, மாயவித்தை, யாகம்.

சிந்தகம்—தூக்கணாங்குருவி, புளியமரம்.

சிந்தம்—புளியமரம்.

சிந்தன்—குள்ளன், தூக்கணாங்குருவி.

சிந்தித்தல்—நினைத்தல்.

சிந்து—ஆறு, ஓர்தேசம், ஓர்பா, கடல், குள்ளன், சிந்தென்னேவல், நீர், பதினெண்பாடையிலொன்று, முச்சிரடி.

சிந்துதல்—கெடுதல், விடுதல்.

சிந்துரம்—சிவப்பு, புளியமரம், யானை.

சிந்துவாரம்—கடல், வில், வெண்ணொச்சி.

சிந்தூரம்—சிவப்பு, செங்குடை, திலகம், புளியமரம், யானை, வெட்சி.

சிந்தை—கருத்து, குறிப்பு, துன்பம், வினைமுற்று.

சிந்தைகூரியன்—புதன்.

சிபி—சூரியன்குலத்தோரரசன்.

சிப்பி—சிப்பி.

சிமயம்—மலை, மலையுச்சி.

சிமி—குடுமி.

சிமிலம்—மலை.

சிமிலி—உறி, குடுமி, சிள்வண்டு, பூனை.

சிமிழ்—சிமிழென்னேவல், சிமிழ்.

சிமிழ்த்தல்—கட்டல்.

சிமை—குடுமி.

சிம்பல்—ஒலித்தல், வியங்கோள்முற்று.

சிம்புரி—சும்மாடு.

சிம்புளாரேறன்—வீரபத்திரன்.

சிம்புளி—கம்பளி, செவ்வாடை.

சிம்புள்—எண்காற்புள்.

சிம்பை—அவரை.

சிம்மதம்—பாம்பு.

சிம்மு—எல்லை.

சிரகம்—உறைந்துளி, கரகம், தலைச்சீரா.

சிரங்கு—சிரங்கு.

சிரத்தல்—அழித்தல், எழுத்திலாவோசை.

சிரத்துதல்—ஒலித்தல், பேசலாவெழுமொலி.

சிரத்தை—அன்பு.

சிரநதி—கங்கை.

சிரமம்—சிலம்பம்.

சிரமை—வருத்தம்.

சிரம்—உயர்ச்சி, தலை, நெடுங்காலம்.

சிரல்—சிச்சிலிக்குருவி, முடிவிடம்.

சிரவணம்—காது, திருவோணநாள்.

சிரவம்—கவுதாரி, காது.

சிராவணம்—ஆவணிமாதம், கல்.

சிரித்தல்—நகைத்தல்.

சிரித்துப்பேசல்—நயச்சொல்.

சிரிப்பு—நகை.

சிரீடம்—வாகைமரம்.

சிருகாலன்—நரி.

சிருங்கம்—விலங்கின்கொம்பு.

சிருங்கலம்—சங்கிலி, யானைச்சங்கிலி.

சிருங்கலை—கால்விலங்கு.

சிருங்காடகம்—நாற்றெருக்கூடுமிடம்.

சிருட்டித்தல்—பிறப்பித்தல்.

சிரேணி—இடையர்வீதி, ஒழுங்கு.

சிரை—குரங்கு, சிரையென்னேவல், நரம்பு.

சிரைத்தல்—மயிர்கழித்தல்.

சிரோசம்—மயிர்.

சிரோநதம்—மயிர்ச்செறிவு.

சிரோருகம்—தலைமயிர்.

சிலகம்—சட்டுவம்.

சிலதர்—ஏவல்செய்வோர்.

சிலதன்—தோழன்.

சிலதி—தோழி.

சிலதியர்—ஏவல்செய்தோழியர்.

சிலந்தி—ஓர்புண், ஓர்பூச்சி.

சிலம்பல் —ஒலித்தல், வியங்கோண்முற்று.

சிலம்பன்— குறிஞ்சிநிலத்தலைவன், முருகன்.

சிலம்பி - சிலந்திப்பூச்சி,வினையெச்சம்.

சிலம்பு — ஒலி, காற்சிலம்பு, சிலம்பென்னேவல், மலை.

சிலர்—சிவர்.

சிலவர்—வேடர்.

சிலாவட்டம்—சாணைக்கல்.

சிலிர்த்தல்—தளிர்த்தல்.

சிலீமுகம்—அம்பு, முலைக்கண், வண்டு.

சிலுகு—துன்பம்.

சிலும்பல்—ஒலித்தல், வியங்கோண்முற்று.

சிலேட்டர்—செட்டிகள்.

சிலேபியர்—செட்டிகள்.

சிலை — ஒலி, ஓர்மரம், கல், சிலையென்னேவல், தனுவிராசி, மலை, மூலநாள், வில்.

சிலைத்தல்—ஒலித்தல்.

சிலோச்சயம்—மலை.

சில்—ஆரவாரம்.

சில்லம்—தேற்றாமரம்.

சில்லர்—வேடர்.

சில்லி—சிள்வண்டு, சிறகீரை, தேருருளை, வட்டம்.

சில்லிகை — சிள்வண்டு, சீலை, நல்லாடை.

சில்லை—சிள்வண்டு.

சிவகதியிறைவன்—அருகன், சிவன்.

சிவணல்—கலத்தல், கிட்டல், பொருதல், பொருந்தல், வியங்கோண்முற்று.

சிவதம்—இருக்குவேதம்.

சிவதன்மம் — அட்டாதசவுபபுராணத்தொன்று.

சிவதை—ஓர்கொடி.

சிவத்தல்—கோபம், சிவத்தல், சினக்குறிப்பு.

சிவப்பு—சிவப்பு, சினக்குறிப்பு.

சிவம்—குறுணி, நன்மை, முத்தி.

சிவலோகம்—மோக்ஷஸ்தானம், மேலுலகங்களெல்லாவற்றிற்குமேலாகிய லோகம்.

சிவல்—கவுதாரி, பகன்றை.

சிவன்—உருத்திரன்.

சிவிகை—தண்டிகை, பாண்டில் தண்டூர்தி.

சிவிறி— நீர்வீசுந்துருத்தி, பெருந்துருத்தி.

சிவேதை—சிந்திற்கொடி, வெள்ளருகு.

சிவை—ஆணரி, உலைத்துருத்தி, உலைமூக்கு, பார்வதி, வேர்.

சின்வீடு—சிள்வண்டு.

சிறகர்—சிறகு.

சிறகு—இறகு.

சிறக்கணித்தல் — சுருங்குதல், குறைதல்.

சிறக்கணிப்பு—கடைக்கண்பார்வை.

சிறத்தல்—சிறப்பு.

சிறந்தோர்—உறவோர்.

சிறப்பிலாதாள்—மூதேவி.

சிறப்பு—மிகுதி, விசேடம்.
சிறார்—சிறுவர்.
சிறிது—சிறுமையுடையது.
சிறியசிந்தையர்—கீழ்மக்கள்.
சிறியர்—கீழ்மக்கள்.
சிறுகல்—குறைதல், வியங்கோண்முற்று.
சிறுகால்—தென்றல்.
சிறுகு—சிறுகென்னேவல், துன்பம்.
சிறுகுடி—குறிஞ்சிநிலத்தூர்.
சிறுக்கல் — குறைத்தல், வியங்கோண் முற்று.
சிறுசொல்—பழிச்சொல்.
சிறுதாரை—நீர்வீசுந்துருத்தி.
சிறுத்தல்—சிறிதாதல், சினத்தல்.
சிறுத்தை—சிறுபுலி, வினைமுற்று.
சிறுபதம்—வழி.
சிறுபுறம்—பிடரி.
சிறுமணி—சதங்கை.
சிறுமாரோடம்—செங்கருங்காலி.
சிறுமி—பெண், மகள்.
சிறுமியம்—சேறு.
சிறுமூலகம்—ஓர்கிழங்கு, இட்டிலி.
சிறுமை—அற்பம், தரித்திரம், துன்பம், நோய்.
சிறுமையர்—கீழ்மக்கள்.
சிறுவரை—அற்பம், காலவிரைவு, சிறு பொழுது.
சிறுவர்—மக்கள்.
சிறுவன்—மகன்.
சிறுவி—மகள்.
சிறுவிதிமகஞ்சிதைத்தோன் — வீரபத்திரன்.
சிறை—இடம், இறகு, காவல், சிறைச் சாலை, பக்கம், மதில்.
சிற்பம்—சிற்பநூல்.
சிற்பரன்—சிவன்.
சிற்பர்—சித்திரகாரர்.
சிற்பியர்—கம்மாளர்.
சிற்றறிவு—புல்லறிவு.
சிற்றாலவட்டம்—விசிறி.
சிற்றில்—குடிசை, சீலை.
சிற்றுண்டி—அப்பம், பிட்டுமுதலியன.
சிற்றூர்—குறிஞ்சிநிலத்தூர், சீறூர்.
சினகரம்—தேவர்கோவில்.
சினந்தவிர்ந்தோன்—அருகன்.
சினம்—கோபம்.
சினவரன்—அருகன், புத்தன்.
சினவர்—பகைவர்.
சினைதல்—சினக்குறிப்பு, பொருதல்.
சினன்—அருகன், புத்தன்.
சினிவாலி—கலைதெரியமாவாசியை.
சினேந்திரன்—அருகன்.
சினை — உறுப்பு, கருப்பம், சினையென் னேவல், பூவரும்பு, மரக்கொம்பு, முட்டை, மூங்கில்.
சினைத்தல்—அரும்புதல்.
சினைப்பு—சினைத்தல், வெயர்க்குறி.
சின்—அசைச்சொல், (உ-ம். கண்ணும் படுமோவென்றிசின்யானே.)
சின்னப்பூ—ஓர்பிரபந்தம்.
சின்னம்—அடையாளம், காளம், சிறுமை, தட்டு, பராகம், பெண்குறி, முறம்.
சின்னி—ஓர்செடி.

சீ

சீ—இகழ்ச்சிக்குறிப்பு, இலக்குமி, காந்தி, சம்பத்து, சரச்சுவதி, சீயென்னேவல், பார்வதி, விடம்.

சீகரம்—கடற்றிரை, சுரகம், சவரி, திவலை, புனற்றிரை, மழை, மழைத்துளி, மழைத்தூவல்.

சீகரி—திவலை.

சீகர்—திவலை.

சீகாரம்—ஓர்பண்.

சீக்கிரி—உசிலமரம்.

சீக்கு—செத்தை.

சீச்சீ—இகழ்ச்சிக்குறிப்பு.

சீடர்—மாணாக்கர்.

சீடு—நூற்சீடு.

சீதகன்—சுக்கிரன்.

சீதம்—குளிர்ச்சி, நீர், மேகம்.

சீதரன்—அரி.

சீதளம்—குளிர்ச்சி.

சீதன்—சந்திரன்.

சீது—கள்.

சீதேவி—இலக்குமி.

சீதை—உழுபடைச்சால், சீதை, பொன்னாங்காணி.

சீத்தல்—செப்பம்பண்ணல், நீக்கல்.

சீத்தை—கீழ்மக்கள், பதனழிவு.

சீபதி—அருகன், கடவுள்.

சீப்பு—சீப்பு, தாழக்கோல், வாழைக்குலைச்சீப்பு.

சீமாட்டி—சீமாள்.

சீமாள்—தலைவி.

சீமான்—அருகன்.

சீமூதம்—நீருண்டமேகம், பிடியானை, மலை.

சீமூதன்—இந்திரன், உழவன், சிவன், துன்புறுவோன், நரகாசுரன், சாரதி.

சீமூதை—இரா, கொடிமுந்திரிகை.

சீயம்—சிங்கம், சிங்கவிராசி, தென்றிசைப்பாலன்குறி.

சீரகத்தாரோன்—குபேரன்.

சீரகம்—சீரகம்.

சீரங்கம்—அரங்கம்.

சீரணம்—பதனழிவு.

சீரணி—காடு, சீரணியென்னேவல்.

சீரம்—மரவுரி.

சீராட்டல்—சிறப்புச்செய்தல், வியங்கோண்முற்று.

சீராளன் — சிறுத்தொண்டநாயனார் மகன்.

சீரியர்—அறிஞர், புலவர்.

சீருணம்—செட்டு.

சீருள்—ஈயம், செம்பு, பஞ்சலோகம்.

சீரை—சீலை, சீலைத்துணி, மரவுரி.

சீர்—அழகு, காற்றண்டை, சித்திரம், செய்யுளுறுப்பு, செல்வம், தண்டாயுதம், தாளவொத்து, துலாராசி, நன்மை, பாரம், புகழ்.

சீர்கேடி—மூதேவி.

சீர்த்தி—மிகுபுகழ்.

சீர்பதி—கடவுள்.

சீர்மை—சிறப்பு.

சீலம்—குணம், சரித்திரம், சீந்தில், தருமம், நல்லறிவு, நல்லொழுக்கம்.

சீலை—சேலை.

சீவகர்—புத்ததவத்தோர்.

சீவகன்—ஓரரசன்.

சீவந்தி—சீந்திற்கொடி, பாலைமரம்.

சீவல்—சீவுதல், வியங்கோண்முற்று.

சீவனம்—உயிர்வாழ்தல், நீர்.

சீவனி—சஞ்சீவி, சீவநாடி, பாலைமரம்.

சீவனீயம்—நீர்.

சிவன்—உயிர், வியாழம்.
சிவினி—ஓர்மருந்து, யாழிறேரோசை.
சீறல்—அதட்டல், சினக்குறிப்பு, பெருங்கோபம், வியங்கோண்முற்று.
சீறூர்—குறிஞ்சிநிலத்தூர்.
சீற்றம்—கோபம், சினம்.
சீனம்—ஓர்தேயம், பதினெண்பாடையிலொன்று.

சு

சுகதாதை—வியாசர்.
சுகந்தம்—நறுநாற்றம்.
சுகம்—இன்பம், கிளி, தருமம், நன்மை, மூலைக்கண்.
சுகன்—சுவர்க்கமுற்றோன், வியாசபுதல்வன்.
சுகாந்தம்—ஈரவெண்காயம்.
சுகிர்—உட்டுளை, சுகிரென்னேவல்.
சுகிர்தம்—அறம், நன்மை, நெய்.
சுகிர்தல்—நார்முதலியவகிர்தல்.
சுகுமாரம்—மிருது.
சுக்கிரசிடர்—அசுரர்.
சுக்கிரம்—ஆனிமாதம்.
சுக்கிரன்—அசுரகுரு.
சுக்கிலம்—சந்திரன்முதற்பக்கம், வெண்மை.
சுக்கு—சுண்டி.
சுக்கை—மாலை, வான்மீன்.
சுங்கம்—ஆயம்.
சுங்கன்—சுக்கிரன்.
சுசனம்—காற்று.
சுசி—ஆடிமாதம், சுத்தம், நெருப்பு, வெண்குடை, வெண்மை.
சுசுந்தரி—மூஞ்சூறு.
சுச்சு—சுண்டி.
சுடரோன்—சூரியன்.
சுடர்—ஒளி, சந்திரன், சூரியன், தீ, விளக்கு.
சுடர்தல்—ஒளிசெய்தல்.
சுடர்நிலை—விளக்குத்தண்டு.
சுடர்மௌலியர்—வானோர்.
சுடர்விழியோன்—வீரபத்திரன்.
சுடலை—சுடுகாடு.
சுடலையாடி—சிவன்.
சுடாரி—கவசம்.
சுடிகை—உச்சி, நெற்றிச்சுட்டி, மயிர்முடி, முடி.
சுடுகலம்—இட்டிகை, குயக்கலம்.
சுடுகாடு—சுடலை.
சுடுசுண்ணம்—சுட்டசாந்து.
சுடுநிலம்—சுடுகாடு.
சுடுவல்—இரத்தம், வினைமுற்று.
சுடுவனம்—இரத்தம்.
சுடுவு—சும்மாடு.
சுட்டல்—காட்டல், குறித்தல், சுடல், வியங்கோண்முற்று.
சுட்டி—நுதலணி, வினையெச்சம்.
சுட்டிகை—சுட்டி.
சுட்டு—குறி, சுட்டென்னேவல், வினையெச்சம்.
சுட்டுக்கோல்—உலையாணிக்கோல்.
சுணங்கன்—நாய்.
சுணங்கு—தேமல்.
சுண்டம்—கள், யானைத்துதிக்கை.
சுண்டல்—சுண்டுதல், தெறித்தல், வியங்கோண்முற்று.
சுண்டன்—அறிவிலி, சதயநாள், மூஞ்சூறு.
சுண்டாலம்—யானை.

சுண்டாலி—யானை.

சுண்டி—கள், சுக்கு, நீர்ச்சுண்டி, வினை யெச்சம்.

சுண்டிகை—உண்ணா.

சுண்டை—சுண்டைச்செடி.

சுண்ணம்—கந்தப்பொடி, சுட்டசாந்து, சுண்ணப்பொடி, பராகம், புழுதி.

சுதந்தி — வடமேற்றிசையானை, பெண் யானை.

சுதம்—கேடு, முறைமை.

சுதரிசனம்—கண்ணாடி, சக்கராயுதம்.

சுதனம்—ஆயுதப்பொது.

சுதன்—மகன்.

சுதன்மம்—தேவேந்திரன் மண்டபம்.

சுதாகரன்—சந்திரன்.

சுதி—சங்கீதசுருதி.

சுதை—அமிழ்து, உதைகாற்பசு, சுண் ணாம்பு, சுவை, பால், மகள், வெண்மை.

சுத்தம்—சுசி.

சுத்தன்—அயன், அரன், அருகன்.

சுத்தி — ஓர்கருவி, சங்கு, நெய்க்குந்தி முதலாயின.

சுத்திகை—அகல்.

சுநகன்—நாய்.

சுநாசிரன்—தேவேந்திரன்.

சுநி—பெண்ணாய்.

சுந—சனி.

சுந்தரம்—அழகு.

சுந்தரி—அழகி, இந்திராணி, துர்க்கை, பெண், மூஞ்சூறு.

சுந்தன்—ஓரரக்கன்.

சுபம்—நன்மை, மங்களம்.

சுபாலிகை—அடுப்பு.

சுப்பிரதீபம்—பிருதிவிமன்னன், [illegible] சையானை.

சுப்பிரமணியன்—குமரன்.

சுப்பிரம்—பிருதிவிமன்னன், வெண்மை.

சுமடர்—இழிமக்கள்.

சுமடு—அறிவின்மை, சும்மாடு.

சுமதி—நற்புத்தி.

சுமம்—பூ.

சுமனசம்—பூமலர்.

சுமாலி—ஓரரக்கன், [illegible].

சுமை—சுமை.

சுமையடை—சும்மாடு.

சும்பகம்—[illegible].

சும்பித்தல்—முத்தமிடல்.

சும்மை — ஊர், ஒலி, ஒலித்தல், [illegible], நகர், நாடு, நெற்போர்.

சுயம்பு — கடவுள், நான்முகன், பிர மன்.

சுயோதனன்—துரியோதனன்.

சுரகுரு—வியாழம்.

சுரங்கம்—கீழறை.

சுரசம்—சாறு, கிராம்பு[illegible].

சுரடி—ஒரிராகம்.

சுரண்டல்—[illegible] முற்று.

சுரநூல்—[illegible].

சுரதம்—[illegible] புசாரம்.

சுரத்தல்—[illegible].

சுரநதி—கங்கை.

சுரபி—பசு, வாசனை.

சுரப்பு—[illegible].

சுரப்புவழிவு—[illegible].

சுரம்—அருநெறி, இளைப்பு, [illegible] [illegible].

சுரரிடம்—தேவலோகம்.

சுரர்—வானோர்.

சுரர்பகைவர்—அசுரர்.

சுரராட்டு—இந்திரன்.

சுரி—ஆணி, சுரியென்னேவல், சுழற்சி.

சுரிகுழல்—கவசம், பெண்.

சுரிகை—உடைவாள், கவசம்.

சுரித்தல்—சுழித்தல்.

சுரிப்புறம்—சங்கு, நத்தை.

சுரிமுகம்—சங்கு, நத்தை.

சுரியல்—இளைஞர்மயிர், சுரிதல், சுழலல், நீர்ச்சுழி, பெண்மயிர், வியங்கோண்முற்று.

சுருக்கம்—கட்டல், சுருங்கல்.

சுருக்கல் — அடக்கல், கட்டல், வியங்கோண்முற்று.

சுருக்கு — சுருக்கென்னேவல், நெய்த்துடுப்பு.

சுருங்கல் — குறைதல், நுழைவாயில், மாலை, வியங்கோண்முற்று.

சுருங்கு-சலதாரை, சுருங்கென்னேவல்.

சுருங்கை—கோட்டையிற்கள்ளவழி, நுழைவாயில்.

சுருட்டல் — சுருட்டுதல், வியங்கோண்முற்று.

சுருட்டி—ஆலவட்டம், வினையெச்சம்.

சுருட்டு—சுருட்டென்னேவல், சுருள்.

சுருணி—யானைத்தோட்டி.

சுருதி—ஒலி, காது, வேதம்.

சுரும்பாவன்—மன்மதன்.

சுரும்பு—ஆண்வண்டு, வண்டு.

சுருவை—நெய்த்துடுப்பு.

சுருளல் — சுருளுதல், வியங்கோண்முற்று.

சுருள்—சுருளென்னேவல், தாமரைப்பூட்சுருள், பாக்கிலைச்சுருள், பெண்மயிர்.

சுரூபம்—நல்லுருவம்.

சுரேசன்—இந்திரன், குமரன்.

சுரேந்திரன்—இந்திரன்.

சுரேந்திரன்மைந்தன் — அருச்சுனன், சயந்தன்.

சுரை—அம்புத்தலை, உட்டுளை, கள், சுரைக்கொடி, பசு, விலங்கின்முலை.

சுரோணி—நிதம்பம்.

சுரோத்திரம்—காது.

சுலவல்—சுழலல், வியங்கோண்முற்று.

சுலாவல் — சுற்றுதல், வியங்கோண்முற்று.

சுலோகம்—ஆரியச்செய்யுள், புகழ்.

சுலோகி—கள்.

சுலோசனம்—மூக்குக்கண்ணாடி.

சுலோபம்—எறும்பு.

சுல்லி—அடுப்பு.

சுல்லு—வெள்ளி.

சுவடி—எழுதியபுத்தகம்.

சுவடு—தழும்பு, பக்கறை, பாதம்வைத்தசுவடு.

சுவணம்—பொன்.

சுவப்பிரம்—நரகம், வலை.

சுவர்—பித்திகை.

சுவர்க்கம்—தேவலோகம், முலை.

சுவர்க்கர்—வானோர்.

சுவலை—அரசமரம்.

சுவல் — குதிரைமயிர், தோண்மேல், பிடர், முதுகு, மேடு.

சுவவு—சுவர்க்கம், பறவைமூக்கு, மூஞ்சூறு.

சுவா—நாய்.

சுவாகதம்—கிள்ளை.

சுவாசம்—உயிர்ப்பு.

சுவாது—தித்திப்பு.

சுவாந்தம்—மனது

சுவாமி — அருகன், கடவுள், குரு, சிவன், பொன், முருகன்.

சுவி—இத்திமரம்.

சுவிகை—கள்.

சுவேதம்—வெண்மை, வெள்ளி, வேர்வை.

சுவேதவாகனன்—அருச்சுனன்.

சுவை—இனிமை, சித்திரைநாள், சுவையென்னேவல்.

சுவைத்தல்—உண்டல்.

சுழலல்—சுழலல், வியங்கோண்முற்று.

சுழல்—காற்றாடி, சுழலென்னேவல், சுழல்.

சுழல்படை—வளைதடி.

சுழல்வு—சுழற்சி.

சுழற்றல் — சுற்றியாட்டல், வியங்கோண்முற்று.

சுழி—சுழியென்னேவல், நீர்ச்சுழிமுதலிய.

சுழித்தல்—எழுச்சி, சுழிக்குதல்.

சுழியல்—ஒருதலம், சுழிதல்.

சுளகு—முறம், விசாகநாள்.

சுளித்தல்—கோபம், சினக்குறிப்பு.

சுளிவு—கோபம், சினக்குறிப்பு, சினம்.

சுளை—பலாப்பழமுதலியவற்றின்சுளை.

சுள்ளி — அனிச்சமரம், ஆச்சாமரம், ஞாழல், மாமரம்.

சுள்ளை—மட்கலஞ்சுடுசூளை.

சுறவு—சுறா.

சுறா—மகரமீன், மகரராசி.

சுறுக்கெனல்—கடுப்பின்குறிப்பு.

சுற்பம்—செம்பு.

சுற்றம்—உறவு.

சுற்றல் — உடுத்தல், எழுச்சி, சூழ்தல், வட்டமாயோடல், வியங்கோண்முற்று.

சுற்று—சுற்றென்னேவல், மதில், மதிற்சுற்று, வட்டமாயோடல்.

சுற்றுவாரி — கல்விபூரி, சுவர்ப்புறத்து நீண்டவுத்திரம்.

சுனை—குளம்.

சுனைதல்—குழைதல், வாடல்.

சூ

சூகம்—தவழ்சாதிப்பொது, நெல்வால்.

சூகரம்—பன்றி.

சூகை—சூகையெறும்பு, யானை.

சூசம்—துருவாட்டேறு.

சூசி—ஊசி.

சூசியம்—சூட்டிறைச்சி.

சூசுகம்—முலைக்கண்.

சூடகம்—கைவளை.

சூடல்—அணிதல், வியங்கோண்முற்று.

சூடி—சிலை, வினையெச்சம்.

சூடிகை—முடி.

சூடு—சூடுதல், சூடென்னேவல், நெல்முதலியவற்றரிக்குவியல், வெப்பம்.

சூட்டல்—அணிவித்தல், வியங்கோண்முற்று.

சூட்டு—சூட்டென்னேவல், நுதலணி, நுதலணிமாலை, மாலை.

சூதகம் — அசுத்தம், பழமை, பிறப்பு, மகளிர்துடக்கு.

சூதநதி—பொருந்தநதி.

சூதம்—சூது, பவளமல்லிகை, பாதரதம், புளிமா, மன்மதன்கணை, மாமரம், வண்டு.

சூதர்—சூதாடுவோர், தேர்ப்பாகர், பாணர், புகழ்வோர்.

சூதவம்—வண்டு.

சூதன்—சூதாடுவோன், தேர்ப்பாகன், பாணன், புகழ்வோன்.

சூது—சூது, தாமரை.

சூத்திரம் — இயந்திரம், நூல், பஞ்சிநூல்.

சூத்திரர்—சதுர்த்தர், தச்சர்.

சூநம்—பூமலர், மான்.

சூநர்—ஊன்விற்போர்.

சூநியன்—முடவன்.

சூநு—மகன்.

சூரசுதன்—சனி.

சூரசூதன்—அருணன்.

சூரசேனம்—ஓர்தேசம்.

சூரணம்—கருணைக்கிழங்கு, தூள்.

சூரம்—அச்சம், கடலை, வீரம்.

சூரர்—படைவீரர்.

சூரல்—பிரம்பு.

சூரன் — ஓரசுரன், சூரியன், தீ, நாய், வீரன்.

சூரி—காடுகாள், காளி, புலவர்.

சூரியகாந்தம்—ஓர்பூ, சூரியன்முகத்துத்தீவிடுங்கல்.

சூரியர்—புலவர்.

சூரியன்—சோழன், ஞாயிறு.

சூரை—ஓர்செடி.

சூர்—அச்சம், சூரென்னேவல், துன்பம், தெய்வப்பெண், தெய்வம், நோய்.

சூர்த்தநோக்கு—கொடுமை.

சூர்த்தல்—சுழலல்.

சூர்ப்பகைவன்—முருகன்.

சூர்ப்பம்—சுளகு.

சூர்மகள்—யோகினி.

சூலபாணியன்—சிவன், வயிரவன்.

சூலம்—இரேவதிநாள், சிவனாயுதம்.

சூலல்—அறுத்தல், வியங்கோண்முற்று.

சூலி— கருப்பிணி, காடுகாள், காளி, சிவன், துர்க்கை.

சூலை—ஓர்நோய்.

சூல்—கருப்பம், சூலென்னேவல்.

சூழல்—ஆராய்தல், ஆலோசனை இடம், கருத்து, குறிப்பு, வியங்கோண்முற்று.

சூழாமை—ஆராயாமை.

சூழி—உச்சி, உச்சிக்கொண்டை, கடல், குளம், சுனை, யானைமுகபடாம்.

சூழ்ச்சி—ஆராய்தல், ஆலோசனை.

சூழ்தல் — கருதல், சூழ்ந்திடல், பிறபடை.

சூழ்போதல்—வளைத்தல்.

சூழ்வோர்—உறவோர், சூழநிற்போர், மந்திரிகள்.

சூளி—ஆண்மயிர்.

சூளிகை—யானைச்செவியடி.

சூளுறல் — சத்தியம், வியங்கோண்முற்று.

சூளை—குயவன்சூளை, வேசை.

சூள்—ஆணை.

சூறல்—தோண்டல்.

சூறன்—மூஞ்சூறு.

சூறுவளி—சுழல்காற்று.

சூறை—கொள்ளை, சுழல்காற்று.

சூனர்—ஊன்விற்போர்.

சூனியம்—இன்மை, பாழ்.
சூன்றல்—தோண்டல்.

செ

செகில்—தோண்மேல்.
செகுத்தல்—அழித்தல்.
செக்கர்—சிவப்பு.
செக்கர்வானிறத்தோன்—அரன், வீரபத்திரன்.
செக்கான்—வாணியன்.
செக்கு—சதயநாள், செக்கு.
செங்கதிரோன்—சூரியன்.
செங்கதிர்பிறந்தநாள்—உத்திரநாள்.
செங்கமலை—செந்திரு.
செங்கல்—காவிக்கல், செங்கல்.
செங்கழுநீர்—செங்குவளை.
செங்களம்—போர்க்களம்.
செங்குமுதம்—செவ்வாம்பல்.
செங்கை—ஆதிரைநாள், கை.
செங்கொல்—பொன்.
செங்கொல்லர்—தட்டார்.
செங்கோடு—ஓர்மலை, செருந்திமரம்.
செங்கோல்—நீதி.
செங்கோற்கடவுள்—நமன்.
செச்சை—காடு, சாந்தின்குழம்பு, சோடு, நீறு, வெட்சி, வெள்ளாட்டுக்கடா.
செஞ்சாலி—செந்நெல்.
செஞ்சி—ஓரூர்.
செஞ்சுடர்—தீ.
செஞ்சுடர்ப்பகவன்—தீ.
செடி—ஒளி, பதனழிவு, பாவம், புதல்.
செட்டி—குமரன், வாணியன்.
செட்டு—செட்டிமை.
செட்டை—இறகு.
செண்டாயுதன்—ஐயனார்.
செண்டு—குதிரைவையாளிவீதி, செண்டு, பந்தெறிவீதி.
செண்ணம்—வடிவு.
செண்பகம்—சண்பகம்.
செதுக்கல்—செதுக்குதல்.
செதுக்கு—செதுக்கென்னேவல், சேறு, பூதம், மந்தி.
செதும்பு—சேறு.
செத்தல்—சாதல்.
செத்து—சந்தேகம்.
செத்தை — உலர்சருகுமுதலிய, வினைமுற்று.
செந்தமிழ்க்குரியோன்—வயிரவன்.
செந்தழல்—கேட்டைநாள்.
செந்தாது—பொன்.
செந்திறம்-குறிஞ்சியாழ்த்திறம், சிவப்பு.
செந்தினை—கம்பு, செந்தினை.
செந்தீவண்ணன்—செவ்வாய்.
செந்தீவளர்ப்போர்—பார்ப்பார்.
செந்து—அணு, கிழநரி, சீவன், நரகம்.
செந்துருதி—ஓர்பண், நரகம்.
செந்துறை—ஆடற்கேற்கும்பாட்டு, குறட்செந்துறை.
செந்தொடை—ஓர்தொடை.
செந்தொடையன்—வயிரவன்.
செந்நாய்—செந்நாய்.
செந்நீர்—இரத்தம்.
செந்நெல்—நன்னெல்.
செப்பம் — செவ்வை, நடுநிலை, மார்பு, வழி, வீதி.
செப்பல்—சொல்லுதல், வியங்கோண்முற்று.
செப்பு — செப்பு, செப்பென்னேவல், சொல்.

செம்படாம்—செவ்வாடை.

செம்பாம்பு—கேது.

செம்பால்—இரத்தம்.

செம்பியன்—சோழன், முதலெழுவள்ளலிலொருவன்.

செம்புலம் — சுடுகாடு, பாலைநிலம், போர்க்களம்.

செம்புனல்—இரத்தம்.

செம்பொன்—பொன்.

செம்மணி—மாணிக்கம்.

செம்மரம்—அழிஞ்சில்.

செம்மலைப்பாலை — ஓரிசை, அதையெழுபாலையிற்காண்க.

செம்மல் — அரசன், எப்பொருட்குமிறைவன், பழம்பூ, புதல்வன், பெருமை, பெருமையிற்சிறந்தோன்.

செம்மறியாடு—ஆடு.

செம்மாப்பு—இறுமாப்பு.

செம்மார்—சக்கிலியர்.

செம்மை—சிவப்பு, செப்பம், செவ்வை, பெருமை.

செயலை—அசோகமரம்.

செயல்—ஒழுக்கம், காவல், சேறு, தொழில், வியங்கோண்முற்று.

செயிர்—குற்றம், கோபம், சினம்.

செயிர்த்தல்—சினத்தல்.

செய்—செய்யென்னேவல், வயல்.

செய்கடன்—முறைமை.

செய்கை—ஒழுக்கம், தொழில்.

செய்தல்—செயல்.

செய்தி — ஒழுக்கம், செய்தி, வினைமுற்று.

செய்யல்—செயல், சேறு, வியங்கோண்முற்று.

செய்யாள்—இலக்குமி, சீதை.

செய்யுள்—பாட்டு.

செய்யோன்—அருகன்.

செரு—போர்.

செருகல்—சொருகல், வியங்கோண்முற்று.

செருக்கல்—மிகமகிழ்தல், வியங்கோண்முற்று.

செருக்களம்—போர்க்களம்.

செருக்கு—அகங்காரம், களிப்பு, செருக்கல், செருக்கென்னேவல்.

செருக்குதல் — அகங்கரித்தல், களித்தல்.

செருத்தல்—எருமைமடி, பசுவின்மடி.

செருத்தி—விருதுக்கொடி.

செருநர்—படைவீரர்.

செருந்தி—ஓர்மரம், வாட்கோரை.

செருப்பு—கழற்குதோல்.

செருமல் — விலங்குகளிருமல், வியங்கோண்முற்று.

செலல்—நீங்கல், வியங்கோண்முற்று.

செலவிடல்—எறிதல், விடுதல், வியங்கோண்முற்று.

செலவு—செலவல், வழி.

செலு—நறுவிலிமரம்.

செலுத்துதல்—நடத்துதல், விடுதல்.

செல் — இடி, கறையான், செல்லென்னேவல், மேகம்.

செல்லல் — துன்பம், நடத்தல், வியங்கோண்முற்று.

செல்வம்—கல்வி, சீர், சுவர்க்கம்.

செல்வன் — அருகன், மகன், வினைமுற்று.

செல்வி—இலக்குமி, தலைவி, மகள்.

செவி—காது, கேள்வி.

செவிடு—செவிப்புலன்கெடல்.

செவிட்டல்—அழித்தல், வியங்கோண் முற்று.

செவிமலர்—ஓர்வகைக்காதணி.

செவிரம்—பாசி.

செவிலி—அக்காள், வளர்த்ததாய்.

செவ்வல்லி—செவ்வாம்பல்.

செவ்வழி—நெய்தனிலத்திராகம்.

செவ்வழிப்பாலை—ஓரிராகம்.

செவ்வன்—செவ்வை.

செவ்வி—அழகு,காலம், சித்திரை நாள்.

செவ்வு—செவ்வை.

செவ்வேள்—குமரன்.

செவ்வை—செப்பம்.

செழியன்—பாண்டியன்.

செழுமை—அழகு, கொழுப்பு, மாட்சிமை, வளமை.

செறி—செறியென்னேவல், நெருக்கம்.

செறிதல்-குளித்தல், நெருங்கல்,மிகுதி.

செறித்தல்—அழித்தல், கொல்லல்,நெரித்தல், பாதிடு, மூழ்கல்.

செறிவு—நிறைவு,நெருக்கம், மரப்பொந்து, மிகுதி

செறு—சிறுவயல், செறுவென்னேவல், வயல்.

செறுத்தல்—கொல்லல், வெறுப்பு.

செறுநர்—பகைவர்.

செறும்பு—சலஞ்சாதித்தல்.

செறுவு—வயல்.

செற்றம் — கோபம், சலஞ்சாதித்தல், சினம்.

செற்றல்—செறிவு, செறுத்தல்.

செற்றார்—பகைவர்.

செற்று—நெருக்கம், வினையெச்சம்.

சென்னி — அக்கினிநாள், சோழன், தலை, பாணன், முடி.

சென்னியர் — பாணர்.

சென்னை — சென்னபுரி.

சே

சே — இடபவிராசி, எருது, [illegible], சிவப்பு, சேயென்னேவல், விலங்கேற்றின் பொது.

சேகண்டி—சேமக்கலம்.

சேகரம்—சேகரித்தல், தலை, தலையின் முடிக்கப்படுவன, முடி.

சேகிலி—வாழை.

சேகு—மாவயிரம்.

சேக்கை — உடற்றழும்பு, கர்க்கடகவிராசி, நண்டு, மனிதர்படுக்கை, முலை, விலங்கின்படுக்கை.

சேடகம்—கேடகம்.

சேடம்—எச்சில், மிச்சப்பொருள்.

சேடர்—அடிமையர், ஏவல்செய்வோர்.

சேடன் — ஏவல்செய்வோன், ஓர்சாதியான், கட்டிளமையோன், சோழன், பூமிதாங்குமனந்தனென்னும்பாம்பு.

சேடி—இடையர்வீதி, தோழி, வித்தியாதரருலகு.

சேடியர் — அடிமைகளிற்சிறந்தோர், ஏவல்செய்பெண்கள்.

சேடு—அழகு, இளமை, இரட்டி, நன்மை, பெருமை.

சேட்டம்—ஆனிமாதம்.

சேட்டன்—தமையன்.

சேட்டை — அக்காள், கேட்டைநாள், மூதேவி, விசாகநாள்.

சேணம்—மெத்தை.

சேணி—ஏணி, வித்தியாதரருலகு.

சேண் — அகலம், ஆகாயம், உயர்ச்சி, தூரம், நீளம்.
சேதகம்—சிவப்பு, சேறு.
சேதம்—கேடு, துண்டு.
சேதனம்—அறிவு.
சேதனன்—உயிர்.
சேதா—செவ்வியபசு.
சேதாம்பல்—செவ்வாம்பல்.
சேதாரம் — தேமா, பொன்னுரைதேய்மானம், வெட்சி.
சேதித்தல்—அறுத்தல், வெட்டல்.
சேதிமம்—தேவர்கோயில்.
சேது — இராமேச்சுரம், சிவப்பு, செய்கரை.
சேத்தல்—சிவத்தல்.
சேத்து—உவமைச்சொல், கருத்து, சிவப்பு, நெருக்கம், மிகுசிவப்பு.
சேந்தன் — முருகன், ஓர் நிகண்டுசெய்வித்தோன்.
சேந்து — அசோகு, சிவப்பு, தீ, வினையெச்சம்.
சேப்பு—சிவப்பு.
சேமம்—இன்பம், காவல், புதையல்.
சேமரம்—அழிஞ்சில்.
சேமித்தல்—புதைத்தல்.
சேயார்—பகைவர்.
சேய்—இளமை, குழந்தை, சிவப்பு, செவ்வாய், தூரம், நீளம், மகன், முருகன், மூங்கில்.
சேய்த்து—தூரத்தது.
சேய்மை—தூரம், நீளம்.
சேரலர்—பகைவர்.
சேரலன்—சேரன்.
சேரல்—கிட்டல், வியங்கோண்முற்று.
சேரார்—பகைவர்.
சேரி—ஊர், தெரு.
சேருகம்—நாகணவாய்ப்புள்.
சேர்தல்—அடுத்தல்.
சேர்த்தல்—சமைத்தல், சேர்த்திடல்.
சேர்ந்தார்—சிநேகிதர்.
சேர்ந்தார்க்கொல்லி—தீ.
சேர்பு—வினையெச்சம், வீடு.
சேர்ப்பது—கோலல்.
சேர்ப்பன்—நெய்தனிலத்தலைவன்.
சேர்விடம்—மனிதர்படுக்கை.
சேர்வு—திரட்சி, மருதநிலத்தூர், வீடு.
சேர்வை—கூட்டம், வினைமுற்று.
சேலம்—ஓரூர்.
சேலேகம்—சந்தனம், சிந்தூரம்.
சேலை—சீலை.
சேல்—கெண்டைமீன்.
சேவகம்—சேவகத்தொழில், யானைதுயிலிடம், வீரம்.
சேவல்—காவல், கோழி, மயிலொழிந்தபறவையாண்.
சேவற்கொடியோன்—குமரன்.
சேறல்—எழுச்சி, நடத்தல்.
சேறு—இனிமை, கள், கும்பி, தித்திப்பு, திருவிழா, வினைமுற்று.
சேனம்—பருந்து.
சேனாபதி—படைத்தலைவன்.
சேனாமுகம்—படையிலோர்தொகை.
சேனை—ஆயுதம், கடைவீதி, படை.

சை

சை—இகழ்ச்சி, ஓரெழுத்து.
சைகதம்—மணல்.
சைசவம்—இளமை.

சைதன்னியம்—அறிவு.
சைத்தியம்—சீதத்தன்மை.
சைத்திரம்—சித்திரைமாதம்.
சைநர்—அருகர்.
சைநன்—அருகன், புத்தன்.
சைந்தவம்—இந்துப்பு, குதிரை.
சைம்மினிநகரோன்—நமன்.
சையம்—கல், மலை.
சையெனல்—இகழ்ச்சிக்குறிப்பு.
சைரிபம்—எருமை.
சைலம்—மலை.
சைவம் — அட்டாதசபுராணத்தொன்று, சிவசமயம்.
சைவர்—சிவசமயத்தோர்.
சைவலம்—பாசி.

சொ

சொக்கம்—தூய்மை.
சொகுசு—அழகு, சொக்கென்னேவல், சோர்வு, பொன்.
சொத்துவம்—உரிமை.
சொத்தை—புழுத்துளைத்தல்.
சொரிதல் — ஈதல், சுழலல், மழைபெய்தல்.
சொரிதரல்—சுழலல், பொழிதல், வியங்கோண்முற்று.
சொலித்தல் — இடந்திடல், பிரகாசித்தல்.
சொலித்திடல்—பிரகாசித்தல், வியங்கோண்முற்று.
சொல்—எழுத்தினோசைச்சொல், கள், செந்நெல், செந்நெற்கதிர், சொல்லென்னேவல், புகழ்.
சொல்லல் — சொல்லுதல், வியங்கோண்முற்று.
சொல்லேருழவர்-புலவர், மந்திரிகள்.
சொல்விளம்பி—கள்.
சொறி—சொறியென்னேவல், தினவு.
சொற்றல்—சொல்லல், வியங்கோண்முற்று.
சொன்மாலை—ஏற்றமொழி.
சொன்றி—சோறு.
சொன்னகாரர்—தட்டார்.
சொன்னம்—பொன்.
சொன்னல்—சோளம்.

சோ

சோ—அரண், ஒரெழுத்து.
சோகம்—உண்டை, சோம்பல், துன்பம், தொடை.
சோகி—பலகறை, பிடாரன்.
சோகு—பிசாசம்.
சோகை—ஓர்நோய்.
சோங்கு—குருகு, மரக்கலம், மறந்துதல்.
சோடு—கவசம், சோடு.
சோணம்—சிவப்பு.
சோணிதம்—இரத்தம், சிவப்பு.
சோதரம்—சகோதரம்.
சோதரன்—சகோதரன்.
சோதனம்—சுத்தஞ்செய்தல், சோதித்தல்.
சோதி—அருகன், ஒளி, ஓர்நாள், கடவுள், சிவன், சூரியன், சோதியென்னேவல், தீ, வான்மீன், விட்டுணு.
சோதிடம்—சோதிடநூல், நன்னிமித்தம்.
சோதித்தல்—ஆராய்தல்.
சோதினி—செத்தை, துடைப்பம்.
சோத்திரம்—காது.

சோபம்—அழகு, கள், சோம்பல், சோர்வு, பத்துக்கோடி கோடாகோடி.
சோபனம்—அழகு, சுபம், வாழ்த்து.
சோபாலிகை—அடுப்பு, விரிநூறு
சோபானம்—கற்படி, தாழ்வாரம்.
சோமன்—ஓர்வள்ளல், சந்திரன், தூசு.
சோம்பல்—அழுங்கல், சோம்பல், வியங்கோண்முற்று.
சோம்பு—அழுங்கல், சோம்பல், சோம்பென்னேவல், பெருஞ்சிரகம்.
சோரம்—களவு.
சோரர்—திருடர்.
சோரல்—வாடல், வியங்கோண்முற்று.
சோரன்—ஆட்டுக்குட்டி, திருடன்.
சோரி—இரத்தம், மழை.
சோர்தல்—வாடல், விழுதல்.
சோர்வு—களவு, மறதி.
சோலை—தோப்பு.
சோழம்—ஓர்தேசம்.
சோழன்-தமிழ்மூவேந்தரிலொருவன்.
சோளம்—ஓர்பயிர்.
சோறு—சோறு, பரணிநாள்.
சோனகம் — ஓர்தேசம், பதினெண்பாடையிலொன்று.
சோணை—சொரிதல், திருவோணநாள், விடாமழை.

சௌ

சௌசம்—சுத்தம்.
சௌண்டிகர்—கள்விற்போர்.
சௌந்தரமுகம்— பூரித்தமகிழ்ச்சியான் மலர்ந்தமுகங்காட்டல்.
சௌந்தரிகம்—அழகு.
சௌமன்—புதன்.
சௌமியம்—அழகு, சாந்தம்.
சௌமியர்—சாந்தர், முனிவர்.
சௌமியன்—சாந்தன், புதன்.
சௌரம்—அட்டாதசவுபபுராணத்தொன்று.
சௌராட்டிரராகம்—உலாவிராகம்.
சௌராட்டிரம்—ஓர்தேயம்.
சௌரி—கருடன், கன்னன், சனி, நமன், விட்டுணு.
சௌரியம்—களவு, வீரம்.
சௌரியன்—கன்னன், சூரன்.

ஞ

ஞண்டு—கர்க்கடகவிராசி, நண்டு.
ஞமலி—நாய், மயில்.
ஞமன்—நமன்.
ஞலவல்—மின்மினிப்பூச்சி.
ஞழு—மயிற்குரல்.

ஞா

ஞாங்கர்—இடம், இனி, கைவேல், பக்கம், முன், மேல்.
ஞாஞ்சில்—கலப்பை, மதிலுறுப்பு.
ஞாட்பு—கூட்டம், படை, பாரம், பூசல், வலி.
ஞாதி—தாயத்தான்.
ஞாதிகள்—தாயத்தார்.
ஞாபகம்—அரும்பொருள், அறிவு, இலக்கியமெடுத்துக்காட்டல்.
ஞாயில்—மதிலுறுப்பு.
ஞாயிறு—சூரியன்.
ஞாலம்—பூமி.
ஞாலுதல்—நாலல்.
ஞாழல் — குங்குமமரம், கோங்குமரம், புலிநகமரம்.

ஞாளி—கள், நாய்.
ஞாளிகம்—வள்ளிச்செடி.
ஞாளியூர்தி—வயிரவன்.
ஞானபாகை—வேதநூற்பொருள்.
ஞானமூர்த்தி—சரச்சுவதி, சிவன்.
ஞானம்-அறிவு,கல்வி, நல்லொழுக்கம்.
ஞானன்—பிரமன்.
ஞானி—அருகன், பிரமன்.
ஞான்று—இடைச்சொல், நாள், வினையெச்சம்.

ஞி

ஞிமிர்—ஒலி.
ஞிமிறு—வண்டு.

ஞெ

ஞெகிழம்—பொற்சிலம்பு.
ஞெகிழி—சிலம்பணி, சிலம்பு, தீ, தீப்பொறி, நெருப்புறுவிறகு.
ஞெகிழ்தல்—அலையல்.
ஞெண்டு—கர்க்கடகவிராசி, நண்டு.
ஞெமிர்தல்—ஒடிதல், பரத்தல்.
ஞெமுங்கல்—அமுந்தல், வியங்கோண்முற்று.
ஞெரேலெனல்—அச்சக்குறிப்பு, ஒலி, சீக்கிரத்தின்குறிப்பு.
ஞெலிகோல்—தீக்கடைகோல்.
ஞெலிதல்—கடைதல், குடைதல்.
ஞெளிர்—உள்ளோசை, ஒலி.
ஞெள்ளல்—உடன்படல், ஒலித்தல்,சிக்கிரம், சோர்வு, பள்ளம், மிகுதி, மேன்மை, வியங்கோண்முற்று, வீதி.
ஞெள்ளெனல்—அனுகரணவோசை.

ஞே

ஞேயம்—அன்பு, சிநேகம், நெய்.

ஞொ

ஞொளகல்—அச்சக்குறிப்பு, அலைதல், இளைத்தல், சோம்பல், வியங்கோண்முற்று.

த

தகடு—அடர்பு, இலை, ஐமைவடிவு.
தகம்—உட்டணம், எரித்தல்.
தகரம்—ஈயம், ஓரெழுத்து, தகரம், மயிர்ச்சாந்து, வாசனைப்பண்டம்.
தகர்—சுரு, செம்மறியாட்டுக்கடா, தகரென்னேவல், துருவாட்டேறு, பாராகம், பூமி, மேடவிராசி, யாளியினொன், யானையினொன்.
தகர்த்தல்—உடைத்தல், குட்டுதல்.
தகவு—அறிவு, உரிமை, உவமை, ஒழுக்கம், கிருபை, குணம், தகுதி, தெளிவு.
தகழி—அகல்.
தகழிகை—உண்கலம்.
தகனம்—சுடல்.
தகனன்—நெருப்பு.
தகனை—உலோகக்கட்டி.
தகுணிதம்—வாச்சியம்.
தகுதல்—உரிமை.
தகுதி—அறிவு, உரிமை, ஒழுக்கம், குணம், பொறுமை.
தகுதியோர்—அறிஞர், தமர்,பெருமையிற்சிறந்தோர்.
தகுவர்—அசுரர்.
தகுளம்—மகளிர்விளையாட்டு.
தகை—அழகு, அன்பு, கவசம், குணம், தகையென்னேவல், தளர்வு, பெருமை.
தகைதல்—ஆணையிடல், இளைத்தல், தடுத்தல்.

தகைப்பு—இளைப்பு, மதிற்சுற்று.
தகைமை—அழகு, குணம், பெருமை.
தக்கணம்—தெற்கு, வலப்பக்கம்.
தக்கன்—அட்டநாகத்தொன்று, நவப்பிரமாவிலொருவன்.
தக்கன்மகஞ்சிதைத்தோன்— வீரபத்திரன்.
தக்கார்—உறவோர், பெருமையிற்சிறந்தோர்.
தக்கிரம்—மோர்.
தக்கேசி—ஓர்பண்.
தக்கை—காதிடுந்தக்கை, தெப்பம், பம்பைவாச்சியம், பலவகைப்பறை.
தக்கோலம்—வாசனைப்பண்டம்.
தங்கம்—உயர்ந்தபொன்.
தங்கல்—தங்கல், வியங்கோண்முற்று.
தங்குடித்தமர்—தாயத்தார்.
தங்கை—இளையாள்.
தசம்—சிவிகை, பத்து.
தசனம்—பல்.
தசிரம்—உட்டுளை.
தசும்பு—குடம், கொப்பரி, பொன்.
தசை—ஊன், புலால்.
தச்சன்—சித்திரைநாள், தச்சன்.
தஞ்சம்—எளிமை, தாழ்வு, துணை, பற்றுங்கோடு, பெருமை.
தஞ்சை—தஞ்சாவூர்.
தடம்—ஓமகுண்டம், கரை, குளம், பெருமை, மலை, மலைப்பக்கம், வரம்பு, வழி.
தடவல்—தடவல், வீணைவாசித்தல், வியங்கோண்முற்று.
தடவு—தடவென்னேவல், தூபக்கால், பெருமை, வளைவு.
தடறு—ஆயுதவுறை.
தடா—பானை, மிடா.
தடாகம்—குளம்.
தடாரி—பம்பை, பேரிகை, மத்தளம், வாச்சியப்பொது.
தடி—உடம்பு, உலக்கை, ஊன், சிறுவயல், தடியென்னேவல், தண்டு, மின், வயல், வில்.
தடிதல் — அறுத்தல், தறித்தல், வெட்டல்.
தடித்தல்—கனத்தல், தாமதித்தல்.
தடித்து—மின்னல், வினையெச்சம்.
தடிப்பு—பருமை.
தடினி—ஆறு.
தடுத்தல்—ஆணையிடல்.
தடுப்பு—தடுத்தல்.
தடை—கவசம், தடுத்தல்.
தட்டம்—உண்கலம், பல், பாம்பினச்சுப்பல், மக்கட்படுக்கை, வினைமுற்று.
தட்டல்—ஆணையிடல், கிட்டல், தடுத்தல், தாளம்போடல், வியங்கோண்முற்று.
தட்டார்—பொற்கொல்லர்.
தட்டி—காவல், கேடகம், பலகை, வினையெச்சம்.
தட்டு—கம்புமுதலியசிலபுன்பயிர்த்தாள், குற்றம், தட்டென்னேவல், தராசுத்தட்டு, திரிகை, தேர்நடு, பரிசை, மரவட்டணை, முட்டு, முறம், வட்டம், வளைவு.
தட்டை—கவண், கிளிகடிகோல், தினைத்தாள், மூங்கில், மொட்டை.
தட்பம்—குளிர்ச்சி.
தணக்கு—தணக்கு, நுணவு.
தணத்தல்—நீங்கல், போகல்.

தணல்—நெருப்பு.
தணவம்—அரசமரம்.
தணிதல்—ஆறுதல், பருத்தல்.
தணியல்—கள், வியங்கோண்முற்று.
தண்—குளிர்ச்சி.
தண்சுடர்—சந்திரன்.
தண்டகம்—தண்டகாரணியம், வடமொழியிலோர்செய்யுள்.
தண்டகன்—ஓரரக்கன்.
தண்டதரன்—நமன்.
தண்டம் — அரசன்கொடுங்கோன்மையானிறையிறுத்தல்,ஊன்றுகோல்,ஓர்புருடப்பிரமாணம், குடைக்காம்பு, தண்டிப்பு, நாடு, படை, பண்டாரம், பற்றுக்கோடு, யானைத்துதிக்கை, யானைச்செல்வழி, வணங்கல்.
தண்டலை-ஓரூர், சோலை, பூந்தோட்டம்.
தண்டன்—வணங்கல்.
தண்டாச்சிறப்பினள்—சரச்சுவதி.
தண்டாமை—நிலைநீங்காமை.
தண்டாயுதன்—ஐயனார், வயிரவன்.
தண்டி—ஓர்புலவன், தண்டியென்னேவல், தண்டியடிகள், வினையெச்சம்.
தண்டிகை—சிவிகை.
தண்டித்தல்—கண்டித்தல், வெட்டல்.
தண்டு—ஓந்தி, சிவிகை,சேனை,தடி,தண்டாயுதம், தண்டென்னேவல், துளையுடைப்பொருள், நமனாயுதம், படை, பூவிதழ், மிதுனராசி, மூங்கில், வரம்பு, வீணை.
தண்டுதல்—தண்டல்.
தண்டுலம்—அரிசி.
தண்டை—காலணி, பிரப்பங்கேடகம்.
தண்ணடை—நாடு, பச்சிலை, மருதநிலத்தூர்
தண்ணம்—ஒருகட்பறை, காடு, குளிர், பறைப்பொது, மழு.
தண்ணவன்—சந்திரன்.
தண்ணுமை—உடுக்கை, உறுமிமேளம், ஒருகட்பறை, பேரிகை, மத்தளம்.
தண்மை — இகழத்தகுபொருள், எளிமை, குளிர்ச்சி, தாழ்வு, புல்லறிவு.
ததம்—அகலம்.
ததல்—நிலை.
ததாகதன்—புத்தன்.
ததி—தயிர், பருவம்.
ததும்பல்—தளும்பல், நிறைதல், பெருகுதல், வியங்கோண்முற்று.
ததைதல்—மிடைதல், வெளிப்படாது நெருங்கிநிற்றல்.
தத்தம்—ஈகை.
தத்தல்—தாண்டல்,வியங்கோண்முற்று.
தத்திகாரம்—பொய்.
தத்தியம்—மெய்.
தத்துவம்—உண்மை.
தத்துவன்—அரன், அருகன்.
தத்தை — கிள்ளை, முன்பிறந்தாள்.
தநயன்—மகன்.
தநயை—மகள்.
தந்தசூகம்—பாம்பு.
தந்தம்—பல், யானைக்கொம்பு, வினைமுற்று.
தந்தாவளம்—யானை.
தந்தி—ஆண்யானை, யாழ்நரம்பு.
தந்திரம்—உபாயம், நூல், படை, யாழ்நரம்பு.
தந்திரர்—கந்தருவர்.
தந்திரி — மந்திரி, யாழ்நரம்பிறுதிசை, யாழ்நரம்பு.

தத்திவிழுரியோன்—சிவன்.

தந்து—கல்விநூல், பஞ்சினூல், வினையெச்சம்.

தந்துரா—பாயிரம்.

தந்துவர்—நெய்வார்.

தந்தை—தகப்பன், வினைமுற்று.

தபதியர்—கம்மாளர், தச்சர்.

தபம்—தவம், மாசிமாதம்.

தபனன்—சூரியன், நெருப்பு.

தபுதல்—கெடுதல், சாதல்.

தபோதனர்—முனிவர்.

தப்பு — குற்றம், தப்பென்னேவல், பொய்.

தமம்—இராகு, இருள்.

தமரம்—அரக்கு, பேரொலி.

தமரல்—பெரிதொலித்தல்.

தமர்—உறவோர்.

தமள்—தம்மவள்.

தமனகம்—மருக்கொழுந்து.

தமனி—வன்னிமரம்.

தமனியம்—பொன்.

தமனியன்—இரணியன், சதி, பிரமன்.

தமன்—தம்மவன்.

தமாலம்—இலை, பச்சிலைமரம்.

தமி—தனிமை.

தமிசு—வேங்கைமரம்.

தமியம்—கள்.

தமிழ்—இனிமை, ஓர்பாடை, நீர்மை.

தமிழ்நாடன்—பாண்டியன்.

தமையன்—அண்ணன்.

தம் — அசைச்சொல், சாரியை, (உ-ம். எல்லார்தம்மையும்.)

தம்பம்—கவசம், சங்கீதம், தூண், நிலை, பற்றுக்கோடு, யானைத்தறி.

தம்பலம்—இந்திரகோபம், தம்பலம்.

தம்பல்—தம்பலம்.

தம்பி—தம்பியென்னேவல், பின்பிறந்தான்.

தம்பித்தல்—வாயுமுதலியவடக்கல்.

தம்மனை—தாய்.

தம்மிலம்—மயிர்முடி.

தம்முன்—தமையன்.

தம்மை—தாய்.

தயங்கல்—அசைதல், ஒளிசெய்தல், வியங்கோண்முற்று.

தயாளம்—கிருபை.

தயாளன்—கிருபையுடையோன்.

தயை—கிருபை.

தரக்கு—புலி.

தரங்கம்—நீர்த்திரை.

தரங்கிணி—ஆறு.

தரங்கு—வழி.

தரணம்—தரித்தல், தாண்டல்.

தரணி—சூரியன், பூமி, மலை.

தரம்—அச்சம், கூட்டம், சமானம், யக்குவம், மலை, வலி.

தரல்—தருதல், வியங்கோண்முற்று.

தரவு — கலிப்பாவிேனுருறுப்பு, தலைவன்கட்டளை, பிடரி.

தரளம்—அசைவு, திரட்சி, முத்து.

தரா — ஓர்கசப்புக்கிரை, சங்கு, தரா, பூசநாள், வினைமுற்று, வினையெச்சம்.

தராசு—துலாக்கோல், பரணிநாள்.

தராதரம்—மலை.

தராதலம்—பூமி.

தராபதி—அரசன்.

தரிசனம்—காட்சி.

தரிஞ்சகம்—அன்றில்.

தரித்தல்—சுமத்தல், தங்கல்.

தரித்திரம்—வறுமை.

தரித்திரி—பூமி, வறியன்.

தரிப்பு—தரித்தல்.

தரியலர்—பகைவர்.

தரு—மரப்பொது.

தருக்கம்—நியாயம், பொருள்.

தருக்கல் — அகங்கரித்தல், களித்தல், வியங்கோண்முற்று.

தருக்கு — அகங்காரம், களிப்பு, தருக்கென்னேவல்.

தருணம்—இளமை, சமயம்.

தருணி—மங்கைப்பருவத்தாள்.

தருதல்—கொடுத்தல்.

தருப்பணம்—இன்பநிறைவுறச்செய்தல், ஓர்தாளம், கண்ணாடி.

தருப்பை—குசை.

தருமக்கிழவர்—வைசியர்பொது.

தருமதேவதை—அம்பாவிகை.

தருமநாள்—பரணிநாள்.

தருமம்—அறம், தொழில், நீதி.

தருமராசன் — அருகன், தருமன், பாண்டுமக்களின்மூத்தோன், புத்தன்.

தருமன்—நமன், பாண்டுமக்களின்மூத்தோன்.

தருவி—சட்டுவம்.

தரா—பூமி.

தர்க்கம்—தருக்கம்.

தர்ப்பகன்—மன்மதன்.

தலம் — இடம், இலை, உலகின்பொது, பூமி.

தலை—ஆகாயம், ஆதி, இடம், தலை, தலைமை, பெருமை.

தலைத்திராணம்—தலைச்சீரா.

தலைநாள்—அச்சுவினிநாள்.

தலைப்படல் — எதிர்த்தல், வியங்கோண்முற்று.

தலைமகள்—தலைவி.

தலைமகன்—புருடன்.

தலைமை—முதன்மை.

தலையணை—தலையணை.

தலையல்—நீர்நுரைபுனல், புதுப்புனல்வரவு, மழைபெய்துவிடுதல்.

தலைவன்—அண்ணன், அரசன், கணவன், குருட்குமிறைவன், குரு, புருடன், மூத்தோன்.

தல்லி—தாய்.

தவ—குன்றல், மிகுதி.

தவசு—தவம்.

தவத்தர்—முனிவர்.

தவம்—தவசு.

தவர்—முனிவர், வில்.

தவர்தல்—துளைத்தல், தப்புதல்.

தவலோகம்—மேலேழுலகிலொன்று.

தவல்—குறைதல்.

தவளம்—வெண்மை.

தவளை—தவளை.

தவறல்—நடத்தல், குறைதல், சறுக்கல், வியங்கோண்முற்று.

தவறு—குற்றம், தவறென்னேவல்.

தவனகம்—மருக்கொழுந்து.

தவனம்—தாகம்.

தவனன்—சூரியன், வெப்பு.

தவன்—புருடன்.

தவாவினை—மலம், முத்தி.

தவிசு—தடுக்கு, பாய், மெத்தை.

தவிடு—தவிடு.

தவித்தல்—இளைத்தல்.

தவிர்தல்—ஒழிதல்.

தவில்—ஓர்பறை.

தவ்வி—சட்டுவம்.

தவ்வை—அக்காள், செவிலித்தாய், மூதேவி.

தழங்கல்—ஒலித்தல், வியங்கோண்முற்று.

தழலல்—அழலல், வியங்கோண்முற்று.

தழல்—கவண், கார்த்திகைநாள், கிளிகடிகோல், தழலென்னேவல், தீ.

தழிஞ்சி—சாய்ந்தார்மேற்படராமை.

தழுவல்—தழுவுதல், வியங்கோண்முற்று.

தழை—இலை, தழையென்னேவல், தளிர், பீலிக்குடை, மயிற்றோகை.

தழைக்கை—தழைத்தல்.

தழைதல்—தளிர்த்தல்.

தழைத்தல்—தளிர்த்தல்.

தளதளெனல்—ஒளிக்குறிப்பு.

தளம்—இலை, உப்பரிகை, சாடி, சாந்து, படை, பூவிதழ்.

தளம்பல்—ததும்பல், நடுங்கல், வியங்கோண்முற்று.

தளர்ச்சி—சோம்பல், சோர்வு.

தளர்தல்—தளர்ச்சி.

தளவம்—முல்லைக்கொடி.

தளவு—முல்லைக்கொடி.

தளி—கோயில், மழைத்துளி, விளக்குத்தண்டு.

தளிகை—உண்கலம்.

தளிமம்—அழகு, மக்கட்படுக்கை, மெத்தை.

தளிரியல்—பெண்.

தளிர்—தழை, தளிரென்னேவல்.

தளிர்த்தல்—துளிர்த்தல்.

தளை—ஆண்மயிர், கால்விலங்கு, காற்சங்கிலி, காற்சிலம்பு, தளையென்னேவல், யாப்புறுப்பு.

தளைதல்—பிணித்தல்.

தளைப்படுதல்—சிறைப்படல்.

தள்ளல்—தள்ளல், பொய், வியங்கோண்முற்று.

தள்ளாடல்—அசைதல், வியங்கோண்முற்று.

தறி—கட்டுத்தறி, தறியென்னேவல், தூண், நெய்வார்கருவி, மூளை.

தறிகை—உளி, தறி.

தறித்தல்—வெட்டல்.

தறுகணாளர்—படைவீரர்.

தறுகண்—மறம்.

தறுகல்—தடைபடல், வியங்கோண்முற்று.

தறை—தரை.

தற்சமம்—வடமொழிக்கும்பிறபாடைக்கும்பொதுச்சொல்.

தற்சனி—சுட்டுவிரல்.

தற்செல்வம்—வலி.

தற்பம்—மக்கட்படுக்கை, மனைவி, மெத்தை, மேனிலை.

தற்பரன்—கடவுள், சிவன்.

தற்பவம்-வடமொழியிற்றிரிந்தசொல்.

தற்பாடி—வானம்பாடி.

தற்புருடம்—சிவனைம்முகத்தொன்று

தனகு—களிப்பு.

தனஞ்சயன்—அருச்சுனன், உயிர்போகினும்போகாதுடலைவீங்கித்தலைகிழித்தகலும்வாயு, தீ.

தனதன்—ஈகையாளன், குபேரன்.

தனபதி—குபேரன்.

தனம்—பொன், முலை.
தனவைசியர்—செட்டிகள்.
தனது—தனது.
தனி—ஒப்பின்மை, தனி, தனியென்னேவல்.
தனிக்கோலான்—கடவுள்.
தனிட்டை—அவிட்டநாள்.
தனித்தல்—தனிமை.
தனிநிலை—ஆய்தவெழுத்து.
தனிமை—உவமையின்மை, ஏகாந்தம்.
தனு—உடல், சிறுமை, வில்.
தனுசர்—அசுரர்.
தனுசன்—மகன்.
தனை—அளவு.
தன்மம்—அறம்.
தன்மை—குணம், மூவிடத்தொன்று.
தன்னம்—சிறுமை, பசுவின்கன்று, மான்கன்று.
தன்னியாசி—ஓரிராகம்.
தன்னை—தாய்.

தா

தா—ஓரெழுத்து, கேடு, தாண்டுதல், தாவென்னேவல், பகை, வருத்தம், வலி.
தாகம்—ஆசை, நீர்வேட்கை.
தாக்கணங்கு—இலக்குமி.
தாக்கல்—எதிர்த்தல், பாய்தல், வியங்கோண்முற்று.
தாக்கு—தாக்கென்னேவல், போர்.
தாங்கல்—காத்தல், குளம், சுமத்தல், வியங்கோண்முற்று.
தாங்கி—பூணுகக்கட்டுவது, வினையெச்சம்.
தாசன்—அடிமையன்.
தாசி—அடியள், பரணிநாள், மேகவண்ணப்பூவுளமருதோன்றிமரம்.
தாசு—சூதாடுகருவி.
தாசேரகம்—ஒட்டகம்.
தாடங்கம்—காதணி, தோடு.
தாடனம்—அடித்தல்.
தாடி—மோவாய்மயிர்.
தாடிமஞ்சம்—சத்திக்கொடி.
தாடிமம்—தாதுமாதளை.
தாணு—சிவன், தூண், நிலை, நிலைபெறுதல், மலை.
தாண்டகம்— இருபத்தாறெழுத்தின் மிக்கவடியான்வரும்பா.
தாண்டல்—ஆடல், கடத்தல், செலுத்தல், வியங்கோண்முற்று.
தாண்டவம்—கூத்து.
தாதகி—ஆத்திமரம்.
தாதன்—அடிமையன்.
தாதா — ஈகையாளன், தகப்பன், பிரமன்.
தாதி—செவிலித்தாய்.
தாது—இரதமாதியேழு, காவிக்கல், தாதுமாதளை, நரம்பு, பூந்தாது, பொன்னாதியேழு, மண்ணாதியைந்து.
தாதை—தகப்பன், பாட்டன்.
தாதைதாதை—பாட்டன்.
தாத்திரம்—கோடாலி.
தாத்திரி—பூமி.
தாபதம்—முனிவரிருக்கும்வாசம்.
தாபதர்—சடைமுடியர், சமணமுனிவர்.
தாபம்—காடு, துன்பம், வெப்பம்.
தாபரன்—கடவுள்.
தாபிஞ்சம்—தமாலம்.

தாபிதம்—சூடு, தாபித்தல்.

தாமணி—தாம்பு.

தாமநிதி—சூரியன்.

தாமம்—அணைகயிறு, இடம், உடல், ஒழுங்கு, ஒளி, கீர்த்தி, கொன்றைமரம், சுகம், தாமணி, பிறப்பு, பூ, பூமாலை, மணிவடம், முடியுறுப்பு, மூவாறுகோவைமணியுளமாதரிடையணி, வீடு.

தாமிரப்பருணி — ஓராறு, மேற்றிசையானைக்குப்பெண்யானை.

தாமிரம்—செம்பு.

தாமோதரன்—திருமால்.

தாம்—அசைச்சொல், (உ-ம். நீர்தாம்.)

தாம்பிரம்—செம்பு.

தாம்பு—கயிறு, தாமணிக்கயிறு.

*தாம்பூலம்—வெற்றிலை.

தாம்பூலவல்லி—வெற்றிலைக்கொடி.

தாம்பூலி—வெற்றிலைக்கொடி.

தாயத்தார்—தாயாதிகள்.

தாயம்—உரித்து, சூதாடுகருவி, தந்தைவழிச்சுற்றம், துன்பம்.

தாய்—மாதா, வினையெச்சம்.

தாரகம்—உச்சவிசை, பிரணவம், வெள்ளி.

தாரகாபதி—சந்திரன்.

தாரகை—விண்மீன்.

தாரணம் — அட்டாங்கயோகத்தொன்று, உறுதி, தரித்தல், நிலை.

தாரணி—பூமி.

தாரணை—தாரணம்.

தாரம்—அரும்பண்டம், இங்குலிகம், நா, பச்சைப்பாம்பினஞ்சு, பாதரசம், பிரணவம், மனைவி, மூக்காற்பிறக்குமிசை, வல்லிசை, வீணைநரம்பிலொன்று, வெண்கலம், வெள்ளி.

தாரா — ஓர்புள், குருகு, விண்மீன், வினைமுற்று, வினையெச்சம்.

தாராகணம்—விண்மீன்.

தாராதரம்—மேகம்.

தாராபதி—சந்திரன், வியாழம்.

தாரி—வழி.

தாரு—மரக்கொம்பு, மரப்பொது.

தாருகவிநாசனி—காளி.

தாருகற்செற்றாள்—காளி.

தாருகற்செற்றோன்—குமரன்.

தாருகன்—ஓரசுரன்.

தாருகாரி—குமரன்.

தாருகாவனம்—ஓர்வனம்.

தாருணம்—அச்சம், பயங்கரம்.

தாரை—ஒழுங்கு, கண், கண்மணி, காகளம், கூர்மை, கொடிப்படை, சிறுசின்னம், சிலை, சுக்கிரீவன்மனைவி, திகிரி, தேவகுருவின்மனைவி, நா, நேரோடல், மழை, வலி, வழி, விண்மீன்.

தார்—கிண்கிணிமாலை, கொடிப்படை, படை, படைவகுப்பு, பூ, பூவரும்பு, மாலை.

தார்க்கியன்—கருடன்.

தாலகேதனன்—வீட்டுமாசாரி.

தாலம்—உண்கலம், கூந்தற்பனை, நா, பனை, பூமி, யானைச்செவி.

தாலவட்டம்—பூமி, யானைச்செவி, யானைவால்.

தாலவிருந்தம்—பேராலவட்டம், விசிறி.

தாலாலம்—பழிமொழி.

தாலி—மங்கலநாண்.

தாலு—நா.

தால்—பிள்ளைக்கவியிலோர்பருவம்.

தாவாந்தம்—நரகம்.

தாவம்—காடு, காட்டுத்தீ, மருதநிலத்தூர்.

தாவரம்—இடம், உடல், நிலை, பூமி, மரப்பொது, மலை.

தாவல் — தாண்டல், பாய்தல், வியங்கோண்முற்று.

தாவளம்—மருதநிலத்தூர்.

தாவு—குதிரைநடை, தாவென்னேவல், பகை, பற்றுக்கோடு, வருத்தம், வலி.

தாவுதல்—தாண்டல், பரத்தல்.

தாழி—குடம், சாடி, பரணிநாள்.

தாழை — தாழைமரம், தென்னமரம்.

தாழ் — சுவர்ப்புறத்து நீண்டவுத்திரம், தாழக்கோல், தாழென்னேவல்.

தாழ்தல் — ஆசை, ஆசைப்பெருக்கம், தங்கல், வணங்கல்.

தாழ்த்தல்—தாழ்த்துதல், மந்தம், வியங்கோண்முற்று.

தாழ்வடம் — முத்துக்கோவைமுதலியன.

தாழ்வாரம்—வீட்டிறப்பு.

தாழ்வு—ஈனம், பள்ளம்.

தாளம்—ஓர்வாச்சியம்.

தாளாண்மை—ஊக்கம், முயற்சி.

தாளாளர்—வைசியர்பொது.

தாளி—அனுடநாள், ஓர்கொடி, தாளியென்னேவல், பனைமரம்.

தாளிதம்—தாளிப்பு.

தாண்டல்—அகறல், இகுத்தல், கடத்தல், தத்துதல், தரணம், தாவுதல், நீடுதல், பாய்தல், பாவுதல்.

தாமதம்-பாணி,விளம்பம், விளம்பனம்.

தாமரை—அம்புயம், அம்போருகம், அரவிந்தம், ஆய்மலர், இண்டை, கஞ்சம், கமலம், குசேசயம், சதபத்திரி, சரோசம், சரோருகம், சலசம், சாரசம்,சூது, திருமலர், திருமாலுந்தி,தோடகம், நளினம், நீரோருகம், பங்கயம், பதுமம், பற்பம், புட்கரம், முண்டகம், முளரி, வனசம், வாரிசம், அன்றியுஞ் செந்தாமரையின்பெயர், கோகனகம், வெண்டாமரையின்பெயர், புண்டரீகம்.

தாமரைக்காய்—வராடகம்.

தாமரைக்கொட்டை-கன்னிகை, பொகுட்டு.

தாமரைப்பூ—இராசீவம், இறம்பு.

தாமரையுட்சுருள்—பீசம், வளையம்.

தாம்பு—கண்ணி, தாமணி.

தாய்—அம்மனை, அம்மை, அவ்வை, அன்னை, ஆயி, ஆய், ஈன்றாள், சநநி,தம்மனை, தல்வி, தெளவை, பயந்தாள், மாதா, மொய்த்தாய்.

தாழி—அகளி, சாடி, தளம், பதலை.

தாழை-கண்டல்,கேதகை,கைதை,மடி, முகரி, முசலி, முடங்கல், முண்டகம்.

தாழ்தல்—இறைஞ்சல், குரங்கல்.

தாழ்த்தல்-ஆழ்த்தல்,இகுத்தல்,நாலல்.

தாழ்வு—அகப்பு, அதம், இழிபு, குண்டு, சாய்வு, தஞ்சம், தண்மை, தாங்கல், வட்டம்.

தாளம்—கஞ்சம், கஞ்சனம், கிட்டி.

தாளம்போடல்—ஒத்தறுத்தல், தட்டல், வட்டித்தல்.

தாளவொத்து—சதி, சீர்.

தாளிக்கொடி—மஞ்சிகம், மஞ்சிகை.

தாள்-கடிகை, சேப்பு, தாழ், தாழ்ப்பாள்.

தான்றிமரம்—கலித்துருமம்.

தி

திசை—அம்பரம், அரிதம், ஆசை, உலகு, ககுபம், காட்டை, கோ, திசை, திக்கு, மாதிரம், வம்பல், விசும்பு.

திட்டை—திடர், பதுக்கை, பாறை, முரம்பு, அன்றியுமணற்றிட்டையின்பெயர், புளினம்.

திண்ணியன் — அவணன், சமர்த்தன், திறலோன், பண்ணவன், பொருநன், மள்ளன், மிண்டன், மீளி, வண்டன், வயவன், வல்லான், வல்லுநன், வியவன், விறலோன், வீரன்.

திண்ணை — குறடு, திட்டை, மண்ணீடு, வேதி, வேதிகை.

தித்திப்பு — அமுதம், இமுது, இமுமு, இனிமை, கனி, சுவாது, சேறு, தியம், தேக்கு, தேம், மதுகம், மதுரம்.

திப்பிலி—ஆர்கதி, கலினி, காமன்,சிறுமூலம், பிப்பிலி, மாகதி.

திமிர்தல்—துவர்தல், துளும்பல்.

தியானம்—யோகம்.

திரட்சி—அவயல், இராசி, இனம், உண்டை, கணம், கணை, காண்டம், குடந்தம், குப்பை, குவடு, குவிதல், குவை, குழியம், கொம்மை, சேடு, சேர்வு, சோகம், தரளம், திறுமல், தொகுதி,

தொழுதி, பந்தம், பிண்டம், பிழம்பு, புஞ்சம், பூகம், மாழை, முடலை, முண்டம், முத்தை, வட்டு, வழி.

திரிகை—தட்டு, பந்து, வட்டம்.

திருடர்—கரவடர், கரவர், கள்வர், கையர், சோரர், தேனர், பட்டிகள், பித்தர், புரையோர்.

திருடல்—கரத்தல், கவர்தல், வவ்வல், வாருதல்.

திருவாதிரைநாள்—ஆதிரை, ஈசனாள், செங்கை, மூதிரை, யாழ்.

திருவிழா—உற்சவம், சாறு, சேறு, தீர்த்தம், துணங்கறல், முருகு.

திருவோணநாள் — உலக்கை, ஓணம், சிரவணம், சோணை, நள்ளு, மாயோனாள், முக்கோல், வயிரம்.

திரை—அலை, அறல், அறை, கல்லோலம், சீகரம், தரங்கம், வாரம்.

திரைச்சீலை—அவிடி, எழினி, ஏமம், கஞ்சிகை, கஞ்சுகி, கண்டம், கவழிகை, கழனி, காண்டம், கையடம், படகம், படாம், பாரகம்.

திறக்குதல்—அங்காந்திடல்.

தினவு—கண்டூதி, சொறி.

தினை—ஏனல், அன்றியுங்கருந்தினை, இறடி, கங்கு, செந்தினையின்பெயர், கம்பு, கவலை, பைந்தினையின்பெயர், ஏனல்.

தினைத்தாள்—அருவி, இருவி.

தினைப்புனம்—ஏனல், வளாகம்.

தினைமா—இடி, நுவணம், நுவணை, பிண்டி.

தீ

தீ—அக்கினி, அங்காரகன், அங்கி, அயவாகனன், அரி, அழல், அனல், ஆரல், உதகவன், உதாசனன், எரி, எழுநா, ஒளி, கருநெறி, கனலி, கனல், காலவம், காற்றின்சகாயன், சாதவேதா, சிகி, சித்திரபானு, சுசி, சுடர், சூரன், செஞ்சுடர், சேர்ந்தார்க்கொல்லி, செருகிழி, தகனன், தபனன், தழல், தனஞ்சயன், தூமகேது, தென்கீழ்த்திசையோன், தேயு, நெருப்பு, பாவகன், முளரி, வசு, வன்னி, அன்றியும், ஆறுஊழித்தீயின்பெயர், உத்தரம், உற்கம், கடையனல், இந்திரன், மடங்கல், வடவாமுகம், வடவை.

தீக்கடைகோல்—அரணி, ஞெலிகோல்.

தீத்திரள்—அனற்றிரள், உற்கம்.

தீப்பொறி — கங்கம், ஞெகிழி, புலிங்கம், காட்டுத்தீயின்பெயர், தாவம்.

தீமை—அந்தரம், அந்தராயம், அலாபம், இன்னல், இன்னா, ஊறு, கோள், தீ, தீங்கு, தீது, துட்டு, மாயம், முட்டுப்பாடு, வலாபம், விக்கினம்.

தீர்தல்—நிவாரணம், நீங்கல், மோக்கம், மோசனம், விடுதல், விமோசனம்.

தீர்த்தம்—காண்டம், புட்கரம்.

து

துடிப்பு—கம்பிதம், முழை, முழி.

துடைத்தல்—இகுத்தல், துவட்டல், நீவல்.

துடைப்பம் — வாருகோல், விளக்குமாறு.

துணிவு — தெளிவு, தேறல், தேற்றம், அன்றியுங் கருமமுடியுந்தனையும்விடாத்துணிவின்பெயர், ஓர்ப்பு, கடைப்பிடி, குறிக்கோள், தேற்றம்.

துண்டம்—கடிகை, கண்டம், துணி.

துதித்தல்—ஏத்தல், துதி, தோத்திரம், நுதி, பரசுதல், பரவல், பழிச்சல், புகழ்தல், போற்றல், மீக்கூறல், மெச்சல், வழுத்தல், வாழ்த்தல், வியத்தல்.

தும்பை—துரோணம்.

துரியோதனன்—அரவக்கொடியோன், காந்தாரிமைந்தன், குருடன் மைந்தன், சுயோதனன், திருதராட்டிரன்மைந்தன், நந்தியாவட்டத்தாமன், மன்னர்மன்னன், வணங்காமுடியினன்.

துரியோதனன்குலத்தோர் — குருகுலத்தார், கௌரவர், பரதர், பாரதர், பௌரவர்.

துருத்தி—தோல், அன்றியும், உலைத்துருத்தி, அத்திரி, உதி, சிவை, பதித்திரி, பெருந்துருத்தியின்பெயர், சிவிறி, பந்தம், மட்டத்துருத்தியின்பெயர், பந்து, நீரைவீசுந்துருத்தியின்பெயர், சிவிறி, சிறுதாரை.

துரோணாசாரியன்—கும்பசம்பவன், பாரத்துவாசி, மெய்ந்நூலன், வின்னூலாளன், வேதக்கொடியோன்.

துர்க்கை—அந்தரி, அமரி, அம்பணத்தி, அரியேறி, ஆளியூர்தி, எண்டோளி, ஐயை, கலையானத்தி, கலையூர்தி, கன்னி, காத்தியாயினி, கார்த்திகை, குமரி, கொற்றவை, கொற்றி, கௌரி, சக்கரபாணி, சக்கராயுதத்தி, சண்டிகை, சமரி, சயமகள், சுந்தரி, சூலி, தேவி, நாரணி, நாராயணி, நீலி, பகவதி, பாலைக்கிழத்தி, மயிடற்செற்றாள், மாலினையாள், மேதிச்சென்னிமிதித்தாள், வாள்கைக்கொண்டாள், விசயை, விந்தை, விமலை, வீரச்செல்வி, வீரி.

துர்க்கைக்கூத்தின்பெயர்—மரக்கால்.

துலாராசி—கட்டளை, கோல், சீர், தராசு, துலை, தூக்கு, நிறை, வாணிகன்.

துவரை—ஆடகம், ஆடகி, முதிரை.

துவர்ப்பு—கசாயம், துவரம்.

துவளல்—அசைதல், உவளல், ஒல்கல், திவளல், நுடங்கல், நுணங்கல்.

துளசி—குல்லை, துழாய், துளவம், துளவு, பிருந்தைவனம்.

துளைத்தல்—குயிறல், துருவல், தெளிதல், தொள்ளல்.

துளையுடைப்பொருள்—குயில், குழல், குழை, கோகுலம், தண்டு, தொள்ளை, புழல், புழை.

துறவு—சார்பறுத்தல், துறத்தல், நிவிர்த்தி, நீத்தல், நீப்பு, விரத்தி.

துன்பம்—அஞர், அரந்தை, அரித்தை, அலக்கண், அலந்தலை, அலந்தை, அல்லகண்டம், அல்லல், இடர், இடுக்கண், இடும்பை, இட்டளம், இரக்கம், இன்னல், இன்னா, உறுகண், உறுவல், எவ்வம், ஏதம், கம்பலை, கலக்கம், கவலை, கவ்வை, கிலேசம், கேதம், கைதவம், கையாறு, கோட்டாலை, சிந்தை, சிலுகு, சிறுகு, சிறுமை, சூர், செல்லல், தாபம், துக்கம், துயர், துரால், துரிசு, துரிதம், துனி, தொய்யல், நடலை, நொ, நோய், படர், பரிவு, பழங்கண், பனி, பாசறை, பிணி, பீடை, பீழை, புன்கண், பைதல், பையுள், மம்மர், மிசை, யாதனை, வாதை, விழுமம், வீனை, வெய்துறல், வெறுப்பு, வேதனை.

தூ

தூக்கங்கள்—அறை, உத்தி, சல்லி, துணி, தூக்கு, தொங்கல், மதலிகை.

தூக்கணங்குருவி—சிதகன், சிந்தன், தூக்கு, தூதுணம்.

தூண்—கந்து, கம்பம், கால், தம்பம், தாணு, தூணம், நிலைபேறு, மதலை.

தூண்டில்—கோல், படிசம், வெளிசம்.

தூதர்—ஒத்தபண்புரைப்போர், வழியுரைப்போர், வித்தகர், வினையுரைப்போர்.

தூபக்கால்—இந்தளம், தடவு, தூபமுட்டி.

தூரம்—சேண், சேப், சேய்மை, நீளம், அன்றியுங் கூப்பிடுதூரத்தின்பெயர், எல்லே, குரோசம், பறவையளவுதூரத்தின்பெயர், கிரவுஞ்சம்.

தூர்த்தர்—இடங்கழியர், காமுகர், நாகரிகர், படிறர், பரத்தர், பல்லவர், விடர்.

தூறு—குன்மம், பஞ்சி, விடபம்.

தூறுதல்—கோள்.

தூற்றல்—பழிகூறல், புறங்கூறல், அன்றியுஞ்சிலரறிந்தபழிதூறலின்பெயர், அம்பல், பலரறிந்த தூறலின்பெயர், அலர்,வெறும்புறங்கூறலின்பெயர், குச்சம், குறளை, கொடுவாய், கொண்டியம், தொடுப்பு, பிசினம்.

தெ

தெங்கு — இலாங்கலி, ஏடகம், கேளி, தாழை, தென், நாரிகேளம், நாளிகேளம்.

தெப்பம்—அம்பி,உடுபம்,கோலம்,தொள்ளம், பகடு, படுவை, பட்டி, புணை, மிதவை, யாதனம், வள்ளம்.

தெய்வப்பெண்—அணங்கு, சூர்.

தெய்வம்—அணங்கு, கடவுள், சூர், தெய்வதம், தே, புத்தேளிர்.

தெரிதல்—ஆய்தல், தெள்ளுதல், தேர்தல்.

தெரு—ஆவணம், கோசம், ஞெள்ளல், நியமம், மறுகு, மார்க்கம், வீதி, அன்றியுநெடுந்தெருவின்பெயர், நியமம், மன்றம், மார்க்கம், குறுந்தெருவின்பெயர், மறுகு, முடுக்குத்தெருவின்பெயர், கோணம்.

தெருப்பலகூடுமிடம் — கவலை, சந்தி, முத்தெருக்கூடுமிடத்தின்பெயர், அந்தி, முச்சந்தி, நாற்றெருக்கூடுமிடத்தின்பெயர், கோடகம், சதுக்கம், சந்து, சிருங்காடகம், நாற்சந்தி, வரிசந்தி.

தெளிவு — உணர்வு, துணிவு, தெருள், தெள்ளுதல், தேர்ச்சி, நனவு, பிரசன்னம், மானவு.

தெற்கு—அவாசி, சிவேதை, தக்கணம், தென், யாமம், யாமியம், யாமினியம்.

தென்றற்காற்று — சிறுகால், தென்றி, மலையக்கால், வசந்தன்.

தே

தேக்கமரம் — குமிதிகம், சாகம், சாதி.

தேசாந்தரி—தேசிகன்.

தேடல்—கூடல், கையரிக்கொளல், துருவல், தொடர்தல், நாடல், நேடல்.

தேமல்—உத்தி, சுணங்கு, திகை,திதலை, திதனி, துத்தி, நுணங்கு, பொறி, வசந்திகை, வரி.

தேய்த்தல் — அரக்கல், அரைத்தல், உரைத்தல்.

தேருருளை—ஆழி, உந்தி, உருளி, உருள்கால், சக்கரம், சில்லி, திகிரி, நேமி, பரிதி.

தேரை—பிலவங்கம்.

தேர்—அரி, இயந்திரம், இரதம், எந்திரம், கவரி, குயவு, கூவிரம், கூவிரி, கொடிஞ்சி, சயந்தனம், திகிரி, விமானம், வையம், இதனடுவின்பெயர், தட்டு, நாப்பண், இதன்பரப்பின்பெயர், பார், இதன் மரச்சுற்றின்பெயர், கிடுகு, இதனுட்செறிந்தகதிரின்பெயர், ஆர், இதன்மொட்டு, கூம்பு, கூவிரம், கொடிஞ்சி, இதன்முட்டி, பிரம்பு.

தேர்க்கொடி—இடக்கியம், கூவிரம், சத்தி, சருத்தி, சிதவல், சிதாரம்,துணி.

தேர்ப்பாகன் — சாரதி, சூதன், வலவன்.

தேவப்பசு—கபிலை, தேனு.

தேவமாதர்—அரம்பையர், அரமகளிர், அமரர்மாதர்.

தேவருணவு–அமிழ்தம், அவி, சரு,பலி.

தேவர்—அண்டர், அதிதிமைந்தர், அதிதர், அமரர், அமுதர், அய்யர், ஆதித்தர், இமையவர், இலேகர், உம்பர், உயர்நிலத்தோர், கடவுளர், சுடர்மவுலியர், சுரர், சுவர்க்கத்தோர், தானவர்பகைவர், பட்டாரகர், பண்ணவர், புங்கவர், புத்தேளிர், புலவர், மேலோர், வரர், வானோர், விண்ணவர், விபுதர்.

தேவர்கோவில்—ஆலயம், கற்கி, கோட்டம், சினகரம், சேதிமம், தளி,தேவகுலம், தேவநகர், நிகேதனம், நியமம், நிலயம்,பள்ளி, பாழி, பீடரம், மந்திரம், வானவருறையுள், விமானம்.

தேவலோகம்—அமரர்கற்பம், அமுப்புகம், ஆனுலகு, உம்பருலகம், உயர்நிலை, உவணை, கற்பம், கோ, சுரரிடம், சுவர்க்கம், சுவவு, தானம், துறக்கம், நாகம், பதவி, பவனம், புத்தேணாடு, பொன்னாடு, மேனுலகம்,வானுலகம், விசும்பு, விண்ணுலகு, விமானம், வியனுலகு.

தேவேந்திரன் — அரி, அமராவதியோன், அயிராவதப்பாகன், ஆகண்டலன், ஆயிரங்கண்ணன், இந்திரன், இமையவர்வேந்தன், கரியவன், காண்டாவனன், காரி, கோபதி, கௌசிகன், சக்கிரி, சங்கிரந்தனன், சசிமணாளன், சதக்கிருதன், சதமகன், சுரேசன், சுரேந்திரன், சுனாசீரன், துச்சவனன், நாகநாதன், நான்மருப்பியானையூர்தி,பலசூதனன், பலாரி, பாகசாசனன், புரந்தரன், புருகூதன், புரோகிதன்,புலவன், புனிதன், பொன்னகர்க்கிறைவன், போகி, மகவான், மருதநிலத்திறைவன், மருத்துவன், மால், மேகவாகனன், வச்சிரபாணி, வலாரி, வாசவன், வானோர்கோமான், விண்முழுதாளி, வெள்ளைவாரணன், வேந்தன், வேள்விவேந்தன்.

தேவேந்திரன்மனைவி—சசி, புலோமசை, மகன்பெயர், சயந்தன், குதிரையின்பெயர், உச்சைச்சிரவம், யானையின்பெயர், அயிராவதம், நகரின்பெயர், அமராவதி, மாளிகையின்பெயர், வசந்தம், மண்டபத்தின்பெயர், சுதன்மம், நந்தனவனத்தின்பெயர், கற்பகச்சோலை, கொடியின்பெயர், இடி, ஆயுதத்தின்பெயர், குலிசம், சதகோடி,சம்பம், வச்சிரம், வயிரப்படை.

தேள்—துட்டன், தெறுக்கால், நளி, பறப்பன், விருச்சிகம்.

தேற்றுமரம்—இல்லம், கதவி, சில்வம், தேறு.

தேனீ—அலரி, சாகம், பிரசம்.

தேன்—பிரசம், மகரந்தம், மது.

தேன்கூடு — இறால், கோற்றேன், பிரசம்.

தை

தைத்தல் — அத்து, துன்னம், பொல்லம்.

தைமாதம்—தைடம், பௌடம்.

தையற்காரர்—துன்னர், பொல்லர்.

தொ

தொடுதல்—உளறு, திவளல், தீண்டல், துவளல், பரிசம், பரிசனம்.

தொடை—ஊரு, கவான், குறங்கு,சோகம், வாமம்.

தொழில்—கருமம், கன்மம், செயல், பணி, விதி, வினை.

தொழிற்செய்வோர்—கம்மியர், தொழுவர்.
தொழுமரம்—தொழு.
தொழுவம்—தொழும்.

தோ

தோசை — அடை. இலட்டுகம், மோதகம்.
தோடு—தாடங்கம்.
தோண்டல்—அகழ்தல், குறல், குன்றல், தொடுதல், தொட்டல்,நோண்டல்.
தோரணம்—மகரிகை.
தோல்—அதள், உரி, உரிவை, ஒலியல், கிருத்திமம், சருமம், துவக்கு, தொக்கு, பச்சை,புரணி, புனிறு, போர்வை, மேதை, வடகம்.
தோல்வி—அஞ்சல், ஓட்டம், தொலைவு, தோல்வு, தோற்றல், நிலையழிவு, பின்னிடல்.
தோல்வினைஞர்—குயிலுவர், பறம்பர்.
தோழன்—எலுவன், காதலன், கேளன், சகாயன், சிலதன்,சேடன், துணைவன், நண்பன், பாங்கன்.
தோழன்முன்னிலை—ஏடா.
தோழி—அன்னை, இகுளை, இணங்கி,காதலி, சகி, சிலதி, சேடி, துணைவி, பாங்கி.
தோழிமுன்னிலை—ஏடி, ஏலா.
தோளணி—அங்கதம், கண்டிகை, கிம்புரி, கேயூரம், வாகுவலயம்.
தோள்—புயம், மொய்ம்பு, வாகு.
தோண்மேல்—எருத்தம், சுவல், செகில், நிகலம், பிடர்.
தோற்கருவி—பணி.
தோற்கருவிமாக்கள்—இயவர், குணுங்கர்.
தோற்பாய்—சருமம்.
தோற்றுவித்தலின்பெயர்—உண்டாக்கலைக்காண்க.
தோன்றல்—உருத்தல், தோற்றல், நாறுதல், மலர்தல், வெளிப்படல்.

ந

நகம்—உகிர், கரோருகம், புனர்ப்பவம்
நகரப்பதியோர்—சதுரர், நாகரிகர்.
நஞ்சு—அமரி, ஆலகாலம், ஆலம்,கடு, கரம், கரளம், காரி, காளம், சிங்கி, நீலம், அன்றியும் விடத்தைக்காண்க.
நடத்தலின்பெயரும் வகுப்பும் —இசைத்தல், இயங்கல், இல்லல், இவர்தல், இறத்தல், ஏகல், ஒதுங்கல், கடத்தல், கழிதல், செல்லல், சேறல், தணத்தல், திரிதல், திர்தல், நீங்கல்,படர்தல், பிரிதல், பெயர்தல், போதல், மீளல், வயங்கல், வருதல், வழங்கல், விடுதல்.
நடு—அகடு, அணவு, இடை, உந்தி, ஒத்தல், கூழை, சமன், செப்பம், நள்ளு, நனந்தலை, நா, நாப்பண், பகல், பிரமம், மத்திமம், மத்தியம், மையம்.
நடுக்கம்—அதிர்ப்பு, உலைவு, கம்பம், கம்பலை, கம்பிதம், தளம்பல், நடலை, பனி, பனித்தல், பனிப்பு, பிறழ்தல், பொதிர்ப்பு, விதலை, விதிர்ப்பு, வெதிர்ப்பு.
நடை—ஒழுக்கம், கதி, சாரம், அன்றியுமாறு நடையின்பெயர், சதாகதி.
நடையுளது—சரம், நடையிலது, அசரம்,இரண்டுஞ்சராசரமென்னப்படும்.
நண்டு—அண்டசம், கவைத்தாள், கள்வன், கர்க்கடகம், குளிர், குளிரம், ஞெண்டு, நளிர், நள்ளு, மதி, இதணுண், அலவன்.

நத்தை—கருநந்து, கூன், சரிமுகம், நத்தம், நந்து, நாகு.
நந்தியாவட்டம்—நந்தியாவர்த்தம், வலம்புரி.
நமனாயுதம்—கணிச்சி, தண்டு, பாசம், அவன்வாகனம் எருமைக்கடா.
நமன்—அந்தகன், அரி, இயமன், எருமையூர்தி, காலன், கால், கூற்றன், சண்டன், சமன், சௌரி, செங்கோற்கடவுள், ஞமன், தருமன், தென்றிசைக்கோன், நடுவன், பாசகரன், பானுமைந்தன், மடங்கல், மறம், மறலி, மறல்.
நரகத்திற்கொல்லாதுவருத்துநோய்—யாதனை.
நரகம்—அந்தகாரம், அழல், அளறு, அள்ளல், ஆர்வம், இருணிலம், இருள், ஊழல், கிழுலகம், கும்பி, சுவப்பிரம், செந்து, திமிரம், தீ, துவாந்தம், நராலைநிரயம், பவர்க்கம், பாதாளம், புலவு, பூதி, வீழ்கதி.
நரம்புக்கருவிக்குரியோர்—குயிலுவர்.
நரம்பு — எசம், கன்னம், சங்கன்னம், சினை, தாது, நாடி, மேதை.
நரி—இகலன், உள்ளன், ஒண்டன், குரோட்டம், கோணாய், கோமாயு, சம்பு, சிறுகாலன், சிவை, சுரி, பூரிமாயு, இதனாண், ஓரி, இதன்பெண், பாட்டி, இதன்பிள்ளை, குட்டி, குருளை, பறழ், அன்றியுங்கிழநரியின்பெயர், ஓரி, செந்து.
நரை—சரை, பலிதம்.
நறுவிலிமரம்—அலி, செலு, வலி, வெளிறு.
நன்மை—அணி, அவணி, ஆனு, உத்தமம், உறுதி, ஒண்மை, கடவுள், சிவம், சீர், சுகம், சுபம், சேடு, நயம், நயன், நலம், நறுமை, நன்கு, நன்றி, நன்று, நன்னர், படு, மாசறல், யாணர், வண்ணம், விழுப்பம், விழுமம்.

நா

நா—சிக்குவை, தாரம், தாரை, தாலம், தாலு.
நாகணவாய்ப்புள் — குரகம், சாரிகை, பூவை.
நாகப்பாம்பு—மூர்க்கம்.
நாகப்பூச்சி—நாங்கூழ், பூநாகம்.
நாகரவண்டு—நொள்ளை.
நாகலோகம்—பவனம்.
நாடகசாலை—அரங்கம், அவிநயசாலை.
நாடகசாலைக்கணிகை — கூத்தி, நடிநிருத்தமாது, மாதவி.
நாடகர்—அவிநயர், கண்ணுளர், கரகோடியர், கூத்தர், கோடியர், நடர், நாடகியர், நிருத்தர், புலவர், பொருநர், வயிரியர், அன்றியுந்தேவர்க்காடுவள், சாலினி.
நாடா— நூனாழி.
நாடு—அகலுள், அரசு, அழுவம், உலகு, உறையுள், ஏணி, கோட்டம், சநபதம், சும்மை, தண்டம், தண்ணடை, தேயம், படப்பை, பாடி, பாண்டில், பைதிரம், பொழில், மண்டிலம்.
நாணல்—காசை, சரம், சரவணம்.
நாணி—ஆயம், குணம், சிஞ்சினி, தொடை, நரம்பு, நாரி, பூட்டு, பூரி, வடம்.
நாயுருவி—கரமஞ்சரி.
நாய்—அக்கன், அசுழம், அற்பம், எகினம், எகின், குக்கன், கூரன், சாரமேயன், சுணங்கன், சுவா, சுன்கன், சூரன், ஞமலி, ஞாளி, துத்தம், பாசி, புரோகதி, மண்டலி, முடுவல், அன்றியும்பெண்ணாயின்பெயர், பாட்டி, பிணா,

பிணை, மூடுவல், இதன்பிள்ளை, குட்டி, குருளை, பறழ்.

நாரத்தை—நரந்தம், நாரங்கம், நாரம்.

நாரை—குருகு, கொய்யடி, நரை, வண்டானம், அன்றியுங் கருநாரையின்பெயர், சிகரி, வெண்ணாரையின்பெயர், சாரசம், முந்து, பெருநாரையின்பெயர், பிதா, போதா.

நாவல்—ஆருகதம், சம்பு, நேரோடம், அன்றியுங் குழிநாவலின்பெயர், சாதேவம்.

நாவிதன்—ஆசிதையன், ஏறுநி, மங்கலி, மஞ்சிகன், மயிர்வினையாளன், மாசுநீர்ப்போன்.

நாழி—குஞ்சம், படி.

நாழிகை—இருத்தை, கடிகை, கன்னல், நாழி, பதம், விகலை.

நாழிகைவட்டில்—கன்னல், கிண்ணம்.

நாள்—அல்கல், அளவை, ஆனியம், எல், எல்லை, எல்வை, திவசம், திவா, தினம், பகல், வாசரம், வைகல், இதன்பாதி, அரைநாள், அர்த்தநாள், பானாள்.

நான்கு—சது.

நி

நிகழ்காலம்—பவுடியம், வேலை.

நிச்சயம்—சாசுவதம், திர்க்கம், தேறல், தேற்றம், நிகண்டு, நிதானம், நியமம், மன்றம்.

நிணம்—இழுது, கொழுப்பு, செழுமை, நெய், மேதை, வழுக்கு, வழும்பு, விழுப்பு, விளர்.

நிதம்பம்—கடிதடம்.

நித்திரை—அனந்தர், அனந்தல், உறக்கம், கண்படை, கனா, சயனம், துயில், பள்ளி, அன்றியுநிரம்பாத்தூக்கம், தூங்கல்.

நித்திரைசெய்யல்—உறங்கல், கண்படல், துஞ்சல், துயிலல், துயிறல், தூங்கல், பள்ளி, வீங்கல்.

நித்திரையொழித்தல்—சாகரம்.

நிந்தையின்பெயர்—இகழ்ச்சியைக்காண்க.

நிமித்தம்—சகுனம், சோதிடம், வாய்ப்புள், விரிச்சி.

நிமித்தம்பார்ப்பவன்—சகுனி.

நிருவாணி—திகம்பரன், நக்கன்.

நிலப்பிளப்பு—கமரைக்காண்க.

நிலாமுகிப்புள்—அம்போதகம், சகோரம், சாரம், போரந்தை.

நிலை—ஆதாரம், ஏண், ததல், தம்பம், தாணு, தாபரம், திதி, திரம், நிற்றல், மன்னல்.

நிலைநீங்காமை—ஆருபம், ஆறுமை, தண்டாமை.

நிலைபெறுதல்—அற்கல், தாணு, திதி, துஞ்சல், நிலைத்தல், மன்னல்.

நிலையின்மை—அற்காமை, வம்பு.

நிலையுடைமை—ஏண்.

நிறம்—அரி, இராகம், உரு, எழில், கரு, கறை, குணம், குரு, கெழுமை, கேழ், கொழுமை, சந்தம், சாயல், சாயை, பயப்பு, புகர், பை, மாமை, மேனி, வண்ணம், வருணம்.

நிறுத்தல்—தூக்கல்.

நிறுத்துதல்—தோன்றல்.

நிறை—கட்டளை, துலாம், துலை, தூக்கு, பாரம்.

நிறைகல்—கட்டளைக்கல்.

நிறைதல்—ஆர்தல், கழுமல், திளர்தல், திளைத்தல், கெழுமல், கெழுவுதல், ததும்பல், திளைத்தல், துவன்றல், துற்றல், தெகுளம், தெவிளல், தெவிட்டல்,

தேக்கல், தேங்கல், நிரம்பல், பிறங்குதல், புட்கலம், பெருகுதல், மலர்தல், மலிதல், மல்கல்.

நிறைவு—கடம், கனை, செறிவு, நிதி, நிரப்பு, பிரகாமியம், புட்டம், பூரணம்.

நிறைவேறல்—சபலம்.

நினைத்தல்—உணர்தல், உள்கல், உள்குதல், உன்னல், ஊழ்த்தல், சிந்திக்கல், தெளிவிட்டல், பார்தல், முன்னல், வலித்தல்.

நினைவின்பெயர்—கருத்தைக்காண்க.

நீ

நீங்கல்—அகலல், உணர்வு, ஒருவுதல், தணத்தல், வணாதல், வல்லி, விலகல்.

நீதி—கடம், செங்கோல், தருமம், நடு,
* நயம், நியாயம், நீதம், நெறி, மரியாதம்.

நீரோட்டம்—கோலம்.

நீர்—அப்பு, அமுதம், அம், அம்பணம், அம்பு, அம்புதம், அயம், அலர், அனகம், அறல், ஆருவம், ஆலம், உதகம், கஞ்சம், கமலம், கம், கயம், கவந்தம், கனாசம், கனவிரதம், காண்டம், கார், கிலாலம், குசம், கோ, சம்பரம், சலம், சலிலம், சிந்து, சீதம், சீவனம், சீவனீயம், தீர்த்தம், தோணி, தோயம், நாரம், நீரம், பயசு, பயம், பாணி, பானீயம், பிசிதம், புட்கரம், புவனம், புனல், மழை, மாரி, மை, வயம், வருணம், வனம், வாயம், வாரி, வார், அன்றியுந்தெளிந்தநீர், சற்சலம், தெண்ணீர், கலங்கனீரின்பெயர், ஆவிலம், கலுடம், கலுழி, விலங்கல்.

நீர்க்காக்கை—அர்க்கம், காரண்டம், காரண்டவம்.

நீர்க்குளிரி—கல்லாரம்.

நீர்ச்சால்—இடங்கர், சட்டம்.

நீர்ச்சண்டு—சச்சு.

நீர்ச்சுழி—உந்தி, சுரியல்.

நீர்நாய்—எதினம், எதின்.

நீர்முள்ளி—முண்டகம்.

நீர்வஞ்சி—பிசின், வானீரம்.

நீர்வாழ்பறவைப்பொது—உற்குரோசம், உன்னம், கின்னரம், குரகம்.

நீளம்—ஆயதம், ஆயம், உறை, நெடி, சேண், சேய்மை, தீர்க்கம், நீடல், நீட்டம், நெடில், நெடுமை, நெட்டை, நேர், நேர்பாடு, நேர்பு, வரி, வார்.

நீளுதல்—ஒழுகல், இடல், நீங்கல், நேர்தல், போதல், வழிதல், வார்தல்.

நு

நுண்மை—அணு, அயிர், ஆய்தல், இம்மி, ஈ, கூர்மை, சாய்தல், நிவறல், நிழற்றல், நுட்பம், நுணங்கல், நுணங்கு, நுணுக்கம், நுணுக்கல், நுணுங்கு, நுவணை, நுழை, நுனி, நுழை, நேர்மை, நொசி, நொய்தல், மூரி, மூன்.

நுதலணி—இலம்பகம், சுட்டி, சுட்டு, புல்லகம்.

நுதல்—அலிகம், அளிகம், இலலாடம், குளம், சங்கம், பாலம், மந்தகம், முண்டகம்.

நுதன்மேலணி—உத்தி, இருவுறுப்பு.

நுரை—பே, பேது, பேனம்.

நுனி—நுதி, நுனை.

நூ

நூல்—இலக்கணமுதலாகியநூல்கள்.

நூறுபலம்—நிறை, படி.

நூற்கிறநூல்—இழை, சூத்திரம், தந்து, தொடர், நுவணம், நுவணை, பனுவல், பிசின்.

நூற்கும்பஞ்சிற்றொட்டர்நுணி—நூய்.

நூற்பா—அகவல், சூத்திரம்.

நூற்றூர்—நோழிகை.

நெ

நெட்டி—சடை, சடைச்சி.

நெய்—அவி, ஆகாரம், ஆச்சியம், இழுது, கிருதம், துப்பகம், துப்பு, நேயம், அன்றியும் வெண்ணெயின்பெயர், ஐயங்கவீனம், நவநீதம், நுனை.

நெய்தனிலத்தலைவன்—கடற்சேர்ப்பன், கொண்கன், சேர்ப்பன், துறைவன், புலம்பன், மெல்லன்.

நெய்தனிலத்தியாழ்—விளரி.

நெய்தனிலத்திராகம்—செவ்வழி.

நெய்தனிலத்தூர்—பட்டினம், பாக்கம்.

நெய்தனிலப்பறை—கோட்பறை, சாப்பறை, மீன்.

நெய்தனிலப்பெண்—கடற்பிணா, நுளைச்சி, பரத்தி.

நெய்தனிலமக்கள்—கடலர், கழியர், சலவர், திமிலர், நுளையர், பரதர், பரதவர், வலையர்.

நெய்தனிலம்—கடற்சார்பு, சமப்பால்.

நெய்த்துடிப்பு—சுருக்கு, சுருவை, துடுவை.

நெய்வார்—காருகர், தந்துவர், பொருந்தர், வேதகாரர்.

நெரித்தல்—அவைத்தல், குத்தல், செறித்தல், தெறுத்தல்.

நெருக்கம்—அடர்பு, அரி, அளம், அள், இடங்கழிமை, உறுப்பு, ஐமை, ஓதி, கனை, வள், விறப்பு, சடிலம், சாந்திரம், செறிவு, சேத்து, தூற்று, நளி, நனி, நிபிடம், நிரந்தம், பிறப்பு, விரிப்பு.

நெருங்கல்—அடர்தல், அள்ளுதல், கஞறல், கழறல், கிளைத்தல், குயிறல், செறிதல், ததைதல், திணுங்கல், துதைதல், துவன்றல், துறுமல், நுறுவல், துன்றல், துன்னல், பம்பல, பன்னல், பிணங்கல், புளித்தல், பொதுளல், மிடைதல், மிண்டுதல், மீதூர்தல், மொய்த்தல், வெறிதல், இவற்றுள் வெளிப்படாது, நெருங்கிநிற்றலின் பெயர், ததைதல், துதைதல், மிடைதல்.

நெல்—சாலி, வரி, விரீகி, அன்றியு நன்னெல்லின்பெயர், செஞ்சாலி, செந்நெல், சொல், தோரைநெல்லின்பெயர், இயவை, மலைநெல்லின் பெயர், ஐவனம், நூற்றுநெல்லின்பெயர், பொங்கழி, பொலி, மூவருடநெல்லின்பெயர், அசம்.

நெல்லிமரம்—ஆமலகம்.

நெல்லின்கதிர்—ஏனல், குரல், சொல்.

நெல்லின்போர்—சும்மை.

நெல்லின்மணி—அலகு.

நெற்றிக்குறி—புண்டரம்.

நெற்றிச்சுட்டி—சூடிகை.

நெற்றித்திலகம்—சிந்தூரம், திலதம், பொட்டு.

நெற்றிப்பட்டம்—ஓடை.

நொ

நொடி—பிதிர்.

நொய்—நொறுங்கு.

நொய்மை—இலகு, இலேசம், நொய்வு.

நோ

நோயுற்றொழிந்தோன்—உல்லாபன்.

நோய்—அணங்கு, அருப்பம், அவலம், அழுங்கல், ஆமயம், உரோகம், உறுகண், காண்டகம், குத்று, குந்தம், சிதலை, சிறுமை, சூர், துனி, நடுங்கல், நிழல், நீழல், படர், பிணி, புன்கண், பைங்கூழ், பையுள், மடங்கல், மடி, மாரி, முடங்கல், முடங்கு, வாதை,

வியாதி, வேதனை, அன்றியுந் திராத நோயின்பெயர், எவ்வம்.

ப

பகல்—எல், திவா.

பகை—அரி, ஆரலம், இகல், இரிபு, உறழ்வு, ஊழ், தாவு, துப்பு, தூ, தூணம், தெவ், படர், படி, மறல், மற்கொல், மாற்றம், முரண், முனை, விரோதம்.

பகைவர்—அகிதர், அடையலர், அண்டர், அமரார், அமித்திரர், அரிகள், இகலோர், இரிஞர், இன்னார், உள்ளார், எண்ணலர், எதிர்ந்தோர், ஒட்டார், ஒல்லார், ஒன்னார், கருதலர், கூடார், கொள்ளார், சார்பிலார், சினவர், செறுநர், செற்றார், சேயார், சேரலர், சேரார், தரியலர், திருந்தலர், துன்னார், தெவ்வர், தெறுநர், நண்ணார், நள்ளார், நேரலர், நோனார், பரர், பற்சர், பற்றார், புல்லார், பொருந்தலர், மருவலர், மன்னார், மாணார், மாற்றலர், முனைந்தோர், மேவலர், வட்கார், விட்டார், வேண்டார்.

பகைவர்நாட்டழித்தல் — கொற்றவள்ளை.

பக்கம்—இடை, சிறை, ஞாங்கர், பாங்கர், பாங்கு, பாரிசம், பால், புடை, புறம், மருங்கு, மாடு.

பக்கவாதம்—ஊரம், வாரம்.

பங்கு—கந்தம், கூறு, கூறுபாடு, திறம், பாகம், பாகு, பாத்தி, பாத்து, பால், வாரம்.

பங்குசெய்யல் — காறுதல், பகிர்தல், பகுத்தல், பாகிடுதல், வகிர்தல்.

பங்குனிமாதம்—பாற்குநம், பாற்குநிகம்.

பசலை—பீர்.

பசிரி—பாய்விரி.

பசு—ஆ, கபிலை, குரம், குரால், கூலம், கோமளம், சுரபி, சுனா, தேனு, அன்றியுநற்பசு, பத்திரை, குணமில்லாப்பசுவின்பெயர், சுதை, கன்றுத்தாய்ப்பசுவின்பெயர், வற்சலம், ஓரீற்றுப்பசுவின்பெயர், கிட்டி, கிருட்டி, மலட்டுப்பசுவின்பெயர், வற்சை.

பசுக்கூட்டம்—கதம்பம், கதுப்பு, காலி, காலேயம், கோட்டம், தொறு, நிரை.

பசுக்கொட்டில்—ஆனிலை, கொட்டம், கோட்டம், தொழு, தொழுவம், படப்பை.

பசுவிற்குங்காளைக்கும்பொது — ஆ, ஆன், குடஞ்சுட்டு, கோ, நிரை, பசு, பெற்றம்.

பசுவின்கன்று—கோதனம், தன்னம், வசு, வற்சம், அன்றியுமிளங்கன்றின்பெயர், கொற்றி.

பசுவின்மடி—ஆபீனம், செருத்தல்.

பசுவின்முலை—சுனா.

பச்சிலை—தமாலம், பசும்பிடி.

பச்சை—அரி, அரிதம், அரிது, சாமம், சாமளம், பசுமை, பலாசு, பாசு, பை, பைமை, மரகதம்.

பச்சோந்தி—காமரூபி, கோம்பி.

பஞ்சலோகப்பொது—சீருள், பொன்.

பஞ்சு—துலவம், தூலம்.

படி—ஆரோகணம், சோபானம்.

படிக்கம்—படியகம்.

படித்தல்—ஓதல், கற்றல், கெழுமல், நவிலல், பயிலல்.

படிப்பித்தல்—ஓதுவித்தல், கற்பித்தல், பயிற்றுதல்.

படை—அதிகம், அனீகம், ககனம், கவனம், சேனை, ஞாட்பு, தண்டம், தண்டு, தந்திரம், தளம், தார், தானை, பகுதி, பதாகினி, பதாதி, பலம், பாடி, யூகம், வாகினி, வானி.

படைத்தலைவன் — சேனாபதி, பொருநன்.

படைத்தொகை — தேரொன்று, களிறொன்று, பரிமூன்று, காலாளைந்து கொண்டது, பத்தி, பத்தி மும்மடி கொண்டது, சேனாமுகம், சேனாமுக மும்மடிகொண்டது, குழுமம், குழுமம் மும்மடிகொண்டது, கணம், கண மும்மடிகொண்டது, வாகினி, வாகினி மும்மடிகொண்டது, பிருதனை, பிருதனை மும்மடிகொண்டது, சமூ, சமூ மும்மடிகொண்டது, அனீகம், அனீகம் பத்துகொண்டது, அக்குரோணி, ஆகையிருவக்குரோணியென்பது, தேர். உயிருஆனை, களிறு, உயிருஆனை, குதிரை, கயிருதகாய், காலாள், ஈகதாராறும், ஆக, உரமஅதனா.

படைவகுப்பு — அணி, ஆக்கம், உண்டை, ஒட்டு, கூழை, கை, தார், தூசி, நிரை, நெற்றி, வியூகம், இவற்றுட் படைமுன்னணியின்பெயர், ஆக்கம், கொடிப்படை, தார், தூசி, நிரை, படைப்பின்னணியின்பெயர், கூழை.

படைவீரர் — அபயர், ஏறுழவர், கலைவர், கவியர், கூளியர், சூரர், செருநர், தறுகண்ணாளர், படர், பொருநர், மள்ளர், மறவர், மானவர், வயவர், வாளுழவர், விருதர், வில்லேருழவர், வீரர்.

பட்டடை — அடைகல், அடைகுறடு.

பண்டாரம் — கோசம், தண்டம்.

பதக்கம் — ஆரம், கண்டிகை, மதாணி.

பதக்கு — துரோணம்.

பதர் — பதடி.

பதனழிவு — ஊழ்த்தல், கன்றுதல், சிதம்பு, சிதலம், சிதிலம், சிதை, சிரணம், செடி.

பதித்தல் — கசிதம், குயிற்றல்.

பதுங்கல் — ஒளிக்கல், ஒதுங்கல், பாந்தல்.

பதுமராகம் — சௌகந்திகம்.

பத்து — தசம், தசம்.

பந்தல் — காவணம், பந்தர், அதன்றியுந் தண்ணீர்ப்பந்தலின்பெயர், பிரபம், பிரபா.

பந்து — கந்துகம்.

பயங்கரம் — தாருணம், பைரவம், வீமம், வெருவந்தம்.

பயறு — முதிரை, முற்கம்.

பயனின்மை — அல்லமை, அவம், கொன், வறிது, விபலம், விருதா, வீண்.

பயிர் — கூழ், பசும்புல், பைங்கூழ், இதன் கதிரின்பெயர், ஏனல், குரல், இளங்கதிரின்பெயர், இளங்குரல், பீட்டை, பீள்.

பரணிநாள் — அடுப்பு, காடு, கிழவன், சோறு, தருமநாள், தாழி, தாழி, பகலவன், பாகு, பூதம், பொதியம், முக்கூட்டு.

பரண் — இதணம், சுழுது, படகம், பணவை.

பரத்தல் — அழுவம், ஊர்தல், தெருவிர்தல், பப்பு, பாப்பு, பாவை, பாய்தல், பாரித்தல், விரியல்.

பரவு — படர்ச்சி, படலை, பரப்பல்.

பரிசையின்பெயர் — கேடகத்தைக்காண்க.

பரிந்துகொண்டாடல் — குலாவல், பாராட்டல், மெச்சல்.

பரிவாரம் — பரியாளம்.

பருக்கைக்கல் — அரி, காழ், பரல்.

பருத்தி — கார்ப்பாசம், பரி, பன்னல்.

பருந்து — உவணம், கங்கம், சேனம், பாரசிகை, பாறு.

பருமை — காத்திரம், தடிப்பு, பணம், பணை, பருஉ, பீனம்.

பருவம் — ஆனியம், இருது, தறி.

பலகணி — குறுங்கண், சாலகம், சாலம், சாலேகம், சாளரம், நுழைவாயில், வாதாயனம்.

பலகறை — அலகு, சவடி, சோகி, பட்டி, வராடி, வெள்வரி.

பலபண்டம் — கூலம், பண்டாரம், பண்ணிகாரம், பரிகாரம், பாணி, வளம்.

பலபத்திரன் — எட்டாமவதாரத்தில்விட்டுணு, அச்சுதன்முன்வந்தோன், அலமுறுபடையான், அலாயுதன், அனந்தன், இரேவதிகொண்கன், உரோகணிதநயன், கருந்துகிலோன், காமபாலன், குண்டலன், நாஞ்சிற்படையோன், நீலாம்பரன், பலதேவன், பனைக்கொடியோன், பனைத்தாமன், முசலி, வெள்ளை.

பலமுறை — பரியாயம்.

பலம் — தொடி, அதின்காற்பலம், கஃசு.

பலவிதம் — நானாவிதம், விவிதம்.

பலாமரம் — பலவு, பலாசம், பனசம், பாகல், வருக்கை, அன்றியுமீரப்பலா, ஆசினி.

பல் — இரசனம், இரதனம், இருபிறப்பு, எயிறு, தசனம், தட்டம், தந்தம், நகை, முறுவல், மூரல்.

பல்லக்கு — அணிகம், சிவிகை, தசம், தண்டிகை, யானம், வையம், அன்றியுமிரத்தின பல்லக்கின்பெயர், கஞ்சிகை.

பல்லி — அண்டசம், கெவுளி, கோகிலம், புள்ளி, முசலி.

பவழமல்லிகை — சூதம், திராமரம், பாரிசாதம்.

பவழம் — அரத்தம், துகிர், துப்பு, தூவர், பிரவாளம், வித்துருமம்.

பழகல் — உழத்தல்.

பழஞ்சொல் — முதுசொல், முதுமை, முன்சொல், மூதுரை, மொழிமை.

பழமை — ஆதி, ஊழ், ஒல்லை, தொடர், தொண்டு, தொத்து, தொல்லை, தொன்மை, தொன்று, பண்டு, புராணம், புராதனம், பூருவம், மரபு, முதுமை, முந்தை, முறை, மூன், மூரி, வழி, விருத்தம்.

பழம் — கனி, பலம்.

பழிச்சொல் — அங்கதம், அபவாதம், அம்பல், அலர், இழிசொல், ஏசல், கவ்வை, சிறுசொல், நிச்சொல், தூறு, பரிவாதம், வித்தம், அன்றியுஞ்சிலரறிந்தபழிச்சொல்லின் பெயர், அம்பல், பலரறிந்தபழிச்சொல்லின்பெயர், அலர், பொய்ச்சொல்லின்பெயர், குஞ்சம், குண்டியம், குறளை, கொடுவாய், தொடுப்பு, பிசினம்.

பளிங்கு — ஆமலகம், காழ், படிகம், பருக்கை.

பள்ளம் — அதம், அவல், இழிவு, உவளகம், கிழக்கு, கீழ், குழி, கூவல், ஞெள்ளல், தாழ்வு, படுகர், பயம்பு.

பறவை — அண்டசம், ஆசுகம், ககம், குடிஞை, குருகு, சகுந்தம், சகுனம், சகுனி, பக்கி, பதகம், பதங்கம், பத்திரி, பிணிமுகம், புள், வயானம், விகங்கம், விகிரம்.

பறவைக்குரல் — கலகலம், பயிர்.

பறவைக்கூடு — கட்சி, குஞ்சறை, குடம்பை, குரம்பை, கூண்டு.

பறவைக்கூட்டம் — தொழுதி, அக்கூட்டத்தோசையின்பெயர், துழனி.

பறவைசிறகடித்தல் — ஓசனித்தல், புடைத்தல்.

பறவைப்பெண்பொது—பெடை, பெட்டை, பேடை, அன்றியுங்கோழியுங் கூகையுமல்லன பறவைப் பெண், அளகு.

பறவைமூக்கு —அலகு, சச்சு, சஞ்சு, சுவவு, துண்டம்.

பறவையாணில்_மயிலுமெழாலுமொழிந்தவற்றின் பெயர், சேவல், மயிலெழாலென்னுமிரண்டினுண்பெயர், போத்து.

பறவையிளமை—பார்ப்பு, பிள்ளை.

பறவையுணவிற்குமொருசார்விலங்கினுணவிற்கும்பெயர்—இரை, உண்டி, உறை, ஊட்டி.

பறவைவகுப்பு—அன்றில், அன்னம், ஆந்தை, உள்ளான், ஊர்க்குருவி, தூக்கணங்குருவி, எண்காற்புள், கருடன், கவுதாரி, கழுகு, காக்கை, அண்டங்காக்கை, நீர்க்காக்கை, காடை, கிளி, குயில், குருகு, கூகை, கேகயம், கொக்கு, கோழி, கானங்கோழி, சம்பங்கோழி, சக்கரவாகம், சாதகம், சிச்சிலி, சிவல், செம்போத்து, நாகணவாய்ப்புள், நாரை, கருநாரை, பெருநாரை, வெண்ணாரை, நிலாமுகி, பருந்து, புறு, கரும்புறு, மாடப்புறு, பொய்யாப்புள், மயில், மீன்கொத்தி, வானம்பாடி, இப்பெயர்கடத்தம் வரியிற் காண்க.

பறித்தல் — கடுதல், களைதல், குற்றல், பறூஉ, பிடுங்கல், புயத்தல்.

பற்றல்—கழுமல், தொடுத்தல்.

பற்றிரும்பு — அள்ளு, பறளிகை, பறளை, வலி.

பற்றுக்குறடு—தூவு.

பற்றுக்கோடு—தஞ்சம், தம்பம், பற்றுக்கோல்.

பனி—இமம், துகினம், நீகாரம், மஞ்சு.

பனை—ஏடகம், கரும்புறம், தாலம், தாளி, நீலம், புல், புற்பதி, புற்றளி, பெண்ணை, போந்து, போந்தை, இவற்றுளிளம்பனையின்பெயர், போந்தை.

பனையேடு—இதழ், ஓலை, கூந்தல், தோடு, மடல், மாழை.

பன்றி—அரி, இருளி, எறுழி, ஏனம், கருமா, களிறு, கனவி, கான்மா, கிடி, கிரி, கிருட்டி, குரோட்டம், கேழல், கோட்டுமா, கோணி, கோலம், சூகரம், பூதாரம், போத்திரி, போழ்முகம், மைமா, மோழல், வராகம், வல்லுளி, இதனுண், ஏறு, ஒருத்தல், களிறு, மா, இதன்பெண், பாட்டி, பிணு, பிணை, இதன்குட்டி, குருளை, பறழ், பிள்ளை.

பன்றுடை—நாரி, நெய்யரி.

பா

பா—கவி, கவிதை, செய்யுள், தமிழ், தூக்கு, தொடர்பு, பாட்டு, யாப்பு, அன்றியுந்தனிப்பாவாய் வருவது, முத்தகம், பலபாவாற் பொருண்முடியும் பாக்கள், குளகம், இருபத்தாறெழுத்தடி நான்குளபா, சந்தப்பாட்டு, அதின்மிகும்பா, தாண்டகம்.

பாகல்—காரவல்லி, கூரம், கூலம்.

பாக்கு—கோலம், துவர்க்காய், பாகு.

பாசி — சடைச்சி, செவிரம், சைவலம், நாரம், பதியம், பீனம்.

பாடகம்—பாதகடகம்.

பாடற்கிழ்மக்கள்—ஓவர், பண்டர்.

பாடுவாள் — இரட்டை, பாடன்மகடூ, பாடினி, பாட்டி, பாண்மகள், மதங்கி, விறலி.

பாடை—ஆசந்தி, வெள்ளில்.
பாட்டன் — தாதை, பிதாமகன், முன்ருதை, மூதாதை.
பாட்டுப்பாட்டின்பெயர்—இசைப்பாட்டைக்காண்க.
பாணர்—இன்னிசைக்காரர், கண்டியர், கலமர், சூதர், சென்னியர், நீலந்தர், பண்ணவர், பாணர் மதங்கர், மாகதர், வந்தித்துநிற்போர், வைரியர்.
பாண்டியன்—உசிதன், கவுரியன், குமரிச்சேர்ப்பன், கூடற்கோமான், கைதவன், செழியன், தமிழ்நாடன், தென்னவன், பஞ்சவன், பொதியவெற்பன், மாறன், மீனவன், வழுதி, வேம்பின்ருரோன், வைகைத்துறைவன்.
பாண்டியன்குதிரை—கனவட்டம், அவன்கொடி, ,சேற்கொடி, அவன்மாலே, வேப்பமாலே.
பாதக்குறடு—பாதுகம், பாவல், மிதியடி, இவற்றின்குமிளின்பெயர், கல்லே, குடை, கொட்டை.
பாதாளம்—பாதலம்.
பாதி — அருத்தம், கூறு, நேர், பங்கு, பயில், பாகம், பாத்து, பால்.
பாதிரிமரம்—பாடலம், புன்காலி.
பாதுகாத்தல்—ஓம்பல்,பரி, போற்றல்.
பாம்பாட்டி—கவுசிகன்.
பாம்பினச்சுப்பல்—தட்டம், அதன்காற்று, அதட்டம்.
பாம்பினஞ்சு—ஆலம், கடு, காளம்,காரி, காளம், விடம்.
பாம்பின்பட்டப்பொறி—உத்தி, துத்தி.
பாம்பின்படம்—பணம், பை.
பாம்பு — அகி, அங்கதம், அண்டசம்,அரவம், அரவு, அரி, அணுக்கம், இரும்பை, உரகம், ஊன்றி, கஞ்சுகி, கட்செவி, காகோதரம், காலிலி, குண்டலி, கூடபதம், சக்கிரி, சர்ப்பம், தந்தருகம், நாகம், பணம், பணி, பவனாசனம், பன்னகம்,பாந்தள், புயகம், புயங்கம், போகி, மாசுணம், விடதரம், வியாளம், அன்றியும் பறவைநாகத்தின்பெயர், குக்குடசர்ப்பம், பெரும்பாம்பின்பெயர், பாந்தள், மாசுணம்.
பாம்புப்படம்விரித்தல் — பைத்தல்,
பாயிரம்—அணிந்துரை, தந்துரை, நூன்முகம், பதிகம், புறவுரை, புனைந்துரை, பெய்துரை, முகவுரை.
பாய்—ஆரை, கொத்தளி, சாப்பை, இவைபுற்பாய், அன்றியும்பிரப்பம்பாயின்பெயர், சாதிப்பாய், தடுக்குப்பாயின்பெயர், தவிசு.
பாய்தல்—உகளல், குப்புறல், தாவல்,
பாரம்—அடை, அதிபாரம், கனம், காத்திரம், குரு, சிர், ஞாட்பு, பரம்,பொறை.
பார்ப்பாரிடையிற்கட்டு நாணற்கயிற்றின்பெயர்—மௌஞ்சி, பூணனூலின்பெயர், உபவீதம், பூணனூற்கலியாணத்தின்பெயர், உபநயனம்.
பார்ப்பார்—அந்தணர், அயன்முகத்துவந்தோர், அய்யர், அறுதொழிலாளர், ஆதிவருணர், ஆய்ந்தோர், இருபிறப்பாளர், உம்பர், உயர்ந்தோர், செந்தீவளர்ப்போர், தொழுகுலத்தோர், நூலோர், பூசுரர், மறைக்கொடியோர், மறையவர், முப்புரிநூலோர், மெய்யர், மேற்குலத்தோர், விப்பிரர், வேதபாரகர், வேதியர், வேள்வியாளர்.
பார்வதி—அந்தரி, அமலே, அம்பிகை, அம்மை, அயிராணி, அரனிடத்தவள், ஆரியை, இமயவல்லி, உமை, உமையவள், உருத்திரை, ஐயை, கௌரி, காமக்கோட்டி, சங்கரி, சத்தி, சாம்பவி, சிவை, தேவி, நாயகி, நாரி, பகவதி,

பருப்பதி, பனை, பவானி, மரகதவல்லி, மலைமடந்தை, மாதா, முக்கண்ணி.

பார்வை—காட்சி, தரிசனம், நோக்கம், அன்றியுங்கடைக்கண்பார்வையின்பெயர், அபாங்கம், சிறக்கணிப்பு.

பாலைநிலத்தலைவன்—காளை, மீளி, விடலை.

பாலைநிலத்திராகம்—பஞ்சுரம், வெஞ்சுரம்.

பாலைநிலத்தூர்—குறும்பு.

பாலைநிலப்பறை—துடி.

பாலைநிலமக்கள்—எயினர், புள்ளுவர், மறவர், இவர்பெண்களின்பெயர், எயிற்றியர், பேதையர், மறத்தியர்.

பாலைநிலம்—சுரம், செம்புலம், நீரிலாநிலம், படுநிலம், பொருபுவி, வன்பால்.

பாலைமரம்—சிவந்தி, சிவனி.

பால்—அமிழ்தம், அமிழ்து, கலசம், கீரம், சுதை, துத்தம், பயசு, பயம்.

பாவம்—அகம், ஏனம், கலுடம், செடி, தீவினை, துரிதம், பங்கம், பவம், பாதகம், பாபம், பிறந்தை, மறம்.

பாழ்நிலம்—கரம்பு.

பாறை—அறை, பதுக்கை, முரம்பு.

பாற்சொற்றிச்செடி—பாயசம்.

பாற்சோறு—பாயசம், பாளிதம்.

பானை—அகளம், குண்டம், குழிசி, தடா, மிடா, முகை.

பி

பிசாசம்—அலகை, அறிவழி, இதி, கடி, கணம், கழுது, கிருத்திமம், குணபாசி, குணுங்கு, கூளி, சவம், சாவு, சோகு, பாசம், பிணம், பிரேதம், பேய், பைசாசு, மண்ணை, மயல், மருள், வியந்தரம், வெறி, வேதாளம்.

பிசின்—கிலம், தொடர்.

பிச்சை—உபாதானம், ஐயம், சரியை படிகம், பைக்கம், பலி, பாகம், பிண்டம்.

பிச்சைவாங்கலின்பெயர்—இரத்தலைக்காண்க.

பிடரி—எருத்தம், கயில், சிறுபுறம், சுவல், செகில், தோண்மேல், நிமம், பிடர், பிடர்த்தலை.

பிடித்தல் — தொடல், தொட்டல், பற்றல்.

பிடுங்கலின்பெயர்-பறித்தலைக்காண்க.

பிட்டு—ஆவி, வெந்தை.

பிணக்கு—அபரம், அரில், துவக்கு, பின்னம், மறம், மறல்.

பிணம்—அழன், களேபரம், குணபம் சவம், பிரேதம்.

பிண்ணாக்கு—கூட்டம், துவை, பிண்டி, மலாவகம், வறையல்.

பித்தளை—ஆரகூடம், ஆரகூலம், ஆரம், ஆருபதம், இரதி, இரீதி, மாயாபுரி.

பிரண்டை—கிருட்டி, வச்சிரவல்லி.

பிரப்பு— கொள்கலமொன்றிற்குருணியாகப் பல்லுணவுபெய்வது.

பிரமன்—அந்தணன், அயன், அன்னவூர்தி, இரணியகருப்பன், இறை, எண்கணன், ஓதிமமுயர்த்தோன், கமலயோனி, கம், குரவன், சதானந்தன், சயம்பு, ஞானி, தமனியன், தாதா, திசைமுகன், நான்முகன், பகவன், பங்கயன், பரமேட்டி, பாரதிகொழுநன், பிதாமகன், போதன், மண்பொருத்தந்தை, மலரோன், மாலுந்திவந்தோன், மான்மகன், வரன், வாணிகேள்வன், வானோர்முதுவன், விதாதா, விதி, விரிஞ்சன், வேதா, பிரமனு

புதம், பாசம், கொடி, மறை, வாகனம், அன்னம், பிரமனுள், கற்பம்.

பிரம்பு—சாதி, சூரல், வேத்திரம்.

பிராயமரம்—பசுநா, புக்கி, விட்டில்.

பிரிதல்—அகலல், உணர்வு, தணத்தல், நீங்கல், நீத்தல், நீப்பு, பகல், வல்லி, வியோகம்.

பிளத்தல் — ஈர்த்தல், கீழ்தல், பகல், போழ்தல், வகிர்தல்.

பிறப்பு — அயனம், அனிலம், உருகம், உற்பத்தி, உற்பவம், சக்கரம், சம்பவம், சம்பூதம், சனனம், சனிப்பு, சன்மம், சாதம், சூதகம், தோற்றம், தோற்றல், பவம், பிறந்தவம், பிறந்தை, பூ, அன்றியும், இப்பிறப்பின்பெயர், இகம், இப்பவம், இம்மை, வருபிறப்பின்பெயர், அம்மை, மறுமை, முற்பிறப்பின்பெயர், உம்மை, ஒருபிறப்பின்பெயர், ஒருபவம், எப்பிறப்பின்பெயர், எம்மை, எழுபிறப்பின்பெயர், எழுமை, எழுபவம்.

பின்புறம்—பிறகு, பிறக்கு.

பின்றல்—பிறகிடல், பிற்றல்.

பின்னைநாள்—பிற்றை, பின்றை, வழிநாள்.

பீ

பீசம்—அண்டம்.

பீடம்—ஆசனம், பீடிகை, வட்டம்.

பீர்க்கு—கோலம், பீரம், பீர், அன்றியும்பெரும்பீர்க்கு, படலிகை.

பீலிக்குஞ்சம் — குளிரி, சமாலம், தழை, தொங்கல், பிச்சம்.

பு

புகழாளன்—இயபுளன்.

புகழ்—இசை, ஊற்றம், ஏற்றம், ஒளி, கியாதம், சீர், சுலோகம், சொல், சொன்மாலை, தோற்றம், மீக்கூற்று, மேம்பாடு, யசசு, வண்மை, அன்றியுமிகுபுகழின்பெயர், கீர்த்தி, சீர்த்தி.

புகழ்வோர் —சூதர், பப்புவர், பூகதர், மாகதர், வந்தியர், வேதாளியர்.

புகை—அரி, ஆவி, தூபம், தூமம், அன்றியுநறும்புகையின்பெயர், இந்தனம், குய், நறை, வெடி.

புசித்தல்—அமிழ்துசெய்தல், அயிறல், அயின்றல், அருந்தல், ஆர்தல், உண்டல், கறித்தல், கைதொடல், சுவைத்தல், தின்றல், துத்தல், துய்த்தல், துவ்வல், துறுவல், நுகர்தல், பக்கித்தல், பருகுதல், பாரணம், போசனம், மாந்தல், மிசைதல், மேய்தல், இவற்றுட்பானமுந்துவையும், பருகுதல், துத்தி, உண்டல், தித்தி, தின்றல், சோறுணல், அயிறல், கைதொடல், நுங்கல், பாரணம், மிசைதல், விழுங்கல்.

புடைப்பு—குமிழ்ப்பு, புளகம்.

புணர்ச்சி—அணவுதல், ஆடல், இரதம், கலத்தல், கலவி, கிரீடை, கூடல், சங்கமம், சங்கிரதம், சம்போகம், சப்யோகம், சுரதம், பிணைவு, புல்லல், மிதுனம், மைதுனம், யோகம், விழைவு.

புணர்ச்சிக்கமையாததுபோலச்சினந்துமுறைப்படல் — புலத்தல், புலவி.

புண்—விரணம்.

புதன் — அநூரு, அருணன், அனுவழி, கணக்கன், சவுமன், சாமன், சிந்தை, சூரியன், சௌமியன், தூதுவன், தேர்ப்பாகன், நற்கோள், நிபுணன், பச்சை, பண்டிதன், பாகன், புந்தி, புலவன், மதிமகன், மாலவன், மால், மேதை.

புதியோர்—அதிதியர், வம்பலர், விருந்தினர்.

புதுமை — அபிநவம், கடி, கோடகம், கோடி, நவம், நவீனம், நூதனம், புணர், புதை, புத்தேள், புனிறு, யாணர், வம்பு, விருந்து.

புதைத்தல் — கனனம், கனிதல், கூடம், சேமித்தல்.

புதையல்—ஏமம், சேமம், நிடசேபம்.

புத்தன் — அகளங்கன், அண்ணல், அருங்கலை நாயகன், அருணெறிகாக்குஞ்செல்வன், அறவன், அனந்தலோசனன், ஆதி, உலகசயன், எண்ணில்கண்ணுடையோன், ஏகதேவன், சைனன், சாக்கியன், சாந்தன், சினவரன், தருமராசன், பகவன், பார்மிசையோன், பிடகன், புங்கவன், புண்ணியமுதல்வன், புண்ணியமூர்த்தி, புனிதன், பூமிசை நடந்தோன், போதிவேந்தன், மாயாதேவிசுதன், மாரசயன், முக்குற்றங்கடிந்தோன், முத்தன், முனி, முனிந்தசினனன், முனீந்திரன், முனைவன், மூர்த்தி, வாமன், விநாயகன்.

புனர்பூசநாள் — அதிதிநாள், ஆவணம், எரி, கரும்பு, கழை, பாலை, பிண்டி, புணர்தம்.

புரட்டாசிமாதம்—பாத்திரபதம், பாத்திரம்.

புருவம்—நுதல், பிருகுடி, பீரு, புகுடி, புதல், புரு, புரூரம், பூரு.

புலவர்—அவை, அறிஞர், ஆன்றோர், கலைஞர், கவிகள், கவிஞர், கற்றோர், சங்கம், சவை, சீரியர், சூரி, நாவலர், பண்டிகர், பருணிதர், பாவலர், புதர், புந்தியர், புலமையர், முதுவர், மூத்தோர், மேதையர், மேலோர், விசாரதர், விற்பன்னர்.

புலால்—ஊழ்த்தல், தசை, பூழ்தி, முடை, வள்ளூரம்.

புலி—உழுவை, ஊகம், குயவரி, குளியம், கொடுவரி, சார்த்தூலம், சித்திரகாயம், தரக்கு, பாய்மா, புண்டரீகம், புல், மிருகாதி, வயமா, வயவரி, வரி, வல்லியம், வியாக்கிரம், வியாளம், வெல்லுமா, வேங்கை, இதனாண், அறாகு, ஒருத்தல், போத்து, இதன்பிள்ளை, குட்டி, குருளை, போதகம்.

புலையர்—கவுண்டர், கனகதர்.

புல்—புதல், அன்றியும்புற்பிடி, காசை, அன்றியும் பசும்புற்றரையின் பெயர், அரிதம், சாட்டுவலம்.

புல்வாய்—இரலை, இதனாண், ஏறு, ஒருத்தல், போத்து, இதன்பெண், பிணை, பிணா.

புழு—கிருமி, கீடம், பொட்டு.

புழுதி—அதர், சுண்ணம், தூகள், தூளி, நுண்பொடி, பூழி, பூழ்தி, பொடி.

புழுதியாக்கல்—பொடித்தல்.

புளிப்பு—ஆமிலம், ஆம்பிரம்.

புளியமரம்—ஆம்பிலம், எகினம், எகின், சஞ்சீவகரணி, சிந்தகம், சிந்தம், சிந்தூரம், சிந்தூரம், திந்திருணி.

புள்ளி—இடாகு, பொறி.

புறம்—புடம், புறணி.

புறா—இரதபதம், கபோதம், களரவம், தூதுணம், அன்றியுங் கரும்புறாவின் பெயர், கபோதம், பாராவதம், மாடப்புறாவின்பெயர், காளபதம்.

புற்றாஞ்சோறு—குரும்பி.

புற்று—நாகு, வன்மீகம், வாமலூரு.

புன்கு—காஞ்சனம், நத்தமாலம்.

புன்னைமரம்—நாகம், புன்னாகம்.

பூ

பூ—அலரி, அலர், ஆலம், இணர், குசும ம், சுமம், சுமனசம், தாமம், தார், து ணர், புட்பம், போது, மலர், வீ.

பூங்கொத்து — இணர், குலை, துணர், தொடர்ச்சி, தொத்து, மஞ்சரி, வல்லரி.

பூசநாள்—காற்குளம், குருநாள், கொ டிறு, தை, வண்டு.

பூசுதல்—புலர்த்தல், வரித்தல், விரித் தல்.

பூசும்பரிமளம்—அங்கராகம்.

பூட்டு—வீகம்.

பூணூல்—உபவீதம்.

பூணூற்கலியாணம் — உபநயனம்.

பூண்டு—புதல், பூடு.

பூதம்—கணம், கிருத்திமம், குறள், கூ ளி, சாதகம், சாதம், பாரிடம்.

பூந்தட்டு—கோடிகம், பீடிகை.

பூந்தாது — இணர், கிளர், கேசரம், கொங்கு, சிதர், துணர், மகரந்தம், ம கரம்.

பூந்தாள்—காம்பு, கால்.

பூந்தேன்—மகரந்தம்.

பூமி—அகலிடம், அகிலம், அசலம், அச லை, அநந்தை, அவனி, அளக்கர், உக ம், உதகம், காசினி, கிடக்கை, கு, குத தி, குவலயம், கூ, கோ, கோத்திரம், கோத்திரை, சகம், சக்கரம், ஞாலம், தகர், தரணி, தராதலம், தரித்திரி, த ரை, தலம், தாத்திரி, தாபரம், தார ணி, தாலம், தாலவட்டம், திணை, நா டு, நிலம், நிலை, நேமி, படி, பவனம், பாரகம், பாரம், பாரி, பார், பார்த்தி வம், பாலம், பிருதிவி, புடவி, புவன ம் புவனி புவி, பூ, பூதலம், பூதியம், பூவலயம், பொழில், பொறை, மகி, மண், மண்டலம், மண்டலி, மண்ணி லம், மாதிரம், மேதினி, யுகம், வசு தை, வசுந்தரை, வசுமதி, விபுலம், வி புலை, வேலாவலயம், வையகம், வை யம்.

பூமிதேவி—காசினி, பூமகள், பூமின், அன்றியும் பூமிப்பெயரெல்லாங்கொ ள்ளும்.

பூரட்டாதிநாள் — நாழி, பூரட்டாதி, முற்கொழுங்கோல்.

பூரநாள்—இடையெழுஞ்சனி, எலி, க ணை, நாவிதன், பகவதிநாள்.

பூராடநாள்—உடைகுளம், நீர்நாள், மு ற்குளம்.

பூவரும்பு—கலுவடம், கன்னிகை, சா யகம், சாலகம், சாலேகம், சினை, ந கை, நனை, போகில், அன்றியுமிளவ ரும்பின்பெயர், கலிகை, களிகை, கோ ரகம், கோரகை, மொட்டு, மலரும்ப ருவத்தரும்பின்பெயர், போது, முகி ழம், முகிழ், முகை, மொக்குள், பூவ ரும்பவின்பெயர், சினைத்தல், முகைத் தல்.

பூவாடல்—சாம்பல், செம்மல், தேம்ப ல், பழம்பூ.

பூவிதழ்—அதழ், ஏடகம், ஏடு, தண்டு, தளம், தோடு, மடல், அன்றியுமகவி தழின்பெயர், அல்லி, புறவிதழின் பெயர், புல்லி.

பூனை—அலவன், ஆகு, புகு, இந்தி, இற் புலி, ஓதி, பவனம், பாக்கன், பில்லி, பூசை, பூஞை, மண்டலி, மார்ச்சால ம், விடருகம், விலாளம், வெருகு, இ தனுண், கடுவன், போத்து, இகன்டி ள்ளை, குட்டி, பறழ், பிள்ளை.

பெ

பெட்டி—பேழை, மஞ்சிகம்,மஞ்சிகை.

பெண்குறி—இராசியம், குய்யம், சின்னம், பகம், யோனி.

பெண்மகள்—அங்கனை, அணங்கு, அரிவை, ஆடவள், அட்டி, இளம்பிடி, இளையாள், காந்தை,காரிகை, கோதை, சிறுமி, சுந்தரி, சுரிகுழல், தெரிவை, தையல், நல்லாள், நாரி, நுண்ணிடை, பாவை, பிணா, பூவை, பெண்டு, பெதும்பை, பேதை, மகடூ, மகள், மங்கை, மடந்தை, மடவரல், மடவோள், மாது, மாயோள், மானினி, மின், வஞ்சனி, வஞ்சி, வனிதை, அன்றியும் பெண்ணிற்சிறந்தவள்பெயர், நங்கை, பதினறுவயது ப்பெண்ணின்பெயர், மதங்கி, யுவதி, விறலி.

பெயர்—அபிதானம், ஆக்குவயம், நாமதேயம், நாமம்.

பெயர்தல்—பிறழ்தல், பேர்தல்.

பெருகுதல்—ஆர்தல், கழுவல், கெழுமல், ததும்பல், துவன்றல், தெகுளல், தெவுளல், நிரம்பல், நிறைதல், பிறங்குதல், பூரணம், பெருக்கம், மலிதல், மல்கல்.

பெருங்காயம்—இங்கு,இந்துளி,காயம்.

பெருங்குருகு—யானையுண்குருகு.

பெருங்குறடு—முருடு.

பெருச்சாளி—ஆகு,உந்துரு,கந்துளம், களகம், மூடிகம்.

பெருஞ்சவளம்—குந்தம், தோமரம், பீலி.

பெருமை—அகலுள், அணி, அண்ணல், அமுதம், அழுவம், இயக்கம், இருமை, இறை, ஈடு, ஏந்தல், கதழ்வு, கயம், கயவு, கருமை, கலந்தை, குவவு, கொன், சக்கரம், செம்மல், செம்மை, சேடு, தகை, தகைமை, தஞ்சம், தடம், தடவு, தலை, நடி, நளி, நனி, நன்று, நூங்கு, நெய்தை, பகடு, பணை, பரி, பாடு, பாழி, பிறங்கல், பீடு, பேழ், பொழில், மன், மா, மாட்சி, மாட்சிமை, மால், மானம், மிறல், மீளி, முடலை, மூரி, மோடு, வந்தை, வான்,விபுலம், விபூதி, வியத்நிகை, வியல், வியன்,விறல், வீறு.

பெருமையிற்சிறந்தோர்—அண்ணல், ஏந்தல், குரிசில்,செம்மல், தகுதியோர், தக்கார், தோன்றல்.

பே

பேடு—அலி, கிலீபம், சண்டம், சிகண்டி, நபுஞ்சகம், பெண்டகர், பேடி.

பேரீந்து—கர்ச்சூரம், குரவம்.

பேரொலி—அதிர்ச்சி, அரவம், ஆகுலம், ஆரம்பம், ஆரவாரம், ஆர்ப்பு, உரற்றல், உளறுதல், கட்டோசை, கலகம், களகளம், கறங்கம், குமிலம், குமுதம், குமுறல், கோசனை, கோடணை, கோலாகலம், தமரம், தமரல், தழங்குரல், திமிலம், துல்லம், துவைத்தல், தெழித்தல், பூசல்.

பேறு—கம்மியம், பிராப்பியம்.

பொதியமலை—தென்மலை, மலயம்.

பொய்—அங்கதம், அசங்கதம், அநித்தியம், அநுத்தம், அவத்தம், இச்சை, இழுக்கு, இழுதை, கள்ளம், கிருத்திமம், கூடம், கைதவம், கோள், சடம், சலம், சாதனை, சித்திரம், தந்திகாரம், தப்பு, நடலை, படிறு, பழுது, பிசி, பெட்டு, பொக்கம், மடி, மாயம், மாயை, வக்கிரம், வஞ்சம், வலக்காரம், வழுது, விகிர்தம்.

பொய்சொல்லுதல்—பொய்த்தல்.

பொய்சொல்லுவோன் — பிசுனன், பொய்யன்.

பொய்யாப்புள்—சலாங்கு.

பொருதலிற்பகைநாட்டழித்தல்,-கொற்றவள்ளை, சாய்ந்தார்மேற் படைவிடாமையின்பெயர், தழிஞ்சி.

பொருதல்—அடல், அமர்த்தல், ஆடல், ஆர்த்தல், இகலல், உடலல், உடன்றல், எக்கல், சிவணல், சினவுதல், நிகர்த்தல், நேர்தல், பாறல், பூசல், மலைதல், அன்றியும் போரின் பெயரைக் காண்க.

பொருநையர்று — பொருந்தம்.

பொருந்தல் — அஞ்சிதம், அந்தித்தல், அமைதல், இயலல், இயைபு, ஏலுதல், ஒத்தல், ஒல்லல், ஒன்றல், கூடல், சிவணல், வாய்த்தல்.

பொலியெருதின்பெயர்—இடபத்தைக்காண்க.

பொலிவு — அதிகம், உவப்பு, களுறல், கலித்தல், துப்பு, துவன்றல், தொறு, பம்பல், பூ,பெருமை, பொக்கம்,பொம்மல், பொறி, பொற்பு, மங்கலம், மலர்ச்சி, பொலிவழிதலின்பெயர், புல்லெனல், மழுங்கல்.

பொல்லாங்கிலம்—அசும்பு, சகதி.

பொழுது — அமையம், ஆனியம், எல்வை, கடி, காலை, கால், கொன், செவ்வி, நிலை, பதம், பருவம், பாணி, போழ்து, வேலை, காலத்தின்பெயர், பருவம், யாண்டு, இவற்றுளிறந்தகாலத்தின்பெயர், பூதம், நிகழ்காலத்தின்பெயர், வர்த்தமானம், வேலை, எதிர்காலத்தின்பெயர், பவிடியம்.

பொழுதுநீட்டித்தல்—நெடித்தல், பாணித்தல்.

பொழுதுபோக்கல்—உலாவல், குலாவல், விநோதம்.

பொருமை — அழுக்காறு, ஔவியம், கூரம், நோலாமை, நோனாமை, வக்கிரம்.

பொறுத்தல்—ஆற்றல், ஓர்ப்பு, கமித்தல், கமை, சகித்தல், சமித்தல், சாந்தம், தகுதி, நோற்பு, நோன்மை, நோன்றல், பொறை.

பொற்காசு—காணம்.

பொன் — அரி, அருச்சுனம், அருத்தம், அனந்தம், ஆக்கம், ஆசை, ஆடகம், இரணியம், ஈகை, ஈழம், உடல், உரை, ஏகாகாரம், ஏமம், கணையம், கல்யாணம், கற்பூரம், கனகம், கனம், காங்கேயன், காஞ்சனம், காணம், காரம், கூழ், கைத்து, சந்திரம், சாதரூபம், சாமீகரம், சாம்பூநதம், சுவணம், சுவாமி, செங்கொல், செந்தாது, செம்பொன், சொன்னம், தசும்பு, தமனியம், தனம், திரவியம், தேசிகம், தேசு, தொடுக்கம், நிசி, நிதானம், நிதி, பண்டம், பிங்கலம், பீதகம், பீதம், பூரி, பொருள், பொலம், மாசை, மாடு, மாடை, மாழை, வசு, வித்தம், வெறுக்கை, வேங்கை, அன்றியுந்தாமரையுருவாய்க் கிடக்கும்பொன், பதுமநிதி, சங்குருவாய்க்கிடக்கும்பொன், சங்கநிதி.

பொன்மலை — ஏமகூடம், பரிசன்னியம், பூதரம், மணிமலை, மகாமேரு.

பொன்மைநிறம்—அரிதம், அரித்திராபம், பசப்பு, பாலரசம், பிங்கலம், பீதகம், பீதம், பொலன், அன்றியுங்கறுப்புக்கலந்தபொன்மை, கடாரம், கபிலம், சிவப்புக்கலந்தபொன்மை, பிங்கம், பிசங்கம்.

பொன்னுங்காணி—சீதை.

போ

போதலின்பெயர்- நடத்தலைக்காண்க.

போர்—அமர், ஆகவம், ஆயோதனம், ஆர்ப்பு, இகல்,இரணம், உறழ்வு, கணையம், கதனம், கலகம், கலி, காளையங்கம், குறும்பு, கூட்டம், சங்கரம், சங்கிராமம், சமரம், சமர், சமிதி, சமீரம், செரு, ஞாட்பு, தாக்கு, திறல், தும்பை, தெவ், நிகம், நிகர்ப்பு, பண்டனம், மலைப்பு, மலைவு, மறல், முயல், முரண், மொய், யுத்தம், விதர்ப்பு, விறப்பு, வினை.

போர்க்களம்—அடுகளம், அரங்கம், ஆகவபூமி, களம், களரி, செங்களம்,செம்புலம், செருக்களம், பகையகம், படுகளம், பறந்தலை, பொருகளம்,மொய், விளாகம்.

போர்க்காயத்தமானேன் — சன்னத்தன்.

போர்—சும்மை, போர்ப்பு, இது நெல்லுமுதலியவற்றிற்குரித்து.

பௌ

பௌத்தர்—சாக்கியர், தேரர், புத்தர், அத்தவத்தோர், சீவகர்.

பௌரணை—அனுமதி, இடை, உவா, பௌவம்.

ம

மகநாள்—ஆதிச்சனி, எழுவாயெழுஞ்சனி, கொடுநுகம், பிதிர்நாள், மாசி, வாய்க்கால், வேட்டுவன், வேள்வி.

மகரமீன்—கலை, சுறு, மான், மீனேறு, மீன்.

மகரராசி—கலை, சுறு, தை, மான்.

மகரவாழை—மருகு.

மகளிர்கூட்டம்—ஆயம், ஓரை, குழு, பண்ணை.

மகள்—எச்சம், ஐயை, காதலி, சிறுமி, சிறுவி, சுதை, தனையை, பந்தனை, புதல்வி, புத்திரி.

மகன்—எச்சம், காதலன், காதல்,கால், குட்டன், குமரன், குமாரன், சந்ததி, சிறுவன் சுதன், சூனு, செம்மல்,சேய்,தனுசன், தனையன், தோற்றம்,தோன்றல், நந்தனன், டட்டி, புதல்வன், புத்திரன், பொருள், மக, மதலை, மருமான், முளை, மெய்யன், மைந்தன், வழி, வழித்தோன்றல், இவர்பன்மை, சிறார், பாலர், மகர், மகார்.

மகிழமரம்—இலஞ்சி, கேசரம், வகுளம், இதன்விதை, அலகு,

மகிழ்ச்சியின்பெயர்— களிப்பைக்காண்க.

மக்கட்பரப்பு— பைஞ்ஞீலம், மன்பதை.

மக்கட்பொதுப்பெயர் — மனிதனைக்காண்க.

மங்கலப்பாடகர்—எட்டர், கடிகைமாக்கள், கவிகற்றோர்,வண்டர்,வந்தியர்.

மஞ்சள்—அரிசனம், கசற்பம், காஞ்சனி, நிசி, பீதம்.

மஞ்சாடிமரம்—திலகம், திலம்.

மடங்கல்—முடக்கம், முடங்கல்.

மடித்தல்—உட்கல், ஊழ்த்தல்.

மடை—தூம்பு, மடையடைக்குங் கதவின்பெயர், ஓ.

மடைப்பள்ளி — அடுக்களை, அட்டில், பாகசாலை.

மடையர்—கூவியர், வாலுவர்.

மட்கலஞ்சுடுஞ்சூளை—சுள்ளை,நூமம்,

மட்கலத்தின்பொது—கலம், பாசனம், பாண்டம்.

மட்கலம்வனையுங்கூட்டம் — குயிலாயம், பஞ்சரம்.

மணல்—சைகதம், அன்றியும் வெண்மணல், வாலுகம், நுண்மணலின்பெயர், அதர், அயிர், கருமணலின்பெயர், அலே, அறல்.

மணற்றிட்டை—புளினம்.

மணிக்கட்டு—கிலுத்தம்.

மணிப்பொது — இரத்தினம், காசு, மனவு, அன்றியுமகன்மணி, அரதனம், சலாகை, மாடு.

மணியுளோசைமணி—கண்டம், கண்டை.

மணியைப்பதிக்குங்குழி - கேவணம்.

மணிவடம்—ஆரம், காழ், சரம், தாமம்.

மண்டலிப்பாம்பு—கோளகம்.

மண்வெட்டி — அவதாரணம், கனித்திரம்.

மதித்தல்—கணித்தல், கருதல், குணித்தல், குறித்தல், பார்வை, பேணல், மேதகம், வரையறுத்தல்.

மதிலுண்மேடை—அகப்பா, ஓதை, கற்பு, பதணம், பரிகம், பரிகை.

மதிலுறுப்பு—எந்திரம், கோசம், ஞாஞ்சில், ஞாயில், தோணி, நாஞ்சில், பதப்பாடு, விதப்பு.

மதில்—அகப்பா, அரணம், அரணி, அரண், ஆரல், ஆரை, இஞ்சி, உவளகம், எயில், ஓதை, கடகம்,கற்பு, காப்பு, காவல், சாலம், சிறை, சுற்று, நாயில், நொச்சி, பதணம், பிராகாரம், புரிசை, புறம்,வரைப்பு, வாரி, வேண்கை, வேதி, வேலி.

மதுரைநகரம்—கூடல்.

மத்தளம்—தடாரி, தண்ணுமை, பதலே.

மத்தியானம்—இராசி, உச்சி, உருமம், நடுப்பகல், நண்பகல்.

மத்து — கவம், மத்தம், மூழி, மூழை, அன்றியுந் தயிர்கடைமத்தின் பெயர், வெளில்.

மந்தம் — ஆலசியம், சோம்பு, தாழ்த்தல், இதன்குறிப்பு, ஒய்யெனல், பையெனல், மெல்லெனல்.

மந்தரமலே—கவக்குன்று, பம்பரம், மத்துமலே, விட்டுணு மத்தாகக் கடைந்தமலே.

மந்திரம்—மறை.

மந்திரியர் — அமாத்தியர், அமைச்சர், இனம், உழையர், எண்ணர், ஏறுதியர், குரவர், சூழ்வோர், சொல்லேருழவர், துணைவர், தேர்ச்சித்துணைவர், நீதியறிந்தோர், நுண்ணியர், நூல்வல்லோர், முதுவர், முன்னோர், மூத்தோர், விதியர்.

மயக்கம் — அயர்வு, அனந்தர், இருள், இளமை, உணராமை, உன்மத்தம், ஏமம், கழுமல், களவு, களன், களி, பித்தம், பிரமை, பிராந்தி, பேது, மத்தம், மயர்வு, மயல், மருள், மலேவு, மறலி, மறல், மால், மாழாத்தல், மாழ்கல், மான்றல், மைந்து, மையல், மோகம், விப்பிரமம் வெருள்.

மயக்கறவருத்தந்தீர்தல்— அயர்வுயிர்த்தல்.

மயிர்க்குழற்சி—அளகம், குந்தளம், குழற்கொத்து, விலோதம்.

மயிர்ச்சாந்து — ஏலம், காசறை, கோடரம், தகரம்.

மயிர்ச்சுருள்—பனிச்சை.

மயிர்ச்செறிவு—சிரோந்தம்.

மயிர்ப்பொது—கதுப்பு, குந்தளம்,கேசம், கோலி, சிகுரம், சிரோருகம், அன்றியுமாண்மயிரின் பெயர், உளே, ஓரி, குஞ்சி, குடுமி, சிகை, தளே, தொங்

கல், நவிர், பங்கி, பிச்சம், பித்தை, பெண்மயிரின்பெயர், அளகம், ஐம்பால், ஓதி, குந்தளம், குரல், குருள், குழல், கூந்தல், கூரல், கூழை, கோதை, சுரியல், சுருள், நெடுமை, பரிகாரம், மராட்டம், விலோதனம், புறமயிரின்பெயர், உரோமம், மராட்டம்.

மயிர்முடி—உச்சி, கொண்டை, கொப்பு, சிகழிகை, தம்மிலம், பந்தம், பின்னகம், முச்சி.

மயிர்முழுதுடலுடையோன் — கேசவன், கேசி, கேசிகன்.

மயில்—ஓகரம், கேகயம், கேதாரம், சிகண்டி, சிகாவளம், சிகி, ஞமலி, தோகை, நவிரம், பிணிமுகம், பீலி, மஞ்ஞை, மயூரம், இதணுண், கலாபம், கலாபி, போத்து.

மயிற்குரல்—அகவல், ஆலல், ஏங்கல்.

மயிற்சிறகு—தூவி, இவற்றின் முள்ளு, முருந்து.

மயிற்றோகை—கலாபம், கூந்தல், கூழை, சரணம், சிகண்டம், தழை, தூவி, தொங்கல், பீலி, இவற்றின் கண்ணின்பெயர், கண், சந்திரகம், மேசகம்.

மரகதம்—அரி, பச்சை.

மரக்கலப்பாய் — இதை, பாய்மரத்தின்பெயர், கூம்பு.

மரக்கலமோட்டுங்கோல்—உடு.

மரக்கலம்—அம்பி, ஓங்கல், கலம், சதா, சோங்கு, திமில், தொள்ளை, தோணி, நவ்வு, நாவாய், பஃறி, பாதை, பாரதி, பாறு, புணை, போதம், மதலை, யானம், வங்கம், அன்றியுமோடத்தின் பெயர், அம்பி, பகடு, பஃறி, தோணியின்பெயர், திமில், நவ்வி, பொறி.

மரக்கன்று — குழவி, பிள்ளை, போதகம், போத்து.

மரக்கால் — அம்பணம், கச்சம், கடன், கால், குளகம், தூம்பு, வள்ளம்.

மரக்கொம்பு — இபம், உலவை, உறுப்பு, கம்பு, கவடு, கவலை, குவடு, கொம்பர், கோடரம், கோடு, கோல், சாகை, சினை, தாரு, பணை, பொங்கர், விடபம், அன்றியுமிளங்கொம்பின் பெயர், மெல்லியல், வளார், கவர்க்கொம்பின்பெயர், கப்பு, கவை, இவற்றின் கணுவின்பெயர், கண், பவ்வம்.

மரத்தின்வகுப்பு—அகத்தி, அசோகு, அத்தி, அரசு, அனிச்சை, ஆச்சா, ஆத்தி, ஆல், இத்தி, இலந்தை, இலவம், இலுப்பை, ஈந்து, உசில், எட்டி, எலுமிச்சை, ஓமை, கடம்பு, கடவு, கடு, கமுகு, கருக்குவாளி, கருங்காலி, கள்ளி, காயா, குங்குமம், குருந்து, கூந்தற்பனை, கொன்றை, கோங்கு, சந்தனம், சிவந்தி, செண்பகம், செருந்தி, தணக்கு, தெங்கு, தேக்கு, நறுவிலி, நாரத்தை, நாவல், நெல்லி, நொச்சி, பச்சிலை, பலா, பனை, பாதிரி, பாலை, பிராய், புளி, புனமுருக்கு, புனமுருங்கை, புன்னை, பூவரசு, மகிழ், மஞ்சாடி, மருதம், மலைப்பச்சை, மலைமல்லிகை, மாதளை, மா, முருக்கு, முருங்கை, மூங்கில், வன்னி, வாகை, வில்வம், விளா, வெட்பாலை, வேங்கை, வேம்பு, வேல், இவைவதத்தம்வரியிற்காண்க.

மரத்தோல்—சிரா, வற்கலை.

மரப்பொந்து — உலவை, கோடரம், செறிவு, பொதும்பர், பொய், பொள்ளல்.

மரம்—அகமம், அகலியம், அநோக்கம், குசம், கோடரம், சாதி, சாலம், தரு, தாபரம், தாரு, துருமம், பலாசி, பாதபம், பூருகம், விடபி, விருக்கம்,

அன்றியுமுள்ளமரத்தின்பெயர், நாகு, காய்த்தமரத்தின் பெயர், பலி,பலினம், காயாதமரத்தின்பெயர், அவகேசி, பூவாதுகாய்க்குமரத்தின்பெயர்,கோளி, வானபத்தி, வானப்பிரத்தி, பூத்துக்காய்க்கு மரத்தின்பெயர், வானபத்தியம், ஒருகாற்காய்த்துப்படுமரத்தின்பெயர், ஓடதி, அகவயிரமுள்ளமரத்தின்பெயர், ஆண்மரம், புறவயிரமுள்ளமரத்தின் பெயர், பெண்மரம், வயிரமில்லா மரத்தின்பெயர், அலி, வெளிறு, உலர்ந்த மரத்தின் பெயர், வானம்.

மரல்—அரலை.

மரவட்டை—சதாபதி.

மரவயிரம்—அரி, ஆசினி, கரி,கலை, காழ்,காழ்ப்பு, சம்பம், சாரம், சேகு, இவற்றுள்,உள்வயிரம், அகக்காழ்,அகங்காழ், புறவயிரம், புறக்காழ், புறங்காழ்.

மருக்கொழுந்து — தமனகம், தவனகம்.

மருதநிலத்தலைவன் — ஊரன், கிழவன், மகிழ்நன்.

மருதநிலத்திராகம்—மருதம்.

மருதநிலத்தூர் — அகரம், உறையுள், கிராமம், குடம், கோட்டம், சரணம், தண்ணடை, தாவளம், நகரம், நகர், நிகேதனம், நியமம், நிலயம், படப்பை, பள்ளி, பாழி, புரம், புரி, வசதி, வாழ்க்கை, வேசனம்.

மருதநிலப்பறை—கிணை, பணை.

மருதநிலப்பெண்கள்—ஆற்றுக்காலாட்டியர், உழத்தியர், கடைச்சியர்.

மருதநிலமாக்கள்—உழவர், கடைஞர், கம்பளர், களமர், கிளைஞர், தொழுவர், மள்ளர், வினைஞர்.

மருதநிலம் — அகணி, கணி, கம்பலை, கழனி, களன், படுகர், பணை, பண்ணை, பழனம், பானல், மூத்தம், மென்பால், வயல்.

மருதமரம்—அருச்சுனம், பூதவம், மீழகுவம்.

மருதோன்றிமரம் — குறிஞ்சி, கோரண்டம், இவற்றுள் வாடாப்பூவுளது, மகாசகை, செம்பூவுளது, குரவகம், பச்சைப்பூவுளது, குரண்டகம், கோரண்டம்,பொன்னிறப்பூவுளது,பீதை, மேகவன்னப் பூவுளது, சயிரேயகம், பொன்னிறங்கலந்தகரும்பூவுளது, சகசரி.

மருந்து—உறை, அன்றியும், இரணத்தழும்பு தீர்க்குமருந்து, சமானகரணி, ஆயுதத்தாற் பட்டகாயமாற்று மருந்து, சல்லியகரணி, முறிந்தவுறுப்புக்களையிணைக்குமருந்து, சந்தானகரணி, மூர்ச்சைதீர்த்துயிர்தருமருந்து, அமிர்தம், சஞ்சீவகரணி, சஞ்சீவனி.

மருமகன்—பலவழித்தோன்றல், மருகன், மருமான்.

மரை—கானக்குதிரை, இதனாண், ஏறு, ஒருத்தல், போத்து, இதன்பெண், ஆ, நாகு, பெட்டை, இதன்குட்டி, கன்று.

மலங்குமீன்—நூறை.

மலடி—மைமை, வந்தி, வந்தை.

மலர்தல்—அலர்தல், அவிழ்தல், நெகிழ்தல், விகசம், விகசிதம், விரியல், விள்ளல்.

மலை—அசலம், அடுக்கல், அத்திரி, அரி, இரவி, இறும்பு, இறும்பூது, ஏந்தல், ஓங்கல், ஓதி, ஓதிமம், கல், கல்லகம், கிரி, குதரம், குத்திரம், குவடு, குறும்பொறை, குன்று, கோ, கோத்திரம், கோத்திரை, சக்கரம், சயிலம், சாரல், சிகரம், சிகரி, சிமயம், சிமிலம், சிலம்பு, சிலை, சிலோச்சயம், சையம்

தடம், தராணி, தராம், தராதரம், தாணு, தாபரம், திகிரி, நகம், நவிரம், நாகம், பதலை, பருப்பதம், பறம்பு, பாதவம், பிறங்கல், பூதரம், பொகுட்டு, பொங்கர், பொச்சை, பொருப்பு, பொறை, போதி, மாதிரம், மேரு, வரை, விண்டு, விந்தம், விலங்கல், வீரம், வெற்பு, வேதண்டம், அன்றியுஞ் சிறுமலையின்பெயர், இறும்பு, குறடு, குருவடு, குறும்பொறை, குன்று, பதலை, பொச்சை, பொற்றை.

மலைப்பக்கம்—கடம், சரி, சாரல், சாணு, தடம், நிதம்பம்.

மலைப்பச்சை—குளவி.

மலைப்பிளப்பு—விடர்.

மலைமல்லிகை—கிரிமல்லிகை, குடசம், சக்கரம், வச்சகம்.

மலையினுட்குகை—அளை, கந்தரம், குகம், நிகுஞ்சம், முடுக்கர், முழை.

மலையின்வீழாறு—அருவி, உவளை.

மலையுச்சி—குவடு, கூடம், கொடுமுடி, கோடு, சிகரம், சிமயம், முகடு.

மல்லிகை—அனங்கம்,பூருண்டி,மாலதி.

மழலைச்சொல் — உல்லாபம், குதலை, கொஞ்சல், மிழலை.

மழு—கணிச்சி, குளிர், தண்ணம், நவியம், பரசு, பாலம்.

மழை—ஆர்கலி, ஆலம், ஆலி, உதகம், உறை, சிகரம், சோரி, தாரை, திவலை, துளி, தூவல், தூறல், மாரி, வருடம், வானம், வான், அன்றியும்பெருமழையின்பெயர், ஆசாரம், விடாமழையின்பெயர், சோனை, அடைமழையின்பெயர், பனித்தல், மழைவிடுதலின்பெயர், நுலையல்.

மழைத்துளி—ஆலி, உறை, சிதர், சீகரம், துளி, திவலை, துமி, தூவல்.

மழைத்தூவல்—அரி, சிதர், சீகரம், திவலை, தூவல், பிதிர்.

மழைபெய்தல்—சொரிதல், துளித்தல், தூவல்,தூறல், பனித்தல், பொழிதல்.

மறதி — அயர்ப்பு, இவறல், பொச்சாப்பு, மறப்பு, மறல், மறவி, வழுக்கு.

மறவாமை—கடைப்பிடி.

மறைதல்—ஒளித்தல்.

மறைத்தசொல்—இடக்கர், எக்கர், கடுதனம்.

மறைவு—அபவாரணம், அற்றம், இயாசியம், ஒதுக்கம், குய்யம், புதைவு, மாய்தல், மாய்வு.

மனம்—அகம், இதயம், உளம், உள், உள்ளம், உன்னம், சித்தம், சுவாந்தம், நெஞ்சு, முன்னம்.

மனுடர்—ஆடவர், ஆண்டையர், நரர், மக்கள், மண்ணோர், மனிதர், மாக்கள், மாந்தர், மானவர், மானிடர், மானுடர், மைந்தர்.

மனுடர்படுக்கை—அமளி, அரி, உறையுள், கட்டில், கண்படை, கிடக்கை, சட்டகம், சயனம், சாயல், சேக்கை, சேர்விடம், தளிமம், துயிலிடம், பள்ளி, பாயல், பாழி, அன்றியும்விசியின்பெயர், அரி, கட்டிலின்பெயர், அங்கம், அரி, பரியங்கம், பாண்டில், பாரி, மஞ்சம், மஞ்சு.

மனைவி—இல், இல்லவள், இல்லாள், உரிமை, களத்திரம், காதலி, காந்தை, குடும்பினி, தாரம், துணைவி, தேவி, நாயகி, பன்னி, பாரி, பாரியை, பிரியை, மணமகள், மனை, மனையாட்டி, மனையாள், வல்லவி, வாழ்க்கைத்துணைவி, விருந்தனை.

மன்மதன் — அங்கசன், அனங்கன், அநிருபோதனன், இரதிநாதன், உருவிலி,

ஐங்கணைக்கிழவன், கந்தர்ப்பன், கருப்புவில்லி, காமன், சம்பராரி, சித்தசன், சுரும்பாவன், திங்கட்குடையோன், திருமகன்மைந்தன், தென்றற்றேரோன், பஞ்சபாணன், பூவம்பன், பூவாளி, மகரகேதனன், மதனன், மதுசகன், மனோசன், மனோற்பவன், மாமகன், மாரன், மான்மகன், மீனக்கொடியோன், மோகன், வசந்தன், வேள், வேனிலாளி.

மன்மதன்கணைவகை—அரவிந்தம், அசோகம், குவளை, சூதம், முல்லை, இவற்றுட்சூதம், மாமரம், அரவிந்தம்,தாமரை, இவ்வைங்கணையின்பெயர், உன்மத்தம், மதனம், மோகனம், சந்தாபம், வசீகரணம், அவையாவன, மயக்கம், மௌனம், ஆசை, சிந்தாகுலம், புணர்ச்சிக்கிணக்கம், அன்றியுமவ்வைங்கணையக்கு மவத்தைகளின்பெயர், பேசாதொழியாநினைவு, சுப்பிரயோகம், இரங்கிப்பெருமூச்சுயிர்த்தல், விப்பிரயோகம், வெதும்பியுணவுவெறுத்தல், சோகம், அழுதுபிதற்றுதல்,மோகம், மயங்கலுஞ்சாதலும், மரணம்.

மன்மதன்கூத்து—பேடு.

மன்மதன்மகன்—அநிருத்தன்.

மன்மதன்மனைவி—இரதி.

மா

மாசிமாதம்—தபம், மாகம்.

மாசின்மை—அமலம், அநகம், நிருமலம், விமலம்.

மாசு—அழுக்கு, கசடு, களங்கம், கறை, மலம், மலினம், மலீமசம், அன்றியுமனமாசு, உபமலம்.

மாடம்—மண்ணீடு, வேயுள்.

மாட்சிமை—அமைதி, ஆன்றல், சால்பு, செழுமை, நிறை, மன், மதன், மாணம், மாண், மாண்டல், மாண்பு, வளம், வாய்த்தல்.

மாட்டுக்குளம்பு—கோட்பாதம்.

மாணிக்கம் — கவுத்துவம், செம்மணி, பதுமராகம், மாமணி.

மாதம்—திங்கள், மதி.

மாதரிடையணி—அரைப்பட்டிகை,சரமணிக்கோவை, இவற்றின்பரியாயப்பெயர், தத்தம்வரியிற்காண்க, அன்றியும் ஏழுகோவைமணியணி, மேகலை, எட்டுக்கோவை,காஞ்சி, பதினாறுகோவை, கலாபம், பதினெண்கோவை, தாமம், பருமம், முப்பத்திரண்டுகோவை, விரிசிகை.

மாதளை — கழுமுள், மாதுளங்கம், மாதுளம், அன்றியுந் தாதுமாதுளையின்பெயர், தாடிமம்.

மாத்திரை—கணம்.

மாமரம்—ஆம்பிரம், இரதம், கொக்கு, சுள்ளி, சூதம், மாந்தி, மாழை, அன்றியுந்தேமாவின்பெயர், சேதாரம், புளிமாவின்பெயர், ஆம்பிரம், இடங்கம், எகினம், எகின், நாளிலி.

மாமன்—அம்மான், மாதுலன்.

மார்கழிமாதம் — சகம், மார்க்கசிரம், மார்க்கம்.

மார்பு—அகலம், ஆகம், உரம், செப்பம், நெஞ்சு, மருமம்.

மாலை—அணி,அணியல், அரி, அலங்கல், ஆரம், இலம்பகம், ஒலியல், கண்ணி, கத்திகை, கோதை, சரம், சிகழிகை, சுக்கை, சுருங்கல், சூட்டு, தாமம், தார், தெரியல், தொங்கல், தொடர், தொடை, தொடையல்,படலை, பிணை, பிணையல், மஞ்சரி, மாலிகை, வாசிகை, அன்றியு நுதலணிமாலையின்பெயர், இலம்பகம், சூட்டு, முடிமாலையி

ன்பெயர், கரோடி, கரோடிகை, தொடுத்தமாலையின்பெயர், சிகழிகை, தொடையல், மாலை, வாசிகை, பின்னிய மாலையின்பெயர், பிணையல், கோத்த மாலையின்பெயர், கோவை, சிகழிகை, படலை, வாசிகை, இவையன்றியும்பகைவர் நிரையோட்டுஞ் சேவகர்க்கு, வெட்சிமாலை, பகைவரோட்டின நந்நிரைமீட்டவர்க்குக் கரந்தைமாலை, பகைவர்மேற்செல்லுஞ்சேவகர்க்கு, வஞ்சிமாலை, திரண்டுவரும் பகைவர்முன்னெதிருன்றுஞ்சேவகர்க்குக் காஞ்சிமாலை, தன்னரண்காப்பார்க்கு, நொச்சிமாலை, பகைவரரணவளைப்பார்க்கு, உழிஞைமாலை, போர்செய்வோர்க்குத்தும்பைமாலை, போர்வென்றோர்க்குவாகைமாலை.

மாவலி—பயிரோசனன்.

மாறுபாடு—எதிர்தல், கோணல், தெரித்தல், தெற்றல், நீக்கல், மலைவு, வளைவு.

மாற்றல் — நீக்கல், மறுத்தல், வரைதல், விலக்கல்,

மான்—அரிணம், உழை, ஏணம், குரங்கம், சாரங்கம், சூனம், நவ்வி, பிணை, மறி, மிருகம், இதனாண், இரலை, ஏறு, ஒருத்தல், கருமான், கலை, புல்வாய், வச்சையம், இதன்பெண், பிணை, இதன்பிள்ளை, ஏணி, கன்று, குழவி, தன்னம், பறழ், பார்ப்பு, பிணை, மறி.

மான்றோல்—அயிணம், ஏணம்.

மி

மிகவல்லோர்—குசலர், நிபுணர், விபுதர்.

மிகுதல்—பொதிர்தல், மிகப்படல், விஞ்சுதல், வீக்கம்.

மிகுதி—அதிகம், அமலை, அமர்தல், அலைத்துவம், ஆற்றல், ஆன்றல், இறப்பு, உயரம், உருத்தல், உரும்பர், உறு, ஊக்கம், ஊங்கு, கடுமை, கட்டு, கதழ்வு, கயவு, கலிப்பு, கழி, கழிதல், கழுமல், கூர், சால், சிறப்பு, செறிவு, தவ, துப்பு, நனி, நன்கு, நுாங்கு, பிறங்கல், புநுமை, பூரி, பூரிப்பு, பெட்பு, பெருமிதம், பெருமை, பொங்கம், பொங்கல், பொம்மல், பொலிவு, பொற்பு, மதர்வு, மல்லல், மன், மிகை, வாகை, வாசி, வால், விதப்பு, விளரி, வெள்ளம்.

மிடறு—அணல்.

மிதிலைநகர்—விதேகம்.

மிதுனராசி—இரட்டை, சயமகள், தண்டு, பாடவள், பாடவை, யாழ், விழவு.

மிருகசீரிடநாள் — இந்திரன், ஐந்தானம், நரிப்புறம், பாலை, பேராளன், மதிநாள், மார்கழி, மாழ்கு, மான்றலை, மும்மீன், வெய்யோன்.

மிருது— சுகுமாரம், மென்மை.

மிளகு—கலினை, கறி, காயம், கோளகம், திரங்கல், மரிசம், மரிசி, மிரியல்.

மின்மினிப்பூச்சி — அலகு, கச்சோதம், கத்தியோதம், குலவல், நுளம்பு.

மின்னல்—கனருசி, சஞ்சலம், சஞ்சலை, சபலம், சபலை, சம்பை, தடி, தடித்து, தடித்தல், மின், வித்து.

மீ

மீகாமன்—நீகான், நீவான், மாலுமி.

மீதிப்பொருள்—எச்சம், சேடம், மிச்சில்.

மீளல்—திரிதல், மடங்கல், மறிதரல்.

மீனராசி—சலசரம், சலசலம், மச்சம், மயிலை.

மீன்—அண்டசம், சகுலி, சலசரம், மச்சம், மயிலை, மீனம், வகுலி, இதனாண்,

போத்து, இதன்பெண், நாகு, இதன் சினை, குண்டி, இதன் முள்ளிந்திடும் சத்தியின்பெயர், அயிரி.

மீன்குத்திக்குருவி—சிரல், மீனெறி.

மு

முகடு—மஞ்சு.

முகத்தல் — தோண்டல், நொள்கல், நோண்டல், மொள்ளல்.

முகம் — ஆசியம், ஆனனம், துண்டம், வதனம், வத்திரம்.

முசு—கடுவன், கலை, கள்வன், கோலாங்கூலம், மைமுகன், இதனாண், ஓரி, கலை, இதன்பெண், மந்தி.

முடங்கல்—திடங்கல், நுணங்கல், மடங்கல்.

முடவன்—அனூரு, சூநியன், பங்கு.

முடி—கிரீடம், கோடீரம், சுடிகை,சூடிகை, சேகரம், மகுடம், பதுமம்.

முடிதல்—தீர்தல், முற்றுதல், மூவுதல்.

முடித்தல்—நீட்டித்தல்.

முடியாக்காலம் — ஊழி, மாயவன்வாழ்நாள்.

முடிவு—அந்தம், அந்தரம், இறுதி, ஒடுக்கம், ஓய்வு, கடை, கனா, காண்டம்.

முடுகியல்—அராகம், வண்ணகம்.

முட்டை — அண்டம், அரிட்டம், கரு, குடம்பை, கோசம், சினை.

முட்பன்றி—எய், சமர், சல்லபம், சல்லியம், முண்மா, இதன் முள்ளின் பெயர், சலம், சலலம், சலலி.

முதலை—அண்டசம், இடங்கர், சிஞ்சுமாரம், முசலி, வன்மீன், இதனாண், கரா, கராம்.

முதல் — அடி, ஆதி, தலை, தாள், முன்னர்.

முதுகு— அபரம், சுவல், துன்னு, புறம், வெரிந், வெந்.

முத்திரை—பொறி, அன்றியுமடையாளத்தைக்காண்க.

முத்து—ஆரம், தாளம், திரட்சி, நாலி, நித்திலம், மணி, முத்தம், முத்தாபலம், மௌத்திகம்.

முத்துப்பிறக்குமிட்டம்-இப்பி,உடும்பு, கடன்மீன், கதலி, கமலம், கமுகு, கரும்பு, கொக்கு, சங்கு, செந்நெல், திங்கள், நத்து, நாகம், பசுவின்பல்,பன்றிமருப்பு, மடந்தையர் கந்தரம்,முதலை, மூங்கில், மேகம், யானைமருப்பு.

முந்திரிக்கொடி—கோத்திரிகை, மதுரசம், மதுரம்.

முயல்—சசம், இதன்பிள்ளை, குட்டி, குருளை, பறழ், பிள்ளை.

முயற்சி—ஆள்வினை, இயற்றி, உற்சாகம், உஞற்று, உத்தியோகம், உழப்பு, உள்ளம், தாளாண்மை, தாள்.

முருகனாயுதம்—வேல்.

முருகன் — அரன்மகன், அறுமீன்காதலன், அறுமுகன், ஆசான், ஆண்டலைக்கொடியோன், கங்கைமைந்தன், கடம்பன், கந்தன், கலையுணர் புலவன், காங்கேயன், கார்த்திகேயன், குகன், குழகன், குறிஞ்சிவேந்தன், குன்றெறிந்தோன், கௌரிநந்தனன், சண்முகன், சரவணபவன், சிலம்பன், சுப்பிரமண்ணியன், சுரேசன், சூர்ப்பகைவன், செட்டி, செவ்வேள், சேந்தன், சேய், சேவற்கொடியோன், தாருகற்செற்றோன், தாருகாரி, தெய்வயானைகாந்தன், தேவசேனாபதி, பாவகி,மஞ்ஞையூர்தி, மாயோன்மருகன், முருகு, மேலவர்க்கிறைவன், வரைபகவெறிந்தோன், வள்ளிமணாளன், வாகுலேயன், விசாகன், வேலன், வேலிறைவன், வேள்.

முருகன்கூத்து—குடை, கொடுகொட்டி, துடி.
முருகன்கொடி—சேவற்கொடி.
முருகன்வாகனம்-மயில்,யாடு, யானை.
முருக்கு—கவிர், கிஞ்சுகம், பலாசு, இவற்றுட்புனமுருக்கின்பெயர், பலாசு.
முருங்கை—சிக்குரு, அன்றியும்புனமுருங்கையின்பெயர், புன்கு.
முலை—அம்மம், உரோருகம், குயம், குருக்கண், கொங்கை, கொம்மை, சேக்கை, சுவர்க்கம், தனம், நகிலம்,பயோதரம், பறம்பு.
முலைக்கண்—சிலீமுகம், சூசுகம்.
முலைப்பால்—பீர்.
முல்லை—ஊதிகை, கற்பு, தளவம், தளவு, நைதிகை, மாலதி.
முல்லைநிலத்தலைவன்—அண்ணல், கானக நாடன், குறும்பொறை நாடன், தோன்றல்.
முல்லைநிலத்தாறு-கலுழி, கான்யாறு.
முல்லைநிலத்திராகம்—சாதாரி.
முல்லைநிலத்தூர் — ஆய்ப்பாடி, ஆவிரம், இடைச்சேரி, உவளகம், பாடி, வல்வி, வல்லியம்.
முல்லைநிலப்பறை--ஏறங்கோட்பறை, பம்பை.
முல்லைநிலமக்கள்—அண்டர், அமுதர், ஆயர், ஆன்வல்லோர், இடையர், இப்பர், கானவர், குடவர், கோபாலர், கோவர், கோவர்த்தனர், கோவலர், கோவிந்தர், தொறுவர், பொதுவர், முல்லையர், அந்நிலப்பெண்கள், ஆய்ச்சியர், இடைச்சியர், குடத்தியர், தொறுவியர், பொதுவியர்.
முழங்கை—கூபரம், கூற்பரம்.
முழந்தாள்—சானு, முழந்து.

முளை—அங்குரம், கால், நறி.
முளைத்தல் — உருத்தல், கெழுமுதல், தோற்றல், நாறுதல், பொடித்தல்.
முள்—கடு, கண்டகம், அன்றியுமுட்செடிப்பொதுப்பெயர், முண்டகம், முளரி.
முள்ளி—கண்டலம், முண்டகம்.
முறம்—சின்னம்,சுளகு, சூர்ப்பம், தட்டு, முற்றில்.
முறித்தல்—அகைத்தல், இறுத்தல், ஒசித்தல், ஒடித்தல்,கோடல்,முரித்தல்.
முறுக்கல்—திருகல்.
முறைமை—ஊழ், ஒப்புரவு, ஒழுக்கம், கடன், சுதம், செய்கடன், நியதி, நியமம, நிலை, பத்தி, பாரம்பரியம், மரபு, வழி.
முற்றம்—அங்கணம், முன்றில்.
முனிவரிருக்கும்பீடம்— பீடிகை, விட்டரம்.
முனிவரிருக்கும்வாசம் — கரண்டை, குகை, தாபதம், பள்ளி, பாழி, மடம்.
முனிவர்—அடிகள், அந்தணர், அருந்தவர், அறவோர், அறிஞர், இருடிகள், இலிங்கிகள், உயர்ந்தோர், உறுவர், ஐம்புலன்வென்றோர், ஐயர், கடவுளர், கடிந்தோர், சார்பில்லோர், சௌமியர், தபோதனர், தவத்தர், தவர், தாபதர், துறந்தோர், துறவோர், நீத்தோர், படிவர், பண்ணவர், பலமூலசாகாசனர், பற்றற்றோர், பெரியோர், மாதவர், முனைவர், மெய்யர், மோனர், மௌனியர், யதிகள், யோகர், யோகியர்.
முனை—நுதி, நுனை.
முன்—புரம், முன்பு.
முன்பிறந்தாள் — அக்காள், அக்கை, அன்னை, செவிலி, சேட்டை, தத்தை, தௌவை, முன்னை, மூத்தாள்.

முன்றானை—கச்சம், கஞ்சகம், சாரவாரம், தோகை, விடுந்தலைப்பு.

முன்னிலையசைச்சொல் — அத்தை, இக, இத்தை, ஈ, மதி, மாள, மியா, மோ, யாழ, வாழிய.

முன்னைநாள்—நெருநல், நென்னல்.

மூ

மூக்கு—ஆக்கிராணம், கோணம், துண்டம், நாசி, நாசிகை, நாடி.

மூக்குக்கண்ணாடி—உபநயனம், சுலோசனம்.

மூங்கில்—அமை, அம்பு, அரி, ஆம்பல், ஓங்கல், கண், கழை, காம்பு, கிளை, கிசகம், சந்தி, சபம், சானகி, தட்டை, தண்டு, திகிரி, துளை, தூம்பு, நெட்டில், நேமி, பணை, பர்சு, பாண்டில், பாதிரி, புணை, முடங்கல், முந்தூழ், முளை, வளை, விண்டல், விண்டு, வெதிர், வேணு, வேய், வேரல், வேல், வேழம், இதனரிசி, தோரை.

மூஞ்சூறு—சுசுந்தரி, சுண்டன், சுவவு, சூறன்.

மூடுதல்—கவித்தல், பொதிதல், போர்த்தல், மூப்தல், மொய்த்தல், வேய்தல்.

மூட்டல்—பொருத்தல், மாட்டல்.

மூதுணர்ந்தோர்—முதுவர்.

மூதேவி — இந்திரைக்குமூத்தாள், ஏகவேணி, கலதி, கழுதைவாகனி, காக்கைக்கொடியாள், கெடலணங்கு, கேட்டை, சிறப்பிலாதாள், சீர்கேடி, சேட்டை, தௌவை, முகடி.

மூத்தோன்—அடிகள், அத்தன், அய்யன், ஆசான், ஆதிரன், இறை, ஈசன், உரவோன், குரவன், கோமான், சாமி, சேட்டன், நாதன், பதி, பெருமான், முதியோன்.

மூப்பு—கிழமை, முதுமை, முற்றல், விருத்தம்.

மூலநாள்—அசுரநாள், அன்றில், ஆனி, குருகு, கொக்கு, சிலை, தேட்கடை, வில்.

மெ

மெத்தை—அணை, அமளி, காகுளி, தவிசு, தளிமம், தற்பம்.

மெய்—ஆணை, உண்மை, சச்சம், சத்தியம், சாதம், தத்தியம், திடம், திண்மை, நிசாதனம், நிச்சயம், நிலைமை, நீதி, பசுமை, பட்டாங்கு, பொருள், வண்மை, வாய், வாய்மை, விதி, வேளாண்மை.

மெய்காப்பாளர் — கஞ்சுகி, காவலர், வாயிலாளர், வாயிலோர்.

மெலிவு—அற்றம், சிக்கம், தேம்பல், பழுங்கண், புன்கண், வாடல்.

மெல்லல்—கவட்டல்.

மெழுகு—வள்ளியம்.

மே

மேகம்—அப்பிரம், அம், அம்புதம், இளை, ஊரி, எழிலி, கதம்பம், கந்தரம், கருவி, கனம், கார், கார்முகம், காளம், குயின், கொண்டல், கொண்மூ, சலதரம், சீதம், சீமூதம், செல், தாராதரம், நீகம், பயோதரம், புயல், மங்குல், மஞ்சு, மழை, மாசு, மாரி, மால், முகில், முதிரம், மை, வான், விசும்பு, விண், விண்டு, விளவு.

மேடவிராசி—ஆடு, உதள், கொறி, தகர், மறி, மை, யாடு, வருடை.

மேடு — உயர்நிலம், ஓங்கல், கரு, குப்பை, குவால், குவை, சுவல், திடர், திட்டு, திட்டை, படர், மிசை, வல்லை, வன்பால், அன்றியும் பரன்மேடு, மூரம்பு.

மேல்—இந்தனம், உபரி, உம்பர், ஞாங்கர், மிசை, மீ, முன்,மேக்கு, மேற்கு, வலம்.

மேற்கட்டி—கம்பலம், படங்கு, வானி, விதானம்.

மேற்கு—குடக்கு, பச்சிமம், பிரத்தியக்கு, மேக்கு, மேல், வாருணம்.

மேன்மை—ஏற்றம், கயம்,கயவு, தியாததம்,சாயல், சாலாரம், தெள்ளல்,மேகம், மேதை, மேற்கோள், இவற்றுள் மேன்பாடுரைத்தல், நெடுமொழிகூறல்.

மொ

மொட்டை—தட்டை, முண்டம், முண்டிதம்.

மொட்டையாக்கல்—மழித்தல்.

மொய்த்தல்—முடுகல், மூசல், மூஞ்சல், மூழ்த்தல்.

மோ

மோக்கம்—அபவருக்கம், அமுதம், கேடிலுவகை, கேவலம், கைவல்லியம், சித்தி, சிவம், நிருவாணம், நிலைபேறு, பஞ்சமகதி, பரகதி, மீளாக்கதி, முத்தி, வீடு.

மோதிரம்—ஆழி, இலச்சினை, வீகம்.

மோர்—அரிட்டம், அருப்பம், அளை, காலேயம், தக்கிரம், மச்சிகை, மதிகம், மூசர்.

மௌ

மௌனம்—மதனம், மூகம், மோனம், வாளா.

யா

யாகத்தம்பம்—யூபம்.

யாகம் — இட்டி, எச்சம், ஓமம், கிருது, சத்திரம், சிந்து, மகம், யசனம், யூபம், வேள்வி.

யாளி — அறுகு, பூட்கை, இதனாண், துகர், இதன்பிள்ளை, குருளை, குழவி.

யானை—அத்தி, அறுகு, ஆம்பல், இபம், இம்மடி, உம்பல், உவா, எறும்பி, ஒருத்தல், ஓங்கல், கடிவை, கயம், கரி, கரிணி, கரேணு, களபம், களிறு, கள்வன், கறையடி, குஞ்சரம், கும்பி, கைப்புலி, கைம்மலை, கைம்மா,கோட்டுமா, சிந்தூரம், சுண்டாலி, தூங்கல், தெள்ளி, தோல், நாகம், நால்வாய், நாழில், பகடு, புகர்முகம், புழைக்கை, பூட்கை, பெருமா, பொங்கடி, போதகம், மதகயம், மதமொய், மதாவளம், மந்தமா, மருண்மா, மறமலி, மாதங்கம், மாதிரம், மொய், வயமா, வல்விலங்கு, வழுவை, வாரணம், வேதண்டம், வேழம், இதனாண், உம்பல், ஒருத்தல், களிறு, தகர், பகடு, மா, இதன்பெண், அத்தினி, கரிணி, பிடி, வடவை, இதன்கன்று, கயந்தலை, கயமுனி, களபம், குழவி, துடியடி, போதகம், முனி, அன்றியுமலையிற்பிறந்தயானை, கிரிசரம், ஆற்றுசாரிற்பிறந்தயானை, நதிசரம், வனத்திற்பிறந்தயானை, வனசரம்.

யானைக்கச்சை—கண்டம்.

யானைக்கடைக்கண்—நிரியாணம்.

யானைக்கட்டுந்தறி — ஆளானம், வெளில்.

யானைக்கதுப்பு—கடம், கரடம், கவுள், கொடிறு.

யானைக்கயிறு—கச்சம், கச்சை, கவடு, நாகு, புரோசை.

யானைக்கூட்டத்துத்தலையானை—யூதநாதன், யூதபம்.

யானைக்கூட்டம்-கடகம், கடம், யூதம்.

யானைக்கொம்பு—எயிறு, கோடு, தந்தம், இவற்றினடி, கரீரம், இவற்றினடு, பிருதுமானம்.

யானைசெல்வழி—தண்டம்.

யானைச்சங்கிலி—அந்துகம், சிருங்கலம், நிகளம்.

யானைச்செவி—கன்னம், தாலம்.

யானைதிரியுங்காடு—கரிகாடு.

யானைதுயிலிடம்—சேவகம்.

யானைத்தோட்டி — அங்குசம், குடாரி, கோணம், இதன்பிடர், இயாதம்.

யானைநிற்குங்கூடம் — ஆலயம், ஓளி, வாரி.

யானைநுதற்பட்டம்—ஓடை.

யானைநோய்—பாகலம்.

யானைப்படுகுழி—பயம்பு.

யானைப்பாகர்—ஆதோரணர், பண்ணுவர், வதுவர், வாதுவர்.

யானைமணி—கண்டை.

யானைமதம் — கடம், கடாம், தானம், மதமொழிந்தயானை, நிருமதம்.

யானைமத்தகம்—கும்பம்.

யானைமீன்—திமிலம், பனைமீன், பெருமீன்.

யானைமுகபடாம்—சூழி, படம், மந்தனம்.

யானைமுதுகு—மஞ்சு.

யானைமுன்கால் — காத்திரம், பின்காலின்பெயர், அபரம்.

யானைமேற்றவிசு — இலகடம், பலகாரம்.

யானையுண்ணுமுணவு—அங்கதம்.

யானைத்துதிக்கை—கை, சுண்டம், தண்டம், தொண்டலம், தொண்டை, இதனுனியின்பெயர், ஆழி, புட்கரம், இது விடுநீரின்பெயர், கரசீகரம், விலாழி.

யானையைப்பாகரதட்டுமோசை—அப்புது, ஆது, ஐ.

யானையைவிழுங்குமீன்—திமிங்கிலம், திமிதிமி, அம்மீனைவிழுங்குமீன், திமிங்கிலகிலம்.

யானைவால்—தாலவட்டம், வாலதி, இதனுனி, வேசகம்.

யு

யுகமுடிவு—ஊழி, மடங்கல்.

யோ

யோகம்—கூடல்.

யோகினி—சன்மினி, சூர்மகள்.

வ

வசமாக்கல்—வசித்துவம், வடித்தல்.

வாசம்—வசிகரணம், வசீகரம்.

வசவி—அசதி, குட்டினி, குண்டனி, குறளி, கூனி, துட்டை, தொழுத்தை, படுவி.

வசனம் — ஆமரி, பாசுரம், வலந்தம், வாக்கு, வாசகம், வார்த்தை.

வச்சிராயுதம் — அசனி, குலிசம், சதகோடி, சதமுனை, சம்பம், வயிரம்.

வஞ்சகம்—அகாதம், கஞ்சம், கபடம், கலி, கிருத்திமம், குடிலம், குத்திரம், குய்யம், பட்டிமை, புள்ளுவம், மாயம், வஞ்சனை.

வஞ்சனையாளன்—அகாதன், தூர்த்தன், நிகாதன்.

வடக்கு—உதக்கு, உத்தரம்.

வடமொழி—ஆரியம், பிராகிருதம்.

வடமொழிக்கும்பிறபாடைக்குமொத்தமொழி—தற்சமம்.

வடமொழியிற்றிரிந்தமொழி— தற்பவம்.

வடிவு — ஆகாரம், உரு, உருவம், சட்டகம், சந்தம், செண்ணம், படிவம், மேனி, வண்ணம்.

வட்டம்—ஆழி, கடகம், கணம், குண்டலம், கொம்மை, கோளகை, சக்கரம், சில்வி, தட்டு, திகிரி, நேமி, படலிகை, பருதி, பாண்டில், பாலிகை, மண்டலம், மல்லை, வட்டணை, வலயம், வல்லை, வளையம், விம்பம், விருத்தம், இவற்றுட்டிரண்டவட்டம், குழியம்.

வட்டில்—கரகம், கோரம், சகடம், சாகை, சிகரம், வள்ளம், அன்றியுஞ்சிறுவட்டிலின்பெயர், கிண்ணம், கிராணம்.

வணங்குதல் — அஞ்சலி, இறைஞ்சல், காணல், காண்டல், குரங்கல், கைகூப்பல், சலாம், தாழ்தல், தெண்டனிடல், தொழுதல், பணிதல், பரவல், பார்த்தல், போற்றல், வந்தனை, வந்தித்தல், வழிபடல்.

வண்டி — ஊர்தி, ஒழுகை, சகடம், சகடு, சகடை, சாகாடு, சாடு, பண்டி, வையம், அன்றியும் பாண்டில்பூண்டவூர்தி, சகடம், சிவிகை, வையம்.

வண்டியுள்ளிரும்பு—இருசு, கந்து.

வண்டு—அராபதம், அரி, அளி, அறுபதம், ஈ, கரும்புள், கழுது, கள்ளுண், காமன், கிடம், கீதம், கேசரம், கேசவம், சஞ்சரிகம், சஞ்சாளிகம், சாரங்கம், சிலீமுகம், சுரும்பு, சூதம், ஞிமிறு, தும்பி, தேன், பிரசம், பிரமரம், பிருங்கம், புண்டரீகம், புள், மதுகரம், மதுபம், மந்தி, மா, மிஞிறு, மொய், வடு, வரி, வரிக்கடை, இவற்றுளாண்வண்டு, சுரும்பு, தும்பி, மதுகரம், பெண்வண்டு, தேன்.

வண்ணார்—ஈரங்கொல்லியர், ஏகாலியர், காழியர், தூசர்.

வயல்—அகணி, ஆலவாலம், கம்பலை, கழனி, கைதை, கோட்டம், செய், செறு, தடி, பணை, பண்ணை, பழனம், பானல், புலம், விளைபுலம், அன்றியுஞ்சிறுவயல், குண்டில், பாத்தி, செந்நெல்விளையுநிலம், சாலேயம்.

வயிடூரியம்—வால்வாயம்.

வயித்தியர் — ஆமாத்தியர், ஆயுள்வேதியர், ஆரியர், பண்டிதர், பிடகர், மருத்துவர்.

வயிரத்தின்பெயர் — மரவயிரத்தைக் காண்க.

வயிரமணி—வச்சிரம்.

வயிரவன்—ஆபதோத்தாரணன், ஆரியைதநயன், கருங்குதிரையாளி, காரி, குதிரையாளி, குமரன், கேத்திரபாலன், சித்தன், ஞாளியூர்தி, தண்டாயுதன், பச்சைச்சடையன், பவழநெடுங்குஞ்சியோன், பிள்ளை, முடிவல்வெம்படையோன், முத்தமிழ்க்குரியோன், முத்தலைவேலோன், முத்தன், மூர்த்திகன், வடுகன், வித்தகன்.

வயிறு—அகடு, உதரம், குக்கி, குழி, சடரம், துத்தம், பண்டி, மடி, மேடு, மோடு, வயின்.

வரகு—கோத்திரவம்.

வரகுவைக்கோல்—கருவை.

வரம்பின்பக்கம்—கங்கு.

வரம்பு—அணை, கங்கு, குரம்பு, கூலம், கோடு, தடம், பரம்பு, பாரம், வரை, வாரம்.

வரிசை—பதம்.

வருங்காரியஞ்சொல்வோர்—கருடத்தலைவர், சாக்கையர், நிமித்தர், புரோகிதர், வள்ளுவர்.

வருடம்—ஆண்டு, ஆயனம், சமை, தெய்வம், யாண்டு, வற்சரம், இதன்பாதி, அயனம்.

வருணன்—புனல்வேந்தன், புனற்கரசன், மேற்றிசைப்பாலன்.

வருத்தஞ்செய்வோன்- அருந்துதன்.

வருத்தந்தீர்தல்—அயர்வுயிர்த்தல்.

வருத்தம்—அணங்கு, அயர்வு, அநுகம், அவலம், ஆகுலம், ஆய்வு, உயவு, உலைப்பு,ஏவு, கசிவு,கவற்சி, கொல், தாவு, நொசி, நோய், பரி, மிகை, மிறை, வயாவு, வேதனை.

வருந்துதல்—அசைத்தல், அணுங்கல், அலமரல், அலைதல், அவலித்தல், அவிதல், அழுங்கல், ஆகுலித்தல், உயங்குதல், உலைதல், ஒறுத்தல், ஓவல், கவலல், துகைத்தல், பருவரல், பனித்தல்,மிறைத்தல், அன்றியும்வருத்தமாற்றுது நிறம்வேறுதல், பசத்தல், பசலை.

வரையாடு—சரபம், வருடை.

வரையாதுகொடுப்போர் — வள்ளியோர்.

வலதுபக்கம்—சவ்வியம், தக்கணம்,வலம்.

வலம்புரிச்சங்காயிரஞ்சூழ்ந்தது — பாஞ்சசன்னியம்.

வலம்புரிச்சங்கு—கொக்கரை, சங்காயிரஞ்சூழ்ந்தசங்கு, சலஞ்சலம், பணிலம்.

வலி—அடல், அரி, ஆண்மை, ஆற்றல், இகல், ஈடு, உம்பல், உரம், உழப்பு, உறுதி, ஊக்கம், எழில், எறுழ், ஏண், கருமை, கலி, கூளி, கொம்மை, கொற்றம், கோள், சத்தி, சத்துவம், ஞாட்பு, தரம், தற்செல்வம், தாவு, தானம், திண்ணம், திண்மை, திறம், திறல், தீரம், துப்பு, தோற்றம், நாட்பு, நோன்மை, பம்பல், பராக்கிரமம், பாழி, பீடு, மஞ்சு, மதம், மதன், மதுகை,மல், மல்லல், மள்ளல், மறம், மாவுரம், மானம், மிடல், மீளி, முடலை, முடுகல், முரண், முன்பு, மூரி, மெய்ந்நலம், மைந்து, மொய்ம்பு, வயம், வலம், வள், வன்மை, வாய்மை, விறல், வீரம்.

வலிதருதல்— ஆற்றுவித்தல், வலியுறுத்தல்.

வலியழித்தல்—ஆற்றறுத்தல்.

வலியன்—கரிக்குருவியிற்காண்க.

வலை—கண்ணி, கொக்கரை, சாலம்.

வல்லான்—சமர்த்தன், வலவை, வல்லவன், வல்லாளன், வல்லுநன்.

வழி — அடைவு, அதர், அயனம், ஆறு, இடவை, இயவு, இயவை, உத்தரம், ஒழுக்கம், கால், கிறி, சரி, செப்பம், செலவு, தடம், தாரி, தாரை, துறை, தெரு, நடவை, நடை, நெறி, படர், பட்டம், பதம், பதவி, பதவை, பரி, பாதை, போக்கு, மார்க்கம், வகிர், வகுந்தம், வட்டை, வதி, வயவை, வரி, வனம், வாரி, வீதி, அன்றியுமரும்வழியின்பெயர், அத்தம், கடம், கடறு, சுரம், தூம்பு, கவர்வழியின்பெயர், கவலை, கவை, சிறுவழியின்பெயர், விடங்கர், நீள்வழியின்பெயர், அளக்கர், இறங்கியேறும்வழியின்பெயர், படுகர், புதுவாம்புவழியின்பெயர், மரிசி, பழையவரம்புவழியின்பெயர், மஞ்சில், இடுக்குவழியின்பெயர், இட்டிகை.

வழிச்செல்வோர்—பதிகர்.

வழிப்படுத்தல்—ஆற்றுப்படை.

வழிப்பறித்தல் — அதர்கொளல், ஆறலைத்தல்.

வழுக்குநிலம்—இழுக்கல்.

வளமை—கெழுமை, கொழுமை, மதன், மல், மல்லல், யாணர், வண்மை, வளப்பம், வளம்.

வளர்தல்—உருத்திரம், நிமிர்தல், நிமிறல், நிமிர்தல், வளர்ச்சி, விருத்தி.

வளை—சுவப்பிரம், பிலம்.

வளைதடி—எழு, கணையம், சுழல்படை, பரிகம், பாராவளையம், வட்டம்.

வளைத்தல்—குனித்தல், கோலல், சூழ்போதல், திருகல், தொடுத்தல், முற்றுதல், வணக்கல், வளையுறுத்தல், வலத்தல், வளாவல், வாங்கல்.

வளைவு—ஆவல், குடிலம், குலாவல், கூன், கோடல், கோட்டம், கோணல், கோணை, தடவு, தட்டு, முற்றல், வக்கிரம், வசிவு, வணங்கல், வணர், வலந்தம், வளாவல், வாங்கல்.

வள்ளை—ஞாளிகம், நாளிகம்.

வறட்சுண்டி—சமங்கை.

வறத்தல்—முதிர்ந்திடல், முளித்தல்.

வறுமை — அல்கல், இலம்பாடு, இன்மை, ஒற்கம், வீதல்.

வற்புறுத்தல்—தெருட்டல், வருட்டல்.

வனமல்லிகை—மௌவல்.

வன்னிமரம் — கலிசம், குலிசம், சமி, தமனி.

வா

வாகனம்—வருதா, கரி, சிவிகை, தேர், பரி, வண்டில், இவைமுதலியவற்றிற்குப்பொதுப்பெயர், ஊர்தி, வாகனம், வையம்.

வாகைமரம்—சிரீடம், பாண்டில், பீரம்.

வாசனை — ஆவி, கடி, கந்தம், கானம், கான், கொங்கு, சாபி, தகரம், தேம், தேன், நாந்தம், நறவம், நறவு, நறை, நாரி, நாற்றம், நானம், பச்சை, மணம், மரு, மன்றம், மன்றல், முருகு, மோதம், வசந்தம், வதுவை, வம்பு, வாசம், விரை, வெறி, அன்றியுமிகுவாசனையின்பெயர், ஆமோதம், சுகந்தம், பரிமளம், தீயவாசனையின்பெயர், துர்க்கந்தம், பூதி, முடை.

வாசனைக்குறிப்புச்சொல் — கம்மெனல்.

வாசனைப்பொடி — கதம்பம், கந்தபொடி.

வாசனைவிடுதல் — கந்தித்தல், கமழ்தல், நறவுதல், நாறல், மணத்தல்.

வாசித்தல்—ஓதல், படித்தல், பாடல், வேதமோதலின்பெயர், அத்தியயனம்.

வாச்சியப்பொது—அரியம், இயம், கருவி, காண்டம், கோடணை, சகடை, சகன்னை, தகுணிதம், தக்கை, தடாரி, தூரியம், பறை, பீலி, மன்கணை, மேளம், இவற்றட்பலவாச்சியக்கூட்டம், மேளம்.

வாச்சியமடிக்குங்குறுங்கடி—குணில்.

வாச்சியம்வாசித்தல்—இயம்பல், கொருத்துதல், துவைத்தல், முழக்கல்.

வாச்சியவகுப்பு—இடக்கை, உடுக்கை, உறுமி, தப்பட்டம், பம்பை, பேரிகை, மத்தளம், முரசு, முருடு, முழவு, இவற்றினிடக்கையின்பெயர், திரிகை, யாமம், உடுக்கையின்பெயர், இடை, சுருங்குபறை, துடி, உறுமியின்பெயர், தன்னுமை, தப்பட்டத்தின்பெயர், ஆனகம், திண்டி, திண்டிமம், படகம், பணவம், பம்பையின்பெயர், சல்லரி, தக்கை, தடாரி, திமிலை, மல்லாரி, பேரிகையின்பெயர், தடாரி, தன்னுமை, பதலை, முரசின்பெயர், அமுவம், ஆரி

யம், பணை, பெருங்கோடணை, முரசம், முழவம், முழவின்பெயர், குடமுழா, குளிர், முழவம், முழா, அன்றியுமொருகட்பறையின்பெயர், உடுக்கை, தண்ணுமை, நிசானம், மொந்தை, வாயகன்ற பறையின்பெயர், பதலை, சிறுபறையின்பெயர், ஆகுளி,உவகைப்பறையின்பெயர், தூரியம், சாப்பறையின்பெயர், நெய்தற்பறை, அன்றியுங் குறிஞ்சிமுதலைந்திணைக்குரியபறை தத்தம்வரியிற் காண்க.

வாடல்—அனுங்கல், உணங்கல், குழைதல், சுணைதல், சோரல், தேம்பல்,நைதல், புலர்தல், வெம்பல்.

வாட்கோரை—செருந்தி.

வாயில் — அருநெறி, கடை, துவாரம், தூம்பு, தோட்டி, வாய், வாரி, அன்றியுநுழைவாயிலின் பெயர், சுருங்கை, நுழை.

வாயில்காப்போர் — வாயிலாளர், வாயிலோர்.

வாயினுட்கீழ்வாய்—அணல்,மேல்வாயின்பெயர், அணம், அணரி, அண்ணம்.

வாய்க்கால்—கால்.

வாரம்—கிழமை, வாசரம்.

வாருகோல்—சோதினி, ஏனையவற்றைத்துடைப்பத்திற் காண்க.

வாருதல்—கவர்தல், கொழித்தல்,கொள்ளல், தெள்ளுதல், வரன்றல், வளைத்தல், வார்தல், வெளவல்.

வார்—கச்சம், வகிர், வள்.

வாலின்கீழிடம்—வெருகம்.

வால்—இலாங்கூலம், உலோமம், கூலம், தோகை, புச்சம், வாலகம், வாலதி, வேசகம்.

வாழை—அம்பணம், அரம்பை, ஓசை, கதலி, கவர், சேகிலி, திரணபதி.

வாழ்த்து—ஆசி, ஆசிடை, கைவாரம், சோபனம், பல்லாண்டு.

வாழ்நாள்—ஆயுகம், ஆயுள், உறை.

வாளின்முட்டி—பாலிகை.

வாளுறை—வள்.

வாள்—அசி, உவணி, ஏதி, கடுத்தலை, கட்கம், கண்டகம், கண்டம்,கரவாளம், கரவாள், சாயகம், தூவத்தி, நவிரம், நாட்டம், நாந்தகம், புட்கரம், மட்டாயுதம், வசி, வஞ்சம், வள், வேணு, அன்றியும் வளைந்தவாளின்பெயர், கோணம், சிறுவாளின்பெயர், கண்டம், குறும்பிடி, சுரிகை, பத்திரம்.

வானம்பாடி—கம்புள், கலிங்கம், காருணி,சாதகப்புள், தற்பாடி,மேகப்புள்.

வானவில்—இந்திரதனு.

வான்மீகி—பிராசேதசன்,வாமலூருதநயன்.

வான்மீன்—உடு, உற்கை, ஒளி, சிதம், சுக்கை, சோதி, தாரகை, தாரா, தாரை, பம், மீன், அன்றியும், அசுவினிமுதலிருபத்தேழுக்கு நாளென்றுபெயர்.

வி

விசாகநாள்—அனிலநாள், காற்றுமுந்துநாள், சுளகு, சேட்டை, முறம், முற்றில், வைகாசி.

விசிறி—கால்செய்வட்டம், சாந்தாற்றி, சிற்றாலவட்டம், தாலவிருந்தம், பீலி, விசனம், வீசனம்.

விசுவாமித்திரன்-காதிமைந்தன்,கௌசிகன்.

விடம்—ஆலம், ஆலகாலம், கடு, காரி, காளகூடம், நஞ்சு.

விடியல் — உதயம், காலை, புலரி, வைகல், வைகறை.

விடுதல்—உகுத்தல், செலவிடல், தும்மல், துவைத்தல், நியதுதல், பெய்தல், மாறல், விடை, வியோகம்.

விடுத்தல்—உயிர்த்தல், ஒக்குதல், தீர்தல், நிவாரணம், நீக்கல், மோக்கம், மோசனம், வாரணம்.

விட்டிற்பறவை—சலபம், பதங்கம்.

விட்டுணு—அச்சுதன், அரவணைச்செல்வன், அரி, அரிந்தமன், அறிதுயிலமர்ந்தோன், அனந்தசயனன், உந்திபூத்தோன், உவணகேதனன், கடல்வண்ணன், கமலக்கண்ணன், கரியன், கருடகேதனன், கேசவன், கொண்டல்வண்ணன், சக்கரபாணி, சக்கராயுதன், சக்கிரி, சங்கமேந்தி, சநார்த்தனன், சலசலோசனன், சாரங்கபாணி, சீதரன், சௌரி, திருநாதன், துழாய்மௌலி, நாரணன், நாராயணன், நெடியோன், பச்சை, பஞ்சாயுதன், பதுமநாபன், பிரமன்றாதை, பின்னைகேள்வன், பீதாம்பரன், பூமிகொழுநன், பெம்மான், பெருமாள், மாதவன், மாயன், மால், முகுந்தன், முண்டகாசனை கேள்வன், வலவன், வனமாலி, வாசுதேவன், விண்டு, வேலையிற்றுயின்றோன், வைகுந்தநாதன், அன்றியுமுதலவதாரத்திலெடுத்தபெயர், மச்சன், - இரண்டாமவதாரத்திலெடுத்தபெயர், கூர்மன், - மூன்றாமவதாரத்திலெடுத்தபெயர், வராகன்,- நான்காமவதாரத்திலெடுத்தபெயர், நாரசிங்கன்,-ஐந்தாமவதாரத்திலெடுத்தபெயர், வாமனன், இந்திராவரசன், உலகளந்தோன், திரிவிக்கிரமன்,- ஆறாமவதாரத்திலெடுத்தபெயர், பரசிராமன்,-ஏழாமவதாரத்தி லெடுத்தபெயர், இராகவன், இராமன், காகுத்தன்,-எட்டாமவதாரத்திலெடுத்தபெயர், பலபத்திரராமன், குண்டலன், பலவும்,- ஒன்பதாமவதாரத்திலெடுத்தபெயர், அலகைமுலையுண்டோன், உலகுண்டோன், கண்ணன், கிருட்டிணன், கோவிந்தன், தாமோதரன், தேவகிமைந்தன், நந்தநந்தனன், பஞ்சவர்தூதன், புத்தன், மதுசூதனன், முராரி, பத்தாமவதாரத்தி லெடுத்தபெயர்,-கற்கி, அயக்கிரீவன்.

விட்டுணுகூத்து — அல்லியம், குடம், மரக்கால், மல்.

விட்டுணுகொடியும்வாகனமும்-கருடன், பஞ்சாயுதம், சக்கரம், சங்கு, தண்டு, தனு, வாள், இவற்றுட்டனுவின்பெயர், சார்ங்கம்.

விட்டுணுசமயத்தார்—பாகவதர், வைணவர்.

விட்டுணுபதம்—வைகுண்டம், வைகுந்தம்.

விட்டுணுபத்தவதாரம்—மச்சம், கூர்மம், வராகம், நாரசிங்கம், வாமனன், பரசிராமன், இராமன், பலபத்திராமன், கண்ணன், கற்கி.

விட்டுணுமனைவிகள்—இலக்குமி, பூமிதேவி, புதல்வர்பெயர், பிரமன், மன்மதன், அன்றியு மிராமாவதாரத்திலிவனுக்குமனைவி, சீதை, புதல்வர், குசன், இலவன், அன்றியுமிவன் மோகினியாகிக் கையிலேந்திய சிவனிந்திரியத்தாற் பிறந்தபிள்ளை, ஐயனார்.

விண்வீழ்கொள்ளி—உற்கை.

விதை—காழ், பரல், பீசம், வித்து.

வித்தியாதாருலகு—சேடி, சேணி.

வித்தியாதரர்—கேசரர், விஞ்சையர்.

விநாயகன் — அங்குசபாசமேந்தி, அம்பிகைதநயன், அரிமருகன், ஆகுவாக

னன், இறைமகன், ஈசன்மைந்தன், ஏகதந்தன், ஏரம்பன், ஐங்கரன், ஒற்றைக்கொம்பன், கங்கைபெற்ரேன், கணபதி, கயமுகன், கரிமுகன், காமன்மைத்துனன், கௌரிசேயன், நால்வாயன், பாசாங்குசன், முக்கண்ணன், முன்ஞேன், மூத்தோன், விக்கினேச்சுரன்.

விநாயகன்வாகனம்—பெருச்சாளி.

விபூதி—ஏமம், ஓமப்பொடி, காப்பு, திருநீறு, பூதி, விசிதம்.

வியாசன் — கிருட்டிணன், துவைபாயனன், பராசரன்மைந்தன், புலத்தியன்.

வியாழம்—அந்தணன், அமைச்சன், அரசன், ஆசான், ஆணடளப்பான்,குரு, சிகண்டிசன், சீவன், சுரகுரு, தாராபதி, தெய்வமந்திரி, நற்கோள், பிரகற்பதி, பீதகன், பொன், மறையோன், வேதன், வேந்தன்.

விரலிறை—தோரை, பிறங்கு, பொறி, வரி, வரை.

விரல்—அங்குலி, இவற்றுட்பெருவிரல், அங்குட்டம், கடைவிரல், கனிட்டம்.

விரிவு—அகலம், இடம்பாடு, விசாலம், விபுலம், வியல்.

விருச்சிகவிராசி—தெறுக்கால், தேள், பறப்பன்.

விருந்து—மகமுறை.

விலங்கினுட்கொம்பிலாவிலங்கு—குமரம்.

விலங்கினுளிலைநுகர்விலங்குணவு—குளகு.

விலங்கின்கூட்டம்—கணம், குலம்,சாலம், யூதம், வியூகம், விருந்தம்.

விலங்கின்கொம்பு — உலவை, கோடு, சிருங்கம், மருப்பு, விடாணம்.

விலங்கின்படுக்கை—சேக்கை, பட்டம், பணை, பண்ணை, பாழி, போத்து.

விலங்கின்பொது—குரங்கம், மா, மான், மிருகம், இவற்றினுண் பொதுப்பெயர், ஆண், பெண்பொதுப்பெயர், பிணவல், பிணு, பெண்.

விலங்கின்வகுப்பு—அணில், ஆடு,குறும்பாடு, செம்மறியாடு, வெள்ளாடு, எருது, எருமை, எலி, காரொலி, ஒட்டகம், கத்தூரிப்பிள்ளை, கரடி, கவரிமா, கழுதை, கோவேறுகழுதை, காட்டா, கிரி, குதிரை, குரங்கு, சிங்கம்,நரி, நாய், செந்நாய், நீர்நாய், நாவிப்பிள்ளை, பசு, பன்றி, முட்பன்றி, புலி, புல்வாய், பூனை, பெருச்சாளி, மரை, மான், முசு, முயல், மூஞ்சூறு, யாளி, யானை, இவைதத்தம்வரியிற்காண்க.

வில்—கார்முகம், கொக்கரை, கொடுமரம், கோதண்டம், சராசனம், சாபம், சானகம், சிந்துவாரம், சிலை, தடி, தவர், தனு, துரோணம், முனி, வேணு, அன்றியுஞ்சிவன்வில், பிநாகம், திருமால்வில், சார்ங்கம், அருச்சுனன்வில், காண்டீபம்.

வில்லின்குதை—குலை, தாறு.

வில்வமரம்—கூவிளம், கூவிரம், கூவிளை, மாலூரம், மாவிளம், வில்லுவம்.

விவாகமில்லான்—பிரமசாரி.

விவாகம்—உபயமம், கடி, கலியாணம், கைப்பற்றல், தீவலஞ்செய்தல்,பரிணயம், மங்கலம், மணம், மன்றல், வதுவை, விதியுளி, வேட்டல்.

விழல்—விரணம்.

விழுங்கல் — நுகர்தல், நுங்கல், நொண்டல்.

விழுதல்—சோர்தல், நாலல், வீழ்தல்.

விளக்கு—இராவணம், ஒளி, சுடர், தீபம், தீபிகை.

விளக்குத்தண்டு—கம்பம், கௌசிகம், சுடர்நிலை, தளி, தீபமத்திகை, மல்லிகை.

விளாமரம்—கபித்தம், விளவு, வெள்ளில்.

விளையாட்டு—ஆடல், இலீலை, உண்டாட்டு, உப்பு, ஓரை, கிரீடை, கெடவரல், கேலம், கேளி, தகுளம், தொடலை, பண்ணை, விலாசனை, இவற்றுண் மகளிர்விளையாட்டு, உண்டாட்டு, உப்பு, ஓரை, கெடவரல், தொடலை, பண்ணை, பொய்தல், வண்டல்.

விளைவு—போகம், வளாவல்.

விறகு—இந்தனம், ஈமம், கட்டை, காட்டம், முருடு, முளரி, அன்றியு மோமவிறகின்பெயர், சமிதை, முளரி.

விற்றல்—கூறல், நொடை, பகர்தல், மாறல், விலை.

வினைதைநகர்—கோலம்.

வினாவலுக்கெதிர்மொழி—விடை.

வினாவலும்விடையுங்கூடல்—சல்லாபம்.

வினாவல்—கடாவல், வினவல்.

வினாவெழுத்து—ஆ, எ, ஏ, ஓ, யா.

வீ

வீடு—அகம், ஆகாரம் இடம், இடவகை, இல், இல்லம், உறையுள், கிரகம், குலம், கேகம், சதனம், சரணம், சேர்பு, தாமம், நகர், நிகாயம், நிகேதனம், நிசாந்தம், நிவேசனம், பதி, பவனம், பாத்தி, புக்கில், மந்திரம், மனை, மாடம், மாளிகை, வசதி, வயின், இவற்றுட்பார்ப்பார்வீடு, அகாரம்.

வீட்டிறப்பு — இறவு, இறை, வளவி, தாழ்வாரத்தின் பெயர், ஆரோகணம், சோபானம்.

வீட்டின்மேலுலாவும்வெளி— அரமியம், நிலாமுற்றம்.

வீட்டுத்திரம்—தூலம், அன்றியுஞ்சுவர்ப்புறத்துநீண்டவுத்திரத்தின்பெயர், சுற்றுவாரி, தாழ், துடை, முகடு, விடங்கம்.

வீட்டுமாசாரியன்— கங்கைமைந்தன், காங்கேயன், சந்தனுமுன்மகன், தாலகேதனன், தெய்வவிரதன், பிரமசாரி, வன்னி, வீரன்.

வீணைக்கருவி—கலம், கின்னரம், கோடவதி, கோட்டம், தண்டு, மாடகம், வல்லகி, விபஞ்சிகம், அன்றியுநிறைநரம்புள்ளது, பண், குறைநரம்புள்ளது, திறம், எழுநரம்புள்ளது, இன்னிசை.

வீணைமுறுக்காணி—குப்பி, மாடகம்.

வீணையினரம்பு—குரல், கோல், தந்திரி, நாடி, இவையெழுவகைப்படும், குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம்.

வீணைவலிக்கட்டு—திவவு.

வீணைவாசித்தல்—கொளுந்துதல், நடவல், மீட்டுதல்.

வீதி—செப்பம், தெள்ளல்.

வீமன் — இடும்பிகொழுநன், கதாயுதன், கீசகாரி, குந்திபுதல்வன், பகாருநவயிரி, பாண்டுபுத்திரன், மடங்கற்கொடியோன், மாருதி, வாயுமைந்தன், விருகோதரன்.

வீரபத்திரன் — அழற்கண்வந்தோன், உக்கிரன், உமைமகன், ஐங்கரற்கிளையோன், குரோதன், சிங்கத்தோளுடையோன், சிம்புளானோன், சிறுவிதிமகதலைசிதைத்தோன், சுடர்விழியோன், செக்கர்வானிறத்தோன், தக்கன்மகஞ்சிதைத்தோன், பத்திரைகேள்வன்,

யானைமுகவற்கிளையோன், வெஞ்சிலைச்செல்வன்.

வீரம்—சாகசம், சூரம், சேவகம், சௌரியம், பராக்கிரமம், புறம், மறம், விறல், வீரியம்.

வீரரின்பெயர்-படைவீரரைக்காண்க.

வீழ்த்தல்—இருத்தல், விழுத்தல்.

வெ

வெட்கம்—இருளி, இலச்சை, உட்கல், உட்கு, சமழ்த்தல், சமழ்ப்பு, நாணம், நாண், மறுத்தல், மானம், வட்கல், வெள்கல்.

வெட்சி — குல்லை, சிந்துரம், செச்சை, சேதாரம்.

வெட்டல் — இறுத்தல், எருக்குதல், எறிதல், எற்றல், கடிதல், கண்டித்தல், காய்தல், சேதித்தல், தடிதல், தண்டித்தல், தறித்தல், துணித்தல், துண்டித்தல், துமித்தல், பகுந்திடல், பரிதல்.

வெட்டிவேர்—இருவேலி, பீதகம், மூலகந்தம், வேரி.

வெட்பாலைமரம்—கிரிமல்லிகை, குடசம்.

வெண்கலம்—உறை, கஞ்சம், தாரம்.

வெண்காயம்—காயம், அன்றியும், வெள்வெண்காயம், அரிட்டம், இலசுனம், ஈரவெண்காயத்தின்பெயர், சுகாந்தம், பலாண்டு.

வெண்ணொச்சி—சிந்துவாரம், நிர்க்குண்டி.

வெண்பா—முதற்பா, வெள்ளை, இதற்கிராகம், சங்கராபரணம்.

வெண்மை—அரிணம், அருச்சுனம், அவதாதம், கம், கவுரம், குருகு, குருத்து, சிதம், சுக்கிலம், சுசி, சுதை, சுப்பிரம், சுவேதம், தவளம், நரை, பாண்டரம், பாண்டு, பாண்டுரம், பால், வால், விசதம், விளர், வெளிறு, வெள்ளி, வெள்ளை, அன்றியுஞ்சிறு வெண்மையின்பெயர், தூசரம்.

வெயில் — ஆதபம், ஊழ், என்று, எல், என்றூழ், ஒளி, கோடை.

வெளி—செண்டு, மன்றம், மன்று, வயல், வெடி, வெள்ளிடை.

வெளிப்படல்—மன்றுபடுதல்.

வெள்ளம்—ஓதம், நீத்தம், பிரளயம், பெருக்கு, வாரி, இதனோட்டம், கோலம்.

வெள்ளரி—உருவாரம்.

வெள்ளாடு — காராடு, கொச்சை, பள்ளை, வற்காலி, வெள்ளை, இதன்குட்டி, வெள்ளை.

வெள்ளாட்டுக்கடா — உதள், சகலகம், சாகம், செச்சை, மோத்தை.

வெள்ளி—இரசிதம், ஈனனம், களதவுதம், தாரம், துருவண்ணம், வங்கம், வெண்டாது, வெண்பொன்.

வெறியாட்டாளன்-முருகன், வேலன்.

வெறுப்பு — அயர்வு, அரதி, அவாவின்மை, உவட்டல், உவர்த்தல், உவர்ப்பு, ஒல்லாமை, காய்ப்பு, கைத்து, நவ்வாமை, பிறழ்தல், பொருந்தாமை, மா, முனைவு, வீறு, வேண்டாமை.

வெற்றி — அடல், ஆடு, ஆணை, குடுமி, கொற்றம், சயம், படிவம், புகல், முல்லை, வலன், வாகை, விசயம், வித்தர்ப்பு, விறப்பு, விறல், வெற்றம், வென்றி.

வெற்றிமாலை—வாகை.

வெற்றிலை—தாம்பூலம், திரையல், துடம்பை, மெல்லிலை.

வெற்றிலைக்கொடி—இலைக்கொடி, தாம்பூலவல்லி, தாம்பூலி, நாகவல்லி.

வெற்றிலைமூக்கரிகத்தி-குளிரி, குளிர்.

வே

வேகமுள்ளோன்—கவனன்.

வேங்கைமரம் — கணி, திமிசு, திமில் பிரசாரம்.

வேசி—கணிகை, சூளை, பயனிலாள், பரத்தை, பொதுமகள், பொருட்பெண்டு, வரைவின்மாது, விலைமகள், வேசை.

வேடர் — ஆவியர், கானவர், கிராதர், குறவர், குன்றவர், கூளியர், கொலைஞர், சவரர், சிலவர், சில்லர், திரியர், பாவமூர்த்திகள், புல்லர், புளிஞர், பொறையிலார், மறவர், மாகுலவர், முருடர், வனசரர், வியாதர்.

வேடர்வீதி—பக்கணம், வாடை.

வேட்டை—ஆகேடகம், பாபத்தி.

வேண்டல்—இரதி, நேர்தல்.

வேதநூலுணர்ப்போன் — அத்தியாபகன்.

வேதநூற்பொருள் — அருத்தபாகை, ஞானபாகை, கருமபாகை, இதனுட்பம், உபநிடதம்.

வேதமார்க்கம் — வைதிகம், அம்மார்க்கத்தினடப்போர், வைதிகர்.

வேதம்—அத்தியாயம், அந்தணர்வாக்கு, ஆதிநூல், ஆரணம், எழுதாக்கிளவி, ஒத்து, சாகை, சுருதி, நிகமம், மறை, முன்னூல், இவைநான்காம், இவற்றுண்முதல்வேதம், இருக்கு, பவுடிகம், இரண்டாம்வேதம், தைத்திரியம், யசுசு, மூன்றாம்வேதம், கீதவேதம், கௌசிகம், சாமம், நான்காம்வேதம், அதர்வணம்.

வேதனைசெய்வோன்—அருந்துதன்.

வேம்பு—நிம்பம், பிசிதம், பிசுமந்தம், மாலுகம்.

வேர்—சடை, சிவை, தூர், மூலம்.

வேர்வை—கசிவு, சுவேதம், வியர்த்தல்.

வேலமரம்—உடை, குடை.

வேலி—இளை, காவல்.

வேல் — அயில், ஆரணம், உடம்பிடி, எஃகம், குந்தம், சத்தி, சூலங்கள், விட்டேறு, அன்றியுங்கைவேலின் பெயர், கப்பணம், சத்திரம், தோமரம்.

வேவு—ஒற்று, வே.

வேவுகாரர் — ஒற்றர், சாரணர், சாரர், வேயர், வேய்கள்.

வேள்வியின்பெயர் — யாகத்தைக்காண்க.

வேறுபடுத்தல்—விகற்பித்தல்.

வேற்றுமை—அந்தரம், திரிபு, பங்கம், பின்னம், பேதம், மாற்றம், விகடம், விகற்பம், விகாரம், விதிர்தம், விபரீதம், விருபம், விரோதம், வில்லங்கம், வீற்று, வேறுபாடு.

ஐ

வைகாசிமாதம்—மாதவம், வைகாசம்.

வைகையாறு—வேகவதி.

வைக்கோல்—பலாலம், வழுது, வை.

வைசியர்—அயனூருவில்வந்தோர், இருபர், இளங்கோக்கள், எட்டியர், சிவேபியர், செட்டியர், தருமக்கிழவர், தனாளர், தானிகர், தேசிகர், தொன்றிகர், நாய்கர், பாதர், மன்னர்பின்னர், முத்தொழிலோர், வணிகர், வாணிகர், இவர்தொழிலான்மூவகையர், கோவைசியர், தனவைசியர், பூவைசியர்.

வைடூரியம்—வாலவாயசம்.

வைத்தியர் — ஆமாத்தியர், ஆயுள்வேதியர், ஆரியர், பண்டிதர், பிடகர், மருத்துவர்.

ஔ

வௌவால் — அஞ்சலிகை, ஆவாலம், துரிஞ்சில், வாவல்.

இரண்டாவது

பொருளகராதி முற்றிற்று.

மூன்றாவது

தொகையகராதி.

அருட்டொகை வகைவகுத் துலகனைத் ... ...து
மங்கையி லேந்திய தயையிற்கா... ... ... த்
திருட்டொகை துடைத்தெழும் பருதியைப்... ... ... போ
லெங்கணும் விளக்கிய வோரொன்பா... ... ... ன்
மருட்டொகை விலகெனப் பணிந்தேத் ... ...தி
வழக்கொடு புலமையோர் முன்னுரைத் ... ... த
பொருட்டொகை வகைப்பட விரித்துணர்த்தி ... ...ப்
புகலுதுந் தொகையக ராதியென் ... ... றே

அங்க

அகிற்கூட்டு, ரு—சந்தனம், கர்ப்பூரம், எரிகாசு, தேன், ஏலம்.

அக்கினி, ரு—இராகம், கோபம், காமம், சடம், தீபனம்.

அங்கம், ச—தேர், கரி, பரி, காலாள், இவைசதுரங்கமெனப்படும்.

அங்கம், ரு—திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம், இவைபஞ்சாங்கமெனப்படும்.

அங்கம், ய—மலை, யாறு, நாடு, ஊர், மாலை, பரி, கரி, முரசு, கொடி, செங்கோல், இவையரசர்க்குரிய தசாங்கம்.

அங்கயோகம், அ—இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி, இவற்றுள், இயமம், கொல்லாமை, மெய்மைகூறல், கள்ளாமை, பிறர்பொருளிச்சியாமை, இந்திரியமடக்கல்,—நியமம், தவம், தூய்மை, தத்துவநூலோர்தல், மனமுவந்திருத்தல், தெய்வம்வழிபடல்,—ஆதனம், சுவத்திகம், கோமுகம், பதுமம், வீரம், கேசரி, பத்திரம், முத்தம், மயூரம், சுகம், அவையாவன, சுவத்திகம், தொடைக்கு முழங்காற்குநடுவேயிரண்டுள்ளங்காலையுஞ்செலுத்தியிறுமாந்திருத்தல்,—கோமுகம், சகனப்பக்கத்தி விருகாற்பரட்டையுமாறவைத்தவ்விருகாற்பெருவிரலைக்கைப்பிடித்திருத்தல்,—பதுமம், இருதொடைமேலு மிரண்டுள்ளங்காலையுமாறித்தோன்றவைத்தல்,—வீரம், வலத்தொடையி லிடக்காற்பரட்டைச்சேர்த்தி யிறுமாப்புற்றிருத்தல்,—கேசரி, பிசத்தின்கீழ்ச்சீவனியிடத்துப் பரட்டைவைத்திட முழங்கையைமுழந்தாளில்வைத் தங்குலிவிரித்

து நாசியைப்பார்த்திருத்தல்,—பத்திரம், பீசத்தில்கிழ்ச்சிவனியிடத் திருகாற்பாட்டையும்வைத் தவ்விருபதத்தையுமிருகையாலிறுகப்பிடித் தசையாதிருத்தல்,—முத்தம், இடக்காற்பரட்டாற் சிவனியையமுத்தி வலக்காற்பரடப் பரட்டின்கிழுந்தவிருத்தல்,—மயூரம், முழங்கையிரண்டுமுந்திப் புறத்திலழுந்தப்புவியிற் கையூன்றிக்காணீட்டித் தலைநிமிர்ந்திருத்தல்,—சுகம், சுகமுந்திடமுமெவ்வாறிருக்கி னெய்துமோ வவ்வாறிருத்தல்,—பிராணாயாமம், பிராணவாயுவை இரேசகபூரக கும்பகஞ்செய்தல், —பிரத்தியாகாரம், உபாதியை நீக்கி யுண்ணோக்கல்,—தாரணை, கண்டம், இதயம், நெற்றி, கபாலம், நாபி, இவற்றிலொன்றிற் சந்ததம், சிந்தைவைத்தல்,—தியானம், ஐம்புலமடக்கிச்சிவயோகஞ்சேர்தல்,—சமாதி, இந்திரியமுதலிய தத்துவசேட்டைகட் கேதுவா யாக்கையுணின் றவற்றோடுகூடினு மவற்றிற் பற்றின்றியிருக்கு மான்மாவாகிய தன்னைத் தான்காண்டல்.

அச்சுவினிதேவர், உ.

அரசச்சின்னம், உ௰க—முடி, குடை, கவரி, தோட்டி, முரசு, சக்கரம், யானை, கொடி, மதில், தோரணம், நீர்க்குடம், பூமாலை, சங்கு, கடல், மகரம், ஆமை, இணைக்கயல், சிங்கம், தீபம், இடபம், ஆசனம்.

அரசர், ௩—சேரன், சோழன், பாண்டியன்.

அரசர்க்குக்குழு, ரு—மந்திரியர், புரோகிதர், சேனாபதியர், தூதர், சாரணர்.

அரசர்க்குத்துணைவர், அ — மந்திரியர், கருமாதிகாரர், சுற்றம், கடைகாப்பாளர், நகரமாக்கள், படைத்தலைவர், இவுளிமறவர், யானைவீரர்.

அரசர்க்குறுதிச்சுற்றம், ரு—நட்பாளர், அந்தணாளர், மடைத்தொழிலோர், மருத்துவக்கலைஞர், நிமித்திகப்புலவர்.

அரசியல், சு—படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண்.

அரசியல், சு—அறநிலையறம், மறநிலையறம், அறநிலைப்பொருள், மறநிலைப்பொருள், அறநிலையின்பம், மறநிலையின்பம், அவையாவன, தத்தம்வருணத்திற்பிறழாது நிலைபெறப் பாதுகாத்தலறநிலையறம்,—திறைமிட்டேட்டகைவென்று செஞ்சோற்றுக் கடன்கழியாதாரைத் தண்டித்துக் குறைவுறச்செய்தன் மறநிலையறம்,—நெறிவழிநின்று தந்தநிலையினுள் முயன்று பெறுபொருளறநிலைப்பொருள், —பகைஞர்பொருளுந் திறைப்பொருளுஞ் சூதில் வெல்பொருளு மறநிலைப்பொருள்,—பருவமுங்குலமு மொழுக்கமுங் குணமு மொத்த கன்னிகையைத் திவெட்டிலலத் திருத்த லறநிலையின்பம்.—ஏறுதழுவியும் வில்விற்றொடுத்துவம்பிறுங்கமெய்து மிவ்வாறு மாறுடைநெறியின் மணத்தன் மறநிலையின்பம்.

அரண், ச—மலை, காடு, மதில், கடல்.

அலங்காரம், ௩௰ரு — தன்மை, உவமை, உருவகம், தீவகம், பின்வருநிலை, முன்னவிலக்கு, வேற்றுப்பொருள் வைப்பு, வேற்றுமை, விபாவனை, ஒட்டு, அதிசயம், தற்குறிப்பேற்றம், ஏது, நுட்பம், இலேசம், நிரனிறை, ஆர்வமொழி, சுவை, தன்மேம்பாட்டுரை, பரியாயம், சமாயுதம், உதாத்தம், அவநுதி, சிலேடை, விசேடம், ஒப்புமைக்கூட்டம், விரோதம், புகழ்நிலை, புகழாப்புகழ்ச்சி, நிதரிசனம், புணர்நிலை, பரிவருத்தனை, வாழ்த்து, சங்கிரணம், பாவிகம்.

அலங்காரம், ௱—உவமை, இயைபின்மை, புகழ்பொருளவமை, எதிர்நிலை, உருவகம், திரிபு, பலபடப்புனைவு, நினைப்பு, மயக்கம், ஐயம், ஒழிப்பு, தற்குறிப்பு, உயர்வுநவிற்சி, ஒப்புமைக்கூட்டம், விளக்கு, பின்வருவிளக்கு, தொடர்முழுவுவமை, எடுத்துக்காட்டுவமை, காட்சி, வேற்றுமை, உடனிகழ்ச்சி, இன்மைநவிற்சி, சுருங்கச்சொல்லல், கருத்துடையடை, கருத்துடையடைகொளி, பலபொருட்சொற்றொடர், புனைவிலிபுகழ்ச்சி, புனைவுளிவிளைவு, பிறிதினவிற்சி, வஞ்சப்புகழ்ச்சி, வஞ்சப்பழிப்பு, எதிர்மறை, முரண்விளைந்தழிவு, பிறிதாராய்ச்சி, காரணவாராய்ச்சி. கூடாமை, தொடர்பின்மை, தகுதியின்மை, தகுதி, வியப்பு, பெருமை, சிறுமை, ஒன்றற்கொன்றுதவி, சிறப்புநிலை, மற்றதற்காக்கல், காரணமாலை, ஒற்றைமணிமாலை, மாலைவிளக்கு, மேன்மேலுயர்ச்சி, நிரனிறை, முறையிற்படர்ச்சி, மாற்றுநிலை, ஒழித்துக்காட்டு, உறழ்ச்சி, கூட்டம், வினைமுதல்விளக்கு, எளிதின்முடிபு, விறல்கோள், தொடர்நிலைச்செய்யுட் பொருட்பெறு, தொடர்நிலைச்செய்யுட்குறி, வேற்றுப்பொருள்வைப்பு, மலர்ச்சி, கற்றோர்நவிற்சி, உய்த்துணர்வு, பொய்த்தற்குறிப்பு, வனப்புநிலை. இன்பம், துன்பம், அகமலர்ச்சி. இகழ்ச்சி, வேண்டல், இலேசம், குறிநிலை, அரதனமாலை, பிறிதின் குணம்பெறல், தொல்லுருப்பெறல், பிறிதின்குணம்பெறாமை, தன்குணமிகை, மறைவு, பொதுமை, மறையாமை, சிறப்பு, இறை, நுட்பம், கரவுவெளிப்படுப்பு, வஞ்சநவிற்சி, குறிப்புநவிற்சி, வெளிப்படைநவிற்சி, யுத்தி, உலகவழக்குநவிற்சி, வல்லோர்நவிற்சி, மடங்குதனவிற்சி, தன்மைநவிற்சி, நிகழ்வினவிற்சி, வீறுகோள், மிகுதிநவிற்சி, பிரிநிலைநவிற்சி, விலக்கு, விதி, ஏது.

அவத்தை, ௫—சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம்.

அளவு, ௪—எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல்—தெறித்தலோடைந்தெனவுங்கூறுப.

அளவை, ௮ — காட்சி, அனுமானம், உவமானம், ஆகமம், அருத்தாபத்தி, அபாவம், ஐதிகம், சம்பவம், அவையாவன,காணல்காட்சி,—புகையைக்கண்டு நெருப்புண்டெனலனுமானம்,—மரை பசுப்போலெனலுவமானம்,—பெரியோர்வாய்ச்சொலாகமம்,—பகலுண்ணான் பருத்திருப்பானென்புழியிரவிலொளித்துண்பா னெனவுணர்தலருத்தாபத்தி,— முன்னுமில்லைபின்னுமில்லை ஒன்றினொன்றில்லையொருகாலத்துமில்லை யெனலபாவம்,—இம்மரத்திற்பேயுளதென்பதைதிகம், ஆயிரத்தினூறுண்டெனல் சம்பவம்.

அறத்துறப்பு, ௮—ஐயப்படாமை,விருப்பின்மை, வெறுப்பின்மை, மயக்கமின்மை, பழியைநீக்கல்,அழிந்தோரைநிறுத்தல், அறம்விளக்கல், பேரன்புடைமை.

அறம், ௨—இல்லறம், துறவறம்.

அறம், ௩௰௨—ஆதுலர்க்குச் சாலை, ஓதுவார்க்குணவு, அறுசமயத்தார்க்குண்டி, பசுவுக்குவாயுறை, சிறைச்சோறு, ஐயம், தின்பண்டநல்கல், அறவைச்சோறு, மகப்பெறுவித்தல். மகவுவளர்த்தல், மகப்பால்வார்த்தல், அறவைப்பிணஞ்சுடுதல், அறவைத்தூரியம், சுண்ணம், நோய்மருந்து, வண்ணார், நாவிதர், கண்ணாடி, காதோலை, கண்மருந்து, தலைக்கெண்ணெய், பெண்போகம், பிறர்துயர்காத்தல், தண்ணீர்ப்பந்தல், மடம், தடம், சோலை, ஆவுரிஞ்சுதறி, விலங்கிற்குணவு, ஏறு

விடுத்தல், விலைகொடுத்துயிர்காத்தல், கன்னிகாதானம்.

அநுபந்தம், ௪—விடயம், சம்பந்தம், பிரயோசனம், அதிகாரி.

அன்னுவயவிலக்கணம், ௫—விசேடணம், விசேடியம், கருத்தா, கருமம், கிரியை.

ஆ

ஆச்சிரமம், ௪ — பிரமசாரி, இல்வாழ்வோன், வானப்பிரத்தன், சந்நியாசி, இவருட்பிரமசாரி, ஆசிரியனிடத்தோதிவிரதங்காத்து விவாகமின்றியிருப்போன்,—இல்வாழ்வோனில்லறத்தின் வழாதில்லாளோடுங்கூடி வாழ்வோன்,—வானப்பிரத்தன், இல்லந்துறந்தில்லாளோடாயினுந்தனித்தாயினும் வனத்திற்றவஞ்செய்வோன்,—சந்நியாசி முற்றத்துறந்தோன்.

ஆதாரம், ௬ — மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை, இவற்றிற்கு முறையேயிடம், குதம், குய்யம், நாபி, இதயம், அடிநா, நெற்றி.

ஆயுதவகை, ௨—அத்திரம், சத்திரம், இவற்றுட்கைவிடுமாயுதமத்திரம், கைவிடாவாயுதஞ்சத்திரம்.

ஆன்மா, ௨—சிவான்மா, பரமான்மா, அவையாவன, சரீராவச்சின்னவான்மா, சிவான்மா, இதரபதார்த்தானவச்சின்னவான்மா, பரமான்மா.

இ

இசை, ௩ — மந்தரம், மத்திமம், தாரம்.

இசை, ௭—குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம், இவற்றுண்மிடற்றுற்குரல், நாவிணுற்றுத்தம், அண்ணத்தாற்கைக்கிளை, சிரத்தாலுழை, நெற்றியாலிளி, நெஞ்சால்விளரி, மூக்காற்றாரம், இங்ஙனந்தனித்தனிப்பிறக்கும், இவையே, யேழ்சுரமெனவும் வீணையிலேழ் நரம்பெனவும் படும், இவற்றிற்கோசையுவமை, மயில், இடபம், ஆடு, கொக்கு, குயில், குதிரை, யானை,—சுவையுவமை, பால், தேன், கிழான், நெய், ஏலம், வாழை, மாதுளங்கனி, — வாசனையுவமை, மௌவல், முல்லை, கடம்பு, வஞ்சி, நெய்தல், பொன்னுவிரை, புன்னை,—அக்கரம், ஆ அ, ஈ இ, ஊ உ, ஏ எ, ஐ இ, ஓ ஒ, ஔ உ, — மாத்திரை, நான்குகுரல், நான்குதுத்தம், இரண்டுகைக்கிளை, மூன்றுழை, நான்கிளி, மூன்றுவிளரி, இரண்டுதாரம்,— இவற்றாலெழுபாலைபிறக்கும், அவையாவன, குரலேகுரலாயிற்செம்பாலை,—துத்தமேகுரலாயிற்படுமலைப்பாலை, — கைக்கிளையேகுரலாயிற் செவ்வழிப்பாலை,— உழையே குரலாயினரும்பாலை,—இளியேகுரலாயிற்கொடிப்பாலை,—விளரியேகுரலாயின் விளரிப்பாலை,—தாரமேகுரலாயின்மேற் செம்பாலை,—இவற்றுட் செம்பாலைக்குக் கொடிப்பாலை வலிது, கொடிப்பாலைக்கு விளரிப்பாலையுமேற்செம்பாலையுவலிது, அன்றியுந்தாரத்துளுழையுமுழையுட் குரலுங்குரலுளிளியுமிளியுட்டுத்தமுந்துத்தத்துள்விளரியும் விளரியுட்கைக்கிளையும் பிறப்பதுதகுதி,—இவற்றிற்கிறைவர், விசுவாமித்திரன், சமதக்கினி, சந்திரன், சூரியன், கௌதமன், காசிபன், ஈசன், இவற்றிற்குயிர், ஈசன்.

இடம், ௩—தன்மை, முன்னிலை, படர்க்கை.

இதிகாசம், ௨ — பாரதம், இராமாயணம்.

இரதம், ௯ — சிங்காரம், வீரியம், பெருநகை, கருணை, இரௌத்திரம், குற்சை, சாந்தம், அற்புதம், பயம்.

இராகத்தகுதி, ௪ — இடம், செய்யுள், குணம், காலம், இவற்றுளிடம்பற்றியவிராகமைந்திணையிராகம், — செய்யுட்பற்றியவிராகத்துள், வெண்பாவிராகஞ் சங்கராபரணம், அகவலிராகந்தோடி, கலியிராகம், பந்துவராளி, கலித்துறையிராகம்பைரவி, தாழிசையிராகந்தோடி, விருத்தவிராகங் கலியாணி, காம்போதி, மத்தியமாவதிபலவும், உலாவிராகஞ்சௌராட்டிரம், தோடைய விராகஞ் சௌராட்டிரம், நாட்டை, மங்களராகம் மங்களகௌசிகம், தேவாரத்திராகம், பூபாளம், பிள்ளைக்கவிராகங் கேதாரகௌளம், பரணிராகங்கண்டாரவம், —குணம்பற்றியவிராகத்துள், இரக்கராகம், ஆகரி, கண்டாரவம், நீலாம்பரி, பியாகடம், புன்னாகவராளி, துக்கவிராகம், இரக்கராகங்களன்றி வராளியின்மேலாம், மகிழ்ச்சியிராகம், காம்போதி, சாவேரி, தன்னியாசி, யுத்தவிராகம், நாட்டை, —காலம்பற்றிய விராகத்துள், வசந்தகாலவிராகம், காம்போதி, அசாவேரி, தன்னியாசி, அன்றியுமாலையிராகங்கலியாணி, காபி, கன்னடம், காம்போதி, யாமராகம், ஆகரி, விடியலிராகம், இந்தோளம்,இராமகலி, தேசாட்சரி, நாட்டை, பூபாளம், உச்சியிராகம், சாரங்கம், தேசாட்சரி, அன்றியும், ஆகரி, இந்தோளம், இராமகலி, சாரங்கம், பூபாளநீக்கிநின்றமற்றவையெக்காலத்தும் பொதுமைய.

இராகம், ௩உ — பைரவி, தேவக்கிரியை, மேகவிரஞ்சி, குறிஞ்சி, பூபாளம், வேளாவளி,மலகரி,பௌளி, சீராகம், இந்தோளம், பல்லதி, சாவேரி, படமஞ்சரி, தேசி, இலலிதை,தோடி, வசந்தம், இராமக்கிரியை, வராளி, கைசிகம், மாளவி, நாராயணி, குண்டக்கிரியை, கூர்ச்சரி, பங்காளம், தன்னியாசி, காம்போதி, கௌளி, நாட்டை, தேசாட்சரி, காந்தாரி, சாரங்கம், இவற்றுள்,பைரவி, புருடவிராகம் பிராமணசாதி, இதின்மனைவிகள், தேவக்கிரியை, மேகவிரஞ்சி, குறிஞ்சி, அதிதேவதையீசன், — பூபாளம், புருடவிராகம், பிராமணசாதி, இதின்மனைவிகள், வேளாவளி, மலகரி, பௌளி, அதிதேவதைதிருமால், —சீராகம், புருடவிராகம், அரசசாதி, இதின்மனைவிகள், இந்தோளம், பல்லதி, சாவேரி, அதிதேவதைசரச்சுவதி, — படமஞ்சரி, புருடவிராகம், அரசசாதி, இதின்மனைவிகள், தேசி,இலலிதை,தோடி, அதிதேவதை; இலக்குமி, —வசந்தம், புருடவிராகம், வைசியசாதி, இதின்மனைகள், இராமக்கிரியை, வராளி, கைசிகம், அதிதேவதைசூரியன், —மாளவி, புருடவிராகம், வைசியசாதி, இதின்மனைவிகள், நாராயணி, குண்டக்கிரியை, கூர்ச்சரி, அதிதேவதை, நாரதன், —பங்காளம், புருடவிராகம், சூத்திரசாதி, இதின்மனைவிகள், தன்னியாசி, காம்போதி, கௌளி, அதிதேவதைவிநாயகன், —நாட்டை, புருடவிராகம், சூத்திரசாதி, இதின் மனைவிகள், தேசாட்சரி, காந்தாரி, சாரங்கம், அதிதேவதைதும்புருவன், — இவையன்றிப் பலவகைப்படவழங்கு மிராகம் பலவுளவவைகூறிற்பெருகும்.

இராசி, ௰உ — மேடம், இடபம், மிதுனம், கர்க்கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம், இவற்றுண் முன்னான்மூத்தராயணராசி, பின்னான் தக்கணு

யனராகி, அன்றியு முதல்மூன்றுங் கடைமூன்றுமேறுயிராகி, இடையாறு யிறங்குமுயிராகி.

இருமை, உ—இம்மை, மறுமை

இலக்கணம், ரு — எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி.

இலிங்கம், ரு—பிருதுவிலிங்கங்காஞ்சியில், அப்புலிங்கம் திருவானைக்காவில், தேயுலிங்கந் திருவண்ணாமலையில், வாயுலிங்கஞ் சீகாளத்தியில், ஆகாயலிங்கஞ் சிதம்பரத்தில், இவையே பஞ்சபூத வடிவங்களான பிரதானபஞ்சலிங்கம்.

இழிச்சொல், ச—குறளை, பொய், கடுஞ்சொல், பயனிலசொல்.

ஈ

ஈச்சுரன்குணம், அ—தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்ற லுடைமை, வரம்பிலின்பமுடைமை, இவை சைவாகமத்துட் கூறப்பட்டன, அன்றியும், வரம்பின்ஞானம், வரம்பில்காட்சி, வரம்பிலின்பம், வரம்பிலாற்றல், நாமமின்மை, கோத்திரமின்மை, ஆயுவின்மை, இடையூறின்மை, என்பன ஆருகதராற்கூறப்பட்டன.

ஈச்சுரன் பிரபுத்துவ சாமர்த்தியகுணம், ங—கர்த்தத்துவம், அகர்த்தத்துவம், அன்னியதாகர்த்தத்துவம்.

ஈச்சுரன்முகம், ரு — ஈசானம், தற்புருடம், அகோரம், வாமம், சத்தியோசாதம், இவற்றுள், ஈசானமனுத்துமாளுதல், தற்புருடங்காத்தல், அகோரமழித்தல், வாமம்விளக்கல், சத்தியோசாதந்தோற்றுவித்தல்.

ஈச்சுரன்முக்கியகுணம், சு — சருவஞ்ஞத்துவம், சருவேசத்துவம், சருவநியந்திருத்துவம், சருவாந்தரியாமித்துவம், சருவகர்ப்பிதத்துவம், சருவசத்தித்துவம், அன்றியும், தன்வயத்தனாதல், முதலிலனாதல், உடம்பிலனாதல், எல்லாநலமுமுளனாதல், எங்கும் வியாபகனாதல், எவற்றிற்குங் காரணனாதல்.

உ

உட்பகை, சு — காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம்.

உண்டி, ச—உண்டல், தின்றல், நக்கல், பருகல், அவையாவன, சோறுமுதலியவுண்டல், கறிமுதலியதின்றல், தேன்முதலியநக்கல், நீர்முதலியபருகல்.

உபசாரம், ௰சு—தவிசளித்தல், கைகழுநீர்தரல், கால்கழுநீர்தரல், முக்குடிநீர்தரல், நீராட்டல், ஆடைசாத்தல், முப்புரிநூறரல், தெய்வைபூசல், மலர்சாத்தல், மஞ்சனரிசிதூவல், நறும்புகைகாட்டல், விளக்கிடல், கருப்பூரமேற்றல், அமுதமேற்றல், அடைகாய்தரல், மந்திரமலரா லருச்சித்தல்.

உபநிடதம், ௱௰௨ — சீருத்திரம், பிரகதாரண்ணியம், சுவேதாசுவதரம், கைவல்லியம், காலாக்கினி, கடம், வல்லி, காத்தியாயனம், பிரமம், நாராயணம், அங்கிசம், பரமாங்கிசம், பாற்கரம், பிரமபிந்து, ஆருணி, அமிர்தபிந்து, பகுவபஞ்சம், பிரமசாபாலம், தோசோபிந்து, வாசியாநீயம், போதாயநீயம், ஆசுவலாயநீயம், சாங்கியாயநீயம், வாசிராயநீயம், சௌனகியம், சிவசங்கற்பம், சிரவணம், பாராகம், கிம்புரோடியம், மாண்டூகம், முண்டிடரம், மௌண்டிடரம்.

உபாயம், ௪—சாமம், தானம், பேதம், தண்டம், அவையாவன, சமாதானத் தோடாயினும் பொருள்கொடுத்தாயினும் பிறரைப்பிரித்தாயினும்படை கொண்டாயினுங்காரியங்கொள்ளவி ந்நான்குமரசர்க்குரியனவாம்.

உயிர்வேதனை, ௰௨ — அனல், சீதம், அசனி, புனல், வாதம், ஆயுதம், விடம், மருந்து, பசி, தாகம், பிணி, மூனி வருமை.

உருத்திரர், ௰௧—மாதேவன், அரன், உருத்திரன், சங்கரன், நீலலோகிதன், ஈசானன், விசயன், வீமதேவன், பவோற்பவன், காபாலி, சௌமியன்.

உரை, ௪—கருத்துரை, பதவுரை, பொழிப்புரை, அகலவுரை, அவையாவன, செய்யுட்கருத்துரைத்தலே கருத்துரை, சொற்றொறும் பதப்பயனுரைத்தலே பதவுரை, பொருட்டொகுத்துரைத்தலே பொழிப்புரை, இலக்கணமுமிலக்கியமு மெடுத்துக் காட்டிப் பொருள்விரித் துரைத்தலே யகலவுரை.

உரையிலக்கணம், ௫ — பதம், பதப்பொருள், வாக்கியம், வினு, விடை.

உலகம், ௩ — பூமி, அந்தரம், சுவர்க்கம்,அன்றியும், பூலோகம், பரலோகம், பாதாளலோகமென்பாருமுளர்.

உலகம், ௰௪ — மேலுலகேழுங் கீழுலகேழும், மேலுலகாவன, பூலோகம், புவலோகம், சுவலோகம், சனலோகம், தபோலோகம், மகாலோகம், சத்தியலோகம்—கீழுலகாவன அதலம், விதலம், சுதலம், தராதலம், இரசாதலம், மகாதலம், பாதாளம்.

உலோகம், ௫—பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம், இவையே பஞ்சலோகம்.

உலோகம், ௭ — செம்பொன், வெண்பொன், கரும்பொன், செம்பு, ஈயம், வெண்கலம், தரா.

உவர்ப்பு, ௯—ஆசியம், இரதி, அரதி, சோகம், பயம், குர்ச்சை, இவைமுறையே, சிரிப்பு, ஆசை, வெறுப்பு, சோர்வு, அச்சம், அருவருப்பு.

ஊ

ஊறு, ௮—வெம்மை, தண்மை, மென்மை, வன்மை, திண்மை, நொய்மை, சீர்மை, சர்ச்சரை, இவையே தொடப்படும் பொருட்கெண்குணம்.

ஊறுபாடு, ௪—எறிதல், குத்தல், வெட்டல், எய்தல்.

எ

எச்சம், ௨—பெயரொச்சம், வினையெச்சம்.

எச்சம், ௮—குறள், கூன், ஊமை, செவிடு, குருடு, முடம், உறுப்புமயக்கம், உறுப்பில்பிண்டம்,இவையெண்வகை யுடற்குறை.

எழுத்துத்தானம், ௫— பாலன், குமரன், அரசன், விருத்தன், மரணம், இவற்றிற்குமுறையே யெழுத்துக்களாவன, அஆ, இஈஐ, உஊஔ, எஏ, ஒஓ பாட்டுடைத்தலைவன், பேரெழுத்தைப்பாலதானமாகக்கொண்டெண்ணப்படும், இவற்றுண் முன்னையமூன்று நன்மை பயக்கும், பின்னையவிரண்டுந் தீமைபயக்கும்.

ஐ

ஐச்சுவரியம், ௮—இராசாங்கம், மக்கள், சுற்றம், பொன், மணி, நெல், வாகனம், அடிமை.

ஐம்புலநுகர்ச்சியினிறப்பன, ௫ — சுவையாலிறப்பதுமீன், நாற்றத்தால் வண்டு, பரிசத்தால்யானை, ஓசையாலசுணம், ஒளியால்விட்டில்.

ஒ

ஒருமை, ௧ — இறையுணர்வு.

க

கடல், ௭ — உவர்நீர், நன்னீர், பால், தயிர், நெய், கருப்பஞ்சாறு, தேன்.

கடுகம், ௩ — சுக்கு, திப்பிலி, மிளகு, இவையே திரிகடுகெனப்படும்.

கடைப்படுதானம், ௭ — ஆர்வம், புகழ், அச்சம், கைம்மாறு, காரணம், கண்ணோட்டம், கடப்பாடு.

கணக்குவகை, ௪ — தொகை, பிரிவு, பெருக்கு, கழிவு.

கணம், ௮ — நிலம், நீர், மதி, இயமானன், சூரியன், தீ, வாயு, ஆகாயம், இவற்றுண் முன்னர் நான்கு நன்று, பின்னர் நான்குங்கலகம், நிரை நிரை நிரை நிலக்கணம், நேர் நிரை நிரை நீர்க்கணம், நிரைநேர் நேர்மதிக்கணம், நேர் நேர்நேர் உயிர்க்கணம், நேர் நிரைநேர்சூரியகணம், நிரைநேர் நிரை தீக்கணம், நேர்நேர் நிரை வாயுக்கணம், நிரைநிரைநேர் ஆகாயக்கணம்.

கணம், ௰௮ — அமரர், சித்தர், அசுரர், தைத்தியர், கருடர், கின்னரர், நிருதர், கிம்புருடர், காந்தருவர், இயக்கர், விஞ்சையர், பூதர், பைசாசர், அந்தரர், முனிவர், உரகர், ஆகாயவாசிகள், போகபூமியர்.

கணிதம், ௮ — சங்கலிதம், விபகலிதம், குணனம், பாகாரம், வர்க்கம், வர்க்கமூலம், கனம், கனமூலம், இவற்றுள், சங்கலிதம் கூட்டல், — விபகலிதம் கழித்தல், — குணனம் பெருக்கல், — பாகாரம் பங்கிடல், — வர்க்கம் சமமாகிய விரெண்ணின் பெருக்கம், அஃதாவது நிலத்தைச் சமமாக நாற்கோணஞ்செய்தல், — வர்க்கமூலம் அவ்வர்க்கத்தொகையினின்றதன் மூலமாகிய வரம்பறிதல், — கனம் சமமாகிய மூவெண்ணின் பெருக்கம், அஃதாவது, குழியைச் சமமாகப் பன்னிருகோணப்படுத்தல், - கனமூலம் அக்கனத்தொகையினின்றதன் மூலமாகிய வொருமூலையறிதல்.

கண்டம், ௯ — கீழ்விதேகம், மேல்விதேகம், வடவிதேகம், தென்விதேகம், வடவிரோபதம், தென்னிரோபதம், வடபரதம், தென்பரதம், மத்திமகண்டம், இவையே நவகண்டம்.

கதி, ௪ — தேவகதி, மக்கட்கதி, விலங்கின்கதி, நரககதி.

கந்தம், ௨ — நற்கந்தம், துர்க்கந்தம்.

கரணம், ௪ — மனம், புத்தி, அகங்காரம், சித்தம்.

கரணம், ௰௧ — பவ, பாலவ, கௌலவ, தைதுலை, கரசை, வணசை, பத்திரவா, சகுனி, சதுர்ப்பாத, நாகவா, கிமிஸ்துக்கினம்.

கருமபூமிக்குரிமை, ௬ — வரைவு, தொழில், வித்தை, வாணிகம், உழவு, சிற்பம்.

கருமேந்திரியம், ௫ — வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம்.

கருவுளமைப்பு, ௬ — பேறு, இழவு, இன்பம், பிணி, மூப்பு, சாக்காடு.

கலைஞானம், ௬௰௪ — அக்கரவிலக்கணம், இலிகிதம், கணிதம், வேதம், புராணம், வியாகரணம், நீதிசாத்திரம், சோதிடசாத்திரம், தருமசாத்திரம்,

யோகசாத்திரம், மந்திரசாத்திரம், சகுனசாத்திரம், சிற்பசாத்திரம், வைத்தியசாத்திரம், உருவசாத்திரம், இதியாசம், காவியம், அலங்காரம், மதுரபாடனம், நாடகம், நிருத்தம், சத்தப்பிரமம், வீணை, வேணு, மிருதங்கம், தாளம், அந்திரபரீட்சை, கனகபரீட்சை, இரதபரீட்சை, கசபரீட்சை, அசுவபரீட்சை, இரத்தினபரீட்சை, பூமிபரீட்சை, சங்கிராமவிலக்கணம், மல்லயுத்தம், ஆகருடணம், உச்சாடனம், வித்துவேடணம், மதனசாத்திரம், மோகனம், வசிகரணம், இரசவாதம், காந்தருவவாதம், பைபீலவாதம், கவுத்துகவாதம், தாதுவாதம், காருடம், நட்டம், முட்டி, ஆகாயப்பிரவேசம், ஆகாயகமனம், பரகாயப்பிரவேசம், அதிரிசயம், இந்திரசாலம், மகேந்திரசாலம், அக்கினித்தம்பம், சலத்தம்பம், வாயுத்தம்பம், திட்டித்தம்பம், வாக்குத்தம்பம், சுக்கிலத்தம்பம், கனத்தம்பம், கட்கத்தம்பம், அவத்தைப்பிரயோகம்.

கவி, ௪—ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம், இவற்றுள், பொருளடிபாவணிமுதலிய கொடுத்துமற்றொருவன் பாடுகவென்றவுடனே பாடுவோனாசுகவி,—பொருட்செல்வம், சொற்செல்வம், தொடை, தொடைவிகற்பஞ்செறியவுருவகமுதலிய வலங்காரந்தோடின்னோசைத்தா யமுதமுறப் பாடுவோன் மதுரகவி,—மாலைமாற்று, சுழிகுளம், ஏகபாதம், சக்கரம், எழுகூற்றிருக்கை, காதைகரப்பு, கரந்துறை, தூசங்கொளல், வாவனஞாற்று, பாதமயக்கு, பாவின்புணர்ப்பு, கூடசதுக்கம், கோமூத்திரி, ஓரெழுத்தினம், ஒற்றெழுத்துநீர்ந்த வொருபொருட்பாட்டு, சித்திரப்பா, விசித்திரப்பா, விநவுத்தரம், சருப்பதோபத்திரம், எழுத்துவருத்தன மிவைமுதலிய மிறைக்கவிதெரிந்து பாடுவோன், சித்திரக்கவி, — மும்மணிக்கோவை, பன்மணிமாலை, மறம், கலிவெண்பா, தசாங்கம், மடலூர்தல், கிரீடை, இயல், இசை, கூத்து, பாசண்டத்துறை, இவைமுதலிய விரித்துப்பாடுவோன் வித்தாரக்கவி.

கன்னிகை, ௫—அகலியை, துரோபதை, சீதை, தாரை, மண்டோதரி.

கா

காதலர், ௩ — புருடன், தோழன், மகன்.

காலம், ௩—இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்.

காலம், ௬—பருவத்தைக்காண்க.

கி

கிரகம், ௯—ஆதித்தன், சோமன், அங்காரகன், புதன், பிரகற்பதி, சுக்கிரன், சனி, இராகு, கேது, இவையேநவக்கிரகங்களெனப்படும்.

கு

குணம், ௩—சத்துவம், இரசசு, தமசு, அவையாவன, ஞானம், அருள், தவம், பொறை, வாய்மை, மேன்மை, மோனம், ஐம்பொறியடக்கலென வெட்டுஞ்சத்துவம்,—மனவூக்கம், ஞானம், வீரம், தவம், தருமம், தானம், கல்வி, கேள்வியென வெட்டுமிரசசு,—பெருண்டி, நெடுந்துயில், சோம்பு, நீதிவழு, ஒழுக்கவழு, வஞ்சம், மறதி, பொய், கோபம், காமம், கொலை, இவைதமசு.

குணம், ௪—ஆடூக்குணம், அறிவு, நிறை,

ஓர்ப்பு, கடைப்பிடி,—மகடூஉக்குணம், நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு.

குரவர், ௫—அரசன், உபாத்தியாயன், தந்தை, தேசிகன், மூத்தோன்.

குற்றம், ௩—காமம், வெகுளி, மயக்கம்.

குற்றம், ௫—கொட்டாவி, நெட்டை, குறுகுறுப்பு, கூன்கிடை, நட்டுவிழல்.

குற்றம், ௮—ஞானாவரணீயம், தரிசனாவரணீயம், வேதநீயம், மோகநீயம், ஆயு,நாமம், கோத்திரம், அந்தராயம்.

கூ

கூத்துவகை, ௨-தேசிகம், மார்க்கம்.

கே

கேள்வி, ௪—அறம், பொருள், இன்பம், வீடு, இந்நான்குங்கேட்டல்.

கேள்வி, ௫—அறம், பொருள், இன்பம், வீடு, இந்நாற்கேள்வியோடிவற்றின்வழிநிற்றல்.

கை

கைத்தொழில், ௫—எண்ணல், எழுதல், இலைகிள்ளல், பூத்தொடுத்தல், யாழ்வாசித்தல்.

கோ

கோசம், ௫—அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம், அவையாவன,உடல் அன்னமயகோசம், கருமேந்திரியமும் பிராணனும் பிராணமயகோசம், கருமேந்திரியமுமனமு மனோமயகோசம், ஞானேந்திரியமும் புத்தியும் விஞ்ஞானமயகோசம், அவித்தையானந்தமயகோசம்.

கௌ

கௌடம், ௫—கந்நகௌடம், கானகுப்சம், சாரசுவதம், உற்கலம், மைதிலை.

கௌவியம், ௫—கோசலம், கோமயம், பாலம், தயிர், நெய்.

ச

சக்கரவர்த்திகள், ௬—அரிச்சந்திரன், நளன், முசுகுந்தன், புருகுச்சன், புரூரவன், கார்த்தவீரியன், இவர்கள்மற்றொருவனைப்பணியாது, தாமணியாண்டோர்.

சதுரங்கம்—அங்கங்காண்க.

சத்தம், ௫—தோற்கருவி, துளைக்கருவி, நரப்புக்கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக்கருவி,இவையேசத்தத்துக்கைந்துகாரணம்.

சத்தி, ௩—இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி, இவற்றுளிச்சாசத்தியுயிர்க்கருணைசெய், ஞானசத்தி, கருமங்களையறிந்தூட்டல், கிரியாசத்தி, உலகங்களாக்கல்.

சத்தி, ௫—சிற்சத்தி, பராசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி, அவையாவன, உயிர்க்கொளியாகநிற்பதுசிற்சத்தி,—பிராணன்முதலியவாயுவாகநிற்பது பராசத்தி,—பஞ்சபூதமாநிற்பதிச்சாசத்தி,—ஐம்பொறியுணர்ச்சியாகநிற்பதுஞானசத்தி,—மற்றைவினைத்துணையாகநிற்பதுகிரியாசத்தி.

சமயம், ௬—வைரவம், வாமம், காளாமுகம், மாவிரதம், பாசுபதம், சைவம், அன்றியும் புறச்சமயமாவன, ௬, உலோகாயிதம், புத்தம், சமணம், மீமாஞ்சை, பாஞ்சராத்திரம், பாட்டாசாரியம்,

சயனம், ரு—இலவம்பஞ்சு, செம்பஞ்சு, வெண்பஞ்சு, மயிர், அன்னத்தூவி, இவற்றாற்செய்யப்பட்டவைவகை மெத்தை, இவையேபஞ்சசயனம்.

சா

சாதி, ச—ஆந்திரம், கன்னடம், திராவிடம், மகராட்டிரம்.

சாத்திரம், ௩—சாங்கியம், பாதஞ்சலியம், வேதாந்தம், இவைமுறையேகபிலர், பதஞ்சலி, வியாசரிம்மூவராற்கூறப்பட்டன, இவற்றையத்தியான்மீகநூலென்ப.

சாத்திரம், சு—வேதாந்தம், வைசேடிகம், பாட்டம், பிரபாகரம், பூருவமீமாஞ்சை, உத்தரமீமாஞ்சை.

சாந்துவகை, ச—பீதம், கலவை, வட்டிகை, புவி.

சி

சித்தர், கூ—சத்தியநாதர், சதோகநாதர், ஆதிநாதர், அநாதிநாதர், வகுளிநாதர், மதங்கநாதர், மச்சேந்திரநாதர், கடேந்திரநாதர், கோரங்கநாதர்.

சித்தி, அ—அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம், அவையாவன ஆன்மாப்போலாதலணிமா,—மகத்துவமாதலேமகிமா,—தன்னுடற்கண்டிப்பின்றாய்க் கண்டிப்புள்ளவற்றையுருவவல்லவனுதல் கரிமா,—இலகுத்துவமாதலேயிலகிமா,—வேண்டுவனவடைதலேபிராத்தி,—நிறையுளனுதலேபிராகாமியம்,—ஆட்சியுளனுதலேயீசத்துவம், —எல்லாந்தன்வசமாக்கவல்லனுதலேவசித்துவம்.

சிரஞ்சீவியர், எ—அசுவத்தாமன், மாபலி, வியாசன், அனுமான், விபீடணன், கிருபாசாரியன், பரசுராமன்.

சிவதத்துவம், ரு—சுத்தவித்தை, ஈச்சுரம், சாதாக்கியம், சத்தி, சிவம், அவையாவன, ஞானமேறிக் கிரியைகுறைந்தது சுத்தவித்தை,—ஞானங்குன்றிக் கிரியையுயர்ந்ததீச்சுரம்,—ஞானங் கிரியையொத்தது சாதாக்கியம்,—கிரியைநாடல் சத்தி,—ஞானம்மொன்றல் சிவம்.

சிவபூசையியல்பு, ச-சரியை, கிரியை, யோகம், ஞானம்.

சிவாகமம், உ௰அ—காமிகம், யோகசம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகத்திரம், அஞ்சுமான், சுப்பிரபேதகம், விசயம், நிசுவாசம், சுவாயம்புவம், அனலம், வீரம், இரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், விம்பம், புரோற்கீதம், இலளிதம், சித்தம், சந்தானசருவோத்தம், பாரமேச்சுரம், கிரணம், பேதம், வாதுளம்.

சிற்பத்தொழிற்குறுப்பு, ௰—கல், உலோகம், செங்கல், மரம், மண், சுதை, தந்தம், வண்ணம், கண்டசருக்கரை, மெழுகு.

சிற்பநூல், ௩௰உ—விச்சுவதருமம், விச்சுவேசம், விச்சுவசாரம், விருத்தம், தாவட்டம், நளம், மயம், அனுமான், பானு, கற்பாரியம், சிருட்டம், மானசாரம், வத்துவித்தியாபதி, பாராசரியம், அரிடிகம், சயித்தகம், வாத்துபோதம், வித்தாரம், இந்திரம், வச்சிரம், சவுமம், விச்சுவகாசிபம், மகதந்திரம், விசாலம், சித்திரம், காபிலகாலயூபம், நாமசங்கிதை, சாத்திகம், விச்சுவபோதம், ஆதிசாரம், வெகுச்சுருதம், மானபேதம்.

சீ

சீவதேகம், ௩—தூலம், சூக்குமம், காரணம்.

சிவாவத்தை, ௩—சாக்கிரம், சொப்ப னம், சுழுத்தி.

சு

சுடர், ௨—சூரியன், சந்திரன்.

சுடர், ௩ — சந்திரன், சூரியன், அக்கினி.

சுபம், அ—மங்கலங்காண்க.

சுப்பிரமணியர்பிரதானத்தலம், ௬—திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுகள், சோலைமலை.

சுரம், எ—ச, ரி, க, ம, ப, த, நி, அன்றியுமேழிசைகாண்க.

சுவை, ௬—கைப்பு, தித்திப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு.

சூ

சூதகம், ரு—சனனசூசம், மரணசூசம், சண்டாளநீரிற்றோய்தல், சுராபானம்பண்ணல், பொய்கூறல்.

சூரியர், ௰௨—தாத்துரு, சக்கரன், அரியமன், மித்திரன், வருணன், அஞ்சுமான், இரணியன், பகவான், திவச்சுவான், பூடன், சவித்திரு, துவட்டன், இப்பெயர் சித்திரைமாதமேடவிராசிமுதலொவ்வொருமாதத் தொவ்வோரிராசியிற்புகுந்து சூரியனுக்குமுறையேசெல்லுமென்பர், இவரே துவாதசாதித்தர்.

சூரியர்சந்திரர்முதலியவீதி, ௩—மேடவீதி, இடபவீதி, மிதுனவீதி, அவைதாம், இடபம், சிங்கம், மிதுனம், கடகம், நான்குமேடவீதி,—மீனம், மேடம், கன்னி, துலாம், நான்கு மிடபவீதி,—தனுசு, மகரம், கும்பம், விருச்சிகம், நான்கு மிதுனவீதி.

சே

சேனைத்தொகை, ௰ — பதாதி, சேனாமுகம், குமுதம், கணகம், வாகினி, பிரளயம், சமுத்திரம், சங்கம், அநிகம், அக்கோணி, அவையாவன, யானை க, தேர் க, குதிரை ௩, காலாள் ரு, இவைகூடியது பதாதி, பதாதி மும்மடி கொண்டதுசேனாமுகம், சேனாமுகமும்மடி குமுதம், குமுதமும்மடி கணகம், கணகமும்மடி வாகினி, வாகினி மும்மடி பிரளயம், பிரளயமும்மடி சமுத்திரம், சமுத்திரமும்மடி சங்கம், சங்கமும்மடி அநிகம், அநிகமும்மடி அக்கோணி.

சை

சைவம், ௰௬ — ஊர்த்தசைவம், அநாதிசைவம், ஆதிசைவம், மகாசைவம், பேதசைவம், அபேதசைவம், அந்தரசைவம், குணசைவம், நிற்குணசைவம், அத்துவாசைவம், யோகசைவம், ஞானசைவம், அணுச்சைவம், கிரியாசைவம், நாலுபாதச்சைவம், சுத்தசைவம்.

சொ

சொல், ச—பெயர், வினை, இடை, உரி.

த

தத்துவம், ௯௰௬ — ஆன்மதத்துவம் ௨௰ச, நாடி ௰, அவத்தை ரு, மலம் ௩, குணம் ௩, மண்டலம் ௩, பிணி ௩, விகாரம் அ, ஆதாரம் ௬, தாது எ, வாயு ௰, கோசம் ரு, வாயில் ௯, இவற்றுளான்மதத்துவமாவன, பூதம் ரு, புலன் ரு, ஞானேந்திரியம் ரு, கருமேந்திரியம் ரு, கரணம் ச, இவைதத்தம்வரியிற்காண்க.

தந்தையர், ரு — பிறப்பித்தோன், கற்

பித்தோன், மணமுடிப்பித்தோன், அன்னந்தந்தோன், ஆபத்துக்குதவினோன்.

தமிழ், ௩—இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ்.

தமிழ்நாடு, ௰௩—செந்தமிழ்நாடொன்று, இதற்கெல்லை, கருவூரின் கிழக்கு, மருவூரின்மேற்கு, வைகையாற்றின்றெற்கு மருதயாற்றின்வடக்கு, இதனைச்சூழ்ந்த கொடுந்தமிழ்நாடு ௰௨, தென்பாண்டி, குட்டம், குடம், கற்கா, வேண், பூழி, பன்றி, அருவா, அருவாவடதலை, சீதம், மலாடு, புனனாடு.

தயாவிருத்தி, ௰௪—களாபடனம், வியாதாகாரம், நிற்கததண்டனம், சந்தேகவாரணம், அன்னியகுணசகனம், பரதிருதூனயோகம், பாரர்த்ததேவப்பிரார்த்திதம், அவையாவன முறையே, கல்விபயிற்றல், துயர்தீர்த்தல், தண்டத்தினீக்கல், ஐயந்தேற்றல், பிறர்குணத்தழுக்காறின்றிப் பொறுத்தல், பிறராற் செய்யப்படுந் தீமைமறந்து நன்றிநினைத்தல், பிறர்க்குவேண்டித் தெய்வம்வழிபடல், இவையுயிர்க்கேழுபகாரம், அன்றியுஞ் சத்தாங்கோபகாரம், அன்னம், பானம், அம்பரம், மந்திரம், தாசபாலனம், காராமயத் திரிதயமோசனம், சவச்சேமம், அவையே, உணவு, பானம், உடை, இடம், அடிமைகாத்தல், சிறைநோய்மூன்றுந் தீர்த்தல், பிணமடக்கல், இவையுடற்கேழுபகாரம்.

தயாவிருத்தி, அ—பிறர்க்குப்பொருள் வரவையுவத்தல், பிறர்செல்வம்பொறுத்தல், பிறர்கருமத்திற்குடன்படல், தீமைக்கஞ்சல், பிறர்கரும முடிக்கவிழைதல், பிறனையந்தீர்த்தல், நன்மைகடைப்பிடித்தல், பிறர்துயர்க்கிரங்கல்.

தரு, ௫—அரிச்சந்தனம், கற்பகம், சந்தானம், பாரிசாதம், மந்தாரம்.

தருமநூல், ௰அ—மநு, அத்திரி, ஔரிதம், விட்டுணு, யாஞ்ஞுவற்கியம், உசனம், ஆங்கிரசம், யமம், ஆபத்தம்பம், சமவர்த்தம், காத்தியாயனம், பிரகற்பதி, பராசரம், வியாசம், சங்கலிதம், தக்கம், கௌதமம், சாதான்மம், வசிட்டம், இவற்றுட் சங்கலிதம் பொது, இவற்றுள், கிருதயுகத்தில், மநுமிருதியும், திரோதாயுகத்திற்கௌதமமிருதியும், துவாபரயுகத்திற்சங்கலிதமிருதியும், கலியுகத்திற் பராசரமிருதியுமுக்கியமாயிருக்கும்.

தா

தாது, எ—இரதம், இரத்தம், சுக்கிலம், மூளை, தசை, எலும்பு, தோல்.

தாயர், ௫—பாராட்டுந்தாய், ஊட்டுந்தாய், முலைத்தாய், கைத்தாய், செவிலித்தாய், அன்றியுமரசன்றேவி, குருவின்றேவி, அண்ணன்றேவி, தன்றேவியையீன்றாள், தன்னையீன்றாள்.

தாரணை. ௯—நாமதாரணை, வச்சிரதாரணை, மாயாதாரணை, சித்திரதாரணை, செய்யுட்டாரணை, நிறைவு குறைவாகிய வெண்பொருட்டாரணை, சத்ததாரணை, வத்துத்தாரணை, சதுரங்கதாரணை.

தாளம், ௫ — சச்சற்புடம், சாசற்புடம், சட்பிதாபுத்திரிகம், சம்பத்துவேட்டம், உற்கடிதம், இவற்றுட் சச்சற்புடமாவது, குரு ௨, இலகு ௧, புலுதம் ௧, ௨ ௰ ௪, ஆகமாத்திரை அ, இஃதீசன்சத்தியோசாத முகத்திற்பிறந்தது, பிரமசாதி,—சாசற்புடமாவது, குரு ௧, இலகு ௨, குரு ௧, ௨ | ௨, ஆகமாத்திரை ௬, இஃதீசன்வாமமுகத்தி

ற்பிறந்தது அரசசாதி,— சட்பிதாபுத்திரிகமாவது, புலுதம் க, இலகு க, குரு உ, இலகு க, புலுதம், க, ஃ।ஃஃ।ஃ, ஆகமாத்திரை ௰உ, இஃதீசன கோரமுகத்திற்பிறந்தது, வைசியசாதி,— சம்பத்துவேட்டமாவது, புலுதம் க, குரு ௩, புலுதம், க, ஃ, ஃஃஃ, ஃ, ஆகமாத்திரை ௰உ, இஃதீசன்றற்புருடமுகத்திற் பிறந்தது, சூத்திரசாதி,—உற்கடிதமாவது, குரு, ௩, ஃஃஃ, ஆகமாத்திரை சு, இஃதீசானமுகத்திற் பிறந்தது, சங்கிரமசாதி.

தாளம், எ—துருவம், மட்டியம், உருபகம், சம்பை,திரிபுடை, அடதாளம், ஏகதாளம், இவற்றுள், துருவத்திற்கு, இலகு க, குரு க, துரிதம் க, । ஃ ௦,இதற்குச்சுரம், சரிகம, கரிசரி கரிசரிகம,—மட்டியத்திற்கு, இலகு க, துரிதம் க, இலகு க, ।௦।, இதற்குச்சுரம், சரிகரி, சரி, சரிகம,—உருபகத்திற்கு, இலகு க, துரிதம் க, ।௦, இதற்குச்சுரம், சரி, சரிகம,—சம்பைக்கு, இலகு க, அநுதுரிதம் க, துரிதம் க, ।, ‿௦, இதற்குச்சுரம், ச, ரிக, சரிசரி, கமா,—திரிபுடைக்கு, துரிதம் ௩, அநுதுரிதம் க, ௦௦௦‿, இதற்குச்சுரம், கரிகசரிகம,— அடதாளத்திற்கு, இலகு க, துரிதம் உ, இலகு க, ।௦௦। இதற்குச்சுரம், சரிகா, சாரிகா, மா, மா, — ஏகதாளத்திற்கு இலகு க, ।, இதற்குச்சுரம், ச்ரிகம,—சம்பைக்குப் பிர்மசாதி தவிர நான்குசாதியுமுள திரிபுடைக்கு மூன்று விராமமுமோரநுதுரிதமுமானவொரேசாதி, இலகுவிருந்தாலைந்து சாதியுமுள, மற்றையைந்து தாளங்கட்கு மைந்து சாதியுமுள, அவற்றை யவ்வவசாதியேகதாளலகு, அக்கரங்களாலறியுமாறு,பிரமசாதியிலகுவிற்கு நான்கக்கர காலம், அரசசாதியிலகுவிற்கு மூன்றக்கர காலம், ஆறக்கரகாலமுமென்ப, வைசியசாதியிலகுவிற் கேழக்கரகாலம், சூத்திரசாதியிலகுவிற் கைந்தக்கரகாலம், சங்கிரமசாதியிலகுவிற் கொன்பதக்கரகாலம், எச்சாதியிலு மநுதுரிதமோரக்கரகாலமுந் துரிதமிரண்டக்கரகாலமுமாம்.

தாளம், கூ—அரிதாளம், அருமதாளம், சமதாளம், சயதாளம், சித்திரதாளம், துருவதாளம், நிவிர்தகாளம், படிமதாளம், விடதாளம், இவையே நவசந்திதாளம்.

தாளப்பிராணம், ௰ — காலம், மார்க்கம், கிரியை, அங்கம், கிரகம், சாதி, கலை, இலயை, யதி,பிரததாரம்,இவையே தாளதசப்பிராணமென்ப, இவற்றுட்காலப்பிரமாணம், ௰, அவையாவன, கணம், இலவம், காட்டை, நிமிடம், துடி, துரிதம், இலகு, குரு, புலுதம், காகபதம், இவற்றுட் கணம், தாமரையிதழ் நூறடுக்கி யதிலோரிதழி லூசிசெலுத்துங்காலம்,— கணமெட்டுக்கொண்ட திலவம், — இலவமெட்டுக்கொண்டது காட்டை,— காட்டையெட்டுக்கொண்டது நிமிடம்,—நிமிடமெட்டுக்கொண்டது துடி,—துடியிரண்டு கொண்டது துரிதம்,—துரிதமிரண்டு கொண்டதிலகு, — இலகிரண்டு கொண்டது குரு,—இலகு மூன்றுகொண்டது புலுதம்,—குருவிரண்டுகொண்டது காகபதம்,—மார்க்கம்-சு, தக்கணம், வார்த்திகம், சித்திரம், சித்திரதரம், அர்த்தசித்திரம், அதிசித்திரம், இவற்றுள், எட்டுமாத்திரை யோர்கலையாகக்கொண்டது தக்கணம்,—நான்குமாத்திரை யோர்கலையாகக்கொண்டது வார்த்திகம்,—இரண்டுமாத்திரை யோர்கலையாகக்கொண்டது சித்திர

ம், — ஒருமாத்திரை யோர்களையாக க்கொண்டது சித்திரதரம், — அரை மாத்திரை யோர்களையாகக்கொண்ட து அர்த்தசித்திரம்,—கான்மாத்திரை யோர்களையாகக்கொண்ட ததிசித்தி ரம், — நொடியளவுமாத்திரை,—கிரி யை ௨, மார்க்கம், தேசிகம், இவற்று ண் மார்க்கம் ௮, இவற்றுணி சத்தம் ௪, சசத்தம் ௪, நிசத்தமாவது ஆவா பம், நிட்கிராமம், விட்சேபம், பிரவே சம்,—சசத்தமாவது துருவம், சம்மி யம், தாளம், சன்னிபாதம்,-தேசிகம் ௮, துருவகம், சர்ப்பிணி, கிருடியை, பதுமினி, விசர்ச்சிதை, விட்சிப்த்தம், பதாகை, பதிதம், இவற்றினிலக்கிய ங்களை நூலானுணர்க,—அங்கம் ௬, அவையாவன, ◡ ○ | ஓ ௐ +, இவைமு றையே பிறை, மதி, கணை, வில், பாம் பு, புள்ளடி, முறையேயிவற்றின்பெ யர், அநுதுரிதம், துரிதம், இலகு,குரு, புலுதம், காகபதம், இவற்றினுற்பத் திகளும், பரியாயநாமங்களும், வண் ணங்களும், அதிதேவதைகளும்,மாத் திரைகளும், அத்தாங்குலப் பிரமாண ங்களும், காதைப் பிரமாணங்களும், நூலானுணர்க,—கிரகம், ௪, அதீதம், அநாகதம், சமம், விடமம், இவற்றுட் குரன்முன்னுந் தாளம்பின்னும் வரு வததீதம்,—தாளமுன்னுங்குரல்பின் னும்வருவ தநாகதம்,—குரலுந்தாள முமொத்துவரிற் சமம்,—குரலுந்தா ளமுமுன்னும் பின்னுங்கலந்து வரு வதுவிடமம், சாதி, ரு, சதுரசிரம், தி ரசிரம் மிசிரம், கண்டம், சங்கீரணம், இவைமுறையே, பிரமவரச வைசிய சூத்திர சங்கிரமம், இவற்றை முற்கூ றியவிலகு, அக்கர காலங்களாலறிவ து,—களை, ௩, ஏககளை, துவிகளை, ச துர்க்களை, இவற்றுளக்கரகாலமாயுங் கிரியையோடும் வருவது ஏககளை,— இதனையிரட்டித்துக் கிரியை யோடுவ ருவது துவிகளை,—இதனையிரட்டித்து க்கிரியையோடுவருவது சதுர்க்களை,- இலயம் ௩, விளம்பம், மத்திமம், துரி தம், இவற்றுளக்கரகாலமாய்க் கிரி யையோடு வருவது விளம்பம்,—இத னையிரட்டித்துக் கிரியையோடு வருவ து மத்திமம்,-இதனையிரட்டித்துக்கிரி யையோடு வருவது துரிதம்,—யதி ௬, சமம், விடமம், மிருதங்கம், வேதமத் தியம், கோபுச்சம், சுரோதோவகம், இவற்றுள், நெட்டங்கமாயினுங் குற் றங்கமாயினுமொரேவிதமாய் வருவ து சமயதி, ◡◡, | |,—எல்லாவங்க முங்கிரமமின்றிக் கலந்துவருவது வி டமயதி, ஓ◡○,—முதலிலுங் கடையி லுங் குற்றங்கமுமிடையி னெட்டங்க மும்வருவதுமிருதங்கயதி,◡○ஓஓ○◡,- முதலிலுங்கடையிலு நெட்டங்கமுமி டையிற் குற்றங்கமும்வருவது வேதம த்தியயதி, | ◡ |,—முதலிலேநெட்ட ங்கமுமீற்றிலே குற்றங்கமுமாய் நே ர்ந்துவருவது கோபுச்சயதி, ௐஓ|○◡,- முதலிலேகுற்றங்கமுமீற்றிலே நெட் டங்கமுமாய்வருவது, சுரோதோவக ம், ◡○|ஓஓ,—மற்றைய விவ்விலக்க ணத்தாற்கண்டுணர்க.

தானம், ௩—தலைப்படுதானம், இடைப் படுதானம், கடைப்படுதானம், அவை யாவன, அறத்தானீட்டிய பொருளை முக்குற்ற மற்ற நற்றவத் தோரைக் கொள்கெனப்பணிந்து குறையிரந்து தம்முள்ளமுவந்தீதல், தலைப்படுதா னம்,—ஆதுலர், குருடர், மாதர், முதற் பிறர் சிறுமையைப்பற்றி மனமிரங்கி யீவதிடைப்படுதானம்,— புகழார்வங் கைமாறச் சங்கண்ணோட்டங்காரண ங்கடைப்பா டிவற்றைப்பற்றி யீவது கடைப்படுதானம்.

தானை, ௪—தேர், கரி, பரி, வாள், வில், வேல்.

தி

திக்கு, ௮—கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு, வடக்கு, வடகிழக்கு, இவையேயட்டதிக்கு.

திக்கு, ௰ — மேற்சொன்னவையன்றி மேலுங்கீழுங்கூட்டித் தசதிசையென்ப, கிழக்குக் கருடதிசை, தென்கிழக்குப் பூனைத்திசை, தெற்குச் சிங்கத்திசை, தென்மேற்குச் சுனகதிசை, மேற்கு நாகத்திசை, வடமேற் கெலித்திசை, வடக்கு யானைத்திசை, வடகிழக்கு முயற்றிசை, மேல் விசும்புத்திசை, கீழ் பாதாளதிசை.

திக்குப்பாலகர், ௮—கிழக்காதிமுறையே, இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன், இவர்க்குமுறையே குறிகளாவன, கொடி, புகை, சியம், நாய், இடபம், கழுதை, யானை, காகம்.

திக்குயானைகள், ௮—கிழக்காதிமுறையே, ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சாருவபூமம், சுப்பிரதீபம், இவையேயட்டதிக்கயம், இவற்றிற்குமுறையே பிடியானைகளாவன, அப்பிரமை, கபிலை, பிங்களை, அனுபமை, தாமிரபருணி, சுதந்தி, அஞ்சனை, அஞ்சனாவதி.

திணை, ௨—உயர்திணை, அஃறிணை, இவற்றுள் உயர்திணை, மக்களுந், தேவரும், நரகருமாம், அஃறிணை, மற்றவுயிருள்ளனவுமில்லனவுமாகிய யாவுமாம்.

திணை, ரு—குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல், இவற்றுள், மலைச்சார்பு, குறிஞ்சி, நீரில்லாக்கடுநிலம் பாலை, காட்டுச்சார்பு முல்லை, வயற்சார்பு மருதம், கடற்சார்பு நெய்தல்.

திதி, ௰ரு — பிரதமை ௧, விதியை ௨, திரிதியை ௩, சதுர்த்தி ௪, பஞ்சமி ரு, சட்டி ௬, சத்தமி ௭, அட்டமி ௮, நவமி ௯, தசமி ௰, ஏகாதசி ௰௧, துவாதசி ௰௨, திரயோதசி ௰௩, சதுர்த்தசி, ௰௪, இவற்றிற் சுக்கிலபக்கத்திற்சுத்தமென்றுங் கிருட்டிணபக்கத்திற்பகுளமென்றுங்கூட்டுக, பதினைந்தாந் திதியாவது, சுக்கிலபக்கத்திற்குப்பௌர்ணமி, கிருட்டிணபக்கத்திற்கு, அமாவாசியை.

திராவிடம், ரு — திராவிடம், ஆந்திரம், கன்னடம், மகாராட்டிரம், கூர்ச்சரம்.

திரவியம், ரு—மலைபடுதிரவியம், காடுபடுதிரவியம், நாடுபடுதிரவியம், நகர்படுதிரவியம், கடல்படுதிரவியம், இவற்றுண் மலைபடுதிரவியம், மிளகு, கோட்டம், அகில், தக்கோலம், குங்குமம்,—காடுபடுதிரவியம், இருல், தேன், அரக்கு, மயிற்பீலி, நாவி,—நாடுபடுதிரவியம், செந்நெல், சிறுபயறு, கரும்பு, வாழை, செவ்விளநீர்,— நகர்படுதிரவியம், அரசன், பித்தன், மந்திரி, யானை, கண்ணாடி,— கடல்படுதிரவியம், உப்பு, முத்து, பவளம், சங்கு, ஒக்கோலை.

திருமாலவதாரம், ௰ —மச்சம், கூர்மம், வராகம், நாரசிங்கம், வாமனன், பரசுராமன், இராமன், பலபத்திரன், கண்ணன், கற்கி, இவற்றிற்குக் காரணம், வேதத்தைத்திருடிக் கடலிலொளித்தசோமுகாசுரனெனு மிராக்கதனைக்கொல்லமச்சாவதாரம்,—கடலைக்கடையும்போது மந்தரமலையைத்தாங்கக் கூர்மாவதாரம்,—பூமியைப் பாயாக விரணியாக்கன் சுருட்டினதை விரிக்கவுமவனைக் கொல்லவும் வரா

காவதாரம்,-இப்பழிவாங்கச் சருவதேவவணக்கம் விலக்கினவவன் றம்பியிரணியகசிபனைக்கொல்ல நரசிங்காவதாரம்,-இந்நான்கவதாரத்திற்குந்தாயரில்லை, மாவலியையடக்கக் காசிபனுந் திதியுந் தந்தைதாயாக வாமனவதாரம்,—அரசராற் ருழ்த்தப்பட்ட பார்ப்பார்நிமித்த மவ்வரசரைக் கொல்லச் சமதக்கினியு மிரேணுகையுந் தந்தைதாயாகப்பரசுராமாவதாரம்,-இராவணன் முதலிய விராக்கதரைக் கொல்லத் தசரதனுங் கௌசலையுந் தந்தைதாயாக விராமாவதாரம்,—பிரலம்பன்முதற் பல விராக்கதரைக் கொல்ல வசுதேவனுந் தேவகியு முரோகணியுந் தந்தைதாயாகப் பலபத்திர ராமாவதாரம்,— பாரதநடத்த வசுதேவனுந் தேவகியுந் தந்தைதாயாகக் கண்ணனவதாரம்,—உலகங்களைச் சங்கரிக்கக் கற்கியவதாரம்.

திருமாலவதாரம், ௰௫— சனகன், சனந்தனன், சனுதன், சனற்குமாரன், நரநாராயணன், கபிலன், இடபன், நாரதன், அயக்கிரீவன், தத்தாத்திரேயன், மோகினி, யாகபதி, வியாதன், தன்வந்திரி, பௌத்தன்.

திருமாலாயுதம், ௫—சக்கரம், தனுசு, வாள், தண்டு, சங்கம்.

தீ

தீ, ௩—உயிரிலுள்ளதீ, உதரத்துள்ளதீ, சினத்திலெழுந்தீ, அன்றியும், வேதாக்கினி ௩, காருகபத்தியம், தக்கணுக்கினியம், ஆகவனீயம்.

தீக்குணம், ௰-பொய்சொல்லல், கோட்சொல்லல், கோபித்துச்சொல்லல், பயனிலசொலல்,இந்நான்கும்வாக்கின்றீக்குணம், களவாடப்போதல், வறிதே தொழில்செயல், கொலைசெயல், இம்மூன்றுங்காயத்தீக்குணம்,கொலைநினைக்கை, காமப்பற்று, ஆசை, இம்மூன்று மனத்தீக்குணம்.

தீவு, ஏ—நாவல், இறலி, குசை, கிரவுஞ்சம், புட்கரம், தெங்கு, கமுகு. இவ்வெழுவகைப்பொருளு மவ்வவ்தீவின் மிக்கன வாகையா லிவற்றாற் பெயர் பெற்றன.

து

துரககதி, ௫—மல்லகதி, மயூரகதி, வியாக்கிரகதி, வானரகதி, விடபகதி.

துவர், ௰—நாவல், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், ஆல், அரசு, அத்தி, இத்தி, முத்தக்காசு, மாந்தளிர்.

தே

தேயம், ௫௰௬—அங்கம், அருணம், அவந்தி, ஆந்திரம், இலாடம், யவனம், ஒட்டியம், கருசம், கலிங்கம், கன்னடம், கன்னுடம், காசம், காசிமீரம், காந்தாரம், காம்போசம், கிராடம், குருகு, குடகம், குந்தளம், குரு, குலிந்தம், கூர்ச்சரம், கேகயம், கேரளம், கொங்கணம், கொல்லம், கோசலம், சகம், சவ்வீரம், சாலவம், சிங்களம், சிந்து, சீனம், சூரசேனம், சோழம், சோனகம், திராவிடம், துளுவம், தெங்கணம், நிடதம், நேபாளம், பாஞ்சாலம், பப்பரம், பல்லவம், பாண்டியம், புலிந்தம், போடம், மகதம், மச்சம், மராடம், மலையாளம், மாளவம், யுகந்தரம், வங்கம், வங்காளம், விதர்ப்பம்.

தேவர், ௫ — பிரமா, விட்டுணு, உருத்திரன், மயேச்சுரன், சதாசிவன், இவர்பஞ்சதேவதையும், பஞ்சகருத்தாக்களுமென்ப.

தேவர்வகை, ௩௰௩—ஆதித்தர் ௰௨, அச்சுவினிகள் ௨, உருத்திரர் ௰௧, வசுக்கள் ௮.

தொ

தொழில், ௩—ஆக்கல், காத்தல், அழித்தல்.

தொழில், ௬—உழவு, தொழில், வரைவு, வாணிபம், விச்சை, சிற்பம்.

தொழில், ௬ — அந்தணராறுதொழில், ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல், — அரசராறுதொழில் ஓதல், வேட்டல், ஈதல், உலகோம்பல், படைபயிற்றல், பொருதல்,—வைசியராறுதொழில், ஓதல், வேட்டல், பொருளீட்டல், ஈதல், பசுக்காத்தல், ஏருழல்,—சூத்திரராறுதொழில், முதன்மூவர்க் கேவல்செயல், பொருளீட்டல், உழுதல், பசுக்காத்தல், குயிலுவத்தொழிற்செய்தல், காருகவினைகளாக்கல்,—இவற்றுட் குயிலுவத்தொழில்களாவன, தோற்கருவிகளைக்கொட்டலுந் துளைக்கருவிகளையூதலுமாம்,—காருகவினைகளாவன, பட்டுநூலையும் பருத்திநூலையுங்கொண்டாடையாக்கலுஞ் சுமத்தலு முழுத்தலுமாம்.

தோ

தோற்றம், ௨—சரம், அசரம், இவற்றுட் சரம் நடையுள்ளன, அசரம் நடையில்லன.

தோற்றம், ௪—பை, முட்டை, நிலம், வியர்வை.

ந

நட்சத்திரம், ௨௭ — அச்சுவினி, பரணி, கார்த்திகை, உரோகணி, மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயிலியம், மகம், பூரம், உத்திரம், அத்தம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுடம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, இரேவதி, இவற்றுள், ஒவ்வொன்று, முறையே மேடமுதற் பன்னிரண்டிராசிகளிற் பதின்மூன்றுபாகமுமிருபதுகலையுங்கொண்டவிடம்.

நதி, ௭—கங்கை, யமுனை, சரச்சுவதி, நருமதை, காவேரி, குமரி, கோதாவரி, இவையே சத்ததீர்த்தமெனப்படும்.

நதி, ௰௧—மேற்சொல்லியவேழின்மேல், சிந்து, தாமிரபருணி, துங்கபத்திரி, கிட்டிணியென்றுகூட்டுக,

நரகம், ௭—அள்ளல், இரௌரவம், கும்பிபாகம், கூடசாலம், செந்துத்தானம், பூதி, மாபூதி.

நரகவட்டம், ௭—தமப்பிரபை, இமப்பிரபை, தூமப்பிரபை, வாலுகப்பிரபை, சாகரப்பிரபை, இரத்தப்பிரபை, அழற்பிரபை, அவையாவன, இருள், குளிர், புகை, மணல், துயிலாமை, இரத்தம், தீ.

நரம்பு, ௭—இசைகாண்க.

நற்குணம், ௰—மெய்யுரை, நல்வார்த்தை, இனியவைகூறல், பயன்படுசொல், இந்நான்கும் வாக்கினற்குணம், கோயில்வலம்வரல், தவம்புரிதல், தானஞ்செயல், இம்மூன்றும் காயநற்குணம், அருணினைவு, ஆசையறுத்தல், தவப்பற்று, இம்மூன்றும் மனநற்குணம்.

நா

நாகம், ௮—வாசுகி, அனந்தன், தக்கன், சங்கபாலன், குளிகன், பதுமன், மகாபதுமன், கார்க்கோடகன், இவற்

றைக் கடவுட்பாம்பென்ப, இவைமுறையே கிழக்குமுதலெண்டிக்கிற்பூமியைத்தாங்குவதன்றியே நடுவே சேடனென்னுநாகம் பூமியைத்தாங்காநிற்கும், இந்நவநாகமுங் காசிபப்பிரமாவுக்குமவன்மனைவிகள் பதின்மூவருட்கத்துருவைக்கும்பிறந்தன.

நாடி, ய — சுழிமுனை, இடை, பிங்கலை, காந்தாரி, அத்தி, சிகுவை, அலம்புடை, புருடன், குகு, சங்கினி, அவையாவன, சுழிமுனையாதாரமாறினு மூடுருவிநிற்பது,—இடை, பிங்கலையிரண்டுங்கத்திரிகைக்கால்போற் பின்னிநிற்பன,—காந்தாரிநாபியிற் றோன்றிச்சத்தமேமூக்குமேழுநாடியாய்க்கண்டத்துறுவது—அத்தி, சிகுவையிரண்டும் பத்துநாடியுற்றுக்கண்ணினிற்பன,— அலம்புடை, புருடனிரண்டுஞ்செவியினூற்றிருபதுநரம்புற்றிருப்பன,—குகு, நாபியுறைந்து குய்யம்பற்றிநிற்பது,—சங்கினி, உபத்தத்தைப்பற்றியிருப்பது.

நாட்டமைதி, ௬ — செல்வம், விளைநிலம், செங்கோல், நோயின்மை, வளம், குறும்பின்மை.

நாட்டுக்குற்றம், எ—தொட்டியர், கள்வர், யானை, பன்றி, விட்டில், கிள்ளை, பெருமழை.

நாட்டுக்குற்றம், அ — விட்டில், தன்னரசு, வேற்றரசு, யானை, மிகுமழை, மிகுகாற்று, கிள்ளை, நட்டம்.

நி

நிலம், ௪ — குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்.

நிலை, ௪—பைசாசம், மண்டலம், ஆலீடம், பிரத்தியாலீடம், இவை நான்கும் விற்றொடுத்தம்பினையெய்வார்க்குரியநிலை, இவற்றுளொருகாலினின்றொருகான்முடக்கல் பைசாசநிலை.—இருகாலும் பக்கல்வளைய மண்டலித்தலை மண்டலநிலை,— வலக்கான்மண்டலித்திடக்கான்முந்துறலேயாலீடநிலை,—வலக்கான் முந்துற்றிடக்கான்மண்டலித்தலே பிரத்தியாலீடநிலை.

நூ

நூல், ௩—முதனூல், வழிநூல், சார்புநூல், இவற்றுளொருவன்முன்கண்டுரைத்ததே முதனூல்,—முதனூல்வழியேவிகற்பித்துரைத்தநூலே வழிநூல்,—அவ்விருநூல்பொருட்கூட்டித்திரிபுவேறுடைய நூலேசார்புநூல்.

நூற்பயன், ௪—அறம், பொருள், இன்பம், வீடு.

ப

பக்குவர், ௩—கருமகாண்டி, ஞானகாண்டி, பத்திகாண்டி.

பஞ்சமூலம், ௫—செவ்வியம், சித்திரமூலம், கண்டுபாரங்கி, பேரரத்தை, சுக்கு.

படைவகுப்பு, ௪—அணி, உண்டை, ஒட்டு, யூகம்.

பட்சி, ௫—வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில், இவற்றிற்குமுறையேயெழுத்து, அ, இ, உ, எ, ஒ, உண்டி, நடை, அரசு, தூக்கம், சாவு, பிற்பக்கமாகில், உண்டி, சாவு, தூக்கம், அரசு, நடை,—சாவுதூக்கமில்லாதபொழுதறிந்து செய்யுண்முதலிய செய்தனன்மை.

பண், ௪—பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி.

பதவி, ௪—சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம், இவற்றுட்கடவுளுல

கத்தில் வாழ்தலேசாலோகம்,—கடவுள்சமீபத்துவாழ்தலே சாமீபம்,–கடவுளுருப்போன்றுவாழ்தலே சாரூபம்,–கடவுளோடொன்றிவாழ்தலே சாயுச்சியம்.

பரிச்சேதம், ௩—காலபரிச்சேதம்,தேயபரிச்சேதம், வத்துபரிச்சேதம், அவையாவன,ஒருகாலத்துண்டொருகாலத்தின்றென்பது காலபரிச்சேதம், ஒருதேயத்துண்டொருதேயத்தின்றென்பது தேயபரிச்சேதம்,—ஒருபொருளிதுவாகு மொருபொருளிஃதன்றென்பது வத்துபரிச்சேதம்.

பருவகாலம், ௬—கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதிர்வேனில், இவையே யாவணிமுதலாக விரண்டிரண்டுமாதமொவ்வொன்றும்.

பருவம், ௪—வாலை, தருணி, பிரவிடை, விருத்தை, இவைபெண்கட்குரியபருவமாம்.

பருவம், ௭—பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை,அரிவை, தெரிவை, பேரிளம்பெண், இவர்க்குமுறையே வயதெல்லை, ஐந்துமுத லேழளவும் பேதை,—எட்டுமுதற் பதினொன்றளவும் பெதும்பை, பன்னிரண்டுமுதற்பதின்மூன்றளவுமங்கை,—பதினான்குமுதற் பத்தொன்பதளவுமடந்தை,–இருபதுமுதலிருபத்தைந்தளவுமரிவை, –இருபத்தாறுமுதன் முப்பத்தொன்றளவுந்தெரிவை,– முப்பத்திரண்டுமுதனாற்பதளவும்பேரிளம்பெண், —ஆகையாலொவ்வொரு பருவங்கொண்டவருடம், ௫, ௪, ௨, ௬, ௬, ௬, ௯, இவைபெண்கட்குரிய பருவமாம்.

பலே, ௩—கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய்,இவையே திரிபலேயென்ப.

பா

பா, ௪—வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பாவொன்று கூட்டியைந்தென்பாருமுளர்.

பாடை, ௰அ—அங்கம், அருணம், கலிங்கம், கௌசிகம், காம்போசம், கொங்கணம், கோசலம், சாவகம், சிங்களம், சிந்து, சீனம், சோனகம், திரவிடம், துளுவம்,பப்பரம்,மகதம்,மராடம், வங்கம்.

பாதகம், ௫ — கொலே, பொய், களவு, கள்ளருந்தல், குருநிந்தை, இவையே பஞ்சமாபாதகம்

பாதகம், ௭—சித்தசமுன்னதி, அருத்தலோபம், காமம், வைடம்மியம், அசனப்பிரியம், கோபம், அநுட்டணம், இவையேசத்தவிசனம், இவைமுறையே, அகங்காரம், உலோபம், காமம், பகை,போசனப்பிரியம்,காய்தல், சோம்பல், இவையேமுந்தலேமையான பாதகமெனப்படும்.

பாலே, ௭—இசையைக்காண்க.

பால், ௫—ஒருவன், ஒருத்தி, பலர், ஒன்று, பல.

பால், ௫—முடி, கொண்டை, சுருள், குழல், பனிச்சை, இவற்றுண்மயிரையுச்சியின்முடித்தலேமுடி, —பக்கன்முடித்தலேகொண்டை,—பின்னேசெருகல்சுருள்,—சுருட்டிமுடித்தலேகுழல், பின்னிவிடுதலேபனிச்சை.

பாவபுண்ணியவழக்கம், ௩ —செய்தல், செய்வித்தல், உடன்படல்,

பாவினம், ௩—தாழிசை, துறை, விருத்தம்.

பி

பிணி, ௩–வாதம்,பித்தம்,சிலேட்டுமம்.

பிரபந்தம், ௯௬ — அவையாவன, சாதகம்;—திதிநிலை, வாரநிலை, நாண்மீனிலை, யோகநிலை, கரணநிலை, ஓரைநிலை, கிரகநிலை, இவ்வேழ்வகையுறுப்புககணிலையையுஞ் சோதிடநூலானன் குணர்ந்தவற்றை யமைத்தவற்றூற்ற லைவற்குறுவன கூறுவது,மற்றும்யுகாதியாண்டுமுதலியவுங்கொள்க.

பிள்ளைக்கவி, — காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை,அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர், இவற்றைமுறையே யகவல்விருத்தத் தாற்பப்பத்தாகக்கூறுவ தாண்பாற்பிள்ளைக்கவி, இவ்வுறுப்பினுட் கடைமூன்றொழித்து, கழங்கு, அம்மனை, ஊசல், என்பவற்றைக்கூட்டி மேற்சொல்லியவாறுகூறுவது பெண்பாற்பிள்ளைக்கவியாம்.

பரணி,— போர்முகத்தாயிரங்களிற்றியானையைக்கொன்றவீரனைத்தலைமகனகக்கொண்டு கடவுள்வாழ்த்துங்கடைதிறப்பும் பாலைநிலமுங்காளிகோயிலும் பேய்களோடுகாளியுங் காளியோடு பேய்களுஞ் சொல்லத் தான் சொல்லக்கருதிய தலைவன் சீர்த்தியெங்கலு மவன்வழியாகப்புறப்பொருடோன்ற வெம்போர்வழங்க விரும்பலுமென் றிவையெல்லா மிருசீரடிமுச்சீரடியொழித்தொழிந்த மற்றையவடியாக வீரடிப் பஃறூழிசையாற்பாடுவது.

கலம்பகம், — ஒருபோகும், வெண்பாவும், கலித்துறையுமுதற் கவியுறுப்பாகமுற்கூறிப் புயவகுப்பு, மதங்கம், அம்மானை, காலம், சம்பிரதம், கார், தவம், குறம், மறம், பாண், களி, சித்து,இரங்கல், கைக்கிளை, தூது, வண்டு, தழை, ஊசல், என்னுமிப்பதினெட்டுறுப்புக்களுமியைய,மடக்கு,மருட்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, ஆசிரியவிருத்தம், கலிவிருத்தம், கலித்தாழிகை, வஞ்சிவிருத்தம், வஞ்சித்துறை, வெண்டுறையென்னுமிவற்றூலிடையேவெண்பா, கலித்துறை, விரவியந்தாதித் தொடையான்முற்றுறக்கூறுங்காற்றேவர்க்குநூறும், அந்தணர்க்குத் தொண்ணூற்றைந்தும், அரசர்க்குத்தொண்ணூறும், வைசியர்க்கைம்பதும், சூத்திரர்க்கு முப்பதுமாகப் பாடுவது.

அகப்பொருட்கோவை,—இருவகைப் பட்டமுதற்பொருளும் பதினன்கு வகைப்பட்ட கருப்பொருளும் பத்துவகைப்பட்ட வுரிப்பொருளும் பொருந்திக் கைக்கிளைமுதலுற்ற வன்புடைக் காமப் பகுதியவாங் களவொழுக்கத்தினையுங் கற்பொழுக்கத்தினையுங் கூறுதலே யெல்லையாகக் கட்டளைக்கலித்துறை, நானூற்றூற்றிணைமுதலாகத் துறையீறுகக்கூறப்பட்ட பன்னிரண்டகப்பாட்டுறுப்பும் வழுவின்றித்தோன்றப்பாடுவது, இது, வெண்பா, அகவல், கலி, வஞ்சி, வண்ணம்,இவற்றூனும் வழங்கப்படும்.

ஐந்திணைச்செய்யுள்,— புணர்தன்முதலிய வைந்துரிப்பொருளும் விளங்கக்குறிஞ்சிமுதலிய வைந்திணையினையுங்கூறுவது.

வருக்கக்கோவை,—அகரமுதலாகியவெழுத்து வருக்க மொழிக்கு முதலாமெழுத்துமுறையே காரிகைத்துறைப்பாட்டாகப்பாடுவது.

மும்மணிக்கோவை,—ஆசிரியப்பாவும், வெண்பாவும், நேரசையுநிரையசையுங்கொண் டெழுத்தெண்ணிப்பாடுங் கலித்துறையு முறையேதொகை முப்பதுபெற வடுக்கியந்தாதித் தொடையாற்பாடுவது.

அங்கமாலை,—ஆண் மகனுக்கும்பெண்மகனுக்குமிக்கள வெடுத்துக் கூறு

மவயவங்களை வெண்பாவாலாயினும் வெளி விருத்தத்தாலாயினும் பாதாதிகேசங்கேசாதிபாதமுறைபிறழாது தொடர்வுறப்பாடுவது.

அட்டமங்கலம்,—கடவுளைப்பாடியக்கடவுள்காக்கவென வாசிரியவிருத்தமெட்டிலந்தாதித்துக்கூறுவது.

அநுராகமாலை, —தலைவன் கனவின் கண்ணுருத்தியைக் கண்டுகேட்டுண்டுயிர்த்தினிமையுறப் புணர்ந்ததைத் தன்னுயிர்ப்பாங்கற்குரைத்ததாகநேரிசைக் கலிவெண்பாவாற் கூறுவது.

இரட்டைமணிமாலை, — முறையானே வெண்பாவுங் கலித்துறையுமிருபஃ தந்தாதித் தொடையான் வருவது, நேரிசைவெண்பாப் பத்தும், ஆசிரிய விருத்தம் பத்துமந்தாதித் தொடையாற் பாடுவது.

இணைமணிமாலை,—வெண்பாவுமகவலும், வெண்பாவுங்கலித்துறையுமாகவிரண்டிரண்டாக விணைத்து வெண்பா வகவலிணைமணிமாலை, வெண்பா கலித்துறை யிணைமணிமாலை யென நூறுநூறு, அந்தாதித்தொடை நான்காலும்பாடுவது.

நவமணிமாலை,—வெண்பா முதலாக வேறுபட்ட பாவும் பாவினமுமாக வொன்பது செய்யு ளந்தாதித்துப்பாடுவது.

நான்மணிமாலை,—வெண்பாவுங்கலித்துறையும் விருத்தமுமகவலுமந்தாதித் தொடையாக நாற்பதுபாடுவது.

நாமமாலை,—அகவலடியுங் கலியடியும் வந்துமயங்கிய வஞ்சிப்பாவாலாண்மகனைப் புகழ்ந்துபாடுவது.

பலசந்தமாலை,—பப்பத்துச் செய்யுளொவ்வோர் சந்தமாக நூறுசெய்யுட்கூறுவது.

பன்மணிமாலை,— மேற்சொல்லிய கலம்பகத்துள்வருமொருபோகு மம்மானையுமூசலுமின்றி யேனையுறுப்புக்களெல்லாமமையவவ்வாறு கூறுவது, இதையே கலம்பகமாலையென்ப.

மணிமாலை,—எப்பொருண்மேலும் வெண்பாவிருபதுங் கலித்துறை நாற்பதும் விரவிவருவது.

புகழ்ச்சிமாலை,— அகவலடியுங்கலியடியும் வந்து மயங்கிய வஞ்சிப்பாவான் மாதர்களினது சீர்மையைக் கூறுவது.

பெருமகிழ்ச்சிமாலை,— தலைவியினழகு குணமாக்கஞ் சிறப்பினைக் கூறுவது.

வருக்கமாலை,—மொழிக்குமுதலாம் வருக்கவெழுத்தினுக்கொவ்வோர் செய்யுட்கூறுவது.

மெய்க்கீர்த்திமாலை,— சொற்சீரடியென்னுங் கட்டுரைச் செய்யுளாற்குலமுறையிற்செய்த கீர்த்தியைக்கூறுவது.

காப்புமாலை,— தெய்வங்காத்தலாக மூன்றுசெய்யுளானும், ஐந்து செய்யுளானும், ஏழுசெய்யுளானும் பாடுவது.

வேனின்மாலை,—வேனிலையுமுதிர்வேனிலையுஞ்சிறப்பித்துப்பாடுவது.

வசந்தமாலை,—தென்றலைவருணித்துப்பாடுவது.

தாரகைமாலை, — அருந்ததிக்கற்பின் மகளிர்க்குள்ள வியற்கைக்குணங்களைவகுப்பாற்கூறுவது, தூசிப்படையினணியைப் புகழ்ந்தவகுப்பென்பாருமுளர்.

உற்பவமாலை,—திருமால் பிறப்புப் பத்தனையு மாசிரியவிருத்தத்தாற் கூறுவது.

தானைமாலை,—அகவலோசையிற்பிறழாதாசிரியப்பாவான் முன்னொடுத்துச் செல்லுங் கொடிப்படையைக் கூறுவது.

மும்மணிமாலை,— வெண்பாவுங் கலித்துறையு மகவலு மந்தாதித்தொடையான் முப்பதுபாடுவது.

தண்டகமாலை,—வெண்பாவான் முந்நூறுசெய்யுட்கூறுவது. இதுவெண்புணர்ச்சிமாலையெனவும்படும்.

வீரவெட்சிமாலை,—சுத்தவீரன் மாற்றூரிற்சென்று பசுநிரைகோடற்கு வெட்சிப்பூ மாலைசூடி யவ்வண்ணம் போய் நிரைகவர்ந்துவரி னவனுக்கு முன்பு த்சாங்கம்வைத்துப் போய்வந்தவெற்றிப்பாடுவது.

வெற்றிக்கரந்தைமஞ்சரி,— பகைவர்கொண்ட தந்நிரைமீட்போர் கரந்தைப்பூமாலைசூடிப்போய் மீட்பதைக் கூறுவது.

போர்க்கெழுவஞ்சி,— மாற்றார்மேற்போர்குறித்துப் போகின்ற வயவேந்தர் வஞ்சிப்பூமாலைசூடிப் புறப்படும்படையெழுச்சிச்சிறப்பை யாசிரியப்பாவாற்கூறுவது.

வரலாற்றுவஞ்சி,—குலமுறை பிறப்புமுதலிய மேம்பாட்டின் பலசிறப்பையுங் கீர்த்தியையும் வஞ்சிப்பாவாற்கூறுவது.

செருக்களவஞ்சி,—போர்க்களத்திலே யட்டமனிதருடலையும் யானைகுதிரையுடலையு நாயும்பேயும் பிசாசமுங் கழுகும் பருந்துங் காகமுந் தின்றுகளித் தாரவாரமாயிருக்கப் பூதமும் பேயும் பாடியாட விங்ஙனமிருந்த சிறப்புப்பாடுவது.இதையே பறந்தலைச்சிறப்புப்பாட்டுமென்ப.

காஞ்சிமாலை,— மாற்றாரூர்ப்புறத்துக் காஞ்சிப்பூமாலைசூடி யூன்றலைக் கூறுவது.

நொச்சிமாலை,—புறத்தூன்றியமாற்றார்க்கோடலன்றி நொச்சிப்பூ மாலைசூடித்தன்மதில்காக்குந்திறங் கூறுவது.

உழிஞைமாலை,—மாற்றாரதூர்ப்புறஞ்சூழவுழிஞைப்பூ மாலைசூடிப்படைவளைப்பதைக்கூறுவது.

தும்பைமாலை,—மாற்றாரோடு தும்பைப்பூமாலைசூடிப் பொருதுவதைக் கூறுவது.

வாகைமாலை,—மாற்றாரைவென்று புகழ்படைத்து வாகைமாலை சூடுவதை யாசிரியப்பாவாற் கூறுவது.

வாதோரணமஞ்சரி,—கொலைபுரிமதயானையை வயப்படுத்தியடக்கினவர்கட்கு மெதிர்பொருகளிற்றை வெட்டியடக்கினவர்கட்கும் பற்றிப் பிடித்துச் சேர்த்தவர்கட்கும் வீரப்பாட்டின்சிறப்பை வஞ்சிப்பாவாற் றொடுத்துப்பாடுவது.

எண்செய்யுள்,— பாட்டுடைத் தலைவனதூரினையும் பெயரினையும் பத்துமுதலாயிரமளவும்பாடி யெண்ணாற் பெயர்பெறுவது.

தொகைநிலைச்செய்யுள்,— நெடிலடிச்செய்யுளாற் றொகுத்தது நெடுந்தொகையும், குறளடிச் செய்யுளாற் றொகுத்தது குறுந்தொகையும், கலிப்பாவாற்றொகுத்தது கலித்தொகையும் போல்வன.

ஒலியலந்தாதி,—பதினறுகலையோரடியாகவைத் திங்ஙனநாலடிக்கறுபத்து நாலுகலைவகுத்துப் பலசந்தமாக வண்ணமுங் கலைவைப்புந் தவறுமலந்தாதித்து முப்பதுசெய்யுட்பாடுவது, சிறுபான்மை யெட்டுக்கலையானும்வரப்பெறும், அன்றியும், வெண்பா வகவல் கலித்துறையாகிய விம்மூன்றையும் பப்பத்தாக வந்தாதித்துப்பாடுவதுமாம்.

பதிற்றந்தாதி,—பத்துவெண்பா பத்துக் கலித்துறைப் பொருட்டன்மை தோன்றவந்தாதித்துப்பாடுவது.

நூற்றந்தாதி — நூறு வெண்பாவினாலேனு நூறு கலித்துறையினாலேனுமந்தாதித் தொடையாற்கூறுவது.

உலா,—இளமைப்பருவமுற்ற தலைமகனைக்குலங்குடிப்பிறப்பு மங்கலம் பரம்பரை யிவற்றானின்றுமெனப்படு தோன்றத்தலைமையாய் மாதர்நெருங்கிய வீதியிடத்தவன்பவனிவரப் பேதைமுதலிய வேழு பருவப்பெண்களுங்கண்டு தொழுவதாக நேரிசைக்கலிவெண்பாவாற்கூறுவது.

உலாமடல், — கனவிலொருபெண்ணைக்கண்டு கல்வியின்ப நுகர்ந்தோன் விழித்தபின் னவள்பொருட்டுமடலூர்வேனென்பதைக் கலிவெண்பாவான் முற்றுவிப்பது.

வளமடல், — அறம்பொருளின்பமாகிய வம்முக் கூறுபாட்டின்பயனையெள்ளி, மங்கையர் திறத்துறுங் காமவின்பத்தினையே பயனெனக் கொண்டு பாட்டுடைத்தலை மகனியற்பெயர்க்குத்தக்கதை யெதுகையாக நாட்டியுரைத் தவ்வெதுகைபடத் தனிச்சொலின்றி யின்னிசைக் கலிவெண்பாவாற்றலைமகனிரந்து குறைபெறாது மடலேறுவதாயீரடி யெதுகைவரப் பாடுவது.

ஒருபாவொருபஃது, — அகவலும் வெண்பாவுங் கலித்துறையுமாய விவற்றி லொன்றனா லந்தாதித் தொடையாற் பத்துப்பாடுவது.

இருபாவிருபஃது,—பத்துவெண்பாவும் பத்தகவலு மந்தாதித் தொடையானிருபதினைந்து வருவது.

ஆற்றுப்படை, — அகவற்பாவால், விறலி, பாணர், கூத்தர், பொருநரிந் நால்வருளொருவர் பரிசிற்குப் போவானைப்பரிசுபெற்று வருவானாற்றிடைக்கண்டு தலைவன்கீர்த்தியுங் கொடையுங், கொற்றமுஞ்சொல்வது.

கண்படைநிலை, — அரசரு மரசனைப்போல்வாரு மவைக்கணெடிதுவைகியவழி மருத்துவரு மமைச்சருமுதலியோரவர்க்குக் கண்டுயில் கோடலைக்கருதிக்கூறுவது.

துயிலெடைநிலை, — தன் வலியாற் பாசறைக்கண்ணுறு மனக்கவற்சியின்றித் துயின்றவரசர்க்கு நல்ல புகழைக்கொடுத்தலைக் கருதியசூதர் துயிலெடுப்புதலாகப் பாடுவது.

பெயரின்னிசை, — பாட்டுடைத்தலைவன் பெயரினைச்சார, இன்னிசை வெண்பாவாற்றொண்ணூறேனும், எழுபதேனும் ஐம்பதேனும் பாடுவது.

ஊரின்னிசை, — பாட்டுடைத்தலைவனூரினைச்சாரவின்னிசைவெண்பாவாற்றொண்ணூறேனு மெழுபதேனு மைம்பதேனும் பாடுவது.

பெயர்நேரிசை,— பாட்டுடைத்தலைவன் பெயரினைச்சார நேரிசைவெண்பாவாற் றொண்ணூறேனுமெழுபதேனு மைம்பதேனும் பாடுவது.

ஊர்நேரிசை,— பாட்டுடைத்தலைவனூரினைச்சார நேரிசைவெண்பாவாற் றொண்ணூறேனு மெழுபதேனு மைம்பதேனும் பாடுவது.

ஊர்வெண்பா, — வெண்பாவானூரைச்சிறப்பித்துப் பத்துச்செய்யுட்கூறுவது.

விளக்குநிலை,—வேலும் வேற்றலையும் விலங்காதோங்கிய வாறுபோலக் கோலொடு விளக்குமொன்று பட்டோங்குமாறொருங்குவதாகக்கூறுவது.

புறநிலை,—நீவணங்குந்தெய்வநின்னைப் பாதுகாப்ப நின்வழிவழி மிகுவதாகவெனக் கூறுவது.

கடைநிலை,—சான்றோர் சேணிடை வருதலாற் பிறந்தவருத்தந்தீர வாயில் காக்கின்றவனுக்கென் வரவினைத்

தலைவற் கிசையெனக் கடைக்கணின்று கூறுவது.

கையறுநிலை,—கணவனொடுமனைவி கழிந்துழியவர்கட்பட்ட வழிவுப்பொருளெல்லாம் பிறர்க்கறிவுறுத்தித்தாமிறந்துபடா தொழிந்தவர்த்தாரும் பரிசில்பெறும் விறலியருந் தனிப்படருழந்தசெயலறு நிலையைக்கூறுவது.

தசாங்கப்பத்து,—நேரிசை வெண்பாவா லரசன்படைத்த தசாங்கத்தினைப் பத்துச்செய்யுளாற் கூறுவது.

தசாங்கத்தயல்,—அரசன் றசாங்கத்தினை யாசிரியவிருத்தம் பத்தினாற் பாடுவது.

அரசன்விருத்தம்,—பத்துக் கலித்துறையுமுப்பது விருத்தமுங் கலித்தாழிசையுமாகிய விவற்றால், மலை, கடல், நாட்டு வருணனையு நில வருணனையும் வாண்மங்கலமுந் தோண்மங்கலமும் பாடிமுடிப்பது, இது முடிபுனைந்தவேந்தற்காம்.

நயனப்பத்து,—கண்ணினைப் பத்துச் செய்யுளாற்கூறுவது.

பயோதரப்பத்து,— முலையினைப்பத்துச்செய்யுளாற்கூறுவது.

பாதாதிகேசம்,— கலிவெண்பாவாலடிமுதன்முடியளவுங்கூறுவது.

கேசாதிபாதம்,— கலிவெண்பாவான் முடிமுதலடியளவுங்கூறுவது.

அலங்காரபஞ்சகம்—, வெண்பா, கலித்துறை, அகவல், ஆசிரியவிருத்தம், சந்தவிருத்தமிவற்றையே மாறிமாறி நூறுசெய்யுளாகவந்தாதித்துப்பாடுவது.

கைக்கிளை,—ஒருதலைக் காமத்தினையைந்துவிருத்தத்தாற் கூறுவது, அன்றி, வெண்பா முப்பத்திரண்டுசெய்யுளாற் கூறுவதுமாம்.

மங்கலவள்ளை—உயர் குலத்துதித்த மடவாரை வெண்பாவொன்பதாலும் வகுப்பொன்பதாலும் பாடுவது.

தூது,—ஆண்பாலும்பெண்பாலுமவரவர்காதல் பாணன்முதலிய வுயர்திணையோடுங்கிள்ளைமுதலிய வஃறிணையோடுஞ்சொல்லித்தூதுபோய்வாவெனக்கலிவெண்பாவாற்கூறுவது.

நாற்பது,—காலமுமிடமும் பொருளுமாகியவிவற்றுளொன்றனை நாற்பது வெண்பாவாற்கூறுவது.

குழமகன்,—கலிவெண்பாவான் மாதர்க டங்கையிற்கண்ட விளமைத்தன்மையுடைய குழமகனைப் புகழ்ந்து கூறுவது.

தாண்டகம்,—இருபத்தேழெழுத்து முதலாக வுயர்ந்தவெழுத்தடியினவாயெழுத்துங் குருவு மிலகுவுமொத்து வந்தன, அளவியற் றாண்டகமெனவும், எழுத்தொவ்வாது மெழுத்தலகொவ்வாது வந்தன, அளவழித்தாண்டகமெனவும்படும்.

பதிகம்,—ஒருபொருளைக்குறித்துப் பத்துச்செய்யுளாற் கூறுவது.

சதகம்,— அகப்பொருளொன்றன் மேலாதல்புறப்பொருளொன்றன்மேலாதல் கற்பித்து நூறுசெய்யுட்கூறுவது.

செவியறிவுறூஉ,— பொங்குதலின்றிப்புரையோர் நாப்பணவிதல்கடனெனவவையடக்கியற்பொருளுற வெண்பாமுதலு மாசிரியமிறுதியுமானமருட்பாவாற்கூறுவது.

வாயுறைவாழ்த்து, — வேம்புங்கடுவும் போல்வனவாகிய வெஞ்சொற்கண்முன்னர்த் தாங்கக்கூடாவாயினும் பின்னர்ப்பெரிதும் பயன்றருமென மெய்ப்பொருளுற வெண்பாமுதலு மாசிரியமிறுதியுமான மருட்பாவாற்கூறுவது.

புறநிலைவாழ்த்து,—வழிபடுதெய்வ நிற்புறங்காப்பப்பழிதீர் செல்வமொடொருகாலைக்கொருகாற்சிறந்துபொ

விளாவென வெண்பாமுதலாமாசிரிய மிறுதியுமாக மருட்பாவாற்பாடுவது.

பவனிக்காதல்,— உலாக்காட்சியா லெய்தியகாமமிகுதியாலலைவுபிறவொடு முறைத்துவருந்துவது.

குறத்திப்பாட்டு—தலைவன்பவனிவரவு, மகளிர்காமுறுதல், மோகினிவரவு, உலாப்போந்த தலைவனைக்கண்டு மயங்கல், திங்கள், தென்றன்முதலிய வுபாலம்பனம், பாங்கியுற்றதென்னெனவினவல், தலைவி பாங்கியோடுற்றதுகூறல், பாங்கிதலைவனைப் பழித்துக்கூறல், தலைவி தலைவனைப் புகழ்ந்துகூறல், தலைவி பாங்கியைத் தூதுவேண்டல், தலைவி பாங்கியோடு தலைவனடையாளங்கூறல், குறத்திவரவு, தலைவி குறத்தியை மலைவளமுதலியவினவல், குறத்தி மலைவள நாட்டுவளமுதலியகூறல், தலைவன் நலவளங்கிளைவளமுதலியகூறல், குறிசொல்விவந்தமைகூறல், தலைவிகுறிவினவல், குறத்திதெய்வம்பராவல், குறிதேர்ந்துநல்வரவுகூறல், தலைவிபரிசிலுதவிவிடுத்தல், குறவன்வரவு, புள்வரவுகூறல், கண்ணிகுத்தல், புட்படுத்தல், குறத்தியைக்காமுற்றுத்தேடல், குறவன்பாங்கனொடு குறத்தி யடையாளங்கூறல், குறவன் குறத்தியைக்கண்ணுறுறல், குறவனணிமுதலிய கண்டையுற்றுவினவலு மாண்டாண்டு குறத்தி விடைகூறலுமாகக்கூறல், பெரும்பான்மையு மிவ்வகையுறுப்புக்களால், அகவல், வெண்பா, தரவுகொச்சகம், கலித்துறை, கழிநெடில்விருத்தம், கலிவிருத்தம், இச்செய்யுளிடையிடைகூறிச் சிந்துமுதலிய நாடகத்தமிழாற்பாடுவது.

உழத்திப்பாட்டு,—கடவுள்வணக்க முறையே மூத்தபள்ளி யிளையபள்ளி குடும்பன் வரவோடவன் பெருமைகூறல் முறையே யவர்வரலாறு, நாட்டுவளன்குயிற்கூக்கேட்டல், மழைவேண்டிக் கடவுட்பரவல், மழைக்குறியோர்தல், ஆற்றின்வரவு, அதன்சிறப்புக்காண்டலிவற்றிற் கிடையிடையே கட்பொருட்டுறையுங்கூறிப் பண்ணைத்தலைவன் வரவு பள்ளிக ளிருவர்முறையீடு, இளையாளை யவனாட்டயல், பள்ளன்வெளிப்படல். பண்ணைச்செயல்வினவல், அவனதுகூறல், ஆயனைவருவித்தல், அவர்வால், அவர்பெருமைகூறல், மூத்தபள்ளி முறையீடு, குடும்பன் கிடையிலிருந்தான்போல்வரல், அவனைத்தொழுவின்மாட்டல், அவன் புலம்பல், மூத்த பள்ளியடிசிற்கொடுவரல், அவளவனோடுகூறல், அவளவனைமன்னித்தல் கேட்கவேண்டல், அவன்மறுத்தல், அவன்சூளுறல், அவளவனைமீட்க வேண்டிப்பண்ணைத்தலைவனைப்பரவல், விதைமுதலிய வளங்கூறல், உழவுருமல், காளைவெருளல், அதுபள்ளனைப்பாய்தல், பள்ளிகள்புலம்பல், அவனெழுந்துவிதைத்தல், அதைப் பண்ணைத்தலைவர்க்கறிவித்தல், நாறுநடல், விளைந்தபிற் செப்பஞ்செயல், நெல்லளத்தல், மூத்தபள்ளி முறையீடு, பள்ளிகளொருவர்க்கொருவரேசலென விவ்வுறுப்புக்களுறப் பாட்டுடைத்தலைவன் பெருமையாங்காங்கு தோன்றச் சிந்தும் விருத்தமும்விரவிவரவிற்றேற்பாடுவது.

ஊசல்,— ஆசிரிய விருத்தத்தாலேனும் கலித்தாழிசையாலேனும் சுற்றத்தோடும் பொலிவதாக, ஆடிரூசல், ஆடாமோவூசலென் றிறக்கூறுவது.

எழுகூற்றிருக்கை,— ஏழறையாக்கிக்குறுமக்கள் முன்னின்றும் புக்கும் போந்தும் விளையாடும்பெற்றியால்வருவனவாமையா லொன்று முதலாகவேழிறுதியாக முறையானேபாடுவது.

கடிகைவெண்பா,— தேவரிடத்து மரசரிடத்து நிகழுங்காரியங் கடிகையளவிற்றேன்றி நடப்பதாக முப்பத்திரண்டு நேரிசைவெண்பாவாற்கூறுவது.

சின்னப்பூ,— நேரிசைவெண்பாவாலரசனதுசின்னமாகிய தசாங்கத்தினைச்சிறப்பித்துவிரித்து, நூறு, தொண்ணூறு, எழுபது, ஐம்பது, முப்பது என்னுமெண்படக்கூறுவது.

விருத்தவிலக்கணம்,—வில், வாள் வேல், செங்கோல், யானை, குதிரை, நாடு, ஊர், கொடை, இவ்வொன்பதினையும் பப்பத்துவிருத்தத்தா லொன்பதுவகையுறப்பாடுவது.

முதுகாஞ்சி,—இளமைகழிந்தறிவு மிக்கோரிளமைகழியாத வறிவின்மாக்கட்குக்கூறுவதாம்.

இயன்மொழிவாழ்த்து,—இக்குடிப் பிறந்தோர்க்கெல்லாமிக்குண மியல்பென்று மவற்றை நீயு மியல்பாகவுடையையென்றுமின்ஞேர்போல நீயு மியல்பாகவீயென்று முயர்ந்தொரவனை வாழ்த்துவதாகக்கூறுவது.

பெருமங்கலம்,—நாடோறுந்தான் மேற்கொள்கின்ற சிறைசெய்தன் முதலிய செற்றங்களைக் கைவிட்டுச் சிறைவிடுதன் முதலியசிறந்ததொழில்கள் பிறந்ததற்குக்காரணமான நாளிடத்துநிகழும் வெள்ளணியைக் கூறுவது.

பெருங்காப்பியம்,— தெய்வவணக்கமுஞ் செயப்படுபொருளு மிவற்றிற்கியைய வாழ்த்துமுன்னுளதா யறம் பொருளின்பம் வீடென்னு நாற்பொருளும் பயக்கு நெறியுடைத்தாய் நிகரில்லாத்தலைவனை யுடைத்தாய் மலையுங் கடலுநாடுநகருஞ் பருவமுமிருசுடர்த் தோற்றமு மென்றிவற்றின் வளங்கூறுதலு மணமுமுடிகவித்தலும் பொழில்விளையாட்டு நீர்விளையாட்டும், உண்டாட்டு மகப்பேறும் புலவியுங் கலவியுமென் றிவற்றைப் புகழ்தலும், மந்திரமுந்தூதுஞ்செலவும்போரும்வென்றியுமென் றிவற்றைத் தொடர்ந்து கூறலுமாகிய விவை முறையே தொடர்வுறச் சருக்கமிலம்பகம் பரிச்சேதமென்னும் பகுதியையுடைத்தாய் வீரமுதலிய சுவையுமவற்றை விளக்குங் கருத்து விளங்கக்கற்ரேராணியற்றப்படுவதாம்.

சிறுகாப்பியம்,—அறம்பொருளின்பம் வீடென்னு நான்கனு ளொன்றும்பலவுங் குறைந்தேனைய வுறுப்புக் கண்மேற் கூறியவாறியல்வது.

பிறப்பு, எ—தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம், இவற்றின்யோனிபேதமெண்பத்திநான்கு நூறுயிரம், அவையாவன, தேவர்பதினன்குநூறுயிரம்,—மக்களொன்பதுநூறுயிரம்,—விலங்கு பத்துநூறுயிரம்,—புள்பத்துநூறுயிரம்—ஊர்வன பதினொருநூறுயிரம்—நீர்வாழ்வன பத்துநூறுயிரம்—தாவர மிருபதுநூறுயிரம்,—அன்றி, தேவர்பதினைறுநூறுயிரமெனவுந் தாவரம்பதினெட்டு நூறுயிரமெனவுங் கூறுப.

பு

புண்ணியத்தோற்றம், ச—தவம், ஒழுக்கம், கொடை, கல்வி.

புண்ணியம், எ—நகங்கிருதி, தானம், விரதம், சிநேகம், நயபோசனம், கமை, உற்சாகம்.

புண்ணியம், கூ—எதிர்கொளல், பணிதல், ஆசனத்திருத்துதல், தாள்கழுவல், அருச்சித்தல், தூபங்கொடுத்தல், திபங்காட்டல், புகழ்தல், அமுதமேந்தல், இவை, துறந்தோர்க்குச் செய்வனவாம்.

புரம், ௩—இருப்புமதில், வெள்ளிமதில், பொன்மதில், இவையே முப்புரம்.

புராணம், ௰௮—மச்சியம், கூர்மம், வராகம், வாமனம், பிரமம், வைணவம், பாகவதம், சைவம், இலிங்கம், பௌடிகம், நாரதீயம், காருடம், பிரமகைவர்த்தம், காந்தம், மார்க்கண்டேயம், ஆக்கினேயம், பிரமாண்டம், பதுமம், இவற்றுள், சைவம், காந்தம், இலிங்கம், கூர்மம், வாமனம், வராகம், பௌடிகம், மச்சியம், மார்க்கண்டேயம், பிரமாண்டம், இவைபத்துஞ் சிவபுராணம், —நாரதீயம், பாகவதம், காருடம், வைணவம், இவை நான்கும்விட்டுணு புராணம்,—பிரமம், பதுமம், இவையிரண்டும் பிரமபுராணம்,— பிரமகைவர்த்தனம், சூரியபுராணம், ஆக்கினேயம், அக்கினிபுராணம்,— அன்றியும், உபபுராணம், ௰௮, உசனம், கபிலம், காளி, சனற்குமாரீயம், சாம்பவம், சிவதன்மம், சௌரம், தைர்வாசம், நந்தி, நாரசிங்கம், நாரதீயம், பராசரீயம், பார்க்கவம், ஆங்கிரம், மாரீசம், மானவம் வாசிட்டம், இலேங்கம், வாருணம், இவை யவ்வவர் பெயரால்விளங்கும்.

புரி, ௭—அயோத்தி, மதுரை, மாயை, காசி, காஞ்சி, அவந்திகை, துவாரகை.

புலமையோர், ௪—கவி, கமகன், வாதி, வாக்கி, இவருள், ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரமென்னு நாற்கவிகளைப் பாடுவோன்கவி,— அருப்பொருளைச் செம்பொருளுடையாகக் காட்டிவிவகரிப்போன் கமகன்,—காரணமுமேற்கோளுமெடுத்துக் காட்டிப் பிறன்கோண் மறுத்துத் தன்மதநிறுத்துபவன் வாதி,—அறம், பொருள், இன்பம், வீடென்னு நாற்றிறங்களைக் கேட்கவேட்கவிரித்துக் கூறுவோன் வாக்கி.

புலன், ௫—சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்.

பூ

பூ, ௪—கொடிப்பூ, கோட்டுப்பூ, நீர்ப்பூ, புதற்பூ.

பூதம், ௫—நிலம், நீர், தீ, காற்று, விசும்பு.

பெ

பெண்வகை, ௪—பதுமினி, சித்திரினி, சங்கினி, அத்தினி.

பெரியோரியல்பு, ௭—அறம், பொருள், இன்பம், அன்பு, புகழ், மதிப்பு, பொறுமை.

பே

பேதம், ௩—சுகதபேதம், சுசாதிபேதம், விசாதிபேதம், அவைப்பாவன, மரத்துக்கிலையரும்புபூகாய்கனிமுதலிய சுகதபேதம்,—மரத்துக்குமறுமரஞ் சுசாதிபேதம், — மரத்துக்குக்கல் விசாதிபேதம்.

பேறு, ௰௬—புகழ், கல்வி, வலி, வெற்றி, நன்மக்கள், பொன், நெல், நல்லூழ், நுகர்ச்சி, அறிவு, அழகு, பெருமை, இளமை, துணிவு, நோயின்மை, வாழ்நாள்.

பொ

பொருள், ௨—கல்விப்பொருள், செல்வப்பொருள்.

பொருள், ௪—அறம், பொருள், இன்பம், வீடு.

பொழுது, ௬—மாலை, யாமம், வைகறை, விடியல், நண்பகல், எற்பாடு, இன்னவியபத்துமாலைமுதலொவ்வொன்று பப்பத்துநாழிகையாக மு

றையேகொள்க. இவற்றைச்சிறுபொழுதென்பர்.

பொறி, ௩—மனம், வாக்கு, காயம்.

பொறி, ரு—மெய், வாய், கண், மூக்கு, செவி.

பொன்வகை, ச — ஆடகம், கிளிச்சிறை, சாதரூபம், சாம்பூநதம்.

போ

போகபூமி, சு—ஆதியரிவஞ்சம், நல்லரிவஞ்சம், ஏமதவஞ்சம், ஏமவஞ்சம், தேவகுருவம், உத்தரகுருவம்.

போகம், அ—பெண், ஆடை, அணிகலன், போசனம், தாம்பூலம், பரிமளம், பாட்டு, பூவமளி.

போதப்பிரகாரம், ௩—உத்தேசம், இலக்கணம், பரீக்கை, அவையாவன, தான்விவகரிக்கும்பொருளைப் பெயர் மாத்திரங்கூறலுத்தேசம்,— அப்பொருளின் சிறப்புத்தன்மைகூற விலக்கணம், — அப்பொருளி லிவ்விலக்கணமுண்டோ வின்றோவெனப்பார்த்தல் பரீக்கை.

ம

மகளிரான்மலர்மரம், ய — மகிழமரஞ்சுவைக்க, ஏழிலைம்பாலை மரநட்புற, பாதிரிமரநிந்திக்க, முல்லைக்கொடிநகைக்க, புன்னையாட, குராவணைக்க, அசோகுதைக்க, குருக்கத்திபாட, மராபார்க்க, சண்பகநிழல்படத் தளிர்த்துப்பூப்பனவாம்.

மங்கலச்சொல், உஉ—திரு, யானை, தேர், பரி, கடல், மலை, மணி, பூ, புகழ், சீர், மதி, நீர், எழுத்து, பொன், ஆரணம், சொல், புயல், நிலம், கங்கை, உலகம், பரிதி, அமிழ்தம், இவற்றின் பரியாயப்பெயரும் பிறவுமாம்.

மங்கலம், அ—சாமரம், நிறைகுடம், கண்ணாடி, தோட்டி, முரசு, விளக்கு, கொடி, இணைகயல், இவையே யட்டசுபமெனவும்படும்.

மங்களாசரணை, ௩—வாழ்த்து, வணக்கம், செயப்படுபொருள்.

மணம், அ — பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், ஆசுரம், இராக்கதம், பைசாசம், இவற்றுட்பிரமசாரிக்குக் கன்னியைத் தீமுன்னர்க்கொடுப்பதுபிரமமணம், —தலைமகனினத்தார் வேண்டத் தலைமகளினத் தாருட்பட்டவளைத் தீமுன்னர்க் கொடுப்பது பிரசாபத்தியமணம்,— ஒன்றிரண்டு பசுவுமெருதும்வாங்கிக் கொண்டு கன்னியைத் தீமுன்னர்க் கொடுப்ப தாரிடமணம்,—வேள்வியால்வந்தகன்னியைத் தீமுன்னர்க்கொடுப்பதுதெய்வமணம்,—கொடுப்பாருங்கேட்பாருமின்றியிருவருந் தனியிடத்தெதிர்ப்பட்டுத்தாமேகூடுவது காந்தருவமணம், —பெண்ணுக்குப் பொன் பூட்டிச்சுற்றத்தார்க்குப்பொன்வேண்டுவன கொடுத்துக்கொள்வ தசுரமணம், —பெண்ணும்பெண்ணினத்தாருமுடன்படாமல் வலிதிற்கொள்வ திராக்கதமணம்,—துயின்றாளைச்சென்றுகூடுவது பைசாசமணம்.

மணி, கூ—கோமேதகம், நீலம், பவளம், புட்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைடூரியம், வைரம்.

மண்டலம், ௩ — அக்கினிமண்டலம், ஆதித்தமண்டலம், சந்திரமண்டலம்.

மண்டலம், எ— வாயுமண்டலம், வருணமண்டலம், சந்திரமண்டலம், சூரிய மண்டலம், நட்சத்திர மண்டலம், அக்கினி மண்டலம், திரிசங்குமண்டலம்.

மரபு, உ—தந்தைவழி, தாய்வழி.

மருத்துகள், எ—கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு, கீழ், மேல், பலயோனியுயிர்.

மலம், ௩—ஆணவம், மாயை, காமியம்.

மலை, எ—கைலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி, அன்றிக் கந்தமாதனங் கூட்டியெட்டெனவும் படும்.

மன்மதன்கணை, ரு — வனசம், சூதம், அசோகு, முல்லை, நீலம், இவற்றின் பெயர்முறையே, உன்மத்தம், மதனம், சம்மோகம், சந்தாபம், வசிகரணம், இவைசெய்யுமவத்தை,சுப்பிரயோகம், விப்பிரயோகம், சோகம், மோகம், மரணம், அவையாவன, சுப்பிரயோகம், சொல்லு நினைவும்,—விப்பிரயோகம், வெய்துயிர்த்திரங்கல்—சோகம், வெதுப்புந் துய்ப்பன தெவிட்டலும்,—மோகம், அழுங்கலு மொழிபல பிதற்றலும்,—மரணம், அயர்ப்புமயக்கமும்.

மா

மாதம், ௰உ — சைத்திரம், வைசாகம், சேட்டம், ஆசாடம், சிராவணம், பாத்திரபதம், ஆசுவீசம், கார்த்திகம்,மார்க்கசிரம், புசியம், மாகம், பாற்குனம், இவைமுறையே, சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி, இவற்றிற்குமுறையேயுரிய நட்சத்திரம், சித்திரை, விசாகம், மூலம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, அச்சுவினி, கார்த்திகை, மிருகசீரிடம், பூசம், மகம், உத்திரம்.

மாதர்கள், எ—அபிராமி, மாயேச்சுவரி, கௌமாரி, நாராயணி, வராகி, இந்திராணி, காளி, இவர்க்கு முறையே வாகனம், அன்னம், இடபம், மயில், கருடன், சியம், யானை, பேய்,முறையேயாயுதம், மறை, பிநாகம், வேல், ஆழி, கலப்பை, வச்சிரம், சூலம்.

மாயை, ரு — தமம், மாயை, மோகம், அவித்தை, அநிர்தம், அவையாவன, சீவனைசதன்னியத்தை மறைக்கையாற்றமம், சகத்துருபமான வன்னிதாத்தோற்றத்துக்குக் காரண மாகையான் மாயை,—விபரீத ஞானமுண்டாக்குகையான் மோகம், — உணர்வழிக்கையா லவித்தை,—சத்துருபத்துக்கன்னியமாகையா லநிர்தம்.

மு

முகம், ௰௪ — அஞ்சிதம், அதோமுகம், ஆகம்பிதம், பிரகம்பிதம், ஆலோலிதம், உலோலிதம், உத்துவாகிதம், சமம், சௌந்தரம், துதம், விதுதம், பராவிருத்தம், பரிவாகிதம், திரச்சீனம், இவற்றுள், வருத்தமாற்றிருதோண்மேற் றலைசாய்ந்த லஞ்சிதமுகம்,—தலைகுனிந்து பார்த்தலதோமுகம்,—சம்மதித்தற்கு மேல்கீழ் தலையாட்டலாகம்பிதமுகம்,—அதிசயந்தாற் சிறிது தலையாட்டல் பிரகம்பித முகம்,—ஆசையான் மலர்ந்த முகமா யொருவனை யழைத்தலா லோலிதமுகம்,—சிந்தையா லொருதோண்மேற் றலைசாய்த்த லுலோலிதமுகம்,—தலையண்ணாந்துபார்த்த லுத்துவாகிதமுகம்,—தியானிப்பதுபோலத் தலையசையாதிருத்தலே சமமுகம்,—பூரித்த மகிழ்ச்சியான் மலர்ந்தமுகங்காட்டல் சௌந்தரமுகம்—வேண்டாததற்கிடம்வலந்தலையாட்டலே துதமுகம்,—உணவணிமுதலிய வேண்டாமைக்குத் தலைநடுக்கலே விதுதமுகம்,—வேண்டாததற்கு முகந்திருப்பலே பராவிருத்தமுகம்,—மதத்தாலொருபுறஞ் சாய்ந்த

தலையைச் சிறிதாகச் சுற்றியாட்டல் பரிவாகிதமுகம்,—நாணந்தாற்றலையாட்டலே திரச்சீனமுகம்.

முத்திவிக்கினம், ௩— அறியாமை, ஐயம், திரிபு.

முத்துச்சனிக்குமிடம், உ௰ — மதி, மேகம், சங்கு, சிப்பி, மீன், நந்து, முதலை, உடும்பு, தாமரை, வாழை, கமுகு, கரும்பு, செந்நெல், மூங்கில், யானைக்கொம்பு, பன்றிக்கொம்பு, பசுவின்பல், நாகம், கொக்கு, நங்கையர்கழுத்து.

மும்மை, ௩ — உம்மை, இம்மை, மறுமை.

முனிவர், எ —— அத்திரி, ஆங்கிரசன், கௌதமன், சமதக்கினி, பரத்துவாசன், வசிட்டன், விசுவாமித்திரன், அன்றியும், அகத்தியன், ஆங்கிரசன், கௌதமன், காசிபன், புலத்தியன், மார்க்கண்டன், வசிட்டன் என்பர்.

மூனிவர், ௩௰க—அகத்தியன், அத்திரி, ஆங்கிரசன், இரணியவன்மாமுனி, உரோமமாமுனி, ஏரண்டமாமுனி, கலைக்கோட்டுமுனி, காசிபன், கௌதமன், சத்தகூன்முனி, சச்சிதானந்தன், சமதக்கினி, சனகன், சனற்குமாரன், சுகன், ததிமகாமுனி, துருவாசன், நாரதன், பதஞ்சலி, பரத்துவாசன், பராசரன், பற்பமாமுனி, பிருகுமாமுனி பிஞகிமாமுனி, புலத்தியன், மார்க்கண்டன், வசிட்டன், வான்மீகன், விசுவாமித்திரன், வியாக்கிரபாதன், வியாசன்.

மூ

மூர்த்தம், அ—பூமி, நீர், தேயு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா.

மூலம், ௰—கண்டங்கத்திரிவேர், சிறுவழுதுணைவேர், சிறுமல்லிவேர், பெருமல்லிவேர், நெருஞ்சிவேர், இவ்வைந்துஞ் சிறுபஞ்சமூலமென்ப, வில்வவேர், பெருங்குமிழம்வேர், தழுதாழைவேர், பாதிரிவேர், வாகைவேர், இவ்வைந்தும் பெரும்பஞ்சமூலமென்ப.

மெ

மெய்ப்பரிசம், அ — ஊன்றல், கட்டல், குத்தல், தடவல், தட்டல், தீண்டல், பற்றல், வெட்டல், இவைமெய்ப்பொறியாற் செயப்படுந்தொழில்.

மே

மேகம், எ—சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி, நீலவருணம், இவை பொழிவனமுறையே, மணி, நீர், பொன், பூ, மண், கல், தீ.

மொ

மொழி, ௩—மெய்கூறல், புகழ்கூறல், பழிகூறல்.

யா

யாகம், ரு—பிரமம், தெய்வம், பூதம், பிதிர், மானுடம், இவற்றுள், வேதமோதல் பிரமயாகம், ஓமம்வளர்த்தலே தெய்வயாகம், பலியீதல் பூதயாகம், தர்ப்பணமுடித்தல் பிதிர்யாகம், இரப்போர்க் குணவுமுதலியவீதலே மானிடயாகம்.

யாகம், உக — அக்கினிட்டோமம், அத்தியக்கினிட்டோமம், உக்தியம், சோடசி, வாசபேயம், அதிராத்திரம், அப்தோரியாமம், அக்கினியாதேயம், அக்கினிகோத்திரம், தரிசபூரணமாசம், சாதுர்மாசியம், நிரூடபசுபந்தம், ஆக்

இரயணம், சௌத்திராமணி, அட்டகை, பார்வணம், சிராத்தம், சிராவணி, ஆக்கிரகாயணி, சைத்திரி, ஆசுவயுசி.

யாக்கைக்குறுகுற்றம், ௰அ—பசி, நீர்வேட்டல், பயம், வெகுளி, உவகை, வேண்டல், நினைப்பு, உறக்கம், நரை, நோய், மரணம், பிறப்பு, மதம், இன்பம், அதிசயம், வியர்த்தல், கேதம், கையறவு.

யாழ்வகை, ௪—பேரியாழ், சகோடயாழ், மகரயாழ், செங்கோட்டியாழ்.

யு

யுகம், ௪—கிரேதாயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம்.

யோ

யோகம், உஎ—விட்கம்பம், பிரீதி, ஆயுட்மான், சௌபாக்கியம், சோபனம், அதிகண்டம், சுகர்மம், திருதி, சூலம், கண்டம், விருத்தி, துருவம், வியாகாதம், அரிடணம், வச்சிரம், சித்தி, விதிபாதம், வரியான், பரிகம், சிவம், சித்தம், சாத்தியம், சுபம், சுப்பிரம், பிரமம், ஐந்திரம், வைதிருதி, இவை முறையே, கம்பம், பிரியம், வாழ்நாள், புண்ணியம், நலம், மாகண்டம், அறம், துணை, சூலம், கண்டம், ஆக்கம், நிலை, அரவு, எக்களிப்பு, வேல், வல்லமை, கொலை, காயம், தாழ்வு, காட்சி, திறம், புகழ், காவல், தெளிவு, பிரமா, இந்திரன், பேய், இவற்றுள், கம்பம், கண்டம், அதிகண்டம், சூலம், வியாகாதம், வச்சிரம், விதிபாதம், பரிகம், வைதிருதியெனவெண்பதுந் தீ மற்றவை நல்லன, இவற்றுள் விட்கம்பத்தின் மூன்றும், சூலத்தினைந்தும், கண்டத்திறு மதிகண்டத்திறு மாறும், வியாகாதத்தி லொன்பது மறுத்துநின்ற நாழிகையுமாம்.

வ

வசுக்கள், அ—அனலன், அனிலன், ஆபச்சகலன், சோமன், தரன், துருவன், பிரத்தியூசன், பிரபாசன்.

வணிகர்குணம், அ—தனிமையாற்றல், முனிவிலராதல், இடனறிந்தொழுகல், பொழுதொடுபுணர்தல், உறுவதறிதல், இறுவதஞ்சாமை, ஈட்டல், பகுத்தல்.

வர்ணம், ரு—வெண்மை, கருமை, செம்மை, பொன்மை, பசுமை.

